
என் வாழ்க்கைக் கதை



தமிழ்நாடு காந்தி நினைவு நிதி - மதுரை

GANDHISAMI

BOOKS BY GANDHIJI

Truth is God	Rs.	1—00
Autobiography	...	2—00
Satyagraha in South Africa	...	3—00
Ramanama	...	0—65
Sarvodaya - The Welfare of All	...	2—00
Hind Swaraj	...	0—50
Delhi Diary	...	3—00
Diet & Diet Reform	...	2—00
From Yervada Mandir	...	0—50
In Search of the Supreme in 3 volumes - each	...	5—00

Available with

Navajivan Trust,

Ahmedabad.

Madras Branch.: 22/111, Mount Road,

Madras-6.

Name of the book:	EN VALKKAIKKATHAI
Name and address of the Author and Publisher:	Translated by R. Venkatarajulu Published by Tamilnad Gandhi Smarak Nidhi, Madurai-13.
Price:	Rs.1-50
No. of copies available:	2,000
When the book was published:	September, 1962.
Reviews published if any:	Nil. Not sent for review.

என் வாழ்க்கைக் கதை

மகாத்மா காந்தி
எழுதியது

மாணவர் பதிப்பு

தமிழாக்கம்:
ரா. வேங்கடராஜுலு

தமிழ்நாடு காந்தி நினைவு நிதி
மதுரை

நவஜீவன் டிரஸ்டின் அனுமதி பெற்ற பிரசுரம்.

விலை ரூ. 1-50

கிடைக்குமிடம் :

1. தமிழ்நாடு காந்தி நினைவு நிதி,
காந்தி மியூஸியம்,
தல்லாகுளம், மதுரை.

2. காந்தி நூல் வெளியீட்டுக் கழகம்,
சர்க்கார் எஸ்டேட்,
மவுண்ட் ரோடு, சென்னை-2.

மாணிக்கம் அச்சகம், அமைந்தகரை, சென்னை-29.

பதிப்புரை

காந்தியடிகளின் சுய சரித்திரத்தை மலிவுப் பதிப்பாக காந்தி நினைவு நிதியின் சார்பில் வெளியிட்டுள்ளோம். இதன் சுருக்கமும் வெளியாகியுள்ளது. ஆனால், பள்ளியில் பயிலும் மாணவர்களும் இளைஞர்களும் படித்துப் பயன்பெறும் அளவில் ஒரு நூல் வெளியிட வேண்டுமென்ற அவா எங்களுக்கு இருந்த்து. இதே நோக்கத்துடன் திரு. பரதன் குமரப்பா அவர்கள் தொகுத்த ஆங்கில நூலைக் கண்டதும் அதனைத் தமிழில் வெளியிட நினைத்தோம். அந்த ஆசை இன்று பூர்த்தியாகிறது.

காந்தியடிகளின் 'சத்திய சோதனை'யிலிருந்து மாணவர்களுக்கு உபயோகமுள்ளவைகளே இந்நூலில் இடம் பெறுகின்றன. படித்தபின் சிந்தனைக்கு உதவும் பொருட்டு ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவிலும் சில கேள்விகளும் கட்டுரை வரைவதற்காகச் சில தலைப்புகளும் கொடுத்துள்ளோம். இவற்றுள் சில உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும். இக்கேள்விகள் சிலவற்றை வகுப்பில் ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து சிந்தித்துப் பயன் பெறலாம்.

இந்த நூலை வெளியிடுவதில் பலர் எங்களுக்கு உதவியுள்ளார்கள். குறிப்பாக இதனை மிக்க குறுகிய காலத்தில் மிகவும் உயர்ந்த முறையில் அச்சிட்டு உதவிய மாணிக்கம் அச்சகத்தாருக்கு எங்கள் நன்றி. காந்தி நினைவு நிதியின் வெளியீடுகளை இதுவரை ஆதரித்து வந்துள்ள தமிழர் உலகம் இந்நூலையும் வாங்கி ஆதரிப்பார்கள் என்பதில் எங்களுக்கு ஐயமில்லை.

க. அருணாசலம்
காரியதரிசி
தமிழ்நாடு காந்தி நினைவு நிதி

மதுரை,
5, செப்., 1962

முன்னுரை

உண்மையில் சுயசரிதை எழுதுவது என்பதல்ல என் நோக்கம். நான் நடத்தி வந்திருக்கும் சத்திய சோதனைகள் பலவற்றின் கதையைச் சொல்லவே விரும்புகிறேன். என் வாழ்க்கையில் இந்தச் சோதனைகளைத் தவிர வேறு எதுவுமே இல்லை. ஆகையால் இக் கதை ஒரு சுயசரிதையாகவே அமையும். ராஜீயத் துறையில் நான் செய்திருக்கும் சோதனைகள் இப்பொழுது தெரிந்திருக்கின்றன. ஆன்மிகத் துறையில் நான் நடத்திய சோதனைகளைப் பற்றிச் சொல்லவே நிச்சயமாக விரும்புவேன்; அவை எனக்கு மாத்திரமே தெரிந்தவை. ராஜீயத் துறையில் வேலை செய்துவருவதற்கு எனக்கு இருந்துவரும் சக்தியையும் நான் அதனிடமிருந்தே பெற்றிருக்கிறேன். நான் சொல்லப்போகும் சோதனைகள் ஆன்மிகமானவை; அதைவிடச் சன்மார்க்கமானவை என்றே சொல்லிவிடலாம். ஏனெனில் சன்மார்க்கமே மதத்தின் சாரம்.

வயது முதிர்ந்தவர்கள் மட்டுமின்றிக் குழந்தைகளும் புரிந்துகொள்ளக்கூடிய மத விஷயங்கள் மாத்திரமே இக்கதையில் சேர்க்கப்படும். பாரபட்சமற்ற வகையில் அடக்க உணர்ச்சியோடு நான் விவரிக்க முடியுமானல் இத்தகைய சோதனைகளில் ஈடுபட்டிருக்கும் மற்றும் பலரும் தங்கள் முன்னேற்றத்திற்கு வேண்டிய ஆதாரங்களை இதில் பெறுவார்கள்.

ஆசிரமம், சபர்மதி,
26, நவம்பர், 1925

மோ. க. காந்தி.

பொருளடக்கம்

முதல் பாகம்

குழந்தைப் பருவமும் இளமைப் பருவமும்

என் வாழ்க்கைக் கதை

1

பிறப்பும் தாய்தந்தையரும்

என் தந்தையார் கரம்சந்த் காந்தி போர்பந்தரில் பிரதம மந்திரியாக இருந்தார். அவர் தம் வமிசத்தாரிடம் அதிகப்பற்று உடையவர்; சத்திய சீலர்; தீரமான்வர்; தயாளமுள்ளவர். ஆனல் கொஞ்சம் முன்கோபி.

பணம் திரட்ட வேண்டும் என்ற ஆசை அவருக்கு என்றுமே இருந்ததில்லை. மிகக் கொஞ்சமான சொத்தையே அவர் எங்களுக்கு வைத்துவிட்டுப் போனர்.

அனுபவத்தைத் தவிர அவருக்குப் படிப்பு ஒன்றும் இல்லை. அதிக பட்சம் குஜராத்தி ஐந்தாம் வகுப்பு வரையில் படித்திருந்தார் என்றே சொல்லலாம். சரித்திரம், பூகோளம் ஆகியவை பற்றி அவருக்கு எதுவுமே தெரியாது. ஆனல் நடைமுறைக் காரியங்களில் அவருக்கு இருந்த சிறந்த அனுபவம், அதிகச் சிக்கலான பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும், நூற்றுக்கணக்கானவர்களை நிருவகிப்பதிலும் அவருக்குத் திறமையை அளித்தது. சமயத்துறையிலும் அவருக்கு இருந்த பயிற்சி மிகக் கொஞ்சம். ஆனல் அடிக்கடி கோயில்களுக்குப் போவதாலும், சமயப் பிரசங்கங்களைக் கேட்பதாலும் அநேக இந்துக்களுக்குச் சாதாரணமாக எவ்வளவு சமய ஞானம் உண்டாகுமோ, அவ்வளவு அவருக்கும் இருந்தது.

என் தாயாரைப் பற்றி நான் நினைக்கும்போது முக்கியமாக அவருடைய தவ ஒழுக்கமே என் நினைவுக்கு

வருகிறது. அவர் மிகுந்த மதப்பற்றுக் கொண்டவர். தாம் செய்ய வேண்டிய அன்ருட பூசையை முடிக்காமல் சாப்பிடமாட்டார். அவருடைய நித்தியக் கடமைகளில் ஒன்று, விஷ்ணு கோயிலுக்குப் போய்த் தரிசித்துவிட்டு வருவது. ஒரு தடவையேனும் சாதுர்மாச விரதத்தை அனுசரிக்க அவர் தவறியதாக எனக்கு ஞாபகம் இல்லை. கடுமையான விரதங்களை யெல்லாம் மேற்கொள்வார்; அவற்றை நிறைவேற்றியும் தீருவார். நோயுற்ருலும் விரதத்தை மாத்திரம் விட்டுவிட மாட்டார். சாந்திராயண விரத மிருந்தபோது அவர் நோயுற்றிருந்தது எனக்கு நினைவிருக்கிறது. ஆனல் விரதத்தை விடாமல் அவர் அனுட்டித்து முடித்தார். தொடர்ந்து இரண்டு மூன்று பட்டினி விரதங்கள் இருப்பது என்பதும் அவருக்குப் பிரமாதம் அல்ல. சாதுர் மாச காலத்தில் ஒரு வேளை ஆகாரத்தோடு இருப்பது அவருக்குப் பழக்கம். அது போதாதென்று ஒரு சாதுர் மாசத்தின்போது ஒன்று விட்டு ஒரு நாள் உபவாசம் இருந்துவந்தார். மற்ரெரு சாதுர்மாச விரதத்தின்போது சூரிய தரிசனம் செய்யாமல் சாப்பிடுவதில்லை என்று விரதம் கொண்டிருந்தார். அந்த நாட்களில் குழந்தைகளாகிய நாங்கள், வெளியில் போய் நின்றுகொண்டு சூரியன் தெரிந்ததும் தாயாரிடம் போய்ச் சொல்வதற்காக ஆகாயத்தைப் பார்த்தபடியே இருப்போம். கடுமையான மழைகாலத்தில் அடிக்கடி சூரியபகவான் தரிசனமளிக்கக் கருணை செய்வதில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. சில நாட்களில் திடீரென்று சூரியன் தோன்றுவான்; தாயாருக்கு இதைத் தெரிவிப்பதற்காக ஓடுவோம்; சூரியனைத் தரிசிக்க அவரே வெளியே ஓடிவந்து பார்ப்பார். ஆனல் சூரியன் அதற்குள் மறைந்து, அன்று அவர் சாப்பிட முடியாதபடி செய்துவிடுவான். "அதைப்பற்றிப் பரவாயில்லை" என்று மகிழ்ச்சியோடுதான் தாயார் கூறுவார்.

"'நான் இன்று சாப்பிடுவதைப் பகவான் விரும்பவில்லை" என்பார். பின்னர் வீட்டுக்குப் போய்த் தம் அலுவல்களைக் கவனித்துக்கொண்டிருப்பார்.

என் தாயாருக்கு அனுபவ ஞானம் அதிகமாக உண்டு. சமஸ்தானத்தைப் பற்றிய விவகாரங்களெல்லாம் அவருக்கு நன்ருகத் தெரியும்.

இத்தகைய பெற்றோருக்குச் சுதாமாபுரி என்று கூறப்படும் போர்பந்தரில் 1869-ஆம் வருடம் அக்டோபர் மாதம் 2-ஆம் தேதி நான் பிறந்தேன்.

கட்டுரைகள் எழுதுக

1. காந்திஜி அன்னையின் மத பக்தியை உங்கள் சொந்த சொற்களில் விவரிக்கவும்.
2. காந்திஜியும் அடிக்கடி உண்ணுவிரதம் இருந்தார். ஆனால், அவருடைய அன்னையின் உண்ணுவிரதங்களைப் போன்று காந்திஜியின் உண்ணுவிரதங்களும் உண்மையில் மத சம்பந்தமுள்ளவை என்று சொல்லலாமா? உதாரணமாக காந்திஜி, அவர் இறப்பதற்கு முன்னுல் இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக உண்ணுவிரதம் இருந்தார். இதைக்கொண்டு காந்திஜியின் உண்ணுவிரதத்திற்கும் அவருடைய அன்னையாரின் விரதங்களுக்குமுள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை நீங்கள் கூற முடியுமா?
3. உண்ணுவிரதமிருப்பது பிறரைக் கட்டாயப்படுத்துவதற்காக அல்ல என்று அடிக்கடி காந்திஜி கூறிவந்தார். அப்படி இருக்க, (அ) தம் சம்பந்தமாக, (ஆ) சம்பந்தப்பட்ட மற்றவர்களைப் பற்றி அவர் இருந்த உண்ணுவிரதங்களின் நோக்கம் என்ன?

2

பள்ளிக்கூடத்தில்

குழந்தைப் பருவத்தில் போர்பந்தரிலேயே இருந்தேன். அங்கே என்னைப் பள்ளிக்கூடத்தில் வைத்தது எனக்கு நினைவிருக்கிறது. கொஞ்சம் சிரமத்தின் பேரில் தான் பெருக்கல் வாய்பாட்டை நெட்டுருப் போட்டேன். மற்றச் சிறுவர்களுடன் சேர்ந்துகொண்டு எங்கள் உபாத்தியாயரை ஏளனம் செய்து திட்டக் கற்றுக்கொண்டேன் என்பதைத் தவிர அந்த நாட்களைக் குறித்து வேறு எதுவுமே எனக்கு நினைவில்லை.

எனக்குச் சுமார் ஏழு வயது இருக்கலாம். என் தந்தையார் போர்பந்தரிலிருந்து ராஜ்கோட்டுக்குச் சென்றார். அங்கே என்னை ஓர் ஆரம்பப் பாடசாலையில் சேர்த்தார்கள். அந்த நாட்களில் எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த உபாத்தியாயர்களின் பெயர்கள் உட்பட எல்லா விவரங்களுமே நன்றாக ஞாபகம் இருக்கின்றன.

போர் பந்தரில் இருந்ததைப் போன்றே இங்கும் என்னுடைய படிப்பைப்பற்றி முக்கியமாகக் குறிப்பிடக் கூடியது எதுவுமில்லை. இந்தப் பள்ளிக்கூடத்திலிருந்து நகரை அடுத்திருந்த ஒரு பள்ளிக்கு என்னை அனுப்பினார்கள்; பன்னிரண்டு வயதாகி விடவே, பிறகு உயர்தரப் பள்ளியில் சேர்த்தனர். இந்தக் குறுகிய காலத்தில் என் ஆசிரியர்களிடத்திலோ, என் பள்ளித் தோழர்களிடத்திலோ ஒரு பொய்யேனும் எப்பொழுதும் நான் சொன்னதாக எனக்கு ஞாபகமில்லை. எனக்குக் கூச்சம்

அதிகம்; யாருடனும் சேரமாட்டேன். என் புத்தகங்களும் என் பாடங்களுமே எனக்கு உற்ற தோழர்கள். சரியான நேரத்தில் பள்ளிக்கூடத்துக்குப் போய்விடுவது, பள்ளிக் கூடம் விட்டதும் வீட்டுக்கு ஓடி வந்துவிடுவது—இதுவே எனது அன்றாடப் பழக்கம். யாருடனும் பேசவே பிடிக்கா தாகையால் உண்மையில் ஓட்டமாகத்தான் வீடுவந்து சேருவேன். இல்லாவிட்டால் வழியில் யாராவது என்னைக் கேலி செய்துவிடுவார்களோ என்று பயம்.

உயர்தரப் பள்ளியில் நான் படித்த முதல் ஆண்டில் பரீட்சையின் போது நிகழ்ந்த சம்பவம் ஒன்று உண்டு; அது இங்கே குறிப்பிடத்தக்கது. கல்வி இலாகா இன்ஸ்பெக்டர் ஸ்ரீ கைல்ஸ் அப்பள்ளிக்கூடச் சோத னைக்காக வந்திருந்தார். எழுத்துக் கூட்டி எழுதும் பயிற்சிக்காக அவர் எங்களுக்கு ஐந்து சொற்களைக்கூறி, அவற்றை எழுதச் சொன்னார். அதில் ஒரு சொல் 'கெட்டில்' (Kettle) என்பது. அதை நான் தவறாக எழுதி விட்டேன். உபாத்தியாயர் தம் கால் பூட்ஸ் முனையால் என் காலைச் சீண்டித் தூண்டினார். நான் புரிந்துகொள்ள வில்லை. நாங்கள் பக்கத்துப் பையனைப் பார்த்து 'காபி' அடிக்காமல் பார்த்துக்கொள்வதற்காகவே ஆசிரியர் அங்கே இருக்கிறார் என்று நான் எண்ணிக்கொண்டிருந் தேன். ஆகையால், என் பக்கத்துப் பையனின் சிலேட் டைப் பார்த்து, அப்பதத்தின் எழுத்துக்களைக் காப்பி யடிக்க அவர் என்னைத் தூண்டுகிறார் என்பதை நான் அறியவில்லை. இதன் பலன் என்னவெனில், என்னைத் தவிர மற்ற எல்லாப்பிள்ளைகளும் அப்பதத்தைச் சரியாக எழுதியிருந்தனர். நான் ஒருவனே முட்டாளாக இருந்து விட்டேன். இந்த முட்டாள்தனத்தை நான் உணரும்படி செய்வதற்கு ஆசிரியர் பிறகும் முயற்சி செய்தார். ஆனால், அதனாலும் பயனில்லை. 'காபி' அடிக்கும் வித் தையை நான் என்றுமே கற்றுக்கொள்ள முடியவில்லை.

என்ருலும், என் ஆசிரியரிடம் நான் கொண்டிருந்த மதிப்பை இச்சம்பவம் கொஞ்சமும் குறைத்துவிடவில்லை. பெரியவர்களிடம் இருக்கும் குறைகளைக் காண்பதில் குருடனுகவே இருப்பது எனது இயல்பு. இதே ஆசிரியரின் வேறு பல குறைபாடுகளையும் பின்னுல் அறியலானேன். என்ருலும், அவரிடம் நான் வைத்திருந்த மதிப்பு மாத்திரம் குறையவே இல்லை. ஏனெனில், பெரியவர்களின் கட்டளைகளை நிறைவேற்றிவிட்டு, அவர்களுடைய செய்கைகளைக் கவனிக்காமல் இருந்துவிட நான் கற்றுக்கொண்டிருந்தேன்.

அதே காலத்தில் நடந்த மற்ற இரு சம்பவங்களும் என் நினைவில் என்றும் அப்படியே இருந்து வருகின்றன. என் பாடப் புத்தகங்களைத் தவிர வேறு எதையும் படிப்பதில் எனக்குப் பொதுவாக விருப்பம் இருந்ததில்லை. அன்ருடம் பாடங்களைச் சரிவரப் படித்துவிட வேண்டும்; ஏனெனில், சரியாகப் படிக்காததற்காக ஆசிரியரின் கண்டன தண்டனைகளுக்கு ஆளாவது எனக்குப் பிடிக்காது என்பதுடன் அவரை ஏமாற்றவும் நான் விரும்பவில்லை. ஆகையால், பாடங்களைக் கட்டாயம் படித்துவிடுவேன். ஆனுல், அவற்றில் அடிக்கடி என் புத்தி செல்லாது. இவ்வாறு பாடங்களையே சரியாகப் படிக்காமல் இருக்கும்போது மேற்கொண்டு வேறு புத்தகங்களைப் படிப்பது என்பதற்கே இடமில்லை. ஆனுல், என் தந்தையார் வாங்கியிருந்த 'சிரவணனின் பிதுர் பக்தி நாடகம்' (இது சிரவணன் பெற்ருேரிடம் கொண்டிருந்த பக்தியைப் பற்றிய நாடகம்) என்ற புத்தகம் என் கண்ணில் எப்படியோ பட்டது. தீவிரமான சிரத்தையுடன் அப்புத்தகத்தைப் படித்தேன். அந்தச் சமயத்தில் எங்கள் ஊருக்குப் படங்களைக் காட்டுவோரும் வந்திருந்தார்கள். நான் பார்த்த படங்களில் ஒன்று கண்ணிழந்த தன்னுடைய

தாய் தந்தையரைச் சிரவணன் கூடைகளில் வைத்துக் காவடியைத் தோளில் சுமந்துகொண்டு போனதைக் காட்டுவது. அப்புத்தகமும் இப்படமும் என் மனத்தில் அழியாத முத்திரையிட்டுவிட்டன. 'பின்பற்றுவதற்கு இது ஒரு சரியான உதாரணம்' என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன். சிரவணன் இறந்ததால் புத்திர சோகத்தோடு பெற்ருேர் வருந்திப் பிரலாபித்தது என் நினைவில் இன்னும் அப்படியே இருந்து வருகிறது. சோகம் மிகுந்த அந்த கீதம் என் உள்ளத்தை உருக்கி விட்டது. என் தந்தை, எனக்காக வாங்கியிருந்த வாத்தியத்தில் அந்தக் கீதத்தை வாசித்தேன்.

மற்ருெரு நாடக சம்பந்தமாகவும் இதே போன்ற ஒரு சம்பவம் உண்டு. ஏறக்குறைய அதே சமயத்தில், ஒரு நாடகக் குழுவினர் நடத்தி வந்த ஒரு நாடகத்தைப் பார்க்க என் தந்தையாரின் அனுமதி பெற்றேன். 'அரிச்சந்திரன்' என்ற அந்நாடகம், என் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. எத்தனை தரம் அதைப் பார்த்தாலும் எனக்குச் சலிப்பு ஏற்படாது. ஆனல், அதைப் போய்ப் பார்க்க எத்தனை தடவைதான் என்னை அனுமதிப்பார்கள்? அது சதா என் நினைவில் இருந்து வந்தது. எண்ணற்ற சமயங்களில் எனக்குள் நானே அரிச்சந்திரனுக நடித்திருப்பேன். 'அரிச்சந்திரனைப் போல எல்லோரும் ஏன் சத்திய சீலர்கள் ஆகக்கூடாது?' என்று அல்லும் பகலும் என்னை நானே கேட்டுக்கொள்வேன். சத்தியத்தைக் கடைப்பிடிப்பதும், அதற்காக அரிச்சந்திரன் அனுபவித்த துன்பங்களையெல்லாம் அனுபவிப்பதுமாகிய இலட்சியமே ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கியது. அரிச்சந்திரன் கதை உண்மையிலேயே நடந்த ஒன்று என்றே நான் நம்பிவிட்டேன்; அதை நினைத்துப் பல சமயங்களில் அழுதும் விடுவேன்.

உயர்நிலைப் பள்ளியில் என்னை மந்தமானவன் என்று யாரும் எண்ணவில்லை. என் உபாத்தியாயர்கள் என்னிடம் எப்பொழுதும் அன்போடு இருந்தார்கள். என் படிப்பின் அபிவிருத்தி, நடத்தை ஆகியவை பற்றி ஆண்டு தோறும், பெற்றோருக்கு நற்சாட்சிப் பத்திரம் அனுப்பப் பட்டது. கெடுதலான பத்திரம் என்னைக் குறித்து ஒரு தடவையேனும் வந்ததில்லை. உண்மையில் நான் இரண் டாம் வகுப்புத்தேறிய பிறகு பரிசுகளையும் பெற்றேன். ஐந்தாம், ஆறும் வகுப்புக்களில் முறையே நான்கு ரூபாயும் பத்து ரூபாயும் உபகாரச் சம்பளங்களாகப் பெற்றேன். இவைகளை நான் அடைந்ததற்கு என் திறமையைவிட என்னுடைய நல்லதிர்ஷ்டமே காரணம். ஏனெனில், இந்த உபகாரச் சம்பளம் எல்லோருக்கும் உரியதன்று. கத்திய வாரில் சோராத் பகுதியிலிருந்து வரும் சிறந்த மாணவர் களுக்கு மாத்திரமே அது உண்டு. அந்த நாட்களில் நாற்பது முதல் ஐம்பது பேர் வரையில் கொண்ட ஒரு வகுப்பில் சோராத்திலிருந்து வரும் மாணவர்கள் பலர் இருப்பதில்லை.

என் திறமையில் எனக்குப் பிரமாதமான மதிப்பு இருந்ததில்லை என்பதே ஞாபகம். எனக்குப் பரிசுகளும் உபகாரச் சம்பளங்களும் கிடைக்கும்போதெல்லாம் நான் ஆச்சரியப்படுவது வழக்கம். ஆனல், எனது நன்னடத் தையை மிக்க கவனத்துடன் காப்பாற்றி வந்தேன். அதில் ஒரு சிறிது குறை ஏற்பட்டாலும் கண்ணீர் விட்டு அழுதுவிடுவேன். கண்டிக்கப்பட்டாலோ, கண் டிக்கப்பட வேண்டியவன் என்று என்னை உபாத்தியாயர் கருதிவிட்டாலோ, என்னல் சகிக்க முடியாது. ஒரு தடவை அடிபட்டதாக எனக்கு நினைவிருக்கிறது. அடி பட்டதற்காக நான் வருத்தப்படவில்லை; நான் அடிபட வேண்டியவன் என்று கருதப்பட்டதே எனக்கு அதிக வருத்தத்தை அளித்தது. அதற்காகப் பரிதாபகரமாக

அழுதேன். முதல் வகுப்பிலோ, இரண்டாம் வகுப்பிலோ படித்தபோது நடந்தது அது. நான் ஏழாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோது அத்தகைய மற்றொரு சம்பவம் நிகழ்ந்தது. அச்சமயம் தோராப்ஜி எதுல்ஜி ஜிமி தலைமையாசிரியராக இருந்தார். மாணவர்களுக்கெல்லாம் அவரிடம் அதிகப் பிரியம். அதே சமயத்தில் கட்டுத் திட்டங்களில் அவர் மிகக் கண்டிப்பானவர்; குறிப்பிட்ட முறைப்படி காரியங்களைச் செய்பவர்; நன்ருகப் போதிப்பவருங்கூட. அவர் மேல்வகுப்புப் பையன்களுக்குத் தேகாப்பியாசத்தையும் கிரிக்கெட்டையும் கட்டாயமாக்கி விட்டார். இந்த இரண்டும் எனக்குப் பிடிக்கவில்லை. இவை கட்டாயமாக்கப்படுவதற்கு முன்னுல் நான் தேகாப்பியாசம் செய்ததோ, கிரிக்கெட், அல்லது கால் பந்து விளையாடியதோ இல்லை. ஒன்றிலும் சேராமல் நான் ஒதுங்கி இருந்துவிட்டதற்கு எனக்கிருந்த கூச்சம் ஒரு காரணம். அப்படி இருந்துவிட்டது தவறு என்பதை இப்பொழுது அறிகிறேன். படிப்புக்கும் தேகப்பயிற்சிக்கும் சம்பந்தமே இல்லை என்ற தவருன கருத்தும் அப்பொழுது எனக்கு இருந்தது. ஆனுல் இன்று, பாடத் திட்டத்தில் மனப்பயிற்சிக்கு எவ்வளவு இடம் அளிக்கப்படுகிறதோ, அவ்வளவு உடற்பயிற்சிக்கும் அளிக்கப்படவேண்டும் என்பதை அறிகிறேன்.

என்ருலும், தேகப் பயிற்சியில் கலந்துகொள்ளாமல் இருந்து விட்டதனுல் எனக்கு அதிகத் தீமை எதுவும் ஏற்பட்டுவிடவில்லை என்றும் கூறுவேன். இதற்கு ஒரு காரணம் உண்டு. திறந்த வெளியில் நீண்டதூரம் நடப்பதால் ஏற்படக்கூடிய நன்மைகளைக் குறித்துப் புத்தகங்களில் படித்திருந்தேன். இந்த யோசனை எனக்குப் பிடித்ததால் நீண்ட நேரம் நடக்கும் பழக்கம் எனக்கு ஏற்பட்டது. அப்பழக்கம் இன்னும் எனக்கு

இருக்கிறது. அதன் பயனாக என் உடல் நன்கு வலுப் பெற்றது.

தேகாப்பியாச வகுப்புக்குப் போக நான் விரும்பாததற்குக் காரணம், என் தந்தைக்குப் பணிவிடை செய்யவேண்டும் என்று எனக்கு இருந்த ஆர்வமே யாகும். பள்ளிக்கூடம் விட்டதும், நேரே அவசரமாக வீட்டுக்குப் போய் அவருக்குப் பணிவிடை செய்வேன். இந்தச் சேவை செய்வதற்குக் கட்டாயத் தேகப் பயிற்சி இடையூறாக இருந்தது. என் தந்தைக்கு நான் பணி விடை செய்ய வேண்டுமாகையால் தேகப் பயிற்சி வகுப்புக்குப் போகாதிருக்க அனுமதிக்குமாறு ஸ்ரீ ஜிமியிடம் கோரினேன். ஆனால், அவர் என் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். ஒரு நாள் சனிக் கிழமை; அன்று காலையில் பள்ளிக்கூடத்திற்குப் போக வேண்டும். மாலை நான்கு மணிக்குத் தேகப் பயிற்சிக்காக நான் வீட்டிலிருந்து திரும்பவும் பள்ளிக்கூடம் போக வேண்டும். நான் பள்ளிக்கூடம் போய்ச் சேருவதற்கு முன்னால் அங்கிருந்து பிள்ளைகளெல்லாம் போய்விட்டார்கள். வந்திருந்தோரின் கணக்கை ஸ்ரீ ஜிமி மறுநாள் தணிக்கைசெய்து பார்த்தபோது நான் வரவில்லை என்று குறித்திருந்ததைக் கண்டார். ஏன் வரவில்லை என்று என்னைக் கேட்டதற்கு நடந்ததைச் சொன்னேன். நான் கூறியதை நம்ப அவர் மறுத்துவிட்டார். ஓரணாவோ அல்லது இரண்டணாவோ (எவ்வளவு என்று எனக்குச் சரியாக நினைவில்லை) அபராதம் செலுத்தவேண்டும் என்று உத்தரவிட்டார்.

பொய் சொன்னதாக நான் தண்டிக்கப்பட்டேன். இது எனக்கு மிகுந்த மனவேதனையாகிவிட்டது. நான் குற்றமற்றவன் என்பதை நிரூபிப்பது எப்படி? அதற்கு வழியே இல்லை. வேதனை தாங்காமல் கதறி அழுதேன். உண்மையுள்ளவன் எச்சரிக்கையுடனும் இருக்க

வேண்டியது முக்கியம் என்பதை உணர்ந்தேன். பள்ளிக்கூடத்தில் நான் அசட்டையாக நடந்துகொண்ட முதல் சந்தர்ப்பமும், கடைசி சந்தர்ப்பமும் இதுதான். முடிவில் அந்த அபராதம் ரத்துச் செய்யப்பட்டு விட்டதில் நான் வெற்றியடைந்தேன் என்று இலேசாக ஞாபகம் இருக்கிறது. பள்ளிக்கூடம் விட்டதும் நேரே வீட்டுக்கு நான் வந்துவிடவேண்டும் என்று, தாம் விரும்பு வதாகத் தலைமை யாசிரியருக்கு என் தந்தையாரே எழுதியதன் பேரில், தேகாப்பியாசத்திற்குப் போக வேண்டும் என்பதிலிருந்து விலக்குப் பெற்றேன்.

தேகாப்பியாசத்தில் அசட்டையாக இருந்துவிட்ட தனால் எனக்குத் தீமை ஏற்படாது போனாலும், மற்றொரு விஷயத்தில் நான் அசட்டையாக இருந்துவிட்டதன் பலனை இப்பொழுதும் அனுபவித்துக்கொண்டு வரு கிறேன். கையெழுத்து நன்றாக இருக்கவேண்டும் என்பது படிப்பில் ஒரு பகுதியல்ல என்ற கருத்து எனக்கு எங்கிருந்து உண்டாயிற்று என்று தெரியவில்லை.

நான் இங்கிலாந்துக்குப் போகும் வரையில் இந்த அபிப்பிராயமே எனக்கு இருந்தது. பிறகு, முக்கிய மாகத் தென்னாப்பிரிக்காவில், இளம் வக்கீல்களும், தென்னாப்பிரிக்காவில் பிறந்து, அங்கேயே படித்த இளை ஞர்களும் மிக அழகாக எழுதுவதைக் கண்டபோது என்னைக் குறித்து நானே வெட்கப்பட்டதோடு ஆரம் பத்தில் அசிரத்தையுடன் இருந்துவிட்டதற்காக மிகவும் வருந்தினேன். மோசமான கையெழுத்தை, அரை குறையான படிப்புக்கு அறிகுறியாகக் கொள்ள வேண்டும் என்று கருதினேன். கையெழுத்து நன்றாக இருக்கும்படி செய்யப் பிறகு முயன்றேன். ஆனால், அதற்குக் காலம் கடந்துபோய்விட்டது. இளமையில் அசட்டையாக இருந்துவிட்டதனால் ஏற்பட்ட தீமையைப் பிறகு என்றுமே நிவர்த்தி செய்துகொள்ள இயலவில்லை.

ஒவ்வோர் இளைஞனும், இளம் பெண்ணும், என்னுடைய உதாரணத்தைக் கண்டாவது எச்சரிக்கையுடன் இருக்கட்டும்; கையெழுத்து நன்றாக இருக்கவேண்டியதும் படிப்பின் ஒரு பகுதி என்பதை அறியட்டும். குழந்தைகளுக்கு எழுத்துக்களை எழுதுவதற்குக் கற்றுக் கொடுப்பதற்கு முன்னால் சித்திரம் வரையக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று இப்பொழுது கருதுகிறேன். பூக்கள், பறவைகள் போன்றவைகளைக் குழந்தை பார்த்தே தெரிந்துகொள்ளுவதைப்போல, எழுத்துக்களையும் அது பார்த்தே தெரிந்து கொள்ளட்டும். பொருள்களைப் பார்த்து, அவற்றை வரையக் கற்றுக்கொண்ட பிறகு எழுத்துக்களை எழுதக் கற்கட்டும். அப்பொழுது அக் குழந்தையின் கையெழுத்து அழகாக அமையும்.

என் பள்ளிக்கூட நினைவுகளில் குறிப்பிடத்தக்கவை மற்றும் இரண்டு உண்டு. என் விவாகத்தினால் எனக்கு ஒரு வருடப் படிப்பு வீணாகிவிட்டது. ஒரு வகுப்புத் தாண்டி, மேல் வகுப்பில் என்னைத் தூக்கிப் போட்டு, எனக்கு அந்த நஷ்டத்தை ஈடு செய்துவிட ஆசிரியர் விரும்பினார். நன்றாக உழைத்துப் படிக்கும் பிள்ளைகளுக்கே இந்தச் சலுகையை அளிப்பது வழக்கம். நான் மூன்றாம் வகுப்பில் ஆறு மாதங்களே படித்தேன். கோடை விடுமுறைக்கு முன்னால் நடக்கும் பரீட்சைகளுக்குப் பிறகு என்னை நான்காம் வகுப்புக்கு அனுப்பி விட்டார்கள். நான்காம் வகுப்பிலிருந்து பல பாடங்கள் ஆங்கிலத்திலேயே போதிக்கப்பட்டன. எனக்கோ திக்குத் திசை தெரியவில்லை. க்ஷேத்திர கணிதம் புதுப் பாடம். ஏற்கெனவே அது எனக்கு அவ்வளவு நன்றாகத் தெரியாது. அதை ஆங்கிலத்திலும் போதிக்க ஆரம்பித்து விட்டதால் எனக்கு இன்னும் அதிகக் கஷ்டமாயிற்று. ஆசிரியர் இப்பாடத்தை மிக நன்றாகவே சொல்லிக் கொடுத்தார். ஆனால், என்னால் விளங்கிக்கொள்ள இயல

வில்லை. பன்முறையும் மனச்சோர்வடைந்து விட்டேன். மூன்றும் வகுப்புக்கே திரும்பிப் போய்விடலாமா என்றும் எண்ணினேன். இரண்டு வருடப் படிப்பை ஒரே வருடத்தில் படித்துவிடலாம் என்பது அதிகப்படியான ஆசை என்றும் எனக்குத் தோன்றியது. ஆனால், அப்படி மூன்றும் வகுப்புக்கே போய்விடுவது எனக்கு மாத்திரமல்ல, ஆசிரியருக்கும் அவமானம். ஏனெனில், கஷ்டப்பட்டுப் படிக்கக் கூடியவன் நான் என்று நம்பியே என்னை மேல் வகுப்பில் சேர்க்க ஆசிரியர் சிபார்சு செய்தார். இந்த இரண்டு அவமானங்களையும் குறித்து எனக்கு ஏற்பட்ட பயத்தினால் விடாப்பிடியாகப் படிக்கலானேன். அதிக சிரமத்தின் பேரில் யூக்ளிட்டின் பதின்மூன்றாவது பாடத்திற்கு வந்த பிறகு அந்தப் பாடம் மிக எளிதானது என்று திடீரென்று எனக்குத் தோன்றியது. பகுத்தறிவின் சக்தியைக்கொண்டு மாத்திரமே கற்றுவிடமுடியும் ஒரு பாடம் கஷ்டமானதாகவே இருக்க முடியாது. அச்சமயத்திலிருந்து க்ஷேத்திர கணிதம் எனக்குச் சுலபமானதாகவும் சுவையுள்ளதாகவும் ஆயிற்று.

என்றாலும், சமஸ்கிருத பாடம் அதிக கஷ்டமாகத்தான் இருந்தது. க்ஷேத்திர கணிதத்தில் மனப்பாடம் செய்ய வேண்டியது எதுவும் இல்லை. ஆனால், சமஸ்கிருதத்திலோ ஒவ்வொன்றையும் மனப்பாடம் செய்யவேண்டும் என்று எண்ணினேன். இந்தப் பாடமும் நான்காம் வகுப்பிலிருந்தே சொல்லிக்கொடுக்கப்பட்டது. ஆனால், வகுப்புக்குப் போனதும் மனச்சோர்வு அடைந்துவிட்டேன். அந்த ஆசிரியரோ கடுமையாக வேலை வாங்குகிறவர். பையன்களை நிர்ப்பந்தப்படுத்துவதில் அவருக்கு ஒரே ஆசை என்றும் நினைத்தேன். சமஸ்கிருத ஆசிரியருக்கும் பர்ஸிய ஆசிரியருக்கும் ஒரு வகைப் போட்டியே இருந்து வந்தது. 'பர்ஸிய பாஷை போதித்த ஆசிரியர் மாணவர்களிடம் அப்படிக் கண்டிப்பில்லாதவர்; பர்ஸிய

943

மொழி இலகுவானது; அந்த ஆசிரியரும் நல்லவர்; மாண வர்களை வருத்துவதில்லை' என்று பையன்கள் அடிக்கடி தங்களுக்குள் பேசிக்கொள்ளுவார்கள். 'சுலபம்' என் பதில் மயங்கிவிட்டேன்; ஒரு நாள் பர்ஸிய வகுப்பிலேயே போய் உட்கார்ந்து கொண்டேன். நான் இவ்விதம் செய்ததற்காகச் சமஸ்கிருத ஆசிரியர் வருத்தப்பட்டார். என்னை அழைத்துப் பக்கத்தில் வைத்துக்கொண்டு பின் வருமாறு சொன்னார்: "நீ ஒரு வைஷ்ணவரின் மகன் என்பதை எப்படி மறந்துபோனாய்? உன் மதத்தின் மொழியை நீ கற்க வேண்டாமா? இதில் உனக்கு ஏதே னும் கஷ்டமிருந்தால் என்னிடம் வந்து சொல்லுவதற் கென்ன? என்னால் ஆன வரையில் சிரமப்பட்டு மாணவர் களான உங்களுக்குச் சமஸ்கிருதம் சொல்லிக்கொடுக்க வேண்டும் என்பதே என் விருப்பம். மேலே போகப் போக மனத்தைக் கவரும் விஷயங்கள் இம்மொழியில் இருப்பதை நீ அறிவாய். நீ மனம் தளர்ந்துவிடக்கூடாது. வா, திரும்பவும் சமஸ்கிருத வகுப்பிலேயே வந்து உட் கார்."

அவர் காட்டிய அன்பினால் வெட்கிப் போனேன். ஆசிரியரின் அன்பை அலட்சியம் செய்துவிட என்னால் முடியவில்லை. அந்த ஆசிரியரான கிருஷ்ண சங்கர பாண் டியாவை இன்று நான் நன்றியுடனேயே நினைக்கிறேன். ஏனெனில், அப்பொழுது நான் கற்றுக்கொண்ட சிறிது சமஸ்கிருத ஞானமாவது எனக்கு இல்லாதிருக்குமாயின் நமது சமய நூல்களில் எனக்கு எந்த விதமான சிரத்தை யும் இருந்திருப்பதற்கில்லை. அம்மொழியில் இன்னும் அதிக ஞானத்தை நான் அடையாது போனேனே என் பதற்காக இப்பொழுது மிகவும் வருந்துகிறேன். ஏனெ னில், ஒவ்வொரு இந்துப் பையனும் பெண்ணும், சமஸ் கிருதத்தை நன்றாகப் படித்திருப்பது அவசியம் என்பதை இப்பொழுது உணருகிறேன்.

கட்டுரைகள் எழுதுக

1. காந்திஜியின் பள்ளிக்கூட வாழ்க்கையில், உண்மையினிடம் அவர் கொண்டிருந்த பற்றைக் காட்டும் சம்பவங்களைக் கூறுக.

2. சிரவணன், அரிச்சந்திரன் கதைகளில் காந்திஜி ஆர்வம் கொள்ளும்படி முக்கியமாகச் செய்தது எது? இந்தக் கதைகளைக் குறித்து உங்களுக்குத் தெரிந்ததைக் கூறுக.

3. படிப்பில் புத்திசாலித்தனம் இருப்பதைவிட ஒழுக்கமே முக்கியம் என்று கருதினர் காந்திஜி. அவர் எண்ணியது சரி என்று கருதுகிறீர்களா? ஏன்?

4. 'உண்மையுள்ளவன், எச்சரிக்கையுடன் இருப்பவனுகவும் இருக்க வேண்டியது முக்கியம்' என்று காந்திஜி கூறுகிறுர். சந்தர்ப்பத்திலிருந்து காந்திஜி கூறுவதன் பொருளை விளக்குக.

3

திருமணம்

எனது பதின்மூன்ருவது வயதில் எனக்கு மணமாயிற்று என்பதைக் கூறியாக வேண்டியது வேதனேயோடு கூடிய என் கடமையாகிறது. என்னேச் சுற்றிலும் என் பராமரிப்பால் இருக்கும் அதே வயதுடைய சிறுவர்களேப் பார்த்துவிட்டு என் விவாகத்தையும் எண்ணும்போது என்னேப் பற்றி நானே பரிதாபப்பட்டுக்கொள்ளத் தோன்றுகிறது; என் கதிக்கு ஆளாகிவிடாமல் தப்பி விட்ட அவர்களே ஆசீர்வதிக்கவும் தோன்றுகிறது. அப்படிப்பட்ட அக்கிரமமான குழந்தைக் கலியாணம் சரி என்று கூறுவதற்கு ஒழுக்க ரீதியான வாதம் எதுவும் இருப்பதாக நான் காணவில்லே.

உடுத்துக் கொள்ள நல்ல ஆடைகள் கிடைக்கும்; மேளதாளங்கள் இருக்கும்; கலியாண ஊர்வலங்கள் இருக்கும்; பிரமாதமான விருந்து நடக்கும்; இவற்றுடன் சேர்ந்து விளேயாடுவதற்கு விசித்திரப் பெண் ஒருத்தியும் கிடைப்பாள் என்பதைத் தவிர விவாகம் என்பதைப் பற்றி எனக்கு அப்பொழுது வேருென்றுமே தெரியாது. நாளடைவில் ஒருவரையொருவர் அறிந்துகொண்டோம். ஆனல், கணவன் என்ற அதிகாரத்தை நான் உடனே மேற்கொண்டுவிட்டேன்.

என் அனுமதியின்றி அவள் எங்குமே போகக் கூடாது என்று கட்டுப்பாடு விதித்தேன். இத்தகைய காரியத்திற்கு உடன்பட்டுவிடக்கூடிய பெண்ணல்ல, கஸ்தூரிபாய். தான் விரும்பிய இடங்களுக்கு விரும்பிய

போதெல்லாம் அவள் பிடிவாதமாகப் போய்க்கொண்டு தான் இருந்தாள். நான் கட்டுப்பாடுகளை அதிகமாக விதிக்க விதிக்க, அவள் தன் இஷ்டம்போல் நடப்பதும் அதிகமாகிக் கொண்டே வந்தது. அதனால் எனக்கு ஆத்திரமும் அதிகமாகிக் கொண்டே போயிற்று. குழந்தைத் தம்பதிகளான எங்களுக்குள், ஒருவரோடொருவர் பேசாமல் இருந்துவிடுவது என்பது சர்வ சாதாரணமாக ஆகிவிட்டது. என்னுடைய கட்டுத் திட்டங்களைக் கஸ்தூரி பாய் மீறியதில் யாதொரு தவறுமில்லை என்றே நான் இன்று எண்ணுகிறேன். கோயிலுக்குப் போகக்கூடாது என்றும், தன் தோழிகளைப் போய்ப் பார்க்கக் கூடாது என்றும் தடை விதித்தால், கபடமற்ற ஒரு பெண் அதை எப்படிச் சகிப்பாள்? அவளுக்குக் கட்டுத்திட்டங்களையெல்லாம் விதிக்க எனக்கு உரிமை இருக்கிறதென்றால், அதே போன்ற உரிமை அவளுக்கும் உண்டு அல்லவா? இவையெல்லாம் இன்று எனக்குத் தெளிவாகப் புரிகின்றன. ஆனால், அப்பொழுதோ கணவனுக்குரிய அதிகாரங்களைச் செலுத்தியாகவேண்டும் என்றே நினைத்து வந்தேன்.

என்றாலும், எங்களுடைய வாழ்க்கை, மாறாத கசப்பு நிறைந்த வாழ்க்கையாகவே இருந்தது என்று வாசகர்கள் நினைத்துவிட வேண்டாம். நான் அவளிடம் கடுமையாக நடந்துகொண்டதற்கெல்லாம் அன்பே காரணம். மனைவி என்றால் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு அவள் உதாரணமாக விளங்கும்படி செய்யவே நான் விரும்பினேன். அவள் தூய வாழ்க்கை நடத்தி, நான் கற்றவைகளை அவளும் கற்பதன் மூலம் எங்கள் இருவருடைய வாழ்க்கையும் எண்ணங்களும் ஒன்றாக இருக்கும்படி செய்யவேண்டும் என்பதே என் அபிலாஷை.

கஸ்தூரிபாய்க்கு அப்படிப்பட்ட அபிலாஷை ஏதாவது இருந்ததா என்பது எனக்குத் தெரியாது. அவள்

எழுதப் படிக்கத் தெரியாதவள். இயல்பாகவே அவள் கபடமற்ற தன்மையும், சுயேச்சை நோக்கும், விடா முயற்சியும் உடையவள். குறைந்தபட்சம் என் விஷயத்தில் மாத்திரம் பேச வெட்கப்படுபவள். தன்னுடைய அறியாமையைக் குறித்து அவளுக்குக் கவலையே இல்லை. நான் படித்து வந்தது, கூடத் தானும் படிக்க வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபடும் உற்சாகத்தை அவளுக்கு அளித்ததாக எனக்கு ஞாபகமில்லை.

கட்டுரை எழுதுக

1. காந்திஜி, கஸ்தூரிபாயின் குழந்தை மண வாழ்க்கையை உங்கள் சொந்த சொற்களால் விவரிக்கவும்.

4

கூடா நட்பு

உயர்தரப் பள்ளியில் பல சமயங்களிலும் எனக்கு இருந்த நண்பர்கள் மிகச் சிலரே; அவர்களில் இருவர் நெருங்கிய நண்பர்கள் எனலாம். அவர்களில் ஒருவருடைய நட்பு வெகுகாலம் நீடிக்கவில்லை. அவரை நான் கைவிடவில்லை. மற்றவர்களுடன் நான் நட்புக்கொண்டிருந்ததற்காக அவர்தான் என்னைக் கைவிட்டுவிட்டார். பின்னால் ஏற்பட்ட இந்த நட்பை, என் வாழ்க்கையில் நேர்ந்த ஒரு துக்கமான சம்பவமாகவே நான் கருதுகிறேன். இந்நட்பு நீண்ட காலம் நீடித்தது. சீர்திருத்த வேண்டும் என்ற உணர்ச்சியின் பேரிலேயே இவருடன் நட்புக் கொண்டேன்.

இந்த நண்பர், முதலில் என் அண்ணனின் நண்பர். இருவரும் ஒன்றாகப் படித்தவர்கள். அவரிடமிருந்த குறைபாடுகளை நான் அறிவேன். ஆயினும், விசுவாசமுள்ள நண்பர் என்று அவரைக் கருதினேன். எனக்குக் கெட்ட சகவாசம் ஏற்பட்டிருக்கிறது என்று என் தாயார், என் மூத்த அண்ணன், என் மனைவி முதலியவர்கள் எல்லோரும் எனக்கு எச்சரிக்கை செய்தார்கள். என் மனைவியின் எச்சரிக்கையை நான் மதிக்கவில்லை. ஆனால், என் தாயார், மூத்த அண்ணன் ஆகியோருடைய கருத்துக்கு விரோதமாக நான் நடக்கத் துணியவில்லை. ஆகவே, அவர்களுக்குப் பின்வருமாறு சமாதானம் கூறினேன்: "நீங்கள் கூறும் குறைகளெல்லாம் அவரிடம் இருக்கின்றன என்பதை அறிவேன். ஆனால், அவரிடம் இருக்கும் நற்குணங்கள் உங்களுக்குத் தெரியா. அவரைத் திருத்தி

விட வேண்டும் என்பதற்காகவே நான் அவருடன் பழகு வதால் அவர் என்னைக் கெடுத்துவிட முடியாது. அவர் தம்முடைய வழிகளை மாத்திரம் திருத்திக்கொண்டு விட்டால் மிகச் சிறந்தவராகி விடுவார் என்பது நிச்சயம். ஆகையால், எனக்காக நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்று உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்."

நான் இவ்விதம் கூறியது அவர்களுக்குத் திருப்தி யளித்திருக்கும் என்று நான் எண்ணவில்லை. என்றாலும், அவர்கள் என் சமாதானத்தை ஏற்றுக்கொண்டு என் வழியே போக என்னை அனுமதித்து விட்டார்கள்.

ராஜ்கோட் முழுவதிலும் 'சீர்திருத்தம்' என்ற அலை யின் வேகம் மிகுந்திருந்த சமயத்திலேயே இந்த நண் பரை முதன் முதலில் நான் சந்தித்தேன். எங்கள் ஆசிரி யர்களில் பலர் இரகசியமாக மதுவும் மாமிசமும் சாப்பிடு கிறார்கள் என்று இந்த நண்பர் என்னிடம் கூறினார். ராஜ் கோட்டிலிருக்கும் பல பிரமுகர்களின் பெயர்களைச் சொல்லி, அவர்களும் இந்த ரகத்தில் சேர்ந்தவர்களே என்றார். உயர்நிலைப் பள்ளி மாணவர்களில் சிலரும் இப்படிச் செய்கிறார்கள் என்றார்.

இதைக் கேட்டு நான் ஆச்சரியமும் மனவேதனையும் அடைந்தேன். அவர்கள் இவ்விதமானதற்குக் காரணம் என்ன என்று நான் கேட்டதற்குப் பின்வருமாறு அவர் சொன்னார்: "புலால் உண்ணாததால் நாம் பலமில்லாத வர்களாக இருக்கிறோம், புலால் உண்பவர்களாக இருப் பதனாலேயே ஆங்கிலேயரால் நம்மை ஆள முடிகிறது. நான் எவ்வளவு திடகாத்திரத்துடன் இருக்கிறேன் என் பதை நீயே பார்க்கிறாய். ஓட்டப் பந்தயத்தில் நான் வல்லவன் என்பதும் உனக்குத் தெரியும். இதற்குக் காரணம் நான் புலால் உண்பதுதான். மாமிசம் உண் போருக்குக் கட்டி, சிரங்குகள், கொப்பளங்கள் முதலியன

வருவதில்லை; எப்பொழுதாவது அவர்களுக்கு வந்துவிட்டாலும், அவை சீக்கிரம் குணமாகி விடுகின்றன. புலால் உண்ணும் நமது உபாத்தியாயர்களும் மற்ற முக்கியமானவர்களும் முட்டாள்கள் அல்ல. அதிலிருக்கும் நன்மை அவர்களுக்குத் தெரியும். நீயும் அவர்களைப்போல் சாப்பிடவேண்டும். சோதனை செய்து பார்ப்பதைப்போல நல்லது எதுவும் இல்லை. சாப்பிட்டு, அது எவ்வளவு பலத்தைக் கொடுக்கிறது என்று பார்."

புலால் உண்பதை வற்புறுத்திச் சொல்லப்பட்ட இவை யாவும் ஒரே சமயத்தில் கூறப்பட்டவை அல்ல. என் மனத்தில் படும்படி செய்வதற்காக என் நண்பர் பல சமயங்களில் நீண்ட விரிவான வாதம் புரிந்திருக்கிறார். அதன் சாரமே இது. என் மூத்த சகோதரர் இதற்கு முன்னாலேயே அந்தப் படுகுழியில் விழுந்துவிட்டார். ஆகையால் நண்பரின் வாதங்களை அவரும் ஆதரித்துப் பேசினார். என் அண்ணனோடும், இந்த நண்பரோடும் ஒப்பிடும்போது, நான் நிச்சயமாக நோஞ்சலாகவே இருந்தேன். அவர்கள் இருவரும் திடகாத்திரம் உடையவர்கள்; பலசாலிகள்; அதிக தைரியசாலிகள். இந்த நண்பரின் பராக்கிரமச் செயல்களைக் கண்டு மயங்கிவிட்டேன். அவர் நீண்ட தூரம் ஓடுவார்; அத்துடன் அசாதாரணமான வேகத்துடனும் ஓடுவார்; உயரத்திலும் நீளத்திலும் தாவிக் குதிப்பதில் சமர்த்தர்; எவ்வளவு அடி கொடுத்தாலும் சரி, தாங்கிக்கொள்ளுவார். இந்தப் பராக்கிரமச் செயல்களையெல்லாம் அவர் அடிக்கடி என்னிடம் செய்து காட்டுவார். தமக்கு இல்லாத திறமையைப் பிறரிடம் காணும்போது யாரும் பிரமித்துவிடுவது இயல்பு. அதே போல நண்பரின் பராக்கிரமச் செயல்களைப் பார்த்து நானும் பிரமித்துப் போனேன். அவரைப்போல் நானும் இருக்கவேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. என்னால் தாண்டவோ,

ஓடவோ முடியாது. அவரைப்போன்றே நானும் ஏன் பலமுள்ளவனுக இருக்கக்கூடாது?

மேலும், அப்பொழுது நான் ஒரு கோழையாகவும் இருந்தேன். திருடர்கள் பயமும், பிசாசுகள், பாம்புகள் ஆகியவற்றின் பயமும் எனக்கு இருந்தன. இரவில் வீட்டைவிட்டு வெளியே வரவே மாட்டேன். இருட்டு என்றாலே எனக்குப் பயங்கரமாக இருக்கும். ஒரு பக்கத்திலிருந்து பிசாசுகளும், மற்றொரு பக்கத்திலிருந்து திருடர்களும், வேறொரு பக்கத்திலிருந்து பாம்பு களும் வருவதுபோலக் கற்பனை செய்துகொண் டிருக்கும் காரணத்தால், இருட்டில் தூங்குவதென்பது என்னால் முடியாத காரியம். எனவே, அறையில் விளக்கு இல்லாமல் என்னால் தூங்க இயலாது. என் மனைவி அப்பொழுது குழந்தையல்ல; வாலிபப் பருவத்தை யடையும் தருவாயில் இருந்தாள். அவள் என் பக்கத்தில் படுத்துத் தூங்கிக்கொண்டிருப்பாள். எனக்கு இருந்த பயங்களை யெல்லாம் அவளிடம் எப்படிச் சொல்வது? என்னைவிட அவள் தைரியசாலி என்பதை நான் அறிவேன். இதனால் என்னைக்குறித்து நானே வெட்கப் படுவேன். பாம்பு, பிசாசு என்ற பயம் அவளுக்கு இல்லை. இருட்டில் எங்கே வேண்டுமானாலும் அவள் போவாள். என்னிடமிருந்த இந்தப் பலவீனங்களை யெல்லாம் என் நண்பர் அறிவார். உயிரோடு பாம்பைத் தாம் கையில் பிடிக்கமுடியும் என்றும், திருடர்களை எதிர்த்து விரட்டத் தம்மால் முடியும் என்றும், பிசாசுகள் உண்டு என்றே தாம் நம்புவதில்லை என்றும் அவர் என்னிடம் கூறுவார். இவ்வளவும் புலால் உண்பதன் பலன்கள் என்பார்.

இவையெல்லாம் தமக்குரிய விளைவை என்னிடம் உண்டுபண்ணிவிட்டன. நான் தோற்றுப் போனேன். ‘புலால் உணவு நல்லது; அது என்னைப் பலமுள்ளவனுக

வும் தைரியசாலியாகவும் மாற்றும்; நாடு முழுவதுமே புலால் உணவு கொள்ள ஆரம்பித்து விட்டால் ஆங்கிலேயரையே வென்று விடலாம்' என்ற எண்ணங்கள் என்னுள் வளர்ந்தன.

அதன் பேரில் பரிசோதனையைத் தொடங்குவதற்கு ஒரு நாளும் குறிக்கப்பட்டது. அது இரகசியமாக நடைபெறவேண்டும். ஏனெனில் என் பெற்றோர்கள் தீவிர வைஷ்ணவர்கள்; எனக்கு அவர்களிடம் மிகுந்த பக்தியும் உண்டு. மாமிசம் சாப்பிட ஆரம்பித்து விடுவேனாயின், என் பெற்றோரை நான் ஏமாற்ற வேண்டியிருக்கும் என்பது எனக்கு அப்பொழுது தெரியாது என்று சொல்வதற்கில்லை. என் மனம் சீர்திருத்தத்தில் ஈடுபட்டிருந்தது; ஆனால் சுவைக்க்காகச் சாப்பிடுவது என்பதே அதில் இல்லை. அதற்குத் தனிப்பட்ட நல்ல சுவை இருந்ததாக எனக்குத் தெரியாது. பலசாலியாகவும் தைரியசாலியாகவும் ஆகவேண்டுமென்று விரும்பினேன்; என் நாட்டினரும் அப்படி ஆகவேண்டுமென ஆசைப்பட்டேன். சீர்திருத்தத்தில் இருந்த உற்சாகம் என்னைக் குருடனாக்கி விட்டது. இது இரகசியமாகவே இருக்கப் போகிறது என்பது நிச்சயமாகிவிடவே, இக்காரியத்தை என் பெற்றோருக்குத் தெரியாதபடி மறைத்துவைப்பது சத்தியத்தினின்று தவறியதாகாது என்று என்னையே சமாதானப் படுத்திக்கொண்டேன்.

முடிவில் அந்த நாள் வந்தது. ஆற்றங் கரையில் தனியான இடத்தைத் தேடிச் சென்றோம். அங்கே என் வாழ்க்கையிலேயே முதல் தடவையாக மாமிசத்தைப் பார்த்தேன். கடை ரொட்டியும் அதோடு இருந்தது. அவை இரண்டும் எனக்குப் பிடிக்கவில்லை. ஆட்டிறைச்சி, தின்பதற்குத் தோலைப் போல் கடினமாக இருந்தது. என்னால் அதைச் சாப்பிடவே முடியவில்லை; அருவருப்பாக இருந்தது. சாப்பிட முடியாதென்று விட்டுவிட்டேன்.

அதன் பிறகு அன்றிரவெல்லாம் எனக்குத் தூக்கமே வரவில்லை. ஒரு பயங்கரக் கனவு எனக்குச் சதா இருந்து கொண்டிருந்தது. சிறிது கண் அயரும்போதெல்லாம், உயிரோடு ஓர் ஆடு வயிற்றுக்குள் இருந்து கொண்டு கத்துவது போல் தோன்றும். திடுக்கிட்டு எழுவேன். செய்துவிட்ட காரியத்திற்காக மனம் உறுத்திக் கொண்டே இருக்கும். ஆனால், புலால் உண்பது ஒரு கடமை என்று எனக்கு நானே நினைவு படுத்திக் கொள்வேன் ; உற்சாகத்தையும் அடைவேன்.

என் நண்பர் பிடித்த பிடியைச் சாமானியத்தில் விட்டுவிடக் கூடியவர் அல்ல. இறைச்சியைச் சுவையுள்ள பலகாரங்களாகத் தயார் செய்து, அவை கண்ணுக்கும் அழகாக இருக்கும்படி செய்ய ஆரம்பித்தார். அவற்றைச் சாப்பிடுவதற்கு அப்பொழுதெல்லாம் ஆற்றங் கரையில் தன்னந்தனியான இடத்தைத் தேடிப் போவதும் இல்லை. அரசாங்க மாளிகை ஒன்று கிடைத்தது. மேசை, நாற்காலி எல்லாம் போடப்பட்டிருந்த அம்மாளிகையின் உணவு மண்டபத்தை, அங்கிருந்த தலைமைச் சமையற்காரனுடன் பேசி, அந்த நண்பர் ஏற்பாடு செய்திருந்தார்.

இந்தத் தூண்டிலில் நான் விழுந்துவிட்டேன். கடைரொட்டியிடம் எனக்கு இருந்த வெறுப்பையும், ஆடுகளிடம் கொண்டிருந்த இரக்கத்தையும் ஒருவாறு போக்கிக்கொண்டு விட்டேன். தனி மாமிசம் எனக்குப் பிடிக்கவில்லை யென்றாலும் மாமிசப் பலகாரங்களைச் சுவைத்துச் சாப்பிட்டு வந்தேன். இவ்விதம் சுமார் ஓராண்டு நடந்து வந்தது. ஆனால், ஆறு தடவைகளுக்கு மேல் இத்தகைய விருந்துகளை நாங்கள் சாப்பிட்டுவிடவில்லை. ஏனெனில், தினந்தோறும் எங்களுக்கு அரசாங்க மாளிகை கிடைக்கவில்லை. அத்துடன் மாமிசப் பலகாரங்களைத் தயாரிப்பது அதிகச் செலவுள்ளதாகையால்

அடிக்கடி தயாரிப்பது என்பதிலும் கஷ்டங்கள் இருந்தன. இந்தச் சீர்திருத்தத்திற்குக் கொடுக்க என்னிடம் பணம் இல்லை. ஆகையால், இந்தச் செலவுக்கு வேண்டியதையெல்லாம் என் நண்பர்தான் தேடிக்கொள்ள வேண்டியிருந்தது. அவருக்கு எப்படிப் பணம் கிடைத்தது என்பதும் எனக்குத் தெரியாது. என்னை மாமிசம் தின்பவனுக்கிவிட வேண்டும் என்பதில் அவர் உறுதியுடன் இருந்ததால் இதற்கு அவர் எப்படியோ பணம் சம்பாதித்து வந்தார். ஆனால், இதில் அவருடைய சக்திக்கும் ஓர் அளவு இருந்திருக்கவே வேண்டும். எனவே, இந்த விருந்துகள் சுருக்கமாகவும், நீண்ட நாட்களுக்கு ஒரு முறையும்தானே நடைபெற முடியும்?

இந்த இரகசிய விருந்துகளைச் சாப்பிடும் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் இரவில் வீட்டில் சாப்பிடுவது என்பது இயலாத காரியம். வந்து சாப்பிடும்படி வழக்கம் போல என் தாயார் கூப்பிடுவார். வேண்டாம் என்று கூறுவதற்குக் காரணம் என்ன என்றும் கேட்பார். 'எனக்கு இன்று பசியே இல்லை. ஏதோ வயிற்றில் கோளாறு இருக்கிறது' என்று சொல்லிவிடுவேன். இவ்விதம் நான் சாக்குப் போக்குச் சொல்லும்போது, என் மனம் வேதனைப்படாமல் இராது. நான் பொய் சொல்லுகிறேன். அதுவும் தாயாரிடம் பொய் சொல்லுகிறேன் என்பதை அறிவேன். அதோடு மாமிசம் சாப்பிடுகிறேன் என்பது என் தாயாருக்கும் தந்தைக்கும் தெரிந்து விடுமாயின், அவர்கள் அதிர்ச்சியடைந்து வருந்துவார்கள் என்பதும் எனக்குத் தெரியும். இவற்றை நான் அறிந்திருந்தது, என் உள்ளத்தை அரித்துத் தின்றுகொண்டே இருந்தது.

ஆகவே, எனக்கு நானே பின்வருமாறு சொல்லிக் கொண்டேன்: 'மாமிசம் சாப்பிடவேண்டியது முக்கியந்

தான்; நாட்டின் சாப்பாட்டில் சீர்திருத்தம் செய்ய வேண்டியதும் அவசியமே. என்றாலும், தாயிடமும் தந்தையிடமும் பொய் சொல்லி ஏமாற்றிக்கொண்டிருப்பது மாமிசம் சாப்பிடாததைவிட அதிக மோசமானது. ஆகையால், அவர்கள் உயிரோடு இருக்கும் வரையில் நான் மாமிசம் சாப்பிடுவதற்கில்லை. அவர்களுக்குப் பிற்காலம் நான் சுதந்திரம் பெற்றுவிடுவேன். அப்பொழுது நான் மாமிசத்தைப் பகிரங்கமாகவே சாப்பிடுவேன். ஆனால், அச்சமயம் வரும் வரையில் நான் அதைச் சாப்பிடாமல் இருந்து விடுவேன்.'

நான் செய்துகொண்ட இந்த முடிவை என் நண்பருக்குத் தெரிவித்தேன். அதன் பின்னர் மாமிசத்தை நான் சாப்பிட்டதில்லை.

கட்டுரைகள் எழுதுக

1. மாமிசம் சாப்பிடுவது நல்லது என்று எக் காரணங்களை முன்னிட்டு காந்திஜி கருதினார்.
2. மாமிசம் சாப்பிடுவதை அவர் விட்டுவிட்டது ஏன்?
3. நண்பர்களாகப் பழகுவதில் ஒருவர் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். ஏன்? இந்த அத்தியாயத்தில் காந்திஜி கூறும் அனுபவத்திலிருந்து இதைக் காட்டுக.

5

திருடுதல்

புலால் உண்ட காலத்திலும், அதற்கு முன்னுலும், நான் செய்த வேறு சில தவறுகளையும் சொல்லவேண்டி யிருக்கிறது. இவை என் விவாகத்திற்கு முன்போ, விவாகமான உடனேயோ நடந்தவை.

நானும் என் உறவினர் ஒருவரும் புகை பிடிப்பதில் விருப்பம் கொண்டோம். சிகரெட் பிடிப்பதில் நல்லது உண்டு என்று நாங்கள் கண்டதோ, சிகரெட்டுப் புகை யின் வாசனை எங்களுக்குப் பிரியமாக இருந்ததோ இதற்குக் காரணம் அல்ல. எங்கள் வாய்களிலிருந்து ஏராளமாகப் புகை விடுவதில் ஒருவகையான இன்பம் இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டோம். என் சிற்றப்பாவுக்குச் சிகரெட் பிடிக்கும் பழக்கம் உண்டு. அவர் புகை பிடிப்பதைப் பார்த்தபோது நாங்களும் அவரைப்போல் செய்யவேண்டும் என்று நினைத்தோம். ஆனால், எங்களிடம் காசு இல்லை. ஆகவே, என் சிற்றப்பா பிடித்துவிட்டுப் போடும் சிகரெட்டுத் துண்டு களைத் திருடி உபயோகிக்க ஆரம்பித்தோம்.

ஆனால், சிகரெட்டுத் துண்டுகள் எப்பொழுதும் கிடைப்பதில்லை; கிடைத்தாலும் அதிலிருந்து அதிகப் புகை வருவதும் இல்லை. ஆகவே, பீடி வாங்க வேலைக் காரன் பணத்திலிருந்து காசு திருடக் கிளம்பினேம். பீடியை வாங்கி எங்கே வைப்பது என்ற பிரச்சினை வந்தது. பெரியவர்கள் முன்னிலையில் நாங்கள் பீடி பிடிக்க முடியாது. சில வாரங்கள் வரையில் திருடிய காசுகளைக் கொண்டே ஒருவாறு சமாளித்துக்கொண்டோம். இதற்கு

மத்தியில் ஏதோ ஒரு செடியின் தண்டு, துவாரங்கள் உள்ளது என்றும், சிகரெட்டைப்போல அதைப் பிடிக்கலாம் என்றும் கேள்விப்பட்டோம். அதைத் தேடிப் பிடித்து அந்த வகையான புகை பிடிக்கலானோம்.

அவை போன்றவைகளினுலெல்லாம் எங்களுக்குத் திருப்தி உண்டாகவே இல்லை. எங்கள் இஷ்டம்போல் செய்ய எங்களுக்குச் சுதந்திரம் இல்லையே என்ற உணர்ச்சி மனத்தில் எழுந்தது. பெரியவர்களின் அனுமதியில்லாமல் எதையுமே நாங்கள் செய்ய முடியாதிருந்தது பொறுக்க முடியாததாகத் தோன்றியது. கடைசியாக வாழ்வே முற்றும் வெறுத்துப்போய்த் தற்கொலை செய்து கொண்டு விடுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டோம்.

ஆனல், தற்கொலை செய்துகொள்ளுவது எப்படி? விஷம் எங்கிருந்து எங்களுக்குக் கிடைக்கும்? ஊமத்தம் விதைசரியான விஷமுள்ளது என்று கேள்வியுற்ரேம். அவ் விதையைத் தேடிக்கொண்டு காட்டுக்குப்போய் அதைக் கொண்டு வந்துவிட்டோம். மாலை நேரமே அதற்கு நல்ல வேலை என்றும் முடிவாயிற்று. கேதார்ஜி கோயிலுக்குப் போய், அங்கே விளக்குக்கு நெய் வார்த்தோம்; சுவாமி தரிசனம் செய்து கொண்டோம். பிறகு ஒதுக்குப்புறமான ஒரு மூலைக்குப் போனேம். ஆனல், எங்களுக்குத் துணிச்சல் வரவில்லை. 'உடனே செத்துப் போகாமல் இருந்து விட்டால்? அதோடு தற்கொலை செய்து கொள்ளுவதால்தான் என்ன நன்மை? சுதந்திரமின்மையைத்தான் ஏன் சகித்துக்கொள்ளக் கூடாது?' என்றெல்லாம் சிந்தித்தோம். என்ருலும், இரண்டு மூன்று விதைகளை விழுங்கிவிட்டோம். இன்னும் அதிகமாகத் தின்னத் தைரியமில்லை. எங்கள் இருவருக்குமே சாவதற்குப் பயம். மனத்தைத் தேற்றிக் கொள்ள ராம்ஜி கோயிலுக்குப் போய்த் தற்கொலை

எண்ணத்தையே விட்டுவிடுவது என்று முடிவு செய் தோம்.

தற்கொலை செய்துகொள்ள எண்ணுவதைப்போலத் தற்கொலை செய்துகொண்டு விடுவது அவ்வளவு எளி தானதல்ல என்பதைப் புரிந்துகொண்டேன்.

தற்கொலை எண்ணத்தினுல் முடிவாக ஒரு நன்மை யும் உண்டாயிற்று. துண்டுச் சிகரெட்டுகளைப் பொறுக் கிப் புகை பிடிக்கும் வழக்கத்தையும், புகை பிடிப்பதற் காக வேலைக்காரனின் காசைத் திருடுவதையும் நாங்கள் இருவரும் விட்டுவிட்டோம்.

நான் பெரியவனுன பின்பு, புகை பிடிக்க வேண்டும் என்று விரும்பியதே இல்லை. புகை பிடிக் கும் பழக்கம், காட்டுமிராண்டித்தனமானது, ஆபாச மானது, தீமையை விளைவிப்பது என்று நான் எப்பொழு தும் கருதி வந்திருக்கிறேன். உலகம் முழுவதிலுமே புகை பிடிப்பதில் இவ்வளவு வெறி ஏன் இருக்கிறது என்பது எனக்கு விளங்கவே இல்லை. புகை பிடிப்பவர்கள் நிரம்பிய வண்டியில் பிரயாணம் செய்யவே எனக்குச் சகிப்ப தில்லை. எனக்கு மூச்சுத் திணறிவிடுகிறது.

இந்தத் திருட்டையும்விட மிக மோசமான ஒன்று, அதற்குச் சிறிது பின் நான் செய்த குற்றமாகும். பன்னிரண்டு அல்லது பதின்மூன்று வயதிருக்கும் போது காசுகள் திருடினேன்; வயது எனக்கு இன்னும் குறை வாகவும் இருந்திருக்கலாம். நான் செய்த மற்றொரு திருட்டோ, எனக்குப் பதினைந்து வயதாக இருக்கும் போது நிகழ்ந்தது. இச்சமயம், மாமிசம் தின்னும் என் அண்ணன் கைக்காப்பிலிருந்து கொஞ்சம் தங்கத்தைத் திருடினேன். அவர் இருபத்தைந்து ரூபாய் கடன் பட்டிருந் தார். அவர் கையில் கெட்டித் தங்கக் காப்பு அணிந்திருந்

தார். அதிலிருந்து கொஞ்சம் தங்கத்தை வெட்டி எடுத்து விடுவது கஷ்டமன்று.

சரி, அப்படியே செய்யப்பட்டது; கடனும் தீர்ந்தது. ஆனால், இக்குற்றம் என்னால் பொறுக்கமுடியாததாயிற்று. இனித் திருடுவதே இல்லை என்று முடிவு கட்டிக்கொண்டேன். இக்குற்றத்தை என் தந்தையாரிடம் ஒப்புக்கொண்டு விடுவது என்றும் தீர்மானித்தேன். ஆனால் சொல்லத் துணிவு வரவில்லை. என் தந்தையார் என்னை அடிப்பார் என்று நான் பயப்படவில்லை. எங்களில் யாரையுமே அவர் அடித்ததாக எனக்கு ஞாபகமில்லை. அவருக்கு நான் உண்டாக்கக்கூடிய மனவேதனையைக் குறித்தே அஞ்சினேன். அதற்கும் துணிந்துதான் ஆகவேண்டும் என்று எனக்குத் தோன்றியது. எல்லாவற்றையும் அவரிடம் சொல்லிவிட்டாலன்றிப் பாவம் தீராது என்றும் கருதினேன்.

என் குற்றத்தை ஒரு கடிதத்தில் எழுதி, என் தந்தையிடம் கொடுத்து, மன்னிப்புக் கேட்பதென்று கடைசியாகத் தீர்மானித்தேன். ஒரு துண்டுக் காகிதத்தில் அதை எழுதி, நானே என் தந்தையாரிடம் கொடுத்தேன். அக் குறிப்பில் நான் என் குற்றத்தை ஒப்புக்கொண்டிருந்ததோடு, அதற்குத் தக்க தண்டனையை எனக்குக் கொடுக்குமாறும் கேட்டிருந்தேன். என் குற்றத்திற்காக அவர் தம்மையே தண்டித்துக்கொள்ள வேண்டாம் என்றும் முடிவில் அவரைக் கேட்டுக்கொண்டிருந்தேன். 'இனித் திருடுவது இல்லை' என்றும் நான் பிரதிக்ஞை செய்துகொண்டேன்.

குற்றத்தை ஒப்புக்கொண்டு எழுதியிருந்த காகிதத்தை என் தந்தையாரிடம் நான் கொடுத்தபோது என் உடலெல்லாம் நடுங்கியது. அப்பொழுது அவர் படுத்த படுக்கையாக இருந்தார். சாதாரண மரப் பலகையே

அவர் படுக்கை. என் கடிதத்தை அவரிடம் கொடுத்து விட்டு, அப் பலகைக்கு எதிரில் உட்கார்ந்தேன்.

அவர் முழுவதையும் படித்தார். முத்துத் துளிகள் போல் அவர் கன்னங்களில் கண்ணீர் வழிந்து. காகி தத்தை நனைத்தது. ஒரு கணம் கண்ணை மூடிக்கொண்டு அவர் சிந்தித்தார்; பிறகு கடிதத்தைக் கிழித்தெறிந்தார். அக் கடிதத்தைப் படிப்பதற்காக எழுந்து உட்கார்ந்த வர், திரும்பவும் படுத்துக்கொண்டார். நானும் கதறி அழுதேன். என் தந்தையார் அனுபவித்த வேதனையை நான் காண முடிந்தது. நான் ஓவியக்காரனாக இருந்தால் அக்காட்சி முழுவதையுமே இன்று சித்திரமாகத் தீட்டி விட முடியும். அது இப்பொழுதும் என் மனத்தில் தெளி வாக இருந்து வருகிறது.

முத்துப் போன்ற அந்த அன்புத்துளிகள் என் உள் ளத்தைச் சுத்தப்படுத்தி, என் பாவத்தையும் அலம்பி விட்டன. அத்தகைய அன்பை அனுபவித்தவர்கள் மட் டுமே, அது இன்னது என்பதை அறிய முடியும். ‘அன்புக் கணைகளினால் எய்யப்பட்டவன் எவனோ, அவனே அறி வான் அதன் சக்தியை’ என்று ஒரு பாடலும் கூறு கிறது.

அகிம்சா தருமத்தை அறிவதற்கு இது எனக்குச் சரி யானதோர் பாடமாயிற்று. இதில் தந்தையின் அன் பைத் தவிர வேறு எதையும் நான் அப்பொழுது காண வில்லை. ஆனால், இன்றோ, அதுதான் சுத்தமான அகிம்சை என்று அறிகிறேன். அத்தகைய அகிம்சை எல்லாவற் றிலும் வியாபிப்பதாகிவிடும்போது, அது தொட்டதை யெல்லாம் தன்மயமாக்கி விடுகிறது. அதனுடைய சக் திக்கு ஓர் எல்லையே இல்லை.

இத்தகைய உயர்வான மன்னிக்கும் குணம் என் தந் தைக்கு இயல்பானதன்று. அவர் கோபமடைவார்; கடுஞ்

சொற்களைக் கூறுவார்; தலையில் அடித்துக் கொள்ளுவார் என்றெல்லாம் நான் நினைத்திருந்தேன். ஆனால் அவரோ, அவ்வளவு அற்புதமாக அமைதியுடன் இருந்தார். மறைக்காமல் எல்லாவற்றையும் நான் ஒப்புக்கொண்டதே இதற்குக் காரணம் என்று நம்புகிறேன். மன்னிப்பு அளிப்பதற்கு உரிமை உள்ளவரிடம் குற்றத்தை ஒளியாது ஒப்புக்கொண்டு விடுவதோடு, இனி அத்தகைய பாவத்தைச் செய்வதில்லை என்றும் உறுதிமொழி கூறுவதே செய்த குற்றத்திற்காகச் சரியான வகையில் வருத்தப்படுவதாகும். என் குற்றத்தை நான் ஒப்புக்கொண்டு விட்டது, என்னைப்பற்றிக் கவலையே இல்லை என்று என் தந்தையாரை உணரும்படி செய்தது என்பதை அறிவேன். என்மீதுள்ள அவரது அன்பும் அளவுகடந்து அதிகரிக்கும்படி இது செய்தது.

கட்டுரைகள் எழுதுக

1. புகை பிடிப்பது சம்பந்தமான காந்திஜியின் அனுபவத்தைக் கூறுக.
2. குற்றத்தை ஒப்புக்கொண்டு விட்டதால் (அ) காந்திஜியின் தந்தையாரிடம் (ஆ) காந்திஜியிடமே உண்டான பலன்கள் யாவை? உங்கள் சொந்தக் காரணங்களைக் கொண்டு இதை விளக்குக.
3. ஏன் காந்திஜி தற்கொலை செய்துகொள்ள விரும்பினர்? அந்த எண்ணத்தை ஏன் விட்டுவிட்டார்?

6

தந்தையின் நோயும் மரணமும்

நான் இப்பொழுது கூறப்போகின்றவை என்னுடைய பதினாறுவது வயதில் நடந்தவை. பவுத்திர நோயினால் என் தந்தையார் படுத்த படுக்கையாக இருந்தார் என்பதை முன்பே கண்டோம். அவருக்கு வேண்டிய பணிவிடைகளை என் தாயாரும், வீட்டு வேலைக்காரரான ஒரு கிழவரும், நானும் செய்து வந்தோம். என்னுடைய வேலைகள், முக்கியமாகப் புண்ணுக்கு மருந்து வைத்துக் கட்டுவது, என் தந்தைக்கு மருந்து கொடுப்பது, வீட்டிலேயே தயாரிக்க வேண்டியிருந்த மருந்துகளைச் சேர்த்துத் தயாரிப்பது ஆகியவை. ஒவ்வொரு நாள் இரவும் அவருக்குக் கால் பிடித்துவிடுவேன். போகுமாறு அவர் சொன்னபின் அவர் தூங்கிய பிறகுதான் போய்ப் படுத்துக்கொள்ளுவேன். இப்பணி செய்வதற்கு நான் பிரியப்பட்டேன். இதில் நான் எப்பொழுதேனும் அசட்டையாக இருந்துவிட்டதாக எனக்கு நினைவில்லை. எனது அன்றாடக் கடமைகளை நிறைவேற்றியது போக, பாக்கியிருக்கும் நேரத்தைப் பள்ளிக்கூடத்துக்குப் போவதிலும், என் தந்தையாருக்குப் பணிவிடை செய்வதிலும் கழிப்பேன். அவர் என்னை அனுமதிக்கும்போதோ, அவருக்கு உடம்பு கொஞ்சம் நன்றாக இருக்கும்போதோ மாத்திரம் மாலையில் உலாவிவிட்டு வரப்போவேன்.

பயங்கரமான அந்த இரவும் வந்தது. அப்பொழுது இரவு 10-30 அல்லது 11 மணி. தந்தையாருக்குக் கால் பிடித்துக் கொண்டிருந்தேன். எனக்குப் பதிலாக

அவ்வேலையைத் தாம் பார்த்துக் கொள்வதாக என் சிறிய தகப்பனுர் கூறினர். மகிழ்ச்சியடைந்து நேரே படுக்கைக்குப் போனேன். ஐந்து அல்லது ஆறு நிமிடங் களுக்கெல்லாம் வேலேக்காரன் கதவைத் தட்டினன். திகிலுடன் துடித்து எழுந்தேன். "கிளம்புங்கள்; அப்பா வுக்குக் கடுமையாக இருக்கிறது" என்முன். அவருடைய தேக நிலே மிகவும் மோசமாகவே இருந்தது என்பதை நான் அறிவேன். ஆகவே, அச்சமயத்தில், 'கடுமையாக இருக்கிறது' என்ருல் அதன் பொருள் இன்னதென் பதை ஊகித்துக் கொண்டேன். படுக்கையிலிருந்து குதித்தெழுந்தேன். "என்ன விஷயம், சொல்?" என் றேன். "தந்தை காலமாகிவிட்டார்" என்ருன்.

ஆக்வே எல்லாம் முடிந்து போயிற்று! கடைசி நேரத் தில் தந்தையாருக்கு அருகில் இருக்க முடியாமற் போய் விட்டதனுல் அளவுகடந்த வேதனே அடைந்தேன்.

கட்டுரை எழுதுக

1. நோயுற்றிருந்த தந்தையாருக்கு எந்தெந்த வகை களில் காந்திஜி தொண்டு செய்தார் ?

7

சமய அறிவின் உதயம்

எனக்குப் பேய் பிசாசுகளின் பயம் இருந்தது என்று முன்பே கூறியிருக்கிறேன். ராம நாமத்தைத் திரும்பத் திரும்ப உச்சரிப்பதே அந்தப் பயத்தைப் போக்குவதற்கான மருந்து என்று எனக்கு ரம்பா யோசனை கூறினாள். அவள் கூறிய பரிகாரத்தில் எனக்கு இருந்த நம்பிக்கையைவிட அவளிடம் எனக்கு அதிக நம்பிக்கையுண்டு. ஆகையால், பேய் பிசாசுகளிடம் எனக்கு இருந்த பயத்தைப் போக்கிக் கொள்ளுவதற்கு இளம் பிராயத்திலிருந்தே ராம நாம ஜபம் செய்வேன். இது தொடர்ந்து நடக்கவில்லை. ஆனால், குழந்தைப் பருவத்தில் விதைக்கப்பட்ட அந்த நல்ல விதை வீணாகப் போய்விடவில்லை. அந்த நல்ல பெண்மணியான ரம்பா விதைத்த விதையினாலேயே ராம நாமம் இன்று எனக்குப் பொய்க்காத அருமருந்தாக இருந்து வருகிறது. என்று நினைக்கிறேன்.

என் தந்தை நோயுற்றிருந்த சமயம் கொஞ்ச காலம் போர்பந்தரில் இருந்தார். அங்கே மாலை நேரத்தில் இராமாயணத்தைப் படிக்கச் சொல்லிக் கேட்பது வழக்கம். அவ்விதம் இராமாயணம் வாசித்து வந்தவர் சிறந்த இராமபக்தர்.

அவருக்கு இனிமையான சாரீரம் இருந்தது. கண்ணிகளையும் விருத்தங்களையும் பாடுவார். அவற்றை விளக்கிப் பொருள் சொல்லுவார். சொல்லும்போதே மெய்ம் மறந்து அவர் பரவசமாகிவிடுவதோடு கேட்போரையும் மெய்ம்மறந்திருக்கச் செய்துவிடுவார். அப்பொழுது

எனக்குப் பதின்மூன்று வயது இருக்கும். என்றாலும், அவர் வாசிப்பதைக் கேட்டு நான் பரவசமாகிவிட்டது எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. இராமாயணத்தினிடம் எனக்கு ஆழ்ந்த பக்தி ஏற்படுவதற்கு அடிகோலியதே அதுதான். பக்தி நூல்களிலெல்லாம் தலையாய நூல் துளசிதாஸரின் இராமாயணமே என்று நான் இன்று கருதுகிறேன்.

இந்து சமயத்தின் எல்லா உட்பிரிவுகள் சம்பந்தமாகவும், மற்றச் சகோதர சமயங்கள் விஷயத்திலும் சகிப்புத் தன்மையுடன் இருக்கும் ஆரம்பப் பயிற்சியும் எனக்கு ராஜ்கோட்டிலேயே கிடைத்தது. ஏனெனில், என் தந்தையாரும் தாயாரும் விஷ்ணு கோயிலுக்குப் போவதோடு சிவன் கோயிலுக்கும், இராமர் கோயிலுக்கும் போவார்கள். அங்கெல்லாம் சிறுவர்களாகிய எங்களையும் அழைத்துப் போவார்கள்; அனுப்புவார்கள். ஜைன பிட்சுக்கள் அடிக்கடி என் தந்தையைப் பார்க்க வருவார்கள். ஜைனர்கள் அல்லாத எங்கள் வீட்டில் சாப்பிடும் அளவுக்கும் அவர்கள் தாராளமாக நடந்து கொள்ளுவார்கள். சமய விஷயங்களைக் குறித்தும், உலக விவகாரங்களைக் குறித்தும் என் தந்தையுடன் அவர்கள் பேசுவார்கள்.

இதல்லாமல் அவருக்கு முஸ்லிம், பார்ஸி நண்பர்களும் உண்டு. தங்கள் சமயங்களைப் பற்றி அவர்கள் இவரிடம் பேசுவார்கள். எப்பொழுதுமே அவர்கள் கூறுவனவற்றிற்கு மதிப்புக் கொடுத்தும், பெரும்பாலும் சிரத்தையுடனும் இவர் கேட்பார். என் தந்தையாருக்கு நான் பணிவிடை செய்து வந்ததால் அவர்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்கும் வாய்ப்பு எனக்கு அடிக்கடி கிட்டியது. மற்றச் சமயங்களிடம் சகிப்புத் தன்மையுடன் நடந்துகொள்ளும் பண்பை இவைகளெல்லாம் சேர்ந்தே என்னுள் வளர்த்தன.

அச்சமயம் கிறிஸ்தவ மதம் மாத்திரம் இதற்கு ஒரு விலக்காக இருந்தது. அதனிடம் எனக்கு ஒருவகை வெறுப்பு இருந்தது. அதற்குக் காரணமும் உண்டு. அக் காலங்களில் கிறிஸ்தவப் பாதிரிமார்கள், உயர்நிலைப் பள்ளிக்கு அருகில் தெருத் திருப்பத்தில் நின்றுகொண்டு, இந்துக்களையும் அவர்களுடைய தெய்வங்களை தூஷித்துக்கொண்டிருப்பார்கள். அதை என்னால் சகிக்க முடிவதில்லை. ஏறக்குறைய அதே சமயத்தில் பிரபலமான இந்து ஒருவர் கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றப் பெற்றார் என அறிந்தேன். அவர் ஞானஸ்நானம் செய்விக்கப் பெற்றபோது மாட்டிறைச்சி தின்று, மதுபானம் செய்ய வேண்டியிருந்தது என்றும், தனது உடையையும் மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று என்றும் ஊரெங்கும் ஒரே பேச்சாக இருந்தது. அதுமுதல் அவர் ஐரோப்பிய உடையுடன் தொப்பியும் அணிந்துகொண்டு அங்குமிங்கும் போக ஆரம்பித்தாராம். புதிதாக மதம் மாறியவர், தமது மூதாதையரின் மதத்தையும் பழக்க வழக்கங்களையும் தூஷித்துப் பேசவும் தலைப்பட்டு விட்டார் என்றும் கேள்விப்பட்டேன். இவையெல்லாம் கிறிஸ்தவத்தின்மீது எனக்கு வெறுப்பை உண்டாக்கின.

மற்றச் சமயங்களிடம் சகிப்புத் தன்மை கொள்ள நான் கற்றிருந்தேன் என்றால், உண்மையில் எனக்குக் கடவுளிடம் திடமான நம்பிக்கை இருந்தது என்று பொருளல்ல. ஆனால் ஒன்று மாத்திரம் என்னுள் ஆழ வேரூன்றியது: ஒழுக்கமே எல்லாவற்றிற்கும் அடிப்படை; சத்தியமே ஒழுக்கமனைத்தின் சாரம்.

அதே போல நன்னெறியைப் போதிக்கும் ஒரு குஜராத்திப் பாடலும் என் அறிவையும் உள்ளத்தையும் கொள்ளை கொண்டது. ‘தீமை செய்தோருக்கும் நன்மையே செய்’ என்ற அப்பாடலின் போதனை, என் வாழ்க்கையில் வழி காட்டும் தருமமாயிற்று. அதில் எனக்கு

அதிகப் பிரேமை உண்டாகி விட்டதால் அதை மேற்கோளாகக் கொண்டு பற்பல சோதனைகளையும் செய்யத் தொடங்கினேன். மிக அற்புதமானவை என நான் எண்ணும் அப் பாடலின் வரிகள் இவை :

‘உண்ணும்நீர் தந்த ஒருவனுக்குக் கைம்மாறாய்
விண்ணமுதைப் போல்அன்னம் விரும்பிப் படைத்திடுவாய்
அன்போடு கும்பிட்டால் அடிபணிந்து நீதொழுவாய்
செம்பான காசுக்குச் செம்பொன்னைத் தந்திடுவாய்
உயிர்காத்தோன் துன்பத்தை உயிர்கொடுத்து நீதுடைப்பாய்.
செயலாலும் சொல்லாலும் சிந்தையினாலும் பெரியோர்
சின்னஞ் சிறுஉதவி செய்தவர்க்கு எந்நாளும்
ஒன்றுக்குப் பத்தாய் உவந்துசெய்வர் பேருதவி
வையத்தார் எல்லோரும் ஒன்றெனவே மாண்புடையோர்
ஐயப்பா டின்றி அறிந்திருக்கும் காரணத்தால்
இன்னா செய்தாரை ஒறுக்க, அவர்நாண
நன்னயம் செய்து விடுவர் இந் நானிலத்தே.’

கட்டுரைகள் எழுதுக

1. காந்திஜியின் தாதி ரம்பா, அவருக்கு எந்த வகையில் உதவி செய்தார்? ரம்பாவின் புத்திமதி, பிந்திய வாழ்க்கையிலும் காந்திஜிக்கு எவ்விதம் உதவியாக இருந்தது ?
2. இராமாயணத்தைக் குறித்து காந்திஜியின் கருத்து என்ன? சிறு வயதிலேயே அத்தகைய எண்ணம் அவருக்கு எப்படி வந்தது?
3. மதங்களைக் குறித்தும் சிறு வயதில் அவருடைய எண்ணம் என்ன? ஏன்?
4. வாழ்நாளெல்லாம் இதே எண்ணத்துடனேயே இருந்து வந்தாரா? அவர் நடத்திய பிரார்த்தனைக் கூட்டங்கள், மற்றக் காரியங்களைப் பற்றி நீங்கள் அறிந்தவற்றைக் கொண்டு இதை விவரிக்கவும்.

5. மதத்தை எப்பொழுதுமே தாம் அனுசரித்து நடந்தாக வேண்டும் என்று காந்திஜி கருதினர். அவர் கருத்துப்படி மதத்தின் சாரம் என்ன? (அ) கோயில்களுக்குப் போவது அல்லது சடங்குகள், பழக்க வழக்கங்களை அனுசரிப்பது, (ஆ) ஒரு குறிப்பிட்ட கொள்கையில் மாத்திரம் நம்பிக்கை வைப்பது ஆகியவை சம்பந்தமாகவுள்ள மத எண்ணங்களுக்கு எதிராக அவருடைய கருத்து என்ன என்பதை எடுத்துக் காட்டுக.

8

இங்கிலாந்து போக ஆயத்தம்

மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறிய பின் நான் கல்லூரியில் சேர்ந்து தொடர்ந்து படித்துவர வேண்டும் என்று வீட்டிலிருந்த பெரியவர்கள் விரும்பினர். பவநகரில் ஒரு கல்லூரி இருந்தது; பம்பாயிலும் இருந்தது. பவநகரில் படித்தால் செலவு அதிகமாகாதாகையால் அங்கே போய்ச் சாமளதாஸ் கல்லூரியில் சேருவதென முடிவு செய்தேன். அவ்வாறே சென்று சேர்ந்தும் விட்டேன். ஆனல், அங்கே எனக்குத் திக்குத் திசை புரியவில்லே. எல்லாமே எனக்குக் கஷ்டமாக இருந்தது. ஆறு மாதமானதும் வீடு திரும்பினேன்.

மாவ்ஜி தவே என்ற கல்வியறிவுள்ள பிராமணர், எங்கள் குடும்பத்திற்கு உற்ற நண்பரும் ஆலோசகருமாக இருந்தார். அவர் புத்தி கூர்மையுள்ளவர்; என் தந்தையார் இறந்த பிறகுங்கூட எங்கள் குடும்பத்துடன் தொடர்பு வைத்திருந்தார். விடுமுறைக்கு நான் ஊர் போகும்போது அவர் எங்கள் வீட்டுக்கு வருவது வழக்கம். என் தாயாருடனும் தமையனுருடனும் பேசிக்கொண்டிருந்தபோது என் படிப்பைப் பற்றி விசாரித்தார். நான் சாமளதாஸ் கல்லூரியில் படிக்கிறேன் என்பதை அறிந்ததும் அவர் பின்வருமாறு கூறினர்: "இப்பொழுது காலம் மாறிப் போய்விட்டது. தக்க படிப்பு இல்லாமல் உங்களில் யாரும் உங்கள் தந்தையின் பதவிக்கு வர முடியாது. இப்பொழுது இப்பையன் இன்னும் தொடர்ந்து படித்துக்கொண்டிருப்பதால், அப்பதவிக்கு இவனைத் தயார் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

இவன் பி. ஏ. பட்டத்தைப் பெறுவதற்கு நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளாவது ஆகும். அப்படிப் பெறும் பட்டம் இவனை ஓர் அறுபது ரூபாய்ப் பதவிக்குத்தான் தகுதியுடையவனுக்குமேயன்றித் திவான் பதவிக்குத் தகுதியுடையவனுக்காது. என் மகனைப்போல் இவனும் சட்டம் படித்துத் தேர்ச்சி பெறவும் அதிக காலமாகும். அதற்குள் திவான் பதவியைப் பெற முயலும் வக்கீல்கள் ஏராளமாகிவிடுவார்கள். இதையெல்லாம்விட இவனை இங்கிலாந்துக்கு அனுப்புவது எவ்வளவோ மேல் என்று எனக்குத் தோன்றுகிறது. இங்கிலாந்திலிருந்து இப்பொழுதுதான் வந்திருக்கும் அந்தப் பாரிஸ்டரைப் பாருங்கள். எவ்வளவு நாகரிகமாக அவன் வாழ்க்கை நடத்துகிருன்! கேட்டால் போதும், அவனுக்குத் திவான் பதவி கிடைத்துவிடும். இவ்வருடமே மோகனதாஸை இங்கிலாந்துக்குக் கட்டாயம் நீங்கள் அனுப்பிவிட வேண்டும் என்றே நான் கூறுவேன். இங்கிலாந்தில் கேவல் ராமுக்கு அநேக நண்பர்கள் இருக்கிருர்கள். அவர்களுக்கெல்லாம் அவன் அறிமுகக் கடிதங்கள் கொடுப்பான். மோகனதாஸ் அங்கே சுகமாக இருந்துவிட்டு வரலாம்."

மாவ்ஜி தவேயை, ஜோஷிஜி என்று சொல்லுவது வழக்கம். அவர் என்னைத் திரும்பிப் பார்த்து, "இங்கே படிப்பதைவிட இங்கிலாந்துக்குப் போகவே நீ விரும்புகிருயல்லவா?" என்று முழு நம்பிக்கையுடன் கேட்டார் இதைவிட எனக்கு மகிழ்ச்சி தரக்கூடியது வேறு எதுவும் இருக்க முடியாது. கஷ்டமான கல்லூரிப் படிப்புடன் நான் தொல்லைப்பட்டுக்கொண்டிருந்தேன். ஆகையால், இந்த யோசனையை உடனே ஏற்றுக்கொண்டு, "என்னை எவ்வளவு சீக்கிரத்தில் அனுப்புகிறீர்களோ அவ்வளவுக்கு நல்லது" என்றேன். என் மூத்த சகோதரரின் மனம் மிகவும் பரபரப்படைந்து விட்டது. என்னை அனுப்புவதற்கு வேண்டிய பணத்திற்கு என்ன வழி

செய்வது? என்னைப் போன்ற ஓர் இளைஞனை நம்பித் தனியே வெளிநாடுகளுக்கு அனுப்புவது சரியா?

என் தாயாருக்கும் ஒரே மனக் குழப்பம் ஆகிவிட்டது. என்னை விட்டுப் பிரிய அவர் விரும்பவில்லை; நுட்பமாக எல்லா விபரங்களையும் விசாரித்துக்கொண்டிருந்தார். வாலிபர்கள் இங்கிலாந்துக்குப் போய்க் கெட்டு விடுகிறார்கள் என்று யாரோ ஒருவர் அவருக்குச் சொல்லிவிட்டார். இன்னும் யாரோ ஒருவர், 'அவர்கள் மாமிசம் சாப்பிட ஆரம்பித்துவிடுகிறார்கள்' என்று சொல்லிவிட்டார். 'குடிக்காமல் அங்கே அவர்களால் இருக்கவே முடியாது' என்று இன்னும் ஒருவர் சொல்லியிருந்தார். "இவைகளுக்கெல்லாம் நீ என்ன சொல்லுகிறாய்?" என்று என் தாயார் என்னைக் கேட்டார். நான், "என்னை நீங்கள் நம்பமாட்டீர்களா? உங்களிடம் பொய் சொல்லமாட்டேன். 'அவைகளில் எதையும் தீண்டுவதில்லை' என்று உங்களுக்குச் சத்தியம் செய்து கொடுக்கிறேன். அங்கே அப்படிப்பட்ட அபாயம் ஏதாவது இருந்தால் ஜோஷிஜி என்னைப் போகவிடுவாரா?" என்றேன்.

"உன்னை நான் நம்பலாம். ஆனால், நீ தொலைவான நாட்டில் இருக்கும்போது எப்படி நம்புவது? எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது; என்ன செய்வது என்பதே புரியவில்லை. பேச்சர்ஜி சுவாமியைக் கேட்கிறேன்" என்றார் அன்னை.

பேச்சர்ஜி சுவாமி, முன்பு மோத் வணிகர். இப்பொழுது ஜைன சந்நியாசியாகிவிட்டார் ஜோஷிஜியைப் போல இவரும் குடும்பத்திற்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறி வருவார். அவர் எனக்கு உதவினார்; "மூன்று விரதங்களை அவன் அனுசரிப்பதாக அவனிடம் சத்தியம் வாங்கிக்கொள்ளுகிறேன். பிறகு அவனைப் போகச்

சொல்லலாம்" என்றார். அவர் என்னிடம் அப்படியே பிரமாணம் வாங்கினார். 'மதுபானம், பெண், மாமிசம் ஆகியவைகளைத் தொடுவதில்லை' என்று சத்தியஞ் செய்து கொடுத்தேன். உடனே என் அன்னையார் அனுமதி தந்தார்.

என்னைக் கௌரவிப்பதற்காக உயர்நிலைப் பள்ளியில் எனக்கு ஒரு பிரிவுபசாரம் நடத்தினர். ராஜ்கோட்டைச் சேர்ந்த ஒரு வாலிபன் இங்கிலாந்துக்குப் போகிறான் என்றால் அது சாமானிய விஷயமன்று! 'நன்றி தெரிவிப்பதற்கென்று சில வார்த்தைகள் எழுதி வைத்திருந்தேன். அதைப் படிக்க நான் எழுந்தபோது எனக்கு எவ்விதம் தலை சுற்றியது, உடம்பெல்லாம் எவ்விதம் நடுங்கியது என்பது இன்னும் நினைவிருக்கிறது.

பிறந்து சில மாதங்களே ஆன குழந்தையுடன் என் மனைவியை விட்டுவிட்டு, என் தாயாரின் அனுமதியையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டு நான் குதூகலமாகப் பம்பாய்க்குப் புறப்பட்டேன். அங்கே போய்ச் சேர்ந்ததும், ஜூன், ஜூலை மாதங்களில் இந்துமகா சமுத்திரத்தில் கொந்தளிப்பு அதிகமாக இருக்கும் என்றும், நான் இப்பொழுதுதான் முதல் முறையாகக் கப்பல் பிரயாணம் செய்வதால் நவம்பர் மாதம் வரையில் நான் கப்பலேற அனுமதிக்கக் கூடாது என்றும் நண்பர்கள் என் சகோதரரிடம் கூறினர்.

இதற்கு மத்தியில் நான் வெளிநாடு போகப் போவதைக் குறித்து என் சாதியினர் பரபரப்படைந்தார்கள்; சாதியினரின் பொதுக் கூட்டம் ஒன்றைக் கூட்டினர்; அதன் முன்னால் ஆஜராகுமாறு எனக்குக் கட்டளை அனுப்பினர். நானும் போனேன். திடீரென்று எனக்கு எப்படி அவ்வளவு தைரியம் வந்தது என்பது எனக்கே தெரியவில்லை. எதற்கும் அஞ்சாமல், கொஞ்சமும் தயக்க

யின்றிக் கூட்டத்திற்கு முன்னல் போனேன். சாதி நாட்டாண்மைக்காரரான சேத் எனக்குத் தூர பந்து. என் தந்தையாருக்கு மிகவும் வேண்டியவரா யிருந்தவர். என்னைப் பார்த்து அவர் பின்வருமாறு கூறினர் :

"இங்கிலாந்துக்குப் போவதென்று நீ ஏற்பாடு செய்திருப்பது சரியல்ல என்பது நம் சாதியினரின் அபிப்பிராயம். வெளிநாடுகளுக்குக் கப்பல் பிரயாணம் செய்வதை நம் மதம் அனுமதிக்கவில்லை. நம் மத தருமங்களைக் கைவிடாமல் அங்கே வசிப்பதே சாத்தியமில்லை என்று நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். ஐரோப்பியருடன் சேர்ந்து சாப்பிடவும் குடிக்கவும் வேண்டி வரும்."

இதற்கு நான் சொன்ன பதிலாவது: "இங்கிலாந்துக்குச் செல்வது நம் மதத்திற்கு விரோதம் என்றே நான் கருதவில்லை. மேற்கொண்டு படிப்பதற்காகத் தான் நான் அங்கே போக உத்தேசித்திருக்கிறேன். நீங்கள் எவற்றைக் குறித்து அதிகமாகப் பயப்படுகிறீர்களோ அந்த மூன்றையும் தீண்டுவதில்லை என்று என் தாயார் முன்னிலையில் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேன். அந்தப் பிரதிக்ஞை என்னைப் பாதுகாக்கும் என்று நான் நிச்சயமா யிருக்கிறேன்."

இதற்குச் சேத், "அங்கே நமது மதாசாரங்களைக் கடைப்பிடித்து நடப்பது சாத்தியமே அல்ல என்று நாங்கள் சொல்லுகிறோம். எனக்கும் உன் தந்தைக்கும் இருந்த உறவு, உனக்குத் தெரியும். ஆகவே, நான் கூறும் புத்திமதியை நீ கேட்க வேண்டும்" என்றார்.

"அந்த உறவுகளையெல்லாம் நான் அறிவேன். நீங்கள் எனக்குப் பிதாவைப் போன்றவர். ஆனல், இதில் நான் வேறு எதுவும் செய்வதற்கில்லை. இங்கிலாந்துக்குச் செல்வதென்று தீர்மானித்துவிட்டதை நான்

மாற்றுவதற்கில்லை. என் தந்தையின் நண்பரும் ஆலோச கருமான கற்றறிந்த ஒரு பிராமணர், நான் இங்கிலாந்து செல்வதில் எந்தவித ஆட்சேபமும் இருப்பதாகச் சொல்லவில்லை. என் தாயாரும் சகோதரரும் எனக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள்" என்றேன்.

"என்றாலும், சாதிக் கூட்டத்தின் கட்டளையை நீ மீறி நடக்கப் போகிறாயா?"

"எனக்கு வேறு வழியில்லை. இவ்விஷயத்தில் சாதி தலையிடக் கூடாது என்றே நான் நினைக்கிறேன்."

இதைக் கேட்டதும் சேத்துக்குக் கோபம் வந்து விட்டது. அவர் கடுமையாகப் பேசினார். அதற்கெல்லாம் அசையாமல் உட்கார்ந்திருந்தேன். எனவே, சேத் வரு மாறு உத்தரவு பிறப்பித்தார்: "இன்று முதல் இப் பையனை சாதிப் பிரஷ்டம் செய்யப்பட்டவனாக நடத்த வேண்டும். இவனுக்கு யார் உதவி செய்தாலும், இவனை வழியனுப்ப யார் துறைமுகத்திற்குச் சென்றாலும், அவர் ஒரு ரூபாய் நான்கணா அபராதம் விதிக்கப்படுவார்."

இந்த உத்தரவைக் கேட்டு நான் கலங்கிவிடவில்லை. சேத்திடம் விடை பெற்றுக்கொண்டு திரும்பினேன். இதை என் சகோதரர் எப்படி ஏற்பாரோ என்றே பயந் திருந்தேன். அதிர்ஷ்டவசமாக, அவர் உறுதியுடன் இருந் தார். சேத்தின் கட்டளை எதுவானாலும், நான் போவதைத் தாம் அனுமதிப்பதாகக் கடிதம் எழுதி எனக்கு உறுதி கூறினார்.

கப்பலில் ஜூனாகத் வக்கீல் ஸ்ரீ திரியம்பக்ராய் மஜூம்தார் செல்ல இருந்த அதே அறையிலேயே நண் பர்கள் எனக்கும் ஏற்பாடு செய்திருந்தனர். என்னைக் கவனித்துக்கொள்ளுமாறும் அவரிடம் கூறினர். அவர் அனுபவமுள்ளவர்; வயதில் பெரியவர்; உலகமறிந்த

வர். நானே, உலக அனுபவமே இல்லாத பதினெட்டு வயது சிறுவன். என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய தில்லை என்று ஸ்ரீ மஜூம்தார் என் நண்பர்களுக்குக் கூறினர்.

கடைசியாகச் செப்டம்பர், 4-ஆம் தேதி பம்பாயி லிருந்து நான் கப்பலில் புறப்பட்டேன்.

கட்டுரை எழுதுக

1. இங்கிலாந்திற்குப் போவதற்கு முன் காந்திஜிக்கு ஏற்பட்ட கஷ்டங்களை விவரிக்கவும்.

9

கப்பலில்

ஆங்கிலத்தில் பேசி எனக்குப் பழக்கமே இல்லை. நாங்கள் இருந்த இரண்டாம் வகுப்பில் ஸ்ரீ மஜூம்தாரைத் தவிர மற்றெல்லோரும் ஆங்கிலேயர்கள். அவர்களுடன் என்னால் பேச முடியவில்லை. அவர்கள் என்னிடம் வந்து ஏதேனும் பேசினால், அவர்கள் சொல்லுவது என்ன என்பதைப் புரிந்துகொள்ளுவதும் கஷ்டமாக இருந்தது. புரிந்துகொண்டாலும் என்னால் பதில் சொல்ல முடியவில்லை. பேசுவதற்கு முன்னால் ஒவ்வொரு வாக்கியத்தையும் மனத்திற்குள் நான் சொல்லிப் பார்த்துக் கொள்ள வேண்டி யிருந்தது. கத்தியையும் முள்ளையும் கொண்டு எடுத்துச் சாப்பிடவும் எனக்குத் தெரியாது. பரிமாறப் போகும் உணவு வகையைக் குறிப்பிடும் சீட்டில் கண்டவைகளில் மாமிசம் கலவாத பண்டம் எது என்று கேட்டுத் தெரிந்துகொள்ளவும் அப்பொழுது எனக்குத் தைரியமில்லை. ஆகையால், சாப்பாட்டு அறைக்குச் சென்று உட்கார்ந்து நான் சாப்பிடவே இல்லை. என் அறையிலேயே சாப்பிட்டுவிடுவேன். நான் சாப்பிட்டதெல்லாம் பெரும்பாலும் நான் உடன்கொண்டு வந்திருந்த மிட்டாயும் பழங்களுமே. ஸ்ரீ மஜூம்தாருக்கு இத்தகைய சங்கடம் எதுவுமே தோன்றவில்லை. அவர் எல்லோருடனும் சகஜமாகப் பழகிக்கொண்டிருந்தார். நாளெல்லாம் நான் அறைக்குள்ளேயே அடைபட்டுக் கிடப்பேன். மேல் தளத்தில் அதிகம்பேர் இல்லாத போதுதான் அங்கே போகத் துணிவேன். ஆனால், ஸ்ரீ மஜூம்தாரோ மேல் தளத்திற்கு அடிக்கடி போய் உலாவு

வார். பிரயாணிகளுடன் கூடிப் பழகி, அவர்களுடன் தாராளமாகப் பேசும்படி அவர் எனக்கு அடிக்கடி சொல்லுவார்; வக்கீல்களுக்குப் பேச்சுச் சாமர்த்தியம் இருக்கவேண்டும் என்பார்; வக்கீல் தொழிலில் தமது அனுபவங்களையும் எடுத்துக் கூறுவார். ஓர் அந்நிய மொழியில் பேசும்போது தவறு ஏற்படுவது இயல்பு என்றும், ஆகையால், அதைப் பொருட்படுத்தாமல் சாத்தியமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆங்கிலத்தி லேயே பேசும்படியாகவும் எனக்கு அவர் புத்திமதி கூறினர். ஆனல், அவர் என்ன சொல்லியும் எனக்கு இருந்த கூச்சத்தை மாத்திரம் போக்கடிக்கவே முடிய வில்லை.

ஆங்கிலப் பிரயாணி ஒருவர், என்மீது பிரியங் கொண்டு என்னைப் பேச்சுக்கு இழுத்தார். அவர் என்னை விட மூத்தவர். நான் என்ன சாப்பிட்டேன், நான் யார், நான் எங்கே போகிறேன், நான் இப்படிக் கூச்சப் படுவது ஏன் என்றெல்லாம் அவர் என்னை விசாரித்தார். சாப்பாட்டு அறைக்கு வந்து, எல்லோருடனும் சாப்பிடும் படியும் சொன்னர். மாமிசம் சாப்பிடுவதில்லை என்று நான் பிடிவாதமாகக் கூறியதைக் கேட்டுச் சிரித்தார். நாங்கள் செங்கடலை அடைந்ததும் அவர் நட்பு முறையில் பின்வருமாறு கூறினர்: "அதெல்லாம் இதுவரை மிகவும் சரி. ஆனல், பிஸ்கே குடாக்கடல் போய்ச் சேர்ந்ததும் உம்முடைய தீர்மானத்தையெல்லாம் மாற்றிக்கொண்டு விட வேண்டியதுதான். இங்கிலாந்தில் குளிர் அதிக மாகையால் மாமிசம் சாப்பிடாமல் அங்கே யாருமே உயிர் வாழ முடியாது."

"அங்கும் மாமிசம் சாப்பிடாமல் மனிதர் இருக்க முடியும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்" என்றேன்.

"அதெல்லாம் வெறுங் கதை. இதை நிச்சயமாக நம்பும். புலால் உண்ணுமல் அங்கே இருப்பவர் எனக்குத்

தெரிந்த வரையில் யாருமே இல்லை. நான் குடிக்கிறேன். ஆனால், உம்மையும் குடிக்குமாறு நான் சொல்லவில்லை யல்லவா? மாமிசம் சாப்பிடாமல் அங்கே உயிர் வாழ முடியாதாகையால் நீர் புலால் உண்டே ஆகவேண்டும் என நினைக்கிறேன்" என்றார்.

"உங்கள் அன்பான புத்திமதிக்கு என் நன்றி. ஆனால், புலாலைத் தீண்டுவதில்லை என்று என் அன்னைக்கு நான் சத்தியம் செய்து கொடுத்துவிட்டு வந்திருக்கிறேன். ஆகையால், அதைத் தின்னுவது என்பதை நான் நினைப்பதற்கும் இல்லை. அதைத் தின்னாமல் இருப்பது சாத்தியமில்லை என்று கண்டால், நான் இந்தியாவுக்குத் திரும்பி விடுவேனே யன்றி, அங்கே இருக்க வேண்டும் என்பதற்காக மாமிசம் தின்னமாட்டேன்" என்றேன்.

பிஸ்கே குடாக்கடலை அடைந்தோம். மாமிசம் தின்பதும் குடிப்பதும் அவசியம் என்ற உணர்ச்சி அப்பொழுதும் எனக்கு ஏற்படவில்லை.

முடிவாக, சௌத்தாம்டன் துறைமுகம் போய்ச் சேர்ந்தோம். அன்று சனிக்கிழமை என்றே எனக்கு ஞாபகம். கப்பலில் இருந்தபோது கறுப்பு உடை தரித்திருந்தேன். என் நண்பர்கள் தயாரித்துக் கொடுத்திருந்த வெள்ளைக் கம்பளி உடையைக் கப்பலிலிருந்து இறங்கும்போது போட்டுக்கொள்ளுவது என்று வைத்திருந்தேன். இறங்கும்போது வெள்ளை உடை அணிந்தால் அழகாயிருக்கும் என்று நினைத்தேன்.

ஆகவே, வெள்ளைக் கம்பளி ஆடை உடுத்துக் கொண்டு இறங்கினேன். அப்பொழுது செப்டெம்பர் மாதக் கடைசி. அத்தகைய உடை உடுத்தியவன் நான் ஒருவனே என்பதைக் கண்டேன். மற்றவர்களெல்லாம் கிரிண்ட்லே கம்பெனியின் ஏஜென்டிடம் தங்கள்

சாமான்களை எல்லாம் ஒப்படைத்துவிட்டு இறங்கினார்கள். நானும் அப்படியே செய்ய வேண்டும் என்று என் சாமான்களை - சாவி உள்பட - அந்த ஏஜெண்டிடம் ஒப்பித்தேன்.

லண்டனில் விக்டோரியா ஹோட்டலில் போய்த் தங்கும்படி கப்பலில் யாரோ ஒருவர் சொன்னார். அதன்படி நானும் ஸ்ரீ மஜ்முதாரும் அங்கே போனோம். நான் ஒருவனே வெள்ளை உடையுடன் இருப்பது எனக்குப் பெரிய அவமானமாக இருந்தது. மறுநாள் ஞாயிற்றுக் கிழமை. ஆகையால், என் சாமான்களைக் கிரிண்ட்லே கம்பெனியார் அதற்கு மறுநாளே கொண்டுவந்து சேர்ப்பார்கள். என்று ஹோட்டலில் கூறியதும் எனக்கு ஆத்திரம் வந்துவிட்டது.

டாக்டர் மேத்தாவுக்குச் சௌத்தாம்டனிலிருந்து தந்தி கொடுத்திருந்தேன். அன்றிரவு எட்டு மணிக்கு அவர் என்னைப் பார்க்க வந்தார்; மிக்க அன்புடன் எனக்கு முகமன் கூறினார். நான் வெள்ளைக் கம்பளி உடை தரித்திருந்ததைப் பார்த்துச் சிரித்தார். நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது அவருடைய உயரத் தொப்பியை எடுத்தேன். அது எவ்வளவு மிருதுவாக இருக்கிறது என்பதை அறிய அதைத் தடவிப் பார்த்தேன். தெரியாமல் எதிர்ப் புறமாகத் தடவிவிட்டேன். அது ஒரு பிராணியின் மிருதுவான ரோமத்தால் ஆனது. எனவே, நான் தடவியதனால் அந்த ரோமமெல்லாம் கலைந்துவிட்டது. நான் செய்ததையெல்லாம் ஒரு மாதிரி கோபத்துடன் டாக்டர் மேத்தா பார்த்துவிட்டு, என்னைத் தடுத்தார். ஆனால், விஷமம் நடந்தது நடந்து விட்டது. இச்சம்பவம் வருங்காலத்திற்கு எனக்கு ஓர் எச்சரிக்கையாயிற்று. ஐரோப்பிய மரியாதைச் சம்பிரதாயங்களில் நான் கற்ற முதல் பாடம் இது. அந்தச் சம்பிரதாய விவரங்களைப்பற்றி டாக்டர் மேத்தா

வேடிக்கையாகவே எனக்குப் பாடம் கற்பித்தார். "பிற ருடைய சாமான்களைத் தொடாதீர்" என்ருர்; "ஒருவர் முதல் முதலில் அறிமுகமானதும் இந்தியாவில் கேட்பது போல் அவரிடம் கேள்விகளெல்லாம் கேளாதேயும்; இரைந்து பேசக்கூடாது; பேசிக்கொண்டிருக்கையில் இந்தியாவில் நாம் கூப்பிடுவதைப்போல யாரையும், 'ஸார்' என்று கூப்பிடக்கூடாது. வேலைக்காரர்களும் கீழ் இருப்பவர்களும் மாத்திரமே அப்படிக் கூப்பிடுவார்கள்" என்ருர். இப்படியெல்லாம் பல விஷயங்களை அவர் எனக்குப் போதித்தார். ஹோட்டலில் தங்கினுல் செலவு அதிகமாகும் என்றும், தனிப்பட்ட ஒரு குடும்பத்தின ருடன் தங்கியிருப்பதே நல்லது என்றும் சொன்னுர்.

ஹோட்டல் வாசம்-எனக்கும் சரி, ஸ்ரீ மஜ்முதா ருக்கும் சரி-சங்கடமானதாக இருந்தது. அதோடு, செலவும் அதிகமாயிற்று. மால்டாவிலிருந்து எங்களுடன் கப்பலில் வந்த ஒரு சிந்திக்காரர் ஸ்ரீ மஜ்முதாருக்கு நண்பரானுர். லண்டன் அவருக்குப் புதிதல்ல. ஆகவே, நாங்கள் தங்குவதற்கு அறை பார்த்துத் தருவதாக அவர் சொன்னுர். நாங்களும் ஒப்புக்கொண்டோம். திங்கட் கிழமை எங்கள் சாமான்கள் வந்து சேர்ந்ததும், ஹோட் டல் கணக்கைத் தீர்த்துவிட்டு, சிந்தி நண்பர் எங்களுக் காக வாடகைக்கு அமர்த்திய அறைகளில் இருக்கப் போய்விட்டோம். ஹோட்டலுக்கு மூன்று பவுன் கொடுக்க வேண்டி வந்தது. அந்தத் தொகையைக் கண்டதும் நான் அதிர்ச்சி யடைந்தேன் என்பது எனக்கு நினை விருக்கிறது. செலவு இவ்வளவு அதிகமாக இருந்ததே ஒழிய, அங்கே நான் எதுவும் சாப்பிடாமல் பட்டினி கிடந்தேன் என்றே சொல்ல வேண்டும். அங்கே கொடுத்த சாப்பாட்டில் எதுவுமே எனக்குப் பிடிக்க வில்லை. ஓர் உணவு வகை எனக்குப் பிடிக்கவில்லை என்று வேருென்றைக் கொண்டுவரச் சொன்னுல், இரண்டுக்கும்

சேர்த்துப் பணம் கொடுக்க வேண்டி வந்தது. இதெல்லாம் இப்படி இருக்க, உண்மை என்னவென்ருல், பம்பாயிலிருந்து கொண்டுவந்த ஆகாராதிகளைக் கொண்டே நான் காலம் கழிக்கலானேன்.

புது அறையிலும் எனக்கு மன நிம்மதியே இல்லை. வீட்டு நினைவும், நாட்டு நினைவுமே எனக்கு இடைவிடாமல் இருந்துகொண்டிருந்தன. என் அன்னையின் அன்பு அடிக்கடி என் நினைவுக்கு வரும். இரவில் கண்ணீர் பெருகி, கன்னங்களில் அருவியாக வழியும். வீட்டைப் பற்றிய எல்லாவித நினைவுகளும் வந்துவிடவே தூங்கவே முடியவில்லை. என் துயரத்தை யாரிடமாவது சொல்லி ஆறுதல் அடையலாம் என்ருல் அதற்கும் வழியில்லை. என் துயரத்தை யாரிடமாவது சொல்லிக்கொள்ள முடிந்திருந்தாலும் அதனுலும் ஒரு பயனும் இராது. ஏனெனில், எனக்கு எதுவும் ஆறுதல் அளிக்க முடியாது என்பதை நான் அறிவேன். மக்கள், அவர்களுடைய பழக்க வழக்கங்கள், அவர்களுடைய வீடுகள் எல்லாமே விசித்திரமாக இருந்தன. ஆங்கில மரியாதை முறைகள் விஷயத்திலோ எனக்கு எதுவுமே தெரியாது. ஆகையால், எங்கே தவறு செய்துவிடுவேனே என்பதற்காக எப்பொழுதும் எச்சரிக்கையாகவே இருக்கவேண்டியிருந்தது. சைவ உணவு விரதமோ அதிகப்படியானதோர் அசௌகரியம். நான் சாப்பிடக்கூடிய ஆகார வகைகளும் சுவையற்றவைகளாகவும் சப்பென்றும் இருந்தன. எனவே, இருதலைக் கொள்ளி எறும்புபோல் ஆனேன். இங்கிலாந்து வாசத்தை என்னுல் சகிக்க முடியவில்லை. ஆனுல், இந்தியாவுக்குத் திரும்பிவிடுவது என்பதையோ நினைக்கக்கூட முடியாது. வந்தது வந்துவிட்டேன்; மூன்று ஆண்டுகள் இருந்து படிப்பை முடித்துவிடவேண்டும் என்று கூறியது என் அந்தராத்மா.

கட்டுரைகள் எழுதுக

1. கப்பலில் காந்திஜிக்கு ஏற்பட்ட சங்கடங்கள் யாவை ?

2. சம்பிரதாயம் என்பதன் பொருள் என்ன ? அவர் இங்கிலாந்தில் இறங்கிய போது (அ) உடை, (ஆ) உணவு, (இ) மரியாதை சம்பந்தமாக பிரிட்டிஷ் சம்பிரதாயத்திற்கு மாருக எந்த வகையில் அவர் நடந்துகொண்டார் ?

இரண்டாம் பாகம்

இங்கிலாந்தில் மாணவன்

10

லண்டனில்

விக்டோரியா ஹோட்டலில் என்னைப் பார்க்கலாம் என்று எதிர்பார்த்துத் திங்கட்கிழமையன்று மேத்தா அங்கே சென்றார்; அங்கிருந்து நாங்கள் போய்விட்டோம் என்பதை அறிந்தார்; எங்கள் புது விலாசத்தைத் தெரிந்துகொண்டு, எங்கள் அறைகளுக்கு வந்து என்னைப் பார்த்தார்.

டாக்டர் மேத்தா, என் அறையையும் அதில் நான் சாமான்கள் வைத்திருந்ததையும் பார்த்தார். அதில் தமக்குக் கொஞ்சமும் திருப்தியில்லை என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார். "இந்த இடம் உதவாது" என்றார். "நாம் இங்கிலாந்துக்கு வருவது படிப்பிற்கு மாத்திரம் அல்ல. முக்கியமாக ஆங்கிலேயரின் வாழ்க்கையிலும், பழக்க வழக்கங்களிலும் அனுபவம் பெறுவதற்காகவும் வருகிறோம். இதற்கு நீர் ஓர் ஆங்கிலக் குடும்பத்துடன் வசிப்பது நல்லது. ஆனால், நீர் அப்படி வசிப்பதற்கு முன்னால்......என்பவருடன் சிறிது காலம் இருந்து பயிற்சி பெற வேண்டும் என்று நினைக்கிறேன். அவரிடம் உம்மை அழைத்துப் போகிறேன்" என்றும் கூறினார்.

அவருடைய யோசனையை நன்றியறிதலுடன் ஏற்றுக்கொண்டு, அந்த நண்பரின் அறைகளுக்கே குடி போனேன். அவர் முழு அன்புடன் என்னைக் கவனித்துக் கொண்டார்; தமது சொந்த சகோதரனைப்போலவே பாவித்து என்னை நடத்தினார்; ஆங்கிலேயரின் நடை

உடை பாவனைகளை யெல்லாம் எனக்குக் கற்றுக் கொடுத்தார்; ஆங்கில மொழியில் பேசவும் கற்றுக் கொடுத்தார். என்றாலும், என் சாப்பாட்டு விஷயந்தான் சங்கடமான பிரச்சினையாயிற்று. உப்போ, மசாலையோ இல்லாமல் வேகவைத்த காய்கறிகள் எனக்குப் பிடிக்கவே இல்லை. எனக்காக என்ன சமைப்பதென்று புரியாமல் எங்களுக்கு உணவளித்த வீட்டு அம்மாள் திகைத்தாள். காலை ஆகாரத்திற்கு ஓட்ஸ் தானியக் கஞ்சி இருக்கும். அது கூடியவரை வயிற்றை நிரப்பும். ஆனால், மத்தியானச் சாப்பாட்டிலும் இரவுச் சாப்பாட்டிலும் எப்பொழுதும் எனக்குப் பட்டினிதான். அந்த நண்பர் மாமிசம் சாப்பிடும்படி ஓயாமல் எனக்கு எடுத்துக் கூறிக்கொண்டே இருந்தார். நானும் என் விரதத்தை அதற்குச் சமாதானமாகக் கூறிவிட்டுப் பேசாமல் இருந்து விடுவேன். மத்தியானச் சாப்பாட்டிற்கும் இரவு உணவுக்கும் எங்களுக்குப் பசலைக் கீரையும் ரொட்டியும் ஜாமும் இருக்கும். நானோ நன்றாகச் சாப்பிடுகிறவன். பெரு வயிறு படைத்தவன். ஆனால், இரண்டு மூன்று ரொட்டித் துண்டுகளுக்கு அதிகமாகக் கேட்பது சரியல்லவென்று தோன்றியதால் அதிகமாகக் கேட்கவும் எனக்கு வெட்கம். போதாததற்கு மத்தியானத்திலும் இரவிலும் சாப்பாட்டில் பாலும் கிடையாது. இந்த நிலைமையைக் கண்டு அந்த நண்பருக்கு வெறுத்துப் போய்விட்டது. அவர் பின்வருமாறு சொன்னார்: "நீர் என் சொந்த சகோதரனாக இருந்தால் மூட்டை கட்டி ஊருக்கு அனுப்பியிருப்பேன். இங்குள்ள நிலையை அறியாமல், எழுத்து வாசனையே இல்லாத ஒரு தாயாரிடம் செய்துகொடுத்த சத்தியத்திற்கு என்ன மதிப்பு உண்டு? அது ஒரு விரதமே அல்ல. சட்டப்படி அதை ஒரு விரதமாகவும் கருதுவதற்கில்லை. அத்தகைய ஒரு சத்தியத்தில் விடாப்பிடியாக இருப்பது மூடநம்பிக்கையைத்

தவிர வேறொன்றுமில்லை. மேலும், இந்தப் பிடிவாதத்தி னல் இங்கே உமக்கு எந்தவிதப் பயனும் உண்டாகாது என்பதையும் உமக்குக் கூறுகிறேன். மாமிசத்தை முன்பு சாப்பிட்டதாகவும், அது உமக்குச் சுவையாக இருந்தது என்றும் ஒப்புக்கொள்ளுகிறீர். எங்கே முற் றும் அவசியமில்லையோ அங்கே நீர் அதைச் சாப்பிட் டிருக்கிறீர். அவசியமான இடத்தில் உண்ண மாட்டேன் என்கிறீர். இது என்ன பரிதாபம்!”

ஆனல், நான் பிடிவாதமாக இருந்தேன். நாள் தவ ருமல் அவர் இதைக் குறித்து என்னிடம் தருக்கம் செய்து கொண்டே இருப்பார். முடியாது என்று எப்பொழுதும் அவருக்குப் பதில் சொல்லிவிடுவேன். அவர் தருக்கம் செய்யச் செய்ய நானும் அதிகப் பிடிவாதக்காரனனேன். கடவுளின் பாதுகாப்பைக் கோரித் தினமும் பிரார்த்திப் பேன்; அதை அடையவும் அடைவேன். கடவுளைப் பற் றிய ஞானம் அப்பொழுதே எனக்கு இருந்தது என்பு தல்ல; நம்பிக்கைதான் அது. எனக்குச் செவிலித் தாயாக இருந்த அந்த நல்ல ரம்பா விதைத்த நம்பிக்கை யாகிய விதையே வேலை செய்து வந்தது.

இந்தியாவில் நான் செய்திப் பத்திரிகைகளைப் படித்ததே இல்லை. இங்கே தொடர்ந்து படித்து வந்த தால் பத்திரிகைகளைப் படிப்பதில் சுவை ஏற்பட்டது. இதற்கு ஒரு மணி நேரத்திற்கு மேலாகாது. எனவே சுற்ற ஆரம்பித்தேன். சைவ உணவு விடுதி எங்காவது இருக்கிறதா என்று தேட முற்பட்டேன்.

ஒரு நாள் பாரிங்டன் தெருவில் ஒரு சைவச் சிற் றுண்டிச் சாலையைக் கண்டுபிடித்தேன். அதைக் கண்ட தும், தன் மனத்துக்கு இனியதைக் கண்டதும் ஒரு குழந் தைக்கு என்ன குதூகலம் ஏற்படுமோ அவ்வளவு ஆனந் தம் எனக்கு உண்டாயிற்று. அதற்குள் போகும் முன்பு,

கதவுக்கு அருகில் கண்ணுடி ஜன்னலில் விற்பனைக்காகப் புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டேன். அவற்றில் சால்ட் எழுதிய 'சைவ உணவின் முக்கியத்துவம்' என்ற புத்தகமும் இருந்தது. ஒரு ஷில்லிங் கொடுத்து அதை வாங்கிக்கொண்டு நேரே சாப்பாட்டு அறைக்குச் சென்றேன். இங்கிலாந்துக்கு வந்த பிறகு நான் வயிருர உண்ட முதல் சாப்பாடு இதுதான். கடவுள் எனக்குத் துணை செய்துவிட்டார்.

சால்ட் எழுதிய அந்த நூலை ஒரு வரி விடாமல் படித்து முடித்தேன். அது என் மனத்தைப் பெரிதும் கவர்ந்தது. அந்தப் புத்தகத்தைப் படித்த நாள் முதற் கொண்டே, என் இஷ்டத்தின் பேரில் நான் சைவ உணவு விரதம் பூண்டவனுனேன் என்று நான் சொல்லிக் கொள்ள முடியும். என் தாயாரின் முன்பு நான் விரதம் எடுத்துக் கொண்ட நாளை வாழ்த்தினேன்.

இப்பொழுது நான் சைவ உணவு விரதத்தை விரும்பி மேற்கொண்டு விட்டதால், இதைப் பரப்புவதே என் வாழ்வின் இலட்சியமாயிற்று.

கட்டுரை எழுதுக

1. சைவ உணவில் லண்டனில் காந்திஜிக்கு இருந்த சங்கடங்களையும், அவர் விரும்பிச் சைவ உணவினராக எவ்விதம் ஆனுர் என்பதையும் கூறுக.

11

ஆங்கிலக் கனவாகை நடிப்பு

இதன் நடுவில் என் நண்பர் என்னைப் பற்றிக் கவலைப்படுவதை விடவில்லை. ஒரு நாள் நாடகம் பார்க்கப் போகலாம் என்று என்னை அழைத்தார். நாடகம் பார்க்கும் முன்பு இருவரும் ஹால்பர்ன் போஜன விடுதியில் சாப்பிடுவது என்றும் ஏற்பாடு செய்திருந்தார். சங்கோசத்தினல் நான் கேள்வி எதுவும் கேட்கமாட்டேன் என்று எண்ணியே என் நண்பர் என்னை இந்த விடுதிக்கு அழைத்துவரத் திட்டமிட் டிருந்தார் என்று தெரிந்தது. அநேகர் அங்கே சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு மத்தியில் நானும் என் நண்பரும் ஒரு மேசையின் முன் சாப்பிட உட்கார்ந்தோம். முதலில் 'சூப்' வந்தது. அது என்ன சூப் என்பது தெரியாமல் திகைத்தேன். ஆனால், அதைப்பற்றி நண்பரிடம் கேட்கும் தைரியம் எனக்கு வரவில்லை. ஆகவே, பரிசாரகரைக் கூப்பிட்டேன். நண்பர் நிலைமையைக் கவனித்துக்கொண்டார். என்ன விஷயம்?" என்று என்னைக் கடுமையாகக் கேட்டார். "சூப் சைவ சூப் தானு என்று விசாரிக்க விரும்பினேன்" என்று அதிகத் தயக்கத்துடனேயே சொன்னேன். "நாகரிகமான சமூகத்தில் பழகுவதற்கு நீர் கொஞ்சமும் தகுதியில்லாதவர்" என்று அவர் ஆத்திரத்தோடு கூறினர். "இங்கே சரியானபடி நடந்துகொள்ள உம்மால் முடியாது என்ருல் வெளியே போய்விடும். வேறு ஏதாவது ஒரு சாப்பாட்டு விடுதியில் சாப்பிட்டு விட்டு வந்து, எனக்காக வெளியில் காத்திரும்" என்ருர்.

இதைக் கேட்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். வெளியிலும் போய்விட்டேன். பக்கத்திலேயே சைவ உணவு விடுதி ஒன்று இருந்தது. ஆனால், அது அப்பொழுது மூடப்பட்டுவிட்டது. ஆகையால், அன்றிரவு சாப்பாடே இல்லாமல் பட்டினி கிடந்தேன். அந்த நண்பருடன் நாடகத்திற்குச் சென்றேன். ஆனால், நான் செய்துவிட்ட அசந்தர்ப்பமான காரியத்தைக் குறித்து அவர் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. என்னைப் பொறுத்த வரையிலோ, நான் சொல்லுவதற்கு எதுவும் இல்லை.

எங்களிடையே நட்பு முறையில் ஏற்பட்ட கடைசிப் பூசல் இதுவே. எங்களுக்குள் இருந்த உறவை இது கொஞ்சமும் பாதித்து விடவில்லை. என் நண்பர் எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கெல்லாம் காரணம், அவர் என் மீது கொண்டிருந்த அன்பே என்பதை நான் அறிய முடிந்தது. அந்த அன்பைப் போற்றவும் போற்றினேன். எண்ணத்திலும் செயலிலும் எங்களுக்குள் வேற்றுமை இருந்தது உண்மை என்றாலும், அவர்மீது நான் அதிக மதிப்புக் கொண்டேன்.

அதனால், எனக்காக அவர் கொண்டிருந்த கவலையைப் போக்கிவிட வேண்டும் என்று தீர்மானித்தேன். 'இனி, நாகரிகக் குறைவாக நடந்துகொள்ளமாட்டேன். சைவ உணவு விரதம் கொண்டிருப்பதால் என்னிடம் இருந்த குறைக்கு ஈடு செய்ய, நாகரிக சமூகத்திற்குத் தகுதியான மற்றக் காரியங்களையெல்லாம் அனுசரித்து, நாகரிகமாக நடந்து கொள்ளுபவன் ஆகிவிட்டேன்' என்று அவருக்கு உறுதியளிக்க வேண்டும் என்பதே என் முடிவு. இதற்காக ஆங்கிலக் கனவானாகவே ஆகிவிடுவதற்கு வேண்டிய அசாத்தியமான காரியங்களையெல்லாம் செய்ய முற்பட்டேன்.

பம்பாயில் தைத்த உடைகளையே தரித்துக்கொண்டிருந்தேன். அந்த உடை ஆங்கில சமூகத்திற்குப்

பொருத்தமானதன்று என்று எண்ணினேன். ராணுவக் கடற்படை ஸ்டோரில் புதிய உடை வாங்கினேன். பத்தொன்பது ஷில்லிங் விலையில் ஒரு 'சிம்னி-பாட்' தொப்பி வாங்கினேன். அந்தக் காலத்தில் அது மிகவும் அதிகமான விலை. லண்டனில் நாகரிக வாழ்க்கைக்கு மத்திய இடமான பாண்ட் தெருவில் மாலையில் போட்டுக்கொள்ளும் உடுப்பு ஒன்று வாங்கிப் பத்துப் பவுனைப் பாழாக்கினேன். உத்தமரும், உயர்குணம் படைத்தவருமான என் சகோதரருக்கு எழுதி, கடிகார இரட்டை வடத் தங்கச் சங்கிலி ஒன்றை அனுப்பிவைக்கும்படியும் செய்தேன். கடையில் கட்டி விற்கும் கழுத்து 'டை' அணிவது நாகரிகத்திற்குச் சரியல்லவாகையால், 'டை'யை நானே கட்டிக்கொள்ளும் வித்தையையும் கற்றுக்கொண்டேன். இந்தியாவில் குடும்ப நாவிதர் எனக்கு க்ஷவரம் செய்துவிடும்போது மாத்திரமே முகக்கண்ணாடியைப் பார்க்கும் ஆடம்பரம் அனுமதிக்கப்பட்டிருந்தது. இங்கோ, ஒரு பெரிய கண்ணாடி முன்னால் நின்று, என்னைப் பார்த்துக் கொள்ளுவதிலும், 'டை'யைச் சரிப்படுத்திக் கொள்ளுவதிலும், நாகரிகத்திற்கு ஏற்றாற்போல் தலை வாரிக்கொள்ளுவதிலும், தினம் பத்து நிமிட நேரத்தை வீணாக்குவேன். என் தலை மயிர் மிருதுவானதன்று. ஆகவே, அதைச் சீவிச் சரியாகப் படிய வைப்பது தினமும் ஒரு பெரும் போராட்டமாகிவிட்டது. ஒவ்வொரு முறையும் தலையில் தொப்பியை வைக்கும்போதும் எடுக்கும்போதும் தலை மயிரைச் சரிபார்க்கக் கை தானாகவே தலைக்குப்போய் விடும். நாகரிக சமூகத்தினரின் நடுவே உட்கார்ந்திருக்கும்போது, ஒவ்வொரு சமயமும் கை இதற்காகவே தலையில் வேலை செய்துகொண்டிருக்கும் மற்றொரு நாகரிகப் பழக்கத்தைப் பற்றியோ சொல்லவே வேண்டியதில்லை.

நாகரிகத் தோற்றம் அளிப்பதற்கு இவ்வளவும் போதாதென்று, ஆங்கிலக் கனவானாவதற்கு வேண்டி

யவை எனக் கருதப்பட்ட மற்ற அமிசங்களிலும் கவனத்தைச் செலுத்தினேன். நடனம் ஆடக் கற்றுக்கொள்ளுவதும், பிரெஞ்சு மொழி கற்பதும், பிரசங்க வன்மையும் ஓர் ஆங்கிலக் கனவானுக்கு அவசியம் என்றார்கள். பிரெஞ்சு, பக்கத்து நாடான பிரான்ஸின் மொழி என்பது மாத்திரம் அல்ல; ஐரோப்பா கண்டத்தில் ஒரு நாட்டினர் மற்றொரு நாட்டினருடன் பேசுவதற்குப் பொது மொழியாகவும் அது இருந்தது. எனக்கு அக்கண்டம் முழுவதையும் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஒரு நடனப் பயிற்சி வகுப்பில் சேர்ந்து நடனம் கற்றுக்கொள்ளுவதெனத் தீர்மானித்து, சில மாதங்களுக்கு மூன்று பவுன் கட்டணமும் செலுத்தினேன். மூன்று வாரங்களில் இதில் ஆறு பாடங்களைக் கற்றிருப்பேன். ஆனால், தாள கதிக்கு ஏற்ப நடனமாடுவது என்பது என்னால் முடியவில்லை. பியானோ வாத்திய இசையைப் பின்பற்ற முடியாது போகவே தாளத்தை அனுசரிக்கவும் இயலவில்லை. அப்படியாயின் பிறகு என்ன செய்வது? ஒரு சந்நியாசி எலி உபத்திரவத்தைப் போக்க ஒரு பூனை வளர்த்தார் என்றும், பூனைக்குப் பால் வேண்டுமே என்பதற்காகப் பிறகு ஒரு பசுவும் வளர்த்தார் என்றும், பசுவைக் கவனிக்க ஓர் ஆள் வைத்தார் என்றும், அப்புறம் சந்நியாசி ஒரு பெரிய குடும்பி ஆகிவிட்டார் என்றும் ஒரு கதை உண்டு. துறவியின் குடும்பம் வளர்ந்ததைப் போல என்னுடைய ஆசைகளும் வளர்ந்தன. மேனாட்டுச் சங்கீதத்தை ரசிக்கத் தெரிந்து கொள்ளுவதற்காக நான் பிடில் வாசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று எண்ணினேன். ஆகவே, மூன்று பவுன் கொடுத்துப் பிடில் வாங்கினேன். அதைச் சொல்லிக்கொடுக்க அதைவிட அதிகத் தொகை கொடுத்தேன். பிரசங்கத் திறமை வரப் போதிப்பதற்காக மூன்றாவது ஆசிரியர் ஒருவரைப் பிடித்து, அவருக்கு ஆரம்பக் கட்டணமாக ஒரு கினி (21 ஷில்லிங்) கொடுத்தேன். இதற்குப் பாடப்

புத்தமாக பெல் எழுதிய 'ஸ்டாண்டர்டு எலக்யூஷனிஸ்ட்' என்ற புத்தகத்தை அவர் சிபாரிசு செய்தார். அதையும் வாங்கினேன். பிட்டின் பிரசங்கம் ஒன்றைப் படிக்கத் தொடங்கினேன்.

ஆனால், ஸ்ரீ பெல் என் காதில் எச்சரிக்கை மணியை அடித்தார். நானும் விழித்துக்கொண்டேன்.

வாழ்நாளெல்லாம் நான் இங்கிலாந்திலேயே இருக்கப் போவதில்லை என்பதை எனக்கு நானே சொல்லிக்கொண்டேன். அப்படியிருக்க, பேச்சு வன்மையைக் கற்றுக்கொள்ளுவதால் என்ன பயன்? அதோடு நாட்டிய மாடுவது என்னை எப்படி ஒரு கனவான் ஆக்கிவிடும்? பிடில் வாசிக்க நான் இந்தியாவிலும் கற்றுக்கொள்ளலாம். நானோ மாணவன். ஆகவே என் படிப்பையே நான் கவனித்துக்கொண்டு போகவேண்டும். பாரிஸ்டராவதற்கு வேண்டிய தகுதியையே நான் அடையவேண்டும். என்னுடைய ஒழுக்கம் என்னைக் கனவானாக்கினால் அதுவே போதும். இல்லையானால் அந்த ஆசையை நான் விட்டுவிடவேண்டியதே.

இவையும், இவைபோன்ற எண்ணங்களும் என்னைப் பற்றிக்கொண்டன. பிரசங்கப் பயிற்சிக்காக நான் அமர்த்தியிருந்த ஆசிரியருக்கு என்னுடைய எண்ணங்களையெல்லாம் ஒரு கடிதத்தில் எழுதினேன். மேற்கொண்டு பாடம் கற்றுக்கொள்ள வராததற்கு மன்னிக்குமாறும் கேட்டுக்கொண்டேன். நான் கற்றுக்கொண்டதெல்லாம் இரண்டு மூன்று பாடங்களே. இதே போல் நடன ஆசிரியருக்கும் எழுதிவிட்டேன். பிடில் வாத்தியாரிடம் நேரில் போய், வந்த விலைக்குப் பிடிலை விற்றுவிடுமாறு கேட்டுக்கொண்டேன். அப்பெண்மணி என்னிடம் நட்புடன் பேசினாள்.

ஆகவே, நான் தவருன வழியில் போய்க்கொண்டிருக்கிறேன் என்பதை உணர்ந்த விதத்தை அவளிடம் கூறினேன். முற்றும் உருமாறுதல் அடைந்துவிடவேண்டும் என்பதில் நான் கொண்டிருந்த முடிவை ஏற்று அவள் உற்சாகப்படுத்தினுள்.

ஆங்கிலக் கனவான் ஆகிவிட வேண்டும் என்பதில் எனக்கு இருந்த மோகம் சுமார் மூன்று மாதங்கள் இருந்திருக்கும். அதற்குப் பின் நான் மாணவன் ஆகிவிட்டேன். உடை, சம்பிரதாயபூர்வமாக இருக்க வேண்டும் என்பதில் கவனஞ் செலுத்துவது மாத்திரம் பல ஆண்டுகள் தொடர்ந்து என்னிடம் இருந்து வந்தது.

கட்டுரைகள் எழுதுக

1. ஆங்கிலக் கனவானுகிவிடுவதற்காக காந்திஜி என்னென்ன வழிகளிலெல்லாம் முயற்சி செய்தார்?
2. அம்முயற்சியை அவர் கைவிடும்படி செய்தது எது?
3. மேனுட்டுப் பண்பாடு, அதாவது (அ) உடை, (ஆ) குடிப்பது, புகை பிடிப்பது, (இ) ஆண் - பெண் உறவு, (ஈ) சுகாதாரம், மக்களின் சுத்தம், (உ) குறித்த காலம் தவருமை, (ஊ) வர்த்தக யோக்கியப்பொறுப்பு, (எ) பலர் சேர்ந்து கட்டுத்திட்டத்துடன் நடப்பது போன்றவைகளில் நாம் நடந்து கொள்ள வேண்டியது என்ன ? நாம் அனுசரிக்க வேண்டிய, அல்லது நிராகரிக்க வேண்டிய மேனுட்டு முறை வேறு எதையாவது குறிப்பிடுக.

12
மாறுதல்கள்

நாட்டியத்திலும் அது போன்றவைகளிலும் நான் செய்த சோதனை என் வாழ்க்கையில் நெறி தவறிப் போய்விட்ட ஒரு கட்டம் என்று யாரும் ஊகித்துக் கொண்டுவிட வேண்டாம். அச்சமயத்திலும்கூட நான் மதிமயங்கிப் போய்விடவில்லை என்பதை வாசகர்கள் கவனித்திருப்பார்கள். செலவு செய்வதைத் தீர யோசித்தே செய்து வந்தேன்.

என் வாழ்வு முறையை நானே கண்டிப்பாகக் கவனித்துவந்ததால் செலவில் சிக்கனம் செய்ய வேண்டிய தன் அவசியத்தை அறிய முடிந்தது. ஆகவே இனி ஒரு குடும்பத்துடன் வசிப்பதற்குப் பதிலாகத் தனியாக அறைகளை வாடகைக்கு அமர்த்திக் கொள்ளுவது என்று முடிவு செய்தேன். எனக்கு இருக்கும் வேலையை அனுசரித்து, என் குடியிருப்பையும் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்றிக்கொள்ளவும், அதே சமயத்தில் அதனால் அனுபவம் பெறவும் தீர்மானித்தேன். எனக்கு வேலையிருக்கும் இடத்திற்கு அரை மணி நேரத்தில் நடந்து போய்விடக் கூடியதாகவும், அதனாலும் செலவு குறைவதாகவும் இருக்கும் வகையிலும் அறைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இதற்கு முன்னால் நான் எங்காவது வெளியில் போவதாயிருந்தால் ஏதாவது ஒரு வண்டியை அமர்த்திக்கொள்ளுவேன். இனி நடந்தே போவதென்றால், நடப்பதற்கு வேண்டிய அவகாசத்தையும் தேடிக்கொள்ள வேண்டும். புதிய ஏற்பாட்டில் நடையும் சிக்கனமும் சேர்ந்திருந்தன. அதன்

படி வண்டி வாடகை கொடுத்தது மிச்சமானதோடு தினம் எட்டு அல்லது பத்து மைல் நடையும் எனக்குக் கிடைத்தது. முக்கியமாக நீண்ட தூரம் நடந்த இந்தப் பழக்கத்தினுல், இங்கிலாந்தில் இருந்த வரையில், நான் நோயே இல்லாமல் இருந்தேன்; என் உடலும் உரம் பெற்றது.

இவ்வாறு நான் இரண்டு அறைகளுள்ள ஓர் இடத்தை வாடகைக்கு அமர்த்திக்கொண்டேன். அதில் ஓர் அறை, உட்கார்ந்து வேலை செய்வதற்கு, மற்ருென்று படுக்கையறை. எனது லண்டன் வாழ்க்கையில் இது இரண்டாவது கட்டம். மூன்ருவது கட்டம் இனிமேல் தான் வரவேண்டும்.

இந்த மாறுதல்களினுல் என் செலவுகள் பாதியாகக் குறைந்தன. ஆனுல், எனக்கிருந்த அவகாசத்தை எப்படிப் பயன்படுத்திக் கொள்ளுவது? பாரிஸ்டர் பரீட்சைக்கு அதிகமாகப் படிக்க வேண்டியதில்லை என்பது எனக்குத் தெரியும். ஆகையால், நேரத்திற்குப் பஞ்சம் இருப்பதாகத் தோன்றவில்லை. ஆங்கில மொழியில் எனக்குத் திறன் போதாமல் இருந்ததே எனக்குத் தீராக் கவலையாக இருந்து வந்தது. பாரிஸ்டர் பரீட்சையில் தேறுவதோடு மாத்திரமன்றி இலக்கியக் கல்வியிலும் நான் ஏதாவது ஒரு பட்டத்தைப் பெறவேண்டும் என்று எண்ணினேன். ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் சருவகலா சாலைகளின் படிப்பு முறைகளைப்பற்றி விசாரித்தேன். சில நண்பர்களையும் கலந்து ஆலோசித்தேன். இந்த இரு சருவகலாசாலைகளில் ஒன்றில் சேருவது என்று நான் முடிவு செய்தால், அதனுல் செலவு அதிகமாவதோடு; இங்கிலாந்தில் தங்குவதற்கு நான் தயாராயிருக்கும் காலத்தைவிட அதிக காலம் தங்கவும் நேரும் என்று கண்டேன். கஷ்டமானதொரு பரீட்சையில் தேறிவிட்

டேன் என்று திருப்தியடைய விரும்பினுல், லண்டன் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் நான் தேறிவிடலாம் என்று ஒரு நண்பர் யோசனை கூறினுர். அப்படியானுல், அதிகக் கஷ்டப்பட்டு உழைக்கவேண்டி யிருக்கும்; பொது அறிவும் விருத்தியாகும். இதற்குச் செலவு அதி கப்படியாக ஒன்றும் ஆகிவிடாது என்பது தெரிந்தது. இந்த யோசனை எனக்குப் பிடித்திருந்தது. ஆனுல், அப்பரீட்சைக்குப் படிக்க வேண்டியிருந்த பாடங்களோ என்னைப் பயமுறுத்திவிட்டன. லத்தீனையும், தற்கால ஐரோப்பிய மொழி ஒன்றையும் கட்டாயமாகப் படித் தாகவேண்டும். லத்தீனைப் படிப்பது எப்படி? ஆனுல், அந்த நண்பரோ, அம்மொழியைப் படித்தாக வேண்டும் என்று பரிந்து பேசினுர்; 'வக்கீல்களுக்கு லத்தீன் மிக வும் பயனுள்ள மொழி. சட்டப் புத்தகங்களைப் புரிந்து கொள்ள லத்தீன் தெரிந்திருப்பது உபயோகமாக இருக் கும். ரோமன் சட்டம் பற்றிய ஒரு பரீட்சை முழுவதை யும் லத்தீன் மொழியில்தான் எழுதவேண்டி யிருக்கும். லத்தீன் படித்துவிட்டால் ஆங்கில மொழியிலும் நல்ல ஆற்றல் இருக்கும்' என்ருர். நண்பர் கூறியது நல்லது என்றே தோன்றியது. என்னதான் கஷ்டமாக இருந் தாலும் சரி, லத்தீன் படித்துவிடுவது என்று தீர்மானித் தேன். இதற்கு முன்னுலேயே பிரெஞ்சு மொழி படிக்க ஆரம்பித்துவிட்டேன். ஆகவே, நான் படித்தாக வேண் டிய இக்கால மொழியாக அதையே வைத்துக்கொள்ள லாம் என்று நினைத்தேன். மெட்ரிகுலேஷனுக்குத் தயார் செய்வதற்கென்று தனிப்பட்டவர் வைத்திருந்த வகுப் பில் சேர்ந்தேன். பரீட்சைகள் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை நடக்கும். அடுத்த பரீட்சைக்குப் போவதற்கு எனக்கு ஐந்து மாதங்களே இருந்தன. இது அசாத்திய மான வேலே என்று எனக்குத் தோன்றிற்று. ஆங்கிலக் கனவானைப்போல் ஆகிவிட வேண்டும் என்று ஆசைப்

பட்டுக்கொண்டிருந்த நான், இப்பொழுது கருத்துள்ள மாணக்கனுக என்னை மாற்றிக்கொண்டுவிட்டேன். என் கால அட்டவணையை நிமிஷக் கணக்கு வரையில் துல்லியமாக வகுத்துக்கொண்டேன். ஆனல், குறிப்பிட்ட காலத்திற்குள் மற்றப் பாடங்களுடன் லத்தீனையும் பிரெஞ்சு மொழியையும் நான் படித்துவிட முடியும் என்பதற்கு என் அறிவோ, திறமையோ துணை செய்வதாயில்லை. இதன் பலனுக லத்தீன் பரீட்சையில் தவறிவிட்டேன். இதற்காக வருத்தப்பட்டேனுயினும் மனம் தளர்ந்துவிடவில்லை. இதற்குள் லத்தீன் மொழியில் இன்னும் ஒரு பரீட்சைக்குப் போனல் நன்ருயிருக்கும் என்று எண்ணினேன். விஞ்ஞானப் பகுதியில் மட்டும் ஒரு புது விஷயத்தை எடுத்துக்கொண்டு படிப்பது என்று முடிவு செய்தேன். விஞ்ஞானத்தில் நான் படித்தது ரசாயனம். மிக மிகக் கவர்ச்சிகரமான படிப்பாக இருந்திருக்க வேண்டிய அது, எனக்கு ருசிக்காமல் போனதற்குக் காரணம், சோதனைகள் நடத்துவதற்கு இடமில்லாது போனதே. இந்தியாவில் அது கட்டாயப் பாடங்களில் ஒன்ருக இருந்தது. ஆகவே, லண்டன் மெட்ரிகுலேஷன் பரீட்சைக்கு அதைப் பாடமாக எடுத்துக்கொண்டேன். என்ருலும், இத்தடவை ரசாயனத்திற்குப் பதிலாக வெப்பம், வெளிச்சத்தைப் பற்றிப் படிப்பதென முடிவு செய்தேன். இதைப் படிப்பது சுலபம் என்ருர்கள்; எனக்கும் சுலபமாகவே இருந்தது.

மற்ருெரு சோதனைக்கு நான் என்னைத் தயார் செய்துகொண்டதோடு, மேற்கொண்டும் என் வாழ்க்கையை எளிமையானதாக்கிக்கொள்ளவும் முயன்றேன். அடக்கமான என் குடும்ப நிலைமைக்கு ஏற்றதாக என் வாழ்க்கை முறை இல்லை என்பதை உணர்ந்தேன். பண உதவி வேண்டும் என்று அடிக்கடி நான் தெரிவிக்கும் போதெல்லாம் என் சகோதரர் பெருந்தன்மையோடு

பணம் அனுப்பிக்கொண்டே இருந்தார். இப்படிப் பணம் அனுப்புவதற்காக அவர் அனுபவிக்கும் அநேக கஷ்டங் களை எண்ணிப் பார்த்தேன். அது மனத்திற்குப் பெரிய வேதனையாக இருந்தது. மாதத்திற்கு எட்டு முதல் பதி னைந்து பவுன் வரையில் செலவு செய்துகொண்டிருந்த வர்களில் அநேக மாணவர்களுக்கு உபகாரச் சம்பள வசதி இருந்தது என்பதை அறிந்தேன். மிக எளிய வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்த மாணவர்களின் உதா ரணமும் என் முன்னால் இருந்தது. என்னைவிட எளிய வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்த பல ஏழை மாணவர் களையும் நான் பார்க்க நேர்ந்தது. அவர்களில் ஒரு மாண வர், சேரிப் பகுதியில் வாரத்திற்கு இரண்டு ஷில்லிங் குக்கு ஓர் அறையை அமர்த்திக்கொண்டு, அதில் இருந்து வந்தார்; லோகார்ட்டிலிருக்கும் மலிவான கோக்கோ கடைகளில் வேளைக்கு இரண்டு பென்ஸ் செலவில் கோக்கோ குடித்து, ரொட்டி தின்று, தம் சாப்பாட்டை முடித்துவிடுவார். அவரைப் பின்பற்றுவதென நினைப் பதே என்னால் முடியாது. ஆனால், இரண்டு அறைகளை வைத்துக்கொண்டிருப்பதற்குப் பதிலாக ஓர் அறையை அமர்த்திக்கொள்ளலாம் என்று நினைத்தேன். அப்படிச் செய்தால் மாதத்திற்கு நான்கிலிருந்து ஐந்து பவுன் மிச்சப்படும். எளிய வாழ்க்கை நடத்துவதைப்பற்றிய புத்தகங்கள் சிலவற்றைப் படித்தேன். இரண்டு அறை களை விட்டுவிட்டு, ஓர் அறையை அமர்த்திக்கொண் டேன். ஒரு 'ஸ்டவ்' அடுப்பும் வாங்கினேன். காலை ஆகா ரத்தை வீட்டிலேயே சமைத்துக்கொள்ளவும் ஆரம்பித் தேன். நான் சமைக்க வேண்டியிருந்ததெல்லாம் ஓட்ஸ் கஞ்சி வைப்பதும், கோக்கோவுக்கு நீர் கொதிக்க வைப்பதுமே யாகையால் அதற்கு இருபது நிமிடங் களுக்கு மேல் ஆகாது. மத்தியான உணவை வெளி யில் சாப்பிட்டுக்கொள்ளுவேன். இரவில் வீட்டில் ரொட்டி தின்று, கோக்கோ குடிப்பேன். இவ்விதம் தினத்திற்கு

ஒரு ஷில்லிங் மூன்று பென்ஸ் செலவில் என்னால் வாழ முடிந்தது. அப்பொழுது கடுமையாகவும் படிக்க வேண்டியிருந்த சமயம். எளிய வாழ்க்கையை நான் மேற்கொண்டதால், படிப்பதற்கு எனக்கு நேரம் அதிகமாக இருந்ததோடு நான் பரீட்சையிலும் தேறினேன்.

இவ்விதம் வாழ்ந்து வந்ததால் என் வாழ்க்கை எந்த வகையிலும் இன்பமற்றதாயிற்று என்று வாசகர்கள் எண்ணிவிட வேண்டாம். இதற்கு மாறாக, இத்தகைய மாறுதல் என் அக வாழ்வையும், புற வாழ்வையும் ஒருமைப்படுத்தியது. அதோடு இந்த வாழ்க்கை, என் குடும்ப நிலைமைக்கும் ஒத்ததாக இருந்தது; முன்பு இருந்ததைவிட அதிகமான உண்மையோடும் கூடியதாயிற்று. என் ஆன்மா அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை.

என் செலவுகளிலும் வாழ்க்கை முறைகளிலும் மாறுதல்களைச் செய்தேன். இதற்கு முன்னாலேயே என் உணவிலும் மாறுதலைச் செய்ய ஆரம்பித்திருந்தேன். வீட்டிலிருந்து தருவித்திருந்த மிட்டாய்களையும் ஊறுகாய்களையும் சாப்பிடுவதை நிறுத்தி விட்டேன். மனம் வேறு வழியில் திரும்பிவிட்டதால் மசாலைமீதிருந்த மோகம் போய்விட்டது. மசாலையின்றிச் சமைத்த கீரை, அப்பொழுது ரிச்மண்டு ஹோட்டலில் ‘சப்’பென்று ருசியற்றிருந்தது. இப்பொழுதோ, சும்மா வேக வைத்த கீரையே எனக்கு ருசியாக இருந்தது. ருசியெல்லாம் எண்ணத்தில்தான் இருக்கிறதேயன்றி நாவில் இல்லை என்பதை இதுபோன்ற பல பரீட்சைகள் எனக்குப் போதித்தன.

சிக்கனத்தைக் கவனிக்க வேண்டும் என்பதும் எப்பொழுதும் என் நினைவில் இருந்து வந்தது. தேயிலை, காப்பி போன்ற பானங்கள் தீமை விளைவிப்பவை என்

றும், கோக்கோ குடிப்பது நல்லதென்றும் கருதியவர்கள் அக்காலத்தில் அநேகர் உண்டு. உடலுக்கு நன்மையான வைகளை மாத்திரமே ஒருவர் சாப்பிடவேண்டும் என்று நான் திடமாக நம்பியிருந்ததால் தேயிலை, காப்பி போன்ற பானங்களைச் சாப்பிடுவதை விட்டுவிட்டு, அவற் றிற்குப் பதிலாகக் கோக்கோ சாப்பிடலானேன்.

பிரதானமான உணவுப் பரிசோதனையோடு பல சிறு சோதனைகளையும் நடத்தி வந்தேன். உதாரணமாக, மாவுப் பண்டங்கள் எல்லாவற்றையும் ஒரு சமயம் விலக்கியிருந்தேன். மற்றொரு சமயத்திலோ, ரொட்டியும் பழமும் மாத்திரம் சாப்பிட்டு வந்தேன். ஒரு சமயம், பால் கட்டி, பால், முட்டைகள் மாத்திரம் சாப்பிட்டுக்கொண் டிருந்தேன். இந்தக் கடைசிச் சோதனையைக் குறித்துக் கொஞ்சம் கவனிப்பது முக்கியம். இச் சோதனை இரு வாரங்கள் வரையிலுங்கூட நீடிக்கவில்லை. மாவு கலந்த பண்டங்களைத் தின்னக்கூடாது என்று சொன்ன சீர் திருத்தக்காரர், முட்டைகளின் மேன்மையைக் குறித்துப் பிரமாதமாகச் சொன்னதோடு அவை மாமிசமாகா என் றும் கூறினர். முட்டையைத் தின்பதால் உயிருள்ள எதற்கும் துன்பம் விளைவித்துவிடவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. இந்த வாதத்தில் மயங்கி, என் விரதத்தையும் மறந்துவிட்டு, நான் முட்டை தின்ன ஆரம்பித்தேன். ஆனால், நான் இதில் செய்த தவறு தாற்காலிகமானதே. நான் கொண்டிருந்த விரதத் திற்குப் புதியதொரு வியாக்கியானத்தையே நான் அனு சரிக்க வேண்டும். மாமிசம் என்பதைப்பற்றிய என் தாயாருடைய கருத்தில் முட்டையும் சேர்ந்ததே என் பதை நான் அறிவேன். இவ்விதம் விரதத்தின் உண்மைக் கருத்தை நான் கண்டுகொண்டதுமே, முட்டை சாப்பிடு வதையும், அப்பரீட்சையையும் ஒருமிக்க விட்டுவிட்டேன்.

சைவ உணவு சம்பந்தமாகப் புதிதாக மதம் மாறியவனுக்கு இருக்கும் உற்சாகம் எனக்கும் இருந்ததால் நான் வசித்து வந்த பகுதியில் ஒரு சைவ உணவுச் சங்கத்தை ஆரம்பிக்கத் தீர்மானித்தேன்.

கொஞ்ச காலம் சங்கம் சரிவர நடந்து வந்தது. ஆனால், சில மாதங்களில் எல்லாம் கலைந்து போய்விட்டன. அடிக்கடி ஓர் இடத்திலிருந்து வேறோர் இடத்திற்கு மாறிவிடும் என் பழக்கப்படி அப்பகுதியிலிருந்து நான் குடி பெயர்ந்துவிட்டதே சங்கம் கலைந்துவிட்டதற்குக் காரணம். என்றாலும் இந்தக் கொஞ்ச காலச் சாதாரணமான அனுபவமே, ஸ்தாபனங்களை உருவாக்கி நடத்துவதில் எனக்குச் சிறிது பயிற்சியை அளித்திருந்தது.

கட்டுரைகள் எழுதுக

1. பணத்தைச் செலவிடுவதில் காந்திஜி எவ்வளவு எச்சரிக்கையுடன் நடந்துகொண்டார், லண்டனில் அவர் மாணவராக இருந்த போது சிக்கனமாக வாழ்வதற்கு எப்படியெல்லாம் முயற்சி செய்தார் என்பதைக் கூறுக.
2. 'நாவை விட ஒருவருடைய மனப்போக்கைப் பொறுத்தே இருக்கிறது ருசி' என்பது பற்றி உம் கருத்து என்ன? காந்திஜியின் அனுபவத்திலிருந்து இதை எடுத்துக்காட்டுக.
3. சாப்பாட்டில் என்னென்ன மாறுதல்களைக் காந்திஜி செய்தார்? ஏன்?
4. நம் சாப்பாடு, நம் உடம்பு ஆரோக்கியமாக இருப்பதற்காக என்று இருக்க வேண்டுமேயல்லாமல் நம் ருசிக்காக என்று இருக்கக்கூடாது என்று காந்திஜி கருதினார். உம் கருத்துக்களையும் சொல்லி விவாதிக்கவும்.

13

கூச்சமே எனது பாதுகாப்பு

சைவ உணவாளர்கள் சங்கத்தின் நிருவாகக் குழு விற்கு நான் தேர்ந்தெடுக்கப்பெற்றேன். இக்குழுவின் கூட்டம் ஒவ்வொன்றுக்கும் நான் தவருமல் போய்க் கொண்டிருந்தேன். ஆனல், கூட்டங்களில் நான் பேசுவது மாத்திரம் இல்லை.

தென்னப்பிரிக்காவில்தான் இந்தக் கூச்சம் என்னை விட்டுப் போயிற்று. என்ருலும், அங்கும் அது முற்றும் போய்விடவில்லை. முன்னல் தயார் செய்துகொள்ளாமல் பிரசங்கம் செய்வதென்பதும் என்னல் முடியாது. முன் பின் தெரியாத ஒரு கூட்டத்தின் முன்னல் பேசுவதற்கு நான் தயங்கினேன். முடிந்தால் பிரசங்கம் செய்யாமலும் தப்பித்துக்கொண்டு விடுவேன்.

ஆனல், இன்னும் ஒன்றையும் நான் சொல்லவே வேண்டும். என் உடம்புடன் ஒட்டியதாயிருந்த கூச்சத் தினல் சில சமயங்களில் என்னைக் குறித்துப் பிறர் நகைப் பதற்கு இடம் வைத்துக்கொண்டேன் என்பதைத் தவிர அதனல் எனக்கு எவ்விதத்திலும் கெடுதி உண்டாக வில்லை. அதற்கு மாருக, உண்மையில் அது எனக்கு நன் மையே செய்திருக்கிறது என்பதைக் காண்கிறேன். பேச்சில் எனக்கு இருந்த தயக்கம், ஒரு சமயம் கவலை தருவதாக இருந்திருந்தாலும், இப்பொழுது அது இன்ப மானதாக இருக்கிறது. சொற்களைச் சிக்கனமாக உப யோகிக்க எனக்குக் கற்றுக் கொடுத்ததே அதனல் ஏற் பட்ட மிகப் பெரிய நன்மை. என்னுடைய எண்ணங்

களைக் கட்டுப்படுத்திக்கொள்ளும் பழக்கமும் இயற்கை யாகவே எனக்கு உண்டாயிற்று.

அதிகமாகப் பேசாதவர், யோசியாமல் பேச வாய்ப்பு இருக்காது. ஒவ்வொரு சொல்லையும் அவர் நிறுத்தியே பேசுவார். உண்மையில் எனக்கு இருந்த கூச்சமே, எனக்குக் கேடயமாகவும், கவசமாகவும் ஆயிற்று. நான் வளர்ச்சியடைய அது அனுமதித்தது. சத்திய ஆராய்ச்சியில் அது எனக்கு உதவியையும் செய்தது.

கட்டுரை எழுதுக

1. காந்திஜிக்கு இருந்த கூச்சம் அவருக்கு எப்படிப் 'பாது காப்பாக' ஆயிற்று? சாத்தியமானல் உங்கள் சொந்த அனுபவத்தையும் சொல்லி கூச் சத்தால் நன்மையும் உண்டு என்பதை விளக்குக.

14

சமயங்களுடன் தொடர்பு

நான் இங்கிலாந்தில் இருந்த இரண்டாம் ஆண்டின் இறுதியில், பிரமஞான சங்கத்தைச் சேர்ந்த இரு சகோதரர்களுடன் எனக்குப் பழக்கம் உண்டாயிற்று. அவர்கள் கீதையைக் குறித்து என்னிடம் பேசினர். ஸர் எட்வின் அர்னால்டு மொழி பெயர்த்திருந்த கீதையை அவர்கள் படித்துக்கொண்டிருந்தனர். அவர்கள் இருவரும் மணம் ஆகாதவர்கள். மூல நூலைத் தங்களுடன் சேர்ந்து படிக்க வருமாறு என்னை அழைத்தார்கள். அத் தெய்விக நூலைச் சமஸ்கிருதத்திலோ, குஜராத்தியிலோ நான் படித்ததில்லை யாகையால் எனக்கு வெட்கம் ஆகிவிட்டது. நான் கீதையைப் படித்ததேயில்லை. ஆனாலும், அவர்களோடு சேர்ந்து மகிழ்ச்சியுடன் அதைப் படிப்பேன் என்பதை நான் அவர்களிடம் சொல்லியாக வேண்டியதாயிற்று. சமஸ்கிருதத்தில் எனக்கு இருந்த ஞானம் சொற்பமேயெனினும், மொழிபெயர்ப்பு எந்த இடத்தில் அதன் பொருளைச் சரியாகக் கொண்டு வரத் தவறியிருக்கிறது என்பதைக் கூறும் அளவுக்கு மூலநூல் எனக்கு விளங்கும் என்றும் அவர்களிடம் சொன்னேன். அவர்களோடு சேர்ந்து கீதையைப் படிக்க ஆரம்பித்தேன். அதன் இரண்டாவது அத்தியாயத்தில் காணும் சில சுலோகங்களின் கருத்து இது :

இந்திரிய விஷயங்களைத் தியானிக்கிற மனிதனுக்கு
அவற்றினிடம் பற்றுதல் உண்டாகிறது;
பற்றுதலிலிருந்து ஆசை உண்டாகிறது;
ஆசையிலிருந்து குரோதம் வளர்கிறது.

குரோதத்திலிருந்து மனக்குழப்பம் உண்டாகிறது;
குழப்பத்திலிருந்து நினைவின்மையும்,
நினைவின்மையிலிருந்து புத்தி நாசமும் உண்டாகின்றன;
புத்தி நாசத்தினால் மனிதன் அழிந்துபோகிறான்.

இந்தச் சுலோகங்கள் என் மனத்தில் ஆழப் பதிந்தன. அவை இன்னும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. அந்நூல் விலை மதிப்பைக் கடந்த மாணிக்கமாக எனக்குத் தோன்றியது. அதிலிருந்து இந்தக் கருத்து எனக்கு வலுப்பட்டுக்கொண்டே வந்தது. இதன் பலனாக, 'சத்தியமான ஞானத்தைப் போதிக்கும் மிகச் சிறந்த நூல் இது' என்று நான் எண்ணி வருகிறேன். எனக்கு மனச் சஞ்சலங்கள் ஏற்படும் சமயங்களில் இந் நூல் மதித்தற்கரிய உதவியாக இருந்திருக்கிறது.

ஸர் எட்வின் அர்னால்டு எழுதிய 'ஆசியாவின் ஜோதி' என்ற நூலையும் படிக்கும்படி அச் சகோதரர்கள் என்னிடம் கூறினர். பகவத் கீதையின் மொழிபெயர்ப்பாளர் என்று மாத்திரமே ஸர் அர்னால்டை அது வரையில் எனக்குத் தெரியும். பகவத் கீதையைவிட இன்னும் அதிகக் கவனத்துடன் அந் நூலைப் படித்தேன். படிக்கக் கையில் எடுத்துவிட்டால் பிறகு கீழே வைத்துவிட முடியவில்லை. அந்தச் சகோதரர்கள் சொன்னதன்பேரில் பிளாவட்ஸ்கி அம்மையார் எழுதிய 'பிரம ஞானத் திறவுகோல்' என்னும் நூலை நான் படித்ததாகவும் எனக்கு நினைவு இருக்கிறது. ஹிந்து சமயத்தைப் பற்றிய நூல்களைப் படிக்கும் ஆர்வத்தை இந்நூல் எனக்கு ஊட்டியது. ஹிந்து சமயத்தில் மூடநம்பிக்கைகளே மலிந்து கிடக்கின்றன என்று பாதிரிகள் செய்த பிரசாரத்தினால் எனக்கு உண்டாகியிருந்த தவறான எண்ணத்தையும் இந்நூல் போக்கியது.

அதே சமயத்தில் மான்செஸ்டரிலிருந்து வந்த ஓர் உத்தமமான கிறிஸ்தவரை சைவ உணவு விடுதி ஒன்றில் நான் சந்தித்தேன். கிறிஸ்தவத்தைப் பற்றி அவர் என்னிடம் பேசிக்கொண்டிருந்தார். ராஜ்கோட்டில் கிறிஸ்தவப் பாதிரிமார் நடத்தி வந்த பிரசாரத்தைக் குறித்த என்னுடைய பழைய நினைவுகளை அவரிடம் கூறினேன். அதைக் கேட்டு, அவர் மனவேதனை அடைந்தார். 'நான் சைவ உணவு மாத்திரமே சாப்பிடுபவன்; மதுபானமும் அருந்துவதில்லை. கிறிஸ்தவர்கள் அநேகர் மாமிசம் சாப்பிடுகிறார்கள்; குடிக்கிறார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால், மது மாமிசம் சாப்பிடும்படி எங்கள் வேதம் சொல்லவில்லை. தயவுசெய்து பைபிளைப் படியுங்கள்' என்றார். அவருடைய யோசனையை ஏற்றுக் கொண்டேன். அவர் எனக்குப் பைபில் பிரதி ஒன்றும் வாங்கிக்கொடுத்தார். அதைப் படிக்க ஆரம்பித்தேன். பழைய ஏற்பாட்டைப் படித்துப் புரிந்துகொள்ள என்னால் இயலவில்லை.

ஆனால், புதிய ஏற்பாட்டைப் படித்தபோது எனக்கு முற்றும் மாறான உணர்ச்சி ஏற்பட்டது. முக்கியமாக மலைப்பிரசங்கம் நேரடியாகவே என் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது. அதைக் கீதையுடன் ஒப்பிட்டுப் பார்த்தேன். 'தீமைக்குப் பதிலாகத் தீமையைச் செய்யாதே என்று உங்களுக்குக் கூறுகிறேன். உன்னை வலக் கன்னத்தில் யாராவது அறைந்தால் மற்றொரு கன்னத்தையும் திருப்பிக் காட்டு. எவனாவது உன் சட்டையை எடுத்துக்கொண்டு போய்விடின், உன் போர்வையையும் அவனுக்குக் கொடு' என்பன போன்ற உபதேசங்கள் எனக்கு அளவு கடந்த ஆனந்தத்தை அளித்தன. 'உண்ணும் நீர் தந்த ஒருவனுக்குக் கைம்மாறாக, விண்ணமுதைப்போல் அன்னம் விரும்பிப் படைத்திடுவாய்' என்ற ஷாமல்பட்டின் பாடல் உடனே என் நினை

வுக்கு வந்தது. 'கீதை', 'ஆசிய ஜோதி', 'மலைப் பிரசங்கம்' ஆகிய மூன்றும் ஒன்றே என்று கருத என் இள மனம் முயன்றது. துறவே, சமயத்தின் தலைசிறந்த அமிசம் என்பது என் மனத்தை மிகவும் கவர்ந்தது.

பரீட்சைக்குப் படிக்க வேண்டியிருந்தது. மற்ற வெளி விஷயங்களைக் குறித்துப் படிக்க நேரம் கிடைப்பதே இல்லை. ஆகையால், சமயங்களைப்பற்றி இன்னும் அதிகமாக நான் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், சமய நூல்களை இன்னும் அதிகமாகப் படிக்க வேண்டும், முக்கியமான மதங்களைப் பற்றியெல்லாம் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும் என்று என் மனத்திற்குள் முடிவு செய்துகொண்டேன்.

கட்டுரைகள் எழுதுக

1. கீதையின் உபதேசத்தில் காந்திஜியின் மனத்தை அதிகமாகக் கவர்ந்தது எது? உங்கள் சொந்த அனுபவத்தையும் உதாரணமாகக் காட்டுக.
2. பைபில் என்றால் என்ன? மலை உபதேசத்தைச் செய்தது யார்? மலை உபதேசத்தில் எது காந்திஜியின் மனத்தை அதிகமாகக் கவர்ந்தது?
3. புத்தரின் வாழ்க்கையிலிருந்தும் உபதேசங்களிலிருந்தும் என்ன படிப்பினையைக் காந்திஜி அறிந்திருப்பார்? புத்தரைப் பற்றி உங்களுக்குத் தெரிந்ததைக் கொண்டு எழுதுக.

மூன்றாம் பாகம்

இந்தியாவில் பாரிஸ்டராக

15

இந்தியாவில்

பரீட்சைகளில் தேறினேன். 1891, ஜூன், 10-ஆம் தேதி என்னைப் பாரிஸ்டர் ஜாபிதாவில் சேர்த்துக்கொண்டனர்; ஜூன், 11-ஆம் தேதி, ஹைகோர்ட்டில் பாரிஸ்டராகப் பதிவு செய்துகொண்டேன். 12-ஆம் தேதி இந்தியாவுக்குக் கப்பல் ஏறினேன்.

நான் என்னதான் படித்திருந்தேனாயினும், எனக்குள் இருந்த பயத்திற்கும், சக்தியற்றிருக்கிறேன் என்ற உணர்ச்சிக்கும் முடிவே இல்லை. வக்கீல் தொழிலை நடத்துவதற்குத் தகுதி பெற்றுவிட்டதாக நான் உணரவே இல்லை. நான் சட்டங்களைப் படித்திருந்தேன். ஆனால்,சட்டவாதம் செய்யும் முறையைக் கற்றுக்கொள்ளவில்லை.

இதுவல்லாமல், இந்தியச் சட்டத்தைக் குறித்து நான் எதுவுமே கற்றுக்கொள்ளவில்லை. ஹிந்து, முகமதியச் சட்டங்களைப் பற்றியோ எனக்கு ஒன்றுமே தெரியாது. ஒரு பிராதைத் தயாரிப்பது எப்படி என்பதையும் நான் தெரிந்துகொள்ளவில்லை. எனவே, திக்குத் திசை தெரியாமல் தவித்தேன். இந்தத் தொழிலில் என் ஜீவனத்திற்கு வேண்டியதாவது கிடைக்குமா என்பதே எனக்குச் சந்தேகமாக இருந்தது.

என் மூத்த சகோதரர் என்னைச் சந்திப்பதற்காகத் துறைமுகத்திற்கு வந்திருந்தார்.

என் தாயாரைப் பார்க்க வேண்டும் என்று என் உள்ளம் துடித்துக்கொண்டிருந்தது. நான் இங்கிலாந்

தில் இருந்தபோதே, என் அன்னையார் இறந்துவிட்டார். இதை என் சகோதரர் எனக்குத் தெரிவிக்கவில்லை. வெளி நாட்டில் இப்பெருந் துக்கத்தின் வேதனை எனக்கு ஏற் பட வேண்டாம் என்று அவர் நினைத்தார். என் ருலும், இப்பொழுதும் அச் செய்தி எனக்குக் கடுமை யான அதிர்ச்சியையே உண்டாக்கியது. ஆனால், அதைக் குறித்து நான் அதிகமாக விவரித்துக்கொண்டு போகக் கூடாது. என் தந்தையார் இறந்தபோது அடைந்த துக்கத்தைவிடப் பன்மடங்கு துக்கமடைந்தேன். என் உள்ளத்தில் ஆசையோடு வைத்திருந்த நம்பிக்கைக ளெல்லாம் சிதறுண்டு போயின. ஆனால், அழுது புலம்பி என் துக்கத்தை நான் வெளிக்குக் காட்டவில்லை என்பது எனக்கு ஞாபகம் இருக்கிறது. கண்ணீர் பெருகுவதையும் என்னால் தடுத்துவிட முடிந்தது. எது வுமே நிகழாதது போலவே என் காரியங்களைக் கவ னித்து வந்தேன்.

நான் வெளிநாட்டுப் பிரயாணம் செய்ததைக் குறித்து என் சாதியாரிடையே எழுந்த புயல், இன்னும் இருந்துகொண்டே இருந்தது. அது, சாதியை இரண்டு கட்சிகள் ஆக்கிவிட்டது. இதில் ஒரு கட்சியினர் என்னை உடனே சாதியில் சேர்த்துக் கொண்டுவிட்ட னர். மற்ற கட்சியாரோ, எனக்கு விதித்திருந்த சாதிக் கட்டுப்பாட்டை நீக்குவதில்லை என்று உறுதிகொண் டிருந்தனர்.

என்னைச் சாதியில் சேர்த்துக்கொள்ள மறுத்த கட் சியினரிடம் என்னைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் என் பதற்காக நான் முயலவே இல்லை. அக் கட்சியின் தலை வர்களிடம் எனக்கு வெறுப்புத் தோன்றவும் இல்லை. அவர்களில் சிலர் என்னை வெறுத்தனர். ஆனாலும், அவர் கள் மனம் புண்படும் காரியம் எதையும் செய்துவிடக்

கூடாது என்பதில் எச்சரிகையுடன் நடந்துகொண்டேன். சாதிக் கட்டுப்பாடு சம்பந்தமான விதி முறைகளையெல்லாம் மதித்து நடந்துகொண்டேன். அந்தக் கட்டுப்பாடுகளின்படி என் மாமனூர், மாமியார், தமக்கை, மைத்துனர் உட்பட என் உறவினர் யாருமே எனக்குச் சாப்பாடு போடக் கூடாது. ஆகையால், அவர்களில் யார் வீட்டிலும் நான் தண்ணீர் குடிப்பதுகூட இல்லை. இந்தக் கட்டுப்பாட்டை ரகசியமாக மீறிவிட அவர்கள் தயாராக இருந்தனர். பகிரங்கமாகச் செய்யாததை ரகசியமாகச் செய்வது என்பது என் இயல்புக்கே நேர் விரோதமானது.

இவ்விதம் என்மீது குறை கூறுவதற்கே கொஞ்சமும் இடம் வைக்காமல் நான் நடந்துகொண்டதன் பலனாக, எனக்குச் சாதித் தொல்லை ஏற்படுவதற்கே சந்தர்ப்பம் இல்லாது போயிற்று. அது மாத்திரம் அல்ல. என்னைச் சாதியிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டவனாக இன்னும் கருதிக்கொண்டிருந்தவர்களில் பெரும்பாலோர் என்னிடம் அன்போடும் தாராளமாகவும் நடந்து கொண்டார்கள். சாதிக்காக நான் ஏதாவது செய்தாக வேண்டும் என்று எதிர்பாராமலேயே என் தொழிலிலும் அவர்கள் எனக்கு உதவி செய்தார்கள். இந்த நல்ல காரியங்களெல்லாம் என்னுடைய எதிர்ப்பின்மையின் பலனே என்பது எனது திட நம்பிக்கை. சாதியில் என்னைச் சேர்த்துக் கொண்டாக வேண்டும் என்று நான் கிளர்ச்சி செய்திருந்தால், சாதியை இன்னும் பல கட்சிகளாகப் பிரித்துவிட நான் முயன்றிருந்தால், சாதியாருக்கு நான் ஆத்திரத்தை மூட்டியிருப்பின், அவர்களும் நிச்சயம் எதிர்த்துப் பதிலுக்குப் பதில் செய்திருப்பார்கள். ராஜ்கோட்டில் நான் பாரிஸ்டர் தொழிலை ஆரம்பிப்ப தென்றல் அது கேலிக்கு இடமானதாகும். தகுதி பெற்ற ஒரு வக்கீலுக்குத் தெரிந்ததுகூட எனக்குத்

தெரியாது. என்றாலும், அவருக்குக் கொடுப்பதைவிட எனக்குப் பத்து மடங்கு அதிகக் கட்டணம் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்த்தேன். அப்படி என்னை வக்கீலாக வைத்துக்கொள்ள, எந்தக் கட்சிக்காரரும் முட்டாள் அல்ல.

ஹைகோர்ட்டு அனுபவத்தைப் பெறுவதற்கும், இந்தியச் சட்டத்தைப் படித்துக்கொள்ளுவதற்கும், முடிந்த வரையில் வழக்குகள் கிடைக்கும்படி செய்துகொள்ளுவதற்கும் நான் பம்பாய் போவது நல்லது என்று நண்பர்கள் யோசனை கூறினர். இந்த யோசனையை ஏற்றுக் கொண்டு, அப்படியே பம்பாய்க்குப் போனேன்.

செலவு அதிகரித்துக்கொண்டே போயிற்று. அதைச் சரிக்கட்டிக்கொள்ளுவதற்கு வருமானமே இல்லை. ஆகையால், பம்பாயில் நான்கு, ஐந்து மாதங்களுக்கு மேல் காலம் தள்ள என்னால் முடியவில்லை.

அந்தச் சமயத்தில், மமிபாய் என்ற ஒருவரின் வழக்கை நடத்துவதற்கு எடுத்துக்கொண்டேன். அது 'ஸ்மால் காஸ்' வழக்கு. அந்த வழக்கைக் கொண்டு வந்து கொடுத்த தரகருக்கு ஏதாவது கொஞ்சம் தரகுப் பணம் தர வேண்டும் என்று சொன்னார்கள். ,அப்படி கொடுப்பதற்கு நான் கண்டிப்பாக மறுத்துவிட்டேன்.

என்றாலும், மமிபாயின் வழக்கு என்னிடம் வந்தது. அது மிகவும் சுலபமான வழக்கு. எனக்கு ரூ. 30 கட்டணம் கொடுக்க வேண்டும் என்றேன். கோர்ட்டில் அந்த வழக்கு, ஒரு நாளுக்கு மேல் நடக்கும் என்று தோன்றவில்லை.

ஸ்மால் காஸ் கோர்ட்டில் நான் ஆஜராவது அதுவே முதல் தடவை. நான் பிரதிவாதிக்காக ஆஜரானதால் வாதியின் சாட்சிகளை நான் குறுக்கு விசாரணை செய்ய

வேண்டும். அதற்காக எழுந்தேன். ஆனால், என் தைரியமெல்லாம் போய், தலை சுற்ற ஆரம்பித்துவிட்டது. கோர்ட்டு முழுவதுமே சுழலுவதாக எனக்குத் தோன் றிற்று. குறுக்கு விசாரணை செய்ய ஒரு கேள்விகூட என் சிந்தனையில் எழவில்லை. நீதிபதி சிரித்திருப்பார். வக் கீல்களும் இக் காட்சியை ரசித்திருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் நானோ இதில் எதையுமே காணும் நிலையில் இல்லை. பேசாமல் உட்கார்ந்துவிட்டேன். 'இந்த வழக்கை நடத்த என்னால் முடியாது. பட்டேலை அமர்த்திக்கொள்ளலாம். எனக்குக் கொடுத்த கட்டணத் தையும் திருப்பித் தந்துவிடுகிறேன்' என்று ஏஜென் டிடம் சொன்னேன். ரூ. 51 கட்டணம் கொடுப்பதெனப் பேசி, ஸ்ரீ பட்டேல் வக்கீலாக அமர்த்தப்பட்டார். அவ ருக்கோ இந்த வழக்கு, குழந்தை விளையாட்டுப் போன்ற தாகும்.

என் கட்சிக்காரர் வெற்றி பெற்றாரா, தோற்றாரா என்பது கூட எனக்குத் தெரியாது. கோர்ட்டை விட்டு அவசரமாகக் கிளம்பினேன். ஆனால், என்னைக் குறித்து எனக்கே வெட்கமாக இருந்தது. வழக்கை நடத்தும் தைரியம் எனக்கு ஏற்படும் வரையில், எந்த வழக்கையும் எடுத்துக்கொள்ளுவதில்லை என்று முடிவு கட்டிக் கொண்டேன்.

உபாத்தியாயர் தொழிலுக்குப் போய்விடலாமா என்று எண்ணினேன். எனக்கு ஆங்கில ஞானமும் நன் றாக இருந்தது. ஏதாவது ஒரு பள்ளிக்கூடத்தில் மெட்ரி குலேஷன் மாணவருக்கு ஆங்கிலம் போதிக்கும் வேலை எனக்குப் பிரியமாக இருந்திருக்கும். இந்த வகையில் என் செலவில் ஒரு பகுதியையாவது நான் சமாளித்தவ னாவேன். பத்திரிகைகளில் ஒரு விளம்பரத்தைப் பார்த் தேன்; 'தினம் ஒரு மணி நேரம் போதிப்பதற்கு ஓர்

ஆங்கில ஆசிரியர் தேவை. சம்பளம் ரூ. 75' என்று அந்த விளம்பரத்தில் இருந்தது. ஒரு பிரபலமான உயர் நிலைப் பள்ளியின் விளம்பரமே அது. அந்த உத்தியோ கத்திற்கு மனுப் போட்டேன். நேரில் சந்தித்துப் பேச அழைப்பும் வந்தது. அதிக உற்சாகத்தோடு அங்கே போனேன். நான் பி. ஏ. பட்டதாரி அல்ல என்பதை அப் பள்ளிக்கூடத் தலைமை யாசிரியர் கண்டுகொண்டதும், என்னை நியமிக்க வருத்தத்துடன் மறுத்து விட்டார்.

"ஆனால் லத்தீனை இரண்டாவது மொழியாகக் கொண்டு நான் லண்டன் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறியிருக்கிறேனே" என்றேன்.

"உண்மை. ஆனால், எங்களுக்குப் பி. ஏ. பட்ட தாரியே வேண்டும்" என்று அவர் சொல்லிவிட்டார்.

ஆகவே, வேறு வழியில்லை. மனம் சோர்ந்துபோய்க் கைகளைப் பிசைந்துகொண்டேன். என் சகோதரரும் அதிகக் கவலைப்பட்டார். பம்பாயில் மேற்கொண்டும் காலத்தை வீணாக்கிக் கொண்டிருப்பதில் பயனில்லை என்ற முடிவுக்கு இருவரும் வந்துவிட்டோம்.

எனவே, பம்பாயிலிருந்து புறப்பட்டேன். ராஜ்கோட் டிற்குப் போய், அங்கே என் அலுவலகத்தை அமைத்துக் கொண்டேன். அங்கே என் தொழில் கொஞ்சம் நன் ருகவே நடந்து வந்தது. மனுக்களும் விண்ணப்பங்களும் தயாரித்துக் கொடுப்பதில் சராசரி மாதத்திற்கு ரூ. 300 எனக்குக் கிடைத்து வந்தது. இதற்கு என் சொந்தத் திறமையைவிட என் சகோதரரின் செல்வாக்குத்தான் முக்கியமான காரணம். அவருடைய கூட்டாளியான வக்கீலுக்குத் தொழில் நன்ருக நடந்துவந்தது. உண்மை யில் முக்கியமானவையாக இருக்கும், அல்லது முக்கிய மானவை என்று அவருக்குத் தோன்றும் மனுக்களைத் தயாரிக்கும் வேலையை, அவர் பெரிய பாரிஸ்டர்களிடம்

கொடுத்துவிடுவார். அவரிடம் வரும் ஏழைக்கட்சிக்காரர் களுக்காகத் தயாரிக்க வேண்டிய விண்ணப்பங்களே என் பங்கில் விழுந்தன.

கட்டுரைகள் எழுதுக

1. தம்மை சாதியிலிருந்து விலக்கி வைத்துவிட்ட தமது சாதியினரின் அன்பை காந்திஜி எப்படிப் பெற்ருர்? அவர்களை எதிர்த்துக் கிளர்ச்சி செய்திருந்தால் அவருக்கு நன்மை ஏற்பட்டிருக்குமா?

2. அன்போடும் மரியாதையோடும் நடந்துகொள்ளுவதன் மூலம் அல்லது பதிலுக்குப் பதில் செய்து வெறுப்பதன் மூலம் ஆகிய இந்த இரண்டு வழிகளில் எதிர்ப்பைச் சமாளிக்கலாம். ஆனல், இதில் எது அதிகப் பலன் தரும் சரியான வழி என்ற முடிவுக்கு நீங்கள் வருகிறீர்கள்?

3. முதன்முதல் வக்கீலாகக் காந்திஜி கோர்ட்டில் தோன்றியதை விவரிக்கவும்.

16

முதல் அதிர்ச்சி

போர்பந்தரில் காலஞ்சென்ற ராணுசாகிப் பட்டத்திற்கு வருவதற்கு முன்னல், என் சகோதரர் அவருக்குக் காரியதரிசியாகவும் ஆலோசகராகவும் இருந்தார். என் சகோதரர் அந்த உத்தியோகத்தில் இருந்தபோது ராணுவுக்குத் தவருன ஆலோசனைகளைக் கூறிவிட்டார் என்ற ஒரு குற்றச்சாட்டை என் சகோதரரின் தலைமீது அப்பொழுது சுமத்தியிருந்தார்கள். விஷயம் ராஜீய ஏஜென்டிடம் போய்விட்டது. அவரோ, என் சகோதரர்மீது கெட்ட அபிப்பிராயம் கொண்டிருந்தார். நான் இங்கிலாந்தில் இருந்தபோது, இந்த அதிகாரியை அறிவேன். ஓர் அளவுக்கு அவர் எனக்கு நண்பராகவும் இருந்தார் என்று சொல்லலாம். அந்தச் சிநேகிதத்தைப் பயன்படுத்திக்கொண்டு, ராஜீய ஏஜென்டிடம் தம்மைப்பற்றி நான் பேசி, அவருக்கு இருந்த தவருன அபிப்பிராயத்தைப் போக்கவேண்டும் என்று என் சகோதரர் விரும்பினர். இந்த யோசனை எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவே இல்லை. இங்கிலாந்தில் ஏற்பட்ட சொற்ப நட்பை நான் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கக்கூடாது என்று எண்ணினேன். என் சகோதரர் செய்தது தவருகவே இருக்குமாயின், என் சிபாரிசினல் என்ன பயன்? அவர் குற்றமற்றவர் என்ருல், முறைப்படி விண்ணப்பத்தை அனுப்பிவிட்டுத் தாம் நிரபராதி என்ற தைரியத்துடன், முடிவை எதிர்நோக்குவதே சரியானது. ஆனல், நான் கூறிய இந்த யோசனை என் சகோதரருக்குப் பிடிக்கவில்லை. அவர் சொன்னதாவது: "உனக்குக் கத்தியவாரைப்பற்றி ஒன்றுமே தெரியாது. உலக அனுபவமும்

உனக்குப் போதவில்லை. செல்வாக்கு ஒன்றுதான் இங்கே முக்கியம். உனக்குத் தெரிந்தவரான ஓர் அதிகாரியிடம் என்னைக் குறித்து நீ ஒரு நல்ல வார்த்தை சொல்ல முடியும் என்று இருக்கும்போது, சகோதரனாகிய நீ, உன் கடமையைத் தட்டிக் கழிப்பது சரியல்ல.''

அவருக்கு நான் மறுத்துக் கூற முடியவில்லை. அதனால், என் விருப்பத்திற்கு மாறாகவே அந்த அதிகாரியிடம் போனேன். அவரிடம் போவதற்கு, எனக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்பதை அறிவேன். என்னுடைய சுயமதிப்பையும் விட்டுத்தான் நான் அவரிடம் போகிறேன் என்பதையும் நான் நன்றாக அறிந்தே இருந்தேன். ஆயினும் பார்க்கவேண்டும் என்று கோரி, அனுமதியும் பெற்றேன். எங்களுக்குள் இருந்த பழைய பழக்கத்தையும் அவருக்கு நினைவூட்டினேன். ஆனால், இங்கிலாந்திற்கும் கத்தியவாருக்கும் வித்தியாசம் அதிகம் என்பதை உடனே கண்டேன். ஓர் அதிகாரி, ஓய்வு பெற்றிருக்கும்போது ஒரு மனிதராகவும், உத்தியோகத்தில் அமர்ந்திருக்கும்போது வேறு மனிதராகவும் ஆகிவிடுகிறார் என்பதையும் அறிந்தேன். என்னைத் தமக்குத் தெரியும் என்பதை ராஜீய ஏஜென்டு ஒப்புக்கொண்டார். ஆனால், அப் பழக்கத்தை நினைவூட்டியதால் அவருடைய கடுகடுப்பு அதிகமானதாகவே தெரிந்தது. 'அந்தப் பழக்கத்தைத் தவறான வழியில் உபயோகித்துக்கொள்ளுவதற்காக நீர் இங்கே வரவில்லையல்லவா?' என்பதே அவருடைய கடுகடுப்புக்குப் பொருள்போல் தோன்றியது. அதுஅவர் முகத்திலும் பிரதிபலித்தது. என்றாலும், நான் வந்த காரியத்தை அவரிடம் சொல்ல ஆரம்பித்தேன். அதற்குள் துரை பொறுமையை இழந்துவிட்டார். ''உமது சகோதரர் சூழ்ச்சிக்காரர். அவரைப்பற்றி உம்மிடமிருந்து எதையும் கேட்க நான் விரும்பவில்லை. எனக்கு நேரமும் கிடையாது. ஏதாவது சொல்லிக்

கொள்ள வேண்டும் என்று உம் சகோதரர் விரும்பினுல், முறைப்படி அதை மனுச் செய்துகொள்ளட்டும்" என்ருர். இந்தப் பதில் போதுமானது. இப்படிப்பட்ட பதிலே எனக்குச் சரியானதாகவும் இருக்கலாம். ஆனல், சுய நலம் ஒருவனைக் குருடாக்கிவிடுகிறது. நான் என் கதையைச் சொல்லிக்கொண்டே போனேன். துரை எழுந்து, "இப்பொழுது நீர் போய்விட வேண்டும்" என்ருர்.

"தயவு செய்து நான் சொல்வதை முழுவதும் கேளுங்கள்" என்றேன். இப்படிச் சொன்னதும் அவருக்குக் கோபம் அதிகமாகிவிட்டது. அவர் தமது சேவகனைக் கூப்பிட்டு, என்னை வெளியே அனுப்பும்படி சொன்னுர். அப்பொழுதும் நான் தயங்கிக்கொண்டே நின்றேன். சேவகன் உள்ளே வந்து, என் தோளில் கைபோட்டு, என்னை வெளியே தள்ளிவிட்டான்.

துறையும் சேவகனும் போய்விட்டனர். நானும் புறப்பட்டேன். கோபமும் ஆத்திரமும் என் மனத்தில் பொங்கிக்கொண்டிருந்தன. உடனே ஒரு குறிப்பு எழுதி, அதை அவருக்கு அனுப்பினேன். அக்குறிப்பில், "நீங்கள் என்னை அவமானப்படுத்திவிட்டீர்கள். உங்கள் சேவகனைக் கொண்டு என்னைத் தாக்கிவிட்டீர்கள். இதற்குத் தக்க பரிகாரம் செய்யாவிட்டால், நான் உங்கள்மீது வழக்குத் தொடர நேரும்" என்று எழுதியிருந்தேன்.

உடனே அவருடைய சிப்பாயின் மூலம், எனக்குப் பின்கண்ட பதிலும் கிடைத்தது: "நீர் என்னிடம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டீர். போய்விடுமாறு நான் உம்மிடம் கூறியும், நீர் போகவில்லை. உம்மை வெளியே அனுப்புமாறு என் சேவகனுக்கு உத்தர விடுவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை. வெளியே போகுமாறு அவன் சொன்னதற்கும் நீர் போக மறுத்தீர். ஆகவே, உம்மை வெளியே அனுப்புவதற்குப் போதுமான பலாத்

காரத்தை அவன் உபயோகிக்க வேண்டியதாயிற்று. உமது விருப்பம்போல் எந்த நடவடிக்கையை வேண்டுமானுலும் நீர் எடுத்துக் கொள்ளலாம்."

இந்தப் பதிலை என் சட்டைப் பையில் வைத்துக் கொண்டு, இடிந்துபோய் வீடு திரும்பினேன். நடந்ததையெல்லாம் என் அண்ணனிடம் சொன்னேன்; அவரும் வருத்தப்பட்டார். ஆனல், என்னைத் தேற்றுவது எப்படி என்பது அவருக்குத் தெரியவில்லை. துரைமீது எப்படி வழக்குத் தொடருவது என்பது எனக்குத் தெரியாது போகவே, அவர் தமது வக்கீல் நண்பர்களிடம் இதைக் குறித்துக் கலந்து ஆலோசித்தார். அச் சமயத்தில் ஸர் பிரோஸ்ஷா மேத்தா ராஜ்கோட்டில் இருந்தார். ஏதோ ஒரு வழக்குக்காக அவர் அங்கே வந்திருந்தார். ஆனல், என்னைப்போன்ற ஒரு சின்ன பாரிஸ்டர் அவரைப் போய்ப் பார்க்க எவ்வாறு துணிய முடியும்? அவரை அங்கே ஒரு வழக்கிற்கு அமர்த்தியிருந்த ஒரு வக்கீலின் மூலம் என் வழக்குச் சம்பந்தமான தஸ்தாவேஜுகளை அனுப்பி, அவருடைய ஆலோசனையைக் கோரினேன். அவற்றைப் பார்த்துவிட்டு, அவர் பின்வருமாறு கூறினராம்: "அநேக வக்கீல்களுக்கும் பாரிஸ்டர்களுக்கும் இது சாதாரணமான அனுபவம் என்று காந்தியிடம் கூறுங்கள். அவர் இப்பொழுதுதான் இங்கிலாந்திலிருந்து வந்திருக்கிறர். ஆகையால், அவருக்கு ரோஷம் அதிகமாக இருக்கிறது. பிரிட்டிஷ் அதிகாரிகளைக் குறித்து, அவருக்கு இன்னும் தெரியவில்லை. அவர் இங்கே ஏதோ கொஞ்சம் சம்பாதித்துச் சௌக்கியமாக வாழ விரும்பினல், அக் குறிப்பைக் கிழித்தெறிந்து விட்டு, அவமானத்தையும் சகித்துக்கொள்ளட்டும். துரை மீது வழக்குத் தொடுத்து, அவர் அடையப் போவது எதுவும் இல்லை. அதற்கு மாருக, தம்மையே நாசப்படுத்திக் கொள்வதாகவும் அது ஆகலாம். வாழ்க்கையைப் பற்றி அவர் இன்னும்

நிறையத் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது என் பதையும் அவருக்குச் சொல்லுங்கள்."

இந்தப் புத்திமதி, விஷம்போல எனக்குக் கசப்பாகவே இருந்தது. என்றாலும் இதை நான் விழுங்கியே ஆக வேண்டியதாயிற்று. அவமானத்தைச் சகித்துக் கொண்டேன். அதனால் பலனையும் அடைந்தேன். 'இனி ஒரு காலும் இத்தகைய சங்கடமான நிலைக்கு என்னை உட்படுத்திக்கொள்ள மாட்டேன்; நட்பை இவ்விதம் பயன்படுத்திக் கொள்ளவும் முயல மாட்டேன்' என்று எனக்குள் நானே சொல்லிக்கொண்டேன். அதன்பின் இந்த உறுதியிலிருந்து மாறும் குற்றத்தை நான் செய்ததே இல்லை. இந்த அதிர்ச்சி என் வாழ்க்கையின் போக்கையே மாற்றிவிட்டது.

அந்த அதிகாரியிடம் நான் போனதே தவறு என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அவர் காட்டிய பொறுமையின்மையும் அளவு கடந்த கோபமும், என் தப்புக்கு மிகவும் அதிகப்படியானவையே. வெளியில் பிடித்துத் தள்ள வேண்டியதற்கான தப்பை நான் செய்துவிடவில்லை.

இப்பொழுதோ என் வேலைகளில் பெரும்பாலும் அவருடைய நீதிமன்றத்தில் நடந்தாக வேண்டியவை. எப்படியாவது அவருடைய தயவைத் தேடிக்கொள்ள வேண்டும் என்ற விருப்பமும் எனக்கு இல்லை. உண்மையில் அவர் மீது வழக்குத் தொடருவதாக நான் ஒரு முறை அவரைப் பயமுறுத்திவிட்ட பிறகு, சும்மா இருந்துவிட நான் விரும்பவில்லை.

இதற்கு மத்தியில் நாட்டின் சில்லறை ராஜீய விஷயங்களைக் குறித்தும் கொஞ்சம் தெரிந்துகொண்டேன். கத்தியவார் அநேக சிறு சிறு சமஸ்தானங்களைக்கொண்ட பகுதி யாகையால், ராஜீயவாதிகள் ஏராளமாக முளைத்

துக்கொண்டிருந்தனர். இச்சகம் பேசுகிறவர்கள் சொல்லுவனவற்றிற் கெல்லாம் சமஸ்தானதிபதிகள் செவி சாய்த்து வந்தனர். துரையின் சேவகனைக்கூடச் சரிக் கட்டி வைத்துக்கொள்ளவேண்டி யிருந்தது. துரையின் சிரஸ்தாரே துரைக்குக் கண்களாகவும், காதுகளாகவும், மொழிபெயர்த்துச் சொல்லுபவராகவும் இருந்ததால் அவர், தம் எஜமானனைவிட ஒரு படி மேலானவராகவே இருந்தார். சிரஸ்தார் வைத்ததுதான் சட்டம். அவருடைய வருமானம் துரையின் வருமானத்திற்கும் அதிகம் என்பது பிரபலமான விஷயம். இது ஒரு வேளை மிகைப்படுத்திக் கூறப்பட்டதாகவும் இருக்கலாம். என்றாலும் அவர், தமது சம்பளத்திற்கு மிஞ்சிய ஆடம்பர வாழ்க்கையையே நடத்திக்கொண்டிருந்தார்.

இந்தச் சூழ்நிலை, விஷ மயமானது என்று எனக்குத் தோன்றிற்று. இதனல் பாதிக்கப்படாமல் அங்கே எப்படி இருப்பது என்பதே எனக்குத் தீராப் பிரச்சினை யாயிற்று.

நான் முற்றும் மனச்சோர்வை அடைந்துவிட்டேன். இதை என் சகோதரர் தெளிவாக அறிந்துகொண்டார். எனக்கு ஏதாவது ஓர் உத்தியோகம் கிடைத்துவிட்டால் இந்தச் சூழ்ச்சிச் சூழ்நிலையிலிருந்து நான் விடுதலை பெற்றுவிடுவேன் என்பதை நாங்கள் இருவருமே உணர்ந்தோம். ஆனல், சூழ்ச்சியையும் தந்திரத்தையும் கையாளாமல் ஒரு மந்திரி வேலையோ, நீதிபதி உத்தியோகமோ கிடைப்பது முடியாத காரியம். துரையுடன் ஏற்பட்ட சச்சரவு, எனது தொழிலை நடத்திக்கொண்டு போவதற்கே இடையூருக நின்றது.

இதற்கு மத்தியில் போர்பந்தரைச் சேர்ந்த ஒரு மேமன் வியாபாரக் கம்பெனியார், என் சகோதரருக்கு ஒரு கடிதம் எழுதி யிருந்தார்கள். அதில் அவர்கள் அறி

வித்திருந்ததாவது: "தென்னுப்பிரிக்காவில் எங்களுக்கு வியாபாரம் இருக்கிறது. எங்களுடையது பெரிய வியாபாரக் கம்பெனி. எங்களுடைய பெரிய வழக்கு ஒன்று அங்கே கோர்ட்டில் நடக்கிறது. 40,000 பவுன் வரவேண்டும் என்பது எங்கள் தாவா. இந்த வழக்கு நீண்ட காலமாக நடந்துகொண்டு வருகிறது. பெரிய வக்கீல்களையும் பாரிஸ்டர்களையும் அமர்த்தி யிருக்கிறோம். உங்கள் சகோதரரை அங்கே அனுப்புவீர்களானால் எங்களுக்கும் உதவியாக இருக்கும்; அவருக்கும் உதவியாக இருக்கும். வக்கீல்களுக்கு விஷயங்களை எடுத்துக் கூற, எங்களைவிட அவரால் நன்கு முடியும். அதோடு, உலகத்தில் புதியதொரு பகுதியைப் பார்க்கும் வாய்ப்பு ஏற்படுவதோடு புதிதாகப் பலருடன் பழகும் சந்தர்ப்பமும் அவருக்குக் கிடைக்கும்."

"என் சேவை உங்களுக்கு எவ்வளவு காலத்திற்குத் தேவை? நீங்கள் அதற்கு என்ன கொடுப்பீர்கள்?" என்று கேட்டேன்.

"ஓர் ஆண்டுக்கு மேல் தேவைப்படாது. உங்களுக்குப் போகவர, முதல் வகுப்புக் கப்பல் கட்டணமும், மற்ற எல்லாச் செலவும் போக 105 பவுனும் தருகிறோம்" என்றார்.

நான் அங்கே போவது, பாரிஸ்டர் என்ற முறையிலேயே அன்று. அந்தக் கம்பெனியின் ஊழியன் என்ற வகையிலேயே போகிறேன். ஆனால், எப்படியாவது இந்தியாவிலிருந்து போய்விட வேண்டும் என்று விரும்பினேன். அதோடு புதிய நாட்டைப் பார்க்கலாம்; புதிய அனுபவங்களைப் பெறலாம் என்ற ஆசையும் இருந்தது. மேலும் 105 பவுனையும் என் சகோதரருக்கு அனுப்பி, குடும்பச் செலவுக்கு உதவி செய்யலாம். எந்த

விதமான பேரமும் பேசாமல் ஒப்புக்கொண்டு, தென்னுப்பிரிக்காவுக்குப் புறப்படுவதற்குத் தயாரானேன்.

கட்டுரைகள் எழுதுக

1. போர்பந்தர் பிரிட்டிஷ் ராஜீய ஏஜென்டிடம் காந்திஜிக்கு ஏற்பட்ட விசனிக்கத்தக்க அனுபவத்தை உங்கள் சொந்த சொற்களில் கூறுக.
2. இந்தியாவைவிட்டுத் தென்னுப்பிரிக்கா போவதற்கு காந்திஜிக்கு ஏற்பட்ட நிலைமைகள் யாவை?

நான்காம் பாகம்

தென்னுப்பிரிக்காவில்

17

தென்னுப்பிரிக்காவை அடைதல்

நேட்டாலின் துறைமுகம், டர்பன். அதை நேட்டால் துறைமுகம் என்பதும் உண்டு. என்னை வரவேற்க அப்துல்லா சேத் துறைமுகத்திற்கு வந்திருந்தார். கப்பல் கரையைத் தொட்டதும், நண்பர்களை வரவேற்கப் பலர் கப்பலுக்கு வருவதைப் பார்த்தேன். அப்படி வருகிறவர்களில் இந்தியர்களுக்கு மரியாதை காட்டப்படுவதில்லை என்பதையும் கவனித்தேன். அப்துல்லா சேத்தை அறிந்தவர்கள் அவரிடம் ஒரு வகையான அகம்பாவத்துடன் நடந்துகொள்ளுவதையும் நான் கவனிக்காது போகவில்லை. அது என் மனத்தை வருத்தியது. ஆனல், அப்துல்லா சேத்துக்கு இதெல்லாம் பழக்கமாகிவிட்டது. என்னைப் பார்த்தவர்களும் அது போலவே ஏதோ விசித்திரப் பொருளைப் பார்ப்பதுபோலப் பார்த்தனர். நான் அணிந்திருந்த உடை, மற்ற இந்தியரிலிருந்து என்னை வேறுபடுத்திக் காட்டியது. நான் வங்காளிகள் வைத்துக்கொள்ளுவதைப் போன்ற ஒரு தலைப்பாகையை வைத்துக்கொண்டு, மேலங்கியும் அணிந்திருந்தேன்.

நான் நேட்டாலுக்கு வந்த இரண்டாம் நாளோ, மூன்ரும் நாளோ, அப்துல்லா சேத் என்னை டர்பன் நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்ருர். அங்கே என்னைப் பலருக்கு அறிமுகம் செய்துவைத்துத் தம் வக்கீலுக்குப் பக்கத்தில் என்னை உட்கார வைத்தார். மாஜிஸ்டிரேட்டோ, என்னை வெறிக்கப் பார்த்துக்கொண்டே இருந்தார். கடைசியாக என் தலைப்பாகையை எடுக்கும்படி கூறினர். நான் எடுக்க மறுத்து, கோர்ட்டிலிருந்து வெளியே வந்துவிட்டேன்.

ஆகவே, இங்கும் எனக்குப் போராட்டம் காத்துக்கொண்டிருந்தது. தலைப்பாகையைப் பற்றிய சம்பவத்தைக் குறித்துப் பத்திரிகைகளுக்கு எழுதினேன். கோர்ட்டில் நான் தலைப்பாகை அணிந்திருந்தது நியாயமே என்று வாதாடினேன். இவ்விஷயத்தைக் குறித்துப் பத்திரிகைகளில் பலத்த விவாதம் நடந்தது. பத்திரிகைகள் என்னை 'வேண்டாத விருந்தாளி' என்றும் வர்ணித்தன. இவ்விதம் நான் தென்னாப்பிரிக்காவுக்கு வந்த சில தினங்களுக்குள்ளேயே இச் சம்பவம் எனக்கு எதிர்பாராத விளம்பரத்தை அளித்தது. சிலர் என்னை ஆதரித்தனர்; மற்றுஞ் சிலரோ, 'இது பைத்தியக்காரத்தனமான துணிச்சல்' என்று கூறிப் பலமாகக் கண்டித்தனர்.

நான் தென்னாப்பிரிக்காவில் இருந்த காலம் முழுவதும், கடைசி வரையில், தலைப்பாகை என்னிடம் இருந்தது.

கட்டுரை எழுதுக

1. காந்திஜி தென்னாப்பிரிக்காவுக்குப் போனதும் முதன்முதலில் அவருக்கு உண்டான அபிப்பிராயங்கள் யாவை?

18

பிரிட்டோரியாவுக்குப் போகும் வழியில்

கம்பெனிக்கு அவர்களுடைய பிரிட்டோரியா வக்கீலிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. வழக்கை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டும் என்றும், அப்துல்லா சேத் பிரிட்டோரியாவுக்கு வர வேண்டும் என்றும், இல்லாவிடில் ஒரு பிரதிநிதியையாவது அனுப்ப வேண்டும் என்றும் வக்கீல் எழுதியிருந்தார்.

அக்கடிதத்தை அப்துல்லா சேத் என்னிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னார்; "பிரிட்டோரியாவுக்குப் போகிறீர்களா?" என்று என்னைக் கேட்டார். "உங்களிடமிருந்து வழக்குச் சம்பந்தமான விவரங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்ட பிறகே அதைப் பற்றி நான் சொல்ல முடியும்" என்றேன். "இப்பொழுது அங்கே நான் செய்ய வேண்டியது இன்னது என்பது தெரியவில்லை" என்றேன். அதன் பேரில் வழக்குச் சம்பந்தமான விவரங்களை எனக்கு விளக்கிக் கூறுமாறு அவர் தமது குமாஸ்தாக்களிடம் கூறினார்.

நான் டர்பன் சேர்ந்த ஏழாவது அல்லது எட்டாவது நாள் அங்கிருந்து புறப்பட்டேன். எனக்கு ரெயிலில் முதல் வகுப்பு டிக்கெட் வாங்கப்பட்டிருந்தது. இரவில் படுக்கையும் வேண்டும் என்றால் அதற்காகத் தனியாக ஐந்து ஷில்லிங் கொடுத்துச் சீட்டுப் பெறுவது அங்கிருந்த வழக்கம். எனக்குப் படுக்கைச் சீட்டும் வாங்கிவிட

வேண்டும் என்று அப்துல்லா சேத் வற்புறுத்தினர். ஆனல், பிடிவாதத்தினுலும், கர்வத்தினுலும், ஐந்து ஷில் லிங் மிச்சப்படுத்தி விடலாம் என்ற எண்ணத்தினுலும், அதற்கு நான் மறுத்துவிட்டேன். "இந்நாடு இந்தியா அல்ல என்பதைக் கவனத்தில் வையுங்கள். எங்களுக்குப் போதிய செல்வத்தை ஆண்டவன் அளித்திருக்கிருர். செலவு செய்யவும் முடியும். உங்களுடைய தேவைக்குச் செலவு செய்து கொள்ளுவதில் தயவுசெய்து வீண் சிக் கனம் பிடிக்க வேண்டாம்" என்று சேத் எச்சரிக்கை செய்தார்.

அவருக்கு நன்றி தெரிவித்தேன். "என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்" என்றேன்.

நான் சென்ற ரெயில், இரவு 9 மணிக்கு நேட்டாலின் தலைநகரான மாரிட்ஸ்பர்க் போய்ச் சேர்ந்தது. அந்த ஸ்டேஷனில் பிரயாணிகளுக்குப் படுக்கை கொண்டு வந்து கொடுப்பது வழக்கம். ஒரு ரெயில்வே சிப்பந்தி வந்து, எனக்குப் படுக்கை வேண்டுமா என்று கேட்டார். "வேண் டாம்; என் படுக்கை இருக்கிறது" என்றேன். அவர் போய்விட்டார். ஆனல், ஒரு பிரயாணி அங்கே வந்து, என்னை மேலும் கீழுமாகப் பார்த்தார். நான், 'கறுப்பு மனிதன்' என்பதை அறிந்ததும் அவருக்கு ஆத்திரம் வந்துவிட்டது. உடனே போய்விட்டார். பிறகு இரண் டொரு அதிகாரிகளுடன் திரும்பி வ்ந்தார். அவர்கள் எல்லோரும் பேசாமல் இருந்தபோது, வேறு ஒரு அதி காரி என்னிடம் வந்து, "இப்படி வாரும். நீர் சாமான்கள் வண்டிக்குப் போக வேண்டும்" என்ருர்.

"என்னிடம் முதல் வகுப்பு டிக்கெட் இருக்கிறதே" என்றேன்.

"அதைப் பற்றி அக்கறையில்லை. நீர் சாமான்கள் வண்டிக்குப்போக வேண்டும் என்று நான் சொல்கிறேன்" என்ருர்.

"நான் உமக்குச் சொல்கிறேன். இந்த வண்டியில் பிரயாணம் செய்ய டர்பனில் அனுமதிக்கப்பட்டிருக்கிறேன். எனவே, இதில்தான் நான் பிரயாணம் செய்வேன்" என்றேன்.

"இல்லை. நீர் இதில் போகக்கூடாது. இந்த வண்டியிலிருந்து நீர் இறங்கிவிட வேண்டும். இல்லையானால் உம்மைக் கீழே தள்ளப் போலீஸ்காரனை அழைக்க வேண்டி வரும்" என்றார்.

"அழைத்துக் கொள்ளும். நானாக இவ் வண்டியிலிருந்து இறங்க மறுக்கிறேன்" என்று சொன்னேன்.

போலீஸ்காரர் வந்தார். கையைப் பிடித்து இழுத்து என்னை வெளியே தள்ளினார். என் சாமான்களையும் இறக்கிப் போட்டுவிட்டார். சாமான்கள் வண்டிக்குப் போய் ஏற நான் மறுத்துவிட்டேன். ரெயிலும் புறப்பட்டுப் போய்விட்டது. போட்ட இடத்திலேயே என் சாமான்களையெல்லாம் போட்டுவிட்டு, கைப் பையை மாத்திரம் என்னுடன் வைத்துக்கொண்டு, பிரயாணிகள் தங்கும் இடத்திற்குப் போய் உட்கார்ந்தேன். சாமான்கள் ரெயில்வே அதிகாரிகள் வசம் இருந்தன.

அப்பொழுது குளிர்காலம். தென்னாப்பிரிக்காவில் உயரமான பகுதிகளில் குளிர் காலத்தில் குளிர் மிகக் கடுமையாக இருக்கும். மாரிட்ஸ்பர்க் உயரமான இடத்தில் இருந்ததால் அங்கே குளிர் அதிகக் கடுமையாக இருந்தது. என் மேல் அங்கியோ மற்றச் சாமான்களுடன் இருந்தது. அதை ரெயில்வே அதிகாரிகளிடம் போய்க் கேட்க நான் துணியவில்லை. கேட்டால் திரும்பவும் அவமதிக்கப்படுவேனோ என்று பயந்தேன். எனவே, குளிரில் நடுங்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். அவ்வறையில் விளக்கும் இல்லை. நடுநிசியில் ஒரு பிரயாணி அங்கே வந்தார். அவர் என்னுடன் பேச விரும்புவது

போல் இருந்தது. ஆனால், பேச விரும்பும் நிலையில் நான் இல்லை.

என் கடமை என்ன என்பதைக் குறித்துச் சிந்திக்கலானேன். என்னுடைய உரிமைகளுக்காகப் போராடுவதா, இந்தியாவுக்குத் திரும்பிவிடுவதா? இல்லாவிடில் அவமானங்களையெல்லாம் பொருட்படுத்தாமல் பிரிட்டோரியாவுக்குப் போய், வழக்கை முடித்துக்கொண்டு, இந்தியாவுக்குத் திரும்புவதா? என் கடமையை நிறைவேற்றாமல் இந்தியாவுக்கு ஓடிவிடுவது என்பது கோழைத்தனமாகும். எனக்கு ஏற்பட்ட கஷ்டம் இலேசானது; நிறத் துவேஷம் என்ற கொடிய நோயின் வெளி அறிகுறி மாத்திரமே அது. சாத்தியமானால், இந்த நோயை அடியோடு ஒழிக்க நான் முயலவேண்டும்; அதைச் செய்வதில் துன்பங்களை அனுபவிக்க வேண்டும். நிறத் துவேஷத்தைப் போக்குவதற்கு அவசியமான அளவு மாத்திரமே, நான் தவறுகளுக்குப் பரிகாரம் பெறப் பார்க்க வேண்டும்.

எனவே அடுத்த வண்டியில் பிரிட்டோரியாவுக்குப் புறப்படுவது என்று தீர்மானித்தேன்.

மறுநாள் காலையில் ரெயில்வே ஜெனரல் மானேஜருக்கு நீண்ட தந்தி ஒன்று கொடுத்தேன். அப்துல்லா சேத்துக்கும் அறிவித்தேன். அவர் உடனே ஜெனரல் மானேஜரைப் போய்ப் பார்த்தார். மானேஜரோ, 'ரெயில்வே அதிகாரிகள் செய்தது சரியே' என்றார். ஆனால், நான் சேர வேண்டிய இடத்திற்குப் பத்திரமாகப் போய்ச் சேரப் பார்க்குமாறு தாம் ஸ்டேஷன் மாஸ்டருக்கு அறிவித்துவிட்டதாக அப்துல்லா சேத்திடம் கூறினார். என்னைச் சந்தித்து, எனக்கு வேண்டியதைச் செய்யுமாறு மாரிட்ஸ்பர்க்கிலும் மற்ற இடங்களிலும் இருந்த இந்திய வர்த்தகர்களுக்கு அப்துல்லா சேத்

தந்திகள் கொடுத்தார். வர்த்தகர்கள் என்னைப் பார்க்க ஸ்டேஷனுக்கு வந்தார்கள். தாங்கள் அனுபவித்திருக்கும் கஷ்டங்களையெல்லாம் சொன்னார்கள். எனக்கு நேர்ந்தது, சர்வ சாதாரணமான அனுபவந்தான் என்று கூறி, எனக்கு ஆறுதல் அளிக்க முயன்றார்கள். முதல் வகுப்பிலும் இரண்டாம் வகுப்பிலும் பிரயாணஞ்செய்யும் இந்தியர்கள், ரெயில்வே அதிகாரிகளிடமிருந்தும், வெள்ளையரிடமிருந்தும் தொல்லையை எதிர்பார்க்கவே நேரும் என்றார்கள். இவ்விதம் துன்பக் கதைகளைக் கேட்பதிலேயே அன்று பொழுது போயிற்று. மாலை வண்டியும் வந்தது. எனக்காக ஏற்பாடு செய்திருந்த இடம் அதில் இருந்தது. டர்பனில் நான் வாங்க மறுத்த படுக்கைச் சீட்டை மாரிட்ஸ்பர்க்கில் வாங்கிக்கொண்டேன். ரெயிலும் என்னைச் சார்லஸ் டவுனுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தது.

ரெயில் காலையில் சார்லஸ் டவுன் சேர்ந்தது. சார்லஸ் டவுனுக்கும் ஜோகன்னஸ்பர்க்குக்கும் இடையே அந்த நாளில் ரெயில் பாதை இல்லை. நான்கு சக்கரக் குதிரைக் கோச் வண்டிகளில்தான் போகவேண்டும். அவ் வண்டி, வழியில் உள்ள ஸ்டாண்டர்ட்டனில் விடியும் வரையில் தங்கும். அவ்வண்டியில் போக என்னிடம் சீட்டு இருந்தது. வழியில் மாரிட்ஸ்பர்க்கில் ஒரு நாள் தங்கி விட்டதால் அது ரத்துச் செய்யப்படவில்லை. அதுவல்லாமல் சார்லஸ் டவுனிலிருந்த கோச் வண்டி ஏஜென்டுக்கும் அப்துல்லா சேத் தந்தி கொடுத்திருந்தார்.

ஆனால், அந்த ஏஜென்டுக்கு, என்னைவண்டியில் ஏற்ற மறுத்து விடுவதற்கு ஏதாவது ஒருசாக்குப்போக்குத்தான் தேவையாக இருந்தது. ஆகவே, நான் அவ்விடத்திற்குப் புதியவன் என்று கண்டுகொண்டதும், "உம் டிக்கெட் ரத்தாகிவிட்டது" என்றார். நான் அவருக்குத் தக்க பதில்

அளித்தேன். எனக்கு இடமில்லை என்று அவர் மறுத்த தற்குக் காரணம் வேறு. வண்டியில் இடமில்லை என்பதல்ல. பிரயாணிகளை வண்டிக்குள்ளேயே உட்கார வைக்கவேண்டும். ஆனால், நானோ 'கூலி'யாகக் கருதப் பட்டேன். அதோடு புதியவனாகவும் தென்பட்டேன். எனவே, என்னை வெள்ளைக்காரப் பிரயாணிகளுடன் உட்கார வைக்காமல் இருப்பதுதான் சரி என்று வண்டித் 'தலைவர்' கருதினார். கோச் வண்டியின் காரியங்களைக் கவனித்து வரும் வெள்ளைக்காரருக்குத் 'தலைவர்' என்பது பட்டம். வண்டியின் பெட்டிமீது வண்டியோட்டிக்கு இரு பக்கங்களிலும் இரு ஆசனங்கள் இருந்தன. அவைகளில் ஒன்றில், 'தலைவர்' உட்கார்ந்துகொள்ளுவது வழக்கம். ஆனால் இன்றோ அவர் உள்ளே உட்கார்ந்துகொண்டு, அவருடைய இடத்தை எனக்குக் கொடுத்தார். அது பெரிய அநியாயமும் அவமதிப்பும் ஆகும் என்பதை அறிவேன். என்றாலும், அதையும் சகித்துக்கொள்ளுவது நல்லது என்று நினைத்தேன். கட்டாயப்படுத்தி நான் உள்ளே போய் உட்கார்ந்துகொள்ள முடியாது. வெளியில் உட்கார ஆட்சேபித்திருந்தால் என்னை ஏற்றிக்கொள்ளாமலேயே வண்டி போயிருக்கும். அதனால் இன்னும் ஒருநாள் வீணாகி யிருக்கும். அதற்கு மறுநாள் என்ன நேரும் என்பதையும் கடவுளே அறிவார். ஆகவே, எனக்குள்ளேயே ஆத்திரப் பட்டுக்கொண்டாலும் அதை யெல்லாம் காட்டிக்கொள்ளாமல் வண்டியோட்டிக்குப் பக்கத்தில் உட்கார்ந்தேன்.

சுமார் மூன்று மணிக்கு வண்டி, பார்டேகோப் என்ற இடத்திற்குப் போய்ச் சேர்ந்தது. இப்பொழுது, 'தலைவர்' நான் உட்கார்ந்திருந்த இடத்தில், தாம் உட்கார்ந்துகொள்ள விரும்பினார். சுருட்டுப் பிடிக்க விரும்பியதோடு, கொஞ்சம் காற்றோட்டமாக இருக்கவும் அவர் விரும்பியிருக்கக் கூடும். ஆகவே, வண்டியோட்டி யிட

மிருந்து ஓர் அழுக்குக் கோணித் துண்டை எடுத்து, வண்டியில் ஏறும் கால்படிமீது அதை விரித்தார். பிறகு என்னைப் பார்த்து, "சாமி, இதன்மீது நீர் உட்காரும். வண்டியோட்டியின் பக்கத்தில் நான் உட்காரவேண்டும்" என்றார். இந்த அவமதிப்பை என்னால் சகிக்க முடிய வில்லை. "என்னை உள்ளே உட்கார வைக்கவேண்டி யிருந்தும் நீர்தாம் என்னை இங்கே உட்கார வைத்தீர். அந்த அவமதிப்பையும் சகித்துக்கொண்டேன். இப் பொழுது நீர் வெளியே உட்கார்ந்து சுருட்டுப் பிடிக்க விரும்புவதற்காக என்னை உமது காலடியில் உட்காரச் சொல்கிறீர். அப்படி உட்கார மாட்டேன். ஆனால், உள்ளே வேண்டுமானால் உட்காரத் தயார்" என்று பயந்துகொண்டும் நடுங்கிக்கொண்டும் கூறினேன்.

இவ்விதம் நான் தட்டுத் தடுமாறிச் சொல்லிக் கொண்டிருந்தபோதே அவர் என்னிடம் வந்து, என் கன்னங்களில் ஓங்கி அறையத் தொடங்கினார். என் கையைப் பிடித்து இழுத்துக் கீழே தள்ளவும் முயன்றார். வண்டியின் பித்தளைக் கம்பிகளை நான் கெட்டியாகப் பிடித்துக்கொண்டேன். மணிக்கட்டுகளின் எலும்புகள் முறிந்தாலும் பிடியை மாத்திரம் விடுவதில்லை என்று உறுதிகொண்டேன். அவர் என்னைத் திட்டி, இழுத்து அடிப்பதும், நான் சும்மா இருப்பதுமாகிய இக்காட்சி யைப் பிரயாணிகள் பார்த்துக்கொண்டிருந்தனர். அவரோ பலசாலி, நானோ பலவீனமானவன். பிரயாணி களில் சிலருக்கு இரக்கம் உண்டாயிற்று. "அவரை விட்டு விடும். அடிக்காதேயும். அவர்மீது குற்றம் இல்லை. அவர் செய்தது சரியே. அவர் அங்கே இருக்க முடியா தென் றால் இங்கே வந்து எங்களுடன் உட்கார்ந்துகொள்ளட் டும்" என்றனர். "அது முடியாது!" என்று 'தலைவர்' கத்தினார். ஆனாலும், கொஞ்சம் அவமானம் அடைந்து விட்டவர்போலவே காணப்பட்டார். என்னை அடிப்பதை

நிறுத்திவிட்டார். என் கையை விட்டுவிட்டு, கொஞ்ச நேரம் திட்டிக்கொண்டிருந்தார். வண்டிப் பெட்டியின் மற்றொரு பக்கத்தில் ஹாட்டன்டாட் வேலைக்காரர் உட்கார்ந்திருந்தார். எழுந்து படிக்கட்டில் உட்காரும்படி அவருக்குச் சொல்லி, அவர் காலி செய்த இடத்தில் 'தலைவர்' உட்கார்ந்துகொண்டார்.

பிரயாணிகள் ஏறி அவரவர்களிடத்தில் உட்கார்ந்தனர். ஊதியதும், வண்டியும் வேகமாகப் புறப்பட்டுப் போயிற்று. என் இருதயமோ அதி வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. சேர வேண்டிய இடத்திற்கு உயிருடன் போய்ச் சேர முடியுமா என்று எண்ணித் திகைத்தேன். 'தலைவ'ரோ அடிக்கடி கோபத்துடன் என்னை முறைத்துப் பார்த்துக்கொண்டே இருந்தார். "இரு, ஸ்டாண்டர்ட்டன் போய்ச் சேர்ந்ததும் என்ன செய்கிறேன் என்பதைக் காட்டுகிறேன்!" என்று விரலை ஆட்டி, உறுமிக்கொண்டே இருந்தார். நான் வாய் திறவாது உட்கார்ந்திருந்தேன். எனக்கு உதவுமாறு கடவுளைப் பிரார்த்தித்தேன்.

இருட்டியதும் ஸ்டாண்டர்ட்டன் போய்ச் சேர்ந்தோம். அங்கே சில இந்திய முகங்களைக் கண்டதும் ஒரு சிறிது ஆறுதல் அடைந்து பெருமூச்சு விட்டேன். நான் வண்டியிலிருந்து இறங்கியதும் அந்த நண்பர்கள், "உங்களை வரவேற்று, ஈஸா சேத்தின் கடைக்கு அழைத்துச் செல்ல இங்கே வந்திருக்கிறோம். தாதா அப்துல்லாவிடமிருந்து எங்களுக்குத் தந்தி வந்திருக்கிறது" என்றார்கள். நான் அதிக மகிழ்ச்சியடைந்தேன். சேத் ஈஸா ஹாஜி ஸுமாரின் கடைக்குச் சென்றோம்.

தொடர வேண்டும் என்ற நோக்கமே எனக்கு இல்லை. ஆகவே, அடிபட்ட அத்தியாயம் அதனோடே முடிந்தது.

மறுநாள் காலையில் ஈஸா சேத்தின் ஆள் என்னைக் கோச் வண்டிக்கு அழைத்துச் சென்றார். எனக்கு நல்ல ஆசனம் கிடைத்தது. அன்றிரவு பத்திரமாக ஜோகன்னஸ்பர்க்கை அடைந்தேன்.

ஸ்டாண்டர்ட்டன் சிறு கிராமம்; ஜோகன்னஸ்பர்க்கோ பெரிய நகரம். அப்துல்லா சேத் ஜோகன்னஸ்பர்க்கிற்கும் தந்தி கொடுத்திருந்தார். அங்குள்ள மகமது காஸம் கம்ருதீன் கம்பெனியின் விலாசத்தையும் என்னிடம் கொடுத்திருந்தார். என்னைச் சந்தித்து அழைத்துப் போவதற்கு அந்தக் கம்பெனியின் ஆள் ஒரு வரும் வண்டி நிற்கும் இடத்திற்கு வந்திருந்தாராம். ஆனால், நான் அவரைப் பார்க்கவும் இல்லை. அவர் என்னைத் தெரிந்துகொள்ளவும் இல்லை. ஆகவே, ஒரு ஹோட்டலுக்குப் போவது என்று முடிவு செய்தேன். பல ஹோட்டல்களின் பெயர்கள் எனக்குத் தெரியும். வண்டியை அமர்த்திக்கொண்டு நேரே கிராண்டு நாஷனல் ஹோட்டலுக்கு ஓட்டச் சொன்னேன். மானேஜரைப் பார்த்து, 'தங்குவதற்கு ஓர் அறை வேண்டும்' என்று கேட்டேன். அவர் என்னைக் கொஞ்சநேரம் உற்றுப்பார்த்தார். "இடம் நிரம்பிவிட்டது! வருத்தப் படுகிறேன்" என்று மரியாதையாகக் கூறி, என்னை வழியனுப்பிவிட்டார். ஆகவே, முகமது காஸம் கம்ருதீன் கடைக்கு ஓட்டுமாறு வண்டிக்காரனிடம் கூறினேன். அங்கே அப்துல் கனி சேத், என்னை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அவர் என்னை அன்போடு வரவேற்றார். ஹோட்டலில் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தைக் கேட்டுவிட்டு, விழுந்து விழுந்து சிரித்தார். "ஹோட்டலில் இருக்க உங்களை அனுமதிப்பார்கள் என்று எப்படி எதிர்பார்த்தீர்கள்?" என்றார்.

"ஏன் அனுமதிக்கமாட்டார்கள்?" என்று நான் கேட்டேன்.

"நீங்கள் இங்கே சில தினங்கள் தங்கியதும் அதைத் தெரிந்து கொள்ளுவீர்கள்?" என்றார்.

அவர் மேலும் சொன்னதாவது: "உங்களைப் போன்றவர்களுக்கு ஏற்ற நாடல்ல இது. நீங்களோ, நாளை பிரிட்டோரியாவுக்குப் போகவேண்டியிருக்கிறீர்கள். மூன்றும் வகுப்பு வண்டியில்தான் நீங்கள் பிரயாணம் செய்தாக வேண்டும். டிரான்ஸ்வாலில் இருக்கும் நிலைமை, நேட்டாலில் இருக்கும் நிலைமையை விட மகா மோசமானது. இந்தியருக்கு முதல், இரண்டாவது வகுப்பு டிக்கெட்டுகளைக் கொடுப்பதே இல்லை.

ரெயில்வே விதிகளைத் தருவித்து, அவற்றைப் படித்துப் படித்துப் பார்த்தேன். விதிகளில் ஓரளவு இடம் இருந்ததைக் கண்டேன். டிரான்ஸ்வாலின் பழைய சட்டங்களின் வாசகங்கள் அவ்வளவு திட்டவட்டமாக இல்லை. ரெயில்வே விதிகளோ, அதையும்விடத் திட்டவட்டமில்லாமல் இருந்தன.

"நான் முதல் வகுப்பிலேயே போக விரும்புகிறேன். அப்படிப் போக முடியவில்லையென்றால், பிரிட்டோரியாவுக்கு முப்பத்தேழு மைல் தூரமே யாகையால் கோச் வண்டியில் போகிறேன்" என்று சேத்திடம் சொன்னேன்.

இதனால் ஏற்படக் கூடிய கால தாமதத்தையும் பணச் செலவையும் சேத் அப்துல் கனி எனக்கு எடுத்துக் கூறினார். ஆனால், முதல் வகுப்பில் பிரயாணம் செய்வதற்கென்ற என் யோசனையை ஒப்புக்கொண்டார். அதன் பேரில் ஸ்டேஷன் மாஸ்டருக்கு ஒரு குறிப்பு அனுப்பினேன். நான் பாரிஸ்டர் என்றும், நான் முதல் வகுப்பிலேயே எப்பொழுதும் பிரயாணம் செய்வது வழக்கம் என்றும் அதில் குறிப்பிட்டேன். பிரிட்டோரியாவுக்குச் சீக்கிரத்தில் நான் போக வேண்டியிருக்கிறது என்றும், அவருடைய பதிலுக்காகக் காத்திருக்க நேர

மில்லை யாகையால் பதிலை ஸ்டேஷனிலேயே நான் வாங்கிக்கொள்ளுவதாகவும், முதல் வகுப்பு டிக்கெட்டை எதிர் பார்க்கிறேன் என்றும் அக் கடிதத்தில் எழுதியிருந்தேன். பதிலை நேரில் வாங்கிக்கொள்ளுவதாக நான் கூறியிருந்ததற்கும் ஒரு காரணம் உண்டு. 'கூலி' பாரிஸ்டர் என்றால் எப்படி இருப்பார் என்பதைக் குறித்து ஸ்டேஷன் மாஸ்டருக்கும் ஒரு வகையான எண்ணம் இருக்கக்கூடும். ஆகையால், எழுத்து மூலம் ஸ்டேஷன் மாஸ்டர் எனக்குப் பதில் அனுப்புவதாக இருந்தால், 'இல்லை' என்றுதான் நிச்சயமாகச் சொல்லிவிடுவார். எனவே, சரியான ஆங்கில உடையில் அவரிடம் போய், நேரில் பேசினால், முதல் வகுப்பு டிக்கெட் கொடுத்துவிடும்படி செய்துவிடக் கூடும் என்று எண்ணினேன். மறுநாள் காலை நாகரிகமான சட்டை, டை முதலியவைகளை அணிந்துகொண்டு, ஸ்டேஷனுக்குப் போய், என் கட்டணத்திற்காக சவரனை டிக்கெட் கொடுக்கும் இடத்தில் வைத்து, "முதல் வகுப்பு டிக்கெட் ஒன்று வேண்டும்" என்று கேட்டேன்.

"இக் கடிதத்தை நீங்கள்தானே அனுப்பினீர்கள்?" என்று ஸ்டேஷன் மாஸ்டர் என்னைக் கேட்டார்.

"நான்தான் அனுப்பினேன். எனக்கு ஒரு டிக்கெட் கொடுத்தால் அதிக உபகாரமாக இருக்கும். நான் இன்றே பிரிட்டோரியாவுக்குப் போயாக வேண்டும்" என்றேன்.

அவர் சிரித்தார். பச்சாதாபப் பட்டார். பின்வருமாறு சொன்னார்: "நான் டிரான்ஸ்வால்காரன் அல்ல; ஹாலந்துக்காரன். உங்கள் உணர்ச்சியை நான் மதிக்கிறேன். உங்களிடம் எனக்கு அனுதாபமும் உண்டு. உங்களுக்கு டிக்கெட் கொடுக்கவே விரும்புகிறேன். ஆனால், ஒரு நிபந்தனை. உங்களை மூன்றும் வகுப்பு வண்

டிக்குப் போய்விடுமாறு கார்டு கூறினுல், என்னை இவ் விஷயத்தில் சிக்கவைத்துவிடக் கூடாது. ரெயில்வே கம்பெனிமீது நீங்கள் வழக்குத் தொடுத்துவிடக் கூடாது என்றே கூறுகிறேன். சுகமாகப் போய்ச் சேருங் கள். பார்த்த மாத்திரத்திலேயே நீங்கள் ஒரு கனவான் என்பதைக் காண்கிறேன்."

இவ்விதம் கூறி அவர் எனக்கு டிக்கெட் கொடுத் தார். அவருக்கு நன்றி செலுத்தினேன். தேவையான உறுதி மொழிகளையும் அவருக்குக் கொடுத்தேன்.

என்னை வழியனுப்புவதற்காக சேத் அப்துல் கனி ஸ்டேஷனுக்கு வந்திருந்தார். இச் சம்பவம் அவருக்கு மகிழ்ச்சியையும் ஆச்சரியத்தையும் அளித்தது. ஆனல், அவர் ஓர் எச்சரிக்கையையும் செய்தார். நீங்கள் தொந்தரவில்லாமல் பிரிட்டோரியா போய்ச் சேர்ந்தால், அது கடவுள் கிருபைதான். முதல் வகுப்பு வண்டியில் உங்களைக் கார்டு விட்டுவைக்க மாட்டார் என்றே அஞ்சு கிறேன். அவர் விட்டுவைத்தாலும் பிரயாணிகள் விட்டு வைக்க மாட்டார்கள்" என்ருர்.

முதல் வகுப்பு வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண் டேன். வண்டியும் புறப்பட்டுவிட்டது. ஜெர்மிஸ்டன் என்ற இடத்தில் டிக்கெட்டுகளைப் பரிசோதிப்பதற்கா கக் கார்டு வந்தார். நான் அங்கே இருப்பதைக் கண்ட தும் கோபம் அடைந்தார். மூன்ரும் வகுப்பு வண்டிக்குப் போய்விடுமாறு விரலாலேயே சமிக்ஞை செய்தார். என்னிடம் இருந்த முதல் வகுப்பு டிக்கெட்டை அவரி டம் காட்டினேன். "அதைப்பற்றி அக்கறை யில்லை. மூன்ரும் வகுப்பு வண்டிக்குப் போய்விடு" என்ருர்.

அந்த வண்டியில் என்னைத் தவிர ஆங்கிலப் பிர யாணி ஒருவரும் இருந்தார். அவர் கார்டைக் கண்டித் தார். "அந்தக் கனவானை ஏன் தொந்தரவு செய்கிறீர்

கள்? அவரிடம் முதல் வகுப்பு டிக்கெட் இருப்பதை நீர் பார்க்கவில்லையா? அவர் என்னோடு பிரயாணம் செய்வதைப் பற்றி எனக்குக் கொஞ்சமும் ஆட்சேபம் இல்லை" என்றார். பிறகு அவர் என்னைப் பார்த்து, "நீங்கள் இருக்கும் இடத்திலேயே சௌகரியமாக இருங்கள்" என்றார்.

"ஒரு கூலியுடன் பிரயாணம் செய்ய நீங்கள் விரும்பினால் எனக்கு என்ன கவலை?" என்று கார்டு முணுமுணுத்தார்.

இரவு எட்டு மணிக்கு ரெயில் பிரிட்டோரியாவைச் சேர்ந்தது.

கட்டுரைகள் எழுதுக

1. தென்னாப்பிரிக்காவில் டர்பனிலிருந்து மாரிட்ஸ்பர்கிற்கு ரெயிலில் போனபோது அவருக்கு ஏற்பட்ட முதல் அனுபவத்தை விவரிக்கவும்.
2. சார்லஸ் டவுனிலிருந்து ஸ்டான்டர்டனுக்கு கோச் வண்டியிலும், ஜோகன்னஸ்பர்க்கிலிருந்து பிரிட்டோரியாவுக்கு ரெயிலிலும் காந்திஜி பிரயாணம் செய்தபோது அவருக்கு உண்டான அனுபவங்களைக் கூறுக.

19

பிரிட்டோரியாவில் முதல் நாள்

பிரிட்டோரியா ஸ்டேஷன் 1914-ல் இருந்ததற்கும் 1893-ல் இருந்ததற்கும் அதிக வித்தியாசங்கள் உண்டு. அப்பொழுது விளக்குகள் மங்கலாக எரிந்துகொண்டிருந்தன. பிரயாணிகளும் மிகச் சிலரே. மற்றப் பிரயாணிகளெல்லாம் போகட்டும் என்று காத்திருந்தேன். டிக்கெட் வசூலிப்பவர் (டிக்கெட் கலெக்டர்) ஓய்வாக இருக்கும் போது அவரிடம் என் டிக்கெட்டைக் கொடுத்துவிட்டு, ஏதாவது ஒரு சிறு ஹோட்டலுக்காவது, நான் தங்கக் கூடிய வேறு இடத்திற்காவது வழி சொல்லும்படி கேட்கலாம் என்று இருந்தேன். அப்படி இல்லையென்ருல், இரவு ஸ்டேஷனிலேயே இருந்து விடுவது என்று நினைத்தேன். ஆனல், உண்மையில் இதைக் கேட்பதற்குக்கூட எனக்குப் பயமாக இருந்தது. 'அவர் எங்கே என்னை அவமதித்து விடுவாரோ?' என்று அஞ்சினேன்.

ஸ்டேஷனிலிருந்து எல்லாப் பிரயாணிகளும் போய் விட்டார்கள். நான் டிக்கெட் கலெக்டரிடம் என் டிக்கெட்டைக் கொடுத்துவிட்டு விசாரிக்க ஆரம்பித்தேன். அவர் மரியாதையாகவே பதில் சொன்னர். என்ருலும் அவரால் எனக்கு அதிகமாக எந்த உதவியும் ஏற்படாது என்று கண்டேன். ஆனல், பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ஓர் அமெரிக்க நீக்கிரோவரும் பேச்சில் எங்களுடன் கலந்துகொண்டார்.

"நீங்கள் இந்த இடத்திற்கு முற்றும் புதியவர் என்றும், உங்களுக்கு நண்பர்கள் இங்கே யாரும் இல்லை என்றும் தெரிகிறது. நீங்கள் என்னுடன் வ்ந்தால் உங்களை

ஒரு சிறு ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லுகிறேன். அந்த ஹோட்டலின் சொந்தக்காரர் ஓர் அமெரிக்கர். எனக்கு நன்ருகத் தெரிந்தவர். அவர் உங்களை ஏற்றுக் கொள்ளுவார் என்றே நினைக்கிறேன்" என்ருர் அவர்.

எனக்குச் சந்தேகமாகவே இருந்தது. ஆனாலும் அவருக்கு நன்றி கூறிவிட்டு, அவருடைய யோசனையை ஏற்றுக்கொண்டேன். என்னை அவர் ஜான்ஸ்டனின் குடும்ப ஹோட்டலுக்கு அழைத்துப் போனுர். ஸ்ரீ ஜான்ஸ் டனைத் தனியாக அழைத்துப் பேசினுர். அவரும் அன் றிரவு நான் தங்குவதற்கு இடம் தருவதாக ஒப்புக்கொண் டார். ஆனால், அன்றிரவுச் சாப்பாட்டைத் தனியாக என் அறையிலேயே சாப்பிட வேண்டும் என்பது நிபந்தனை.

"எனக்கு நிறத் துவேஷம் எதுவுமே கிடையாது என்பதை உங்களுக்கு உறுதியாகக் கூறுகிறேன். ஆனால், என் ஹோட்டலுக்கு வருபவர்க ளெல்லோரும் ஐரோப்பியர். போஜன அறையில் சாப்பிட உங்களை நான் அனுமதித்தால் அவர்கள் கோபமடைவார்கள். அவர்கள் இங்கிருந்து போய்விட்டாலும் போய்விடக் கூடும்" என்ருர் ஜான்ஸ்டன்.

அதற்கு நான், "இன்றிரவுக்கு மாத்திரமே எனக்கு இடம் அளிப்பதாக இருந்தாலும், அதற்காக என் நன்றி. இங்குள்ள நிலைமையை நான் இப்பொழுது அநேகமாகத் தெரிந்துகொண்டிருக்கிறேன். ஆகையால், உங்களுக்கு இருக்கும் கஷ்டங்களையும் அறிகிறேன். என் அறையி லேயே எனக்கு நீங்கள் இரவுச் சாப்பாடு கொடுப்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. நாளைக்கு வேறு ஏதா வது ஏற்பாடு செய்துகொள்ள முடியும் என்று நம்பு கிறேன்" என்று கூறினேன்.

பிறகு அவர் என்னை ஓர் அறைக்கு அழைத்துக் கொண்டு போய்விட்டார். சாப்பாடு வரும் என்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தேன். நான் தனியாக இருந்த தால் சிந்தனையில் ஆழ்ந்தேன். அந்த ஹோட்டலில் தங்கியவர்கள் அப்பொழுது அதிகம் பேர் இல்லை. ஆகவே, வேலைக்காரன் சீக்கிரமாகவே சாப்பாடு கொண்டு வருவான் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந் தேன். ஆனால், ஸ்ரீ ஜான்ஸ்டனே அங்கே வந்தார். "உங்கள் அறையிலேயே நீங்கள் சாப்பிட வேண்டும் என்று உங்களிடம் சொன்னது எனக்கே வெட்கமாக இருந்தது. ஆகவே, உங்களைப் பற்றி மற்ற வர்களிடம் சொன்னேன். சாப்பாட்டு அறைக்கே நீங் களும் வந்து சாப்பிடுவதில் அவர்களுக்கு ஏதாவது ஆட் சேபம் உண்டா? என்று அவர்களைக் கேட்டேன். தங் களுக்கு எந்தவிதமான ஆட்சேபமும் இல்லை என்றும், நீங்கள் விரும்பும்வரை இங்கே தங்குவதைக் குறித்தும் தங்களுக்குக் கவலையில்லை என்றும் அவர்கள் சொன்னார் கள். ஆகையால், தயவுசெய்து சாப்பாட்டு அறைக்கே வாருங்கள். உங்களுக்கு இஷ்டம் இருக்கும் வரை நீங் கள் இங்கேயே தங்கலாம்" என்றும் அவர் கூறினார்.

அவருக்கு மீண்டும் நன்றி கூறினேன். சாப்பாட்டு அறைக்குப் போய்த் திருப்தியாகச் சாப்பிட்டேன்.

மறுநாள் காலை அட்டர்னி ஸ்ரீ ஏ. டபிள்யூ. பேக் கரைப் போய்ப் பார்த்தேன். அவரைப் பற்றிய சில விவரங்களை அப்துல்லா சேத் என்னிடம் சொல்லியிருந் தார். ஆகையால், அவர் என்னை அன்போடு வரவேற்ற தைக் கண்டு நான் ஆச்சரியப்படவில்லை. என் சுகத் தைக் குறித்தும் பிரியமாக விசாரித்தார். என்னைப் பற் றிய எல்லா விவரங்களையும் சொன்னேன். அதன்பேரில் அவர் கூறியதாவது: "இந்த வழக்குக்குச் சிறந்த வக்கீலை

அமர்த்தி யிருக்கிறோம். ஆகையால், பாரிஸ்டர் என்ற வகையில் உங்களுக்கு எங்களிடம் வேலை இல்லை. இந்த வழக்கு நீண்ட காலமாக நடந்து வருவதோடு மிகவும் சிக்கலானதுங்கூட. அவசியமான தகவல்களைப் பெறும் அளவுக்கு மாத்திரம் உங்கள் உதவியை ஏற்றுக்கொள்ளுகிறேன். என்னுடைய கட்சிக்காரரிடமிருந்து வேண்டிய விவரங்களை யெல்லாம் உங்கள் மூலமே கேட்டுத் தெரிந்து கொள்ள முடியுமாகையால் அவருடன் நான் வைத்துக் கொள்ள வேண்டிய தொடர்பை நீங்கள் எளிதாக்கிவிட்டீர்கள். இது நிச்சயமாக வசதியானதே. நீங்கள் தங்குவதற்கு நான் இன்னும் இடம் பார்க்கவில்லை. உங்களைப் பார்த்த பிறகு ஏற்பாடு செய்வது நல்லது என்று இருந்துவிட்டேன். இங்கே பயப்படக் கூடிய வகையில் நிறத் துவேஷம் இருந்து வருகிறது. ஆகையால், உங்களைப் போன்றவர்கள் தங்குவதற்கு இடம் பார்ப்பதென்பது சுலபமல்ல. ஆனால், எனக்கு ஓர் ஏழைப் பெண்ணைத் தெரியும். அவள் ஒரு ரொட்டிக் கடைக்காரரின் மனைவி. அம் மாது உங்களுக்கு இடம் கொடுப்பாள் என்று நினைக்கிறேன். அதனால் அவளுக்கும் வருவாய் இருக்கும் வாருங்கள், அவள் இருக்கும் இடத்திற்குப் போவோம்."

அப் பெண்மணியின் வீட்டிற்கு என்னை அவர் அழைத்துச் சென்றார். என்னைக் குறித்துத் தனியாக அவரிடம் பேசினார். வாரத்திற்கு 35 ஷில்லிங் கொடுத்துச் சாப்பிட்டுக்கொண்டு, நான் அங்கே தங்குவதற்கு அப் பெண் சம்மதித்தார்.

கட்டுரை எழுதுக

1. முந்திய அத்தியாயத்தில் கூறப்பட்டிருப்பதுட்பட, தென்னாப்பிரிக்காவில் ஹோட்டலில் தங்குவதற்கு வசதி கிடைப்பதில் காந்திஜிக்கு ஏற்பட்ட சம்பவங்களைக் கூறுக.

20

இந்தியப் பிரச்சினையுடன் தொடர்பு கொள்ளுதல்

டிரான்ஸ்வாலிலும், ஆரஞ்சு பிரீ ஸ்டேட்டிலும் இருக்கும் இந்தியரின் சமூக, பொருளாதார, ராஜீய நிலையைக் குறித்து நன்ருக ஆராய்ந்து தெரிந்துகொள்ளுவதற்கு நான் பிரிட்டோரியாவில் இருந்தது வசதியளித்தது எனலாம். இந்த ஆராய்ச்சி எதிர்காலத்தில் எனக்கு மதிப்பதற்கரிய உதவியாக இருக்கப்போகிறது என்பது அப்பொழுது எனக்குத் தெரியாது.

திருத்தப்பட்ட சட்டத்தின்படி இந்தியர் எல்லோரும் டிரான்ஸ்வாலுக்குள் போவதற்குக் கட்டணமாக ஆளுக்கு 3 பவுன் தலைவரி செலுத்த வேண்டும். அவர்களுக்கென்று ஒதுக்கப்படும் பகுதிகளில் அல்லாமல் அவர்கள் வேறு எங்குமே சொந்தமாக நிலம் வைத்துக் கொள்ளக் கூடாது. ஆனல், அனுபவத்தில் அந்த ஒதுக்கப்பட்ட பகுதிகளிலும் நிலம் அவர்களுக்குச் சொந்தமாவதில்லை. இந்தியருக்கு வாக்குரிமை இல்லை. இவை யாவும் ஆசியாக்காரர்களுக்கு என்று செய்யப்பட்ட விசேஷச் சட்டத்தினல் நடந்தன. கறுப்பர்களுக்கு என்று இயற்றப்பட்ட சட்டங்களும் அவர்கள் விஷயத்தில் அமுல் செய்யப்பட்டன.

பின்னல் கூட இச் சட்டங்களின்படி, இந்தியர், பொது நடைபாதைகளில் நடக்கக்கூடாது; அனுமதிச் சீட்டு இல்லாமல் இரவு 9 மணிக்குப் பிறகு வீட்டைவிட்டு வெளியே வரவும் கூடாது.

நான் அடிக்கடி இரவில் ஸ்ரீ கோட்ஸுடன் உலாவ வெளியே போவேன். இரவு 10 மணிக்கு முன்னல் நாங்கள் அநேகமாக வீடு திரும்புவதில்லை. போலீஸார் என்னைக் கைது செய்துவிட்டால் என்ன செய்வது ? இவ் விஷயத்தில் என்னைவிட ஸ்ரீ கோட்ஸுக்குத்தான் அதிகக் கவலை. தம்முடைய நீக்கிரோ வேலைக்காரர்களுக்கு அவர் அனுமதிச் சீட்டுக் கொடுக்க வேண்டியிருந்தது. ஆனல், எனக்கும் அவர் எப்படிச் சீட்டுக் கொடுப்பது ? வேலைக் காரனுக்குத்தான் எஜமான் இத்தகைய சீட்டுக்கொடுக்கலாம். எனக்கும் ஒரு சீட்டு வேண்டும் என்று கேட்டிருந்தால், அப்படிச் சீட்டுக் கொடுக்க ஸ்ரீ கோட்ஸ் தயாராக இருந்தாலும், அவரால் கொடுக்க முடியாது. ஏனெனில் அவ்விதம் கொடுப்பது மோசடியாகக் கருதப்பட்டிருக்கும்.

ஆகவே, ஸ்ரீ கோட்ஸோ, அவருடைய நண்பர் ஒருவரோ, என்னை அரசாங்க அட்டர்னியான டாக்டர் கிராஸே என்பவரிடம் அழைத்துச் சென்றனர். நாங்கள் இருவரும் ஒரே இடத்தில் பாரிஸ்டரானவர்கள் என்பது தெரியவந்தது. இரவு 9 மணிக்குப் பிறகு வீட்டிற்கு வெளியே இருப்பதற்கு எனக்கு அனுமதிச் சீட்டு வேண்டியிருக்கிறது என்ற விஷயம் அவருக்கு அதிக வருத்தத்தை அளித்தது. எனக்கு அவர் தமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டார். எனக்கு அனுமதிச் சீட்டுக் கொடுப்பதற்கு உத்தரவிடுவதற்குப் பதிலாக, எந்த நேரத்திலும் போலீஸாரின் குறுக்கீடு இல்லாமல் நான் வெளியில் நடமாடுவதற்கு எனக்கு உரிமை அளித்து, ஒரு கடிதத்தை எழுதிக் கொடுத்தார். நான் வெளியில் செல்லும்போதெல்லாம் இக் கடிதத்தை எப்பொழுதும் என்னிடம் வைத்திருந்தேன். உண்மையில் அக் கடிதத்தை உபயோகித்துக்கொள்ள வேண்டிய

சந்தர்ப்பமே எனக்கு ஏற்படவில்லையென்றால் அது தற் செயலே யன்றி வேறில்லை.

நடைபாதையில் நடப்பது சம்பந்தமாக இருந்த சட்ட விதிகள் எனக்கு இன்னும் அதிகக் கஷ்டத்தைக் கொடுத்தன. நான் எப்பொழுதுமே உலாவுவதற்குப் பிரஸிடென்டு தெரு வழியாக ஒரு மைதானத்திற்குப் போவேன். பிரஸிடென்டு (ஜனாதிபதி) குருகரின் வீடு அந்தத் தெருவில்தான் இருந்தது. அது மிகவும் அடக்க மான ஆடம்பரமில்லாத கட்டடம். அதன் முன்னால் தோட்டமும் இல்லை. பக்கத்தில் இருந்த மற்ற வீடுகளுக் கும் அதற்கும் வித்தியாசமே இல்லை.

அவர் வீட்டுக்கு முன்னாலிருந்த போலீஸ் காவலைக் கொண்டே அது ஒரு முக்கியமான அதிகாரியின் வீடு என்பது தெரியும். நான் எப்பொழுதும் அவ்வீட்டிற்கு எதிரிலுள்ள நடைபாதை வழியாக அங்கிருந்த போலீஸ் பாராக்காரனைக் கடந்து செல்வது வழக்கம். எந்தவித மான தடையோ, தகராறோ ஏற்பட்டதே இல்லை.

அங்கே காவலுக்கு இருந்த போலீஸ்காரனை இப் பொழுது அடிக்கடி மாற்றிவந்தார்கள். ஒரு நாள் அவ் விதம் காவலுக்கு இருந்த போலீஸ்காரர், எனக்குக் கொஞ்சமேனும் எச்சரிக்கை செய்யாமலும், நடை பாதையை விட்டுப் போய்விடும்படி சொல்லாமலும் என்னை உதைத்துத் தெருவில் தள்ளிவிட்டார். நான் திகைத்துப் போனேன். அவர் இவ்விதம் நடந்துகொண் டதைக் குறித்து அவரிடம் நான் கேட்க முற்படுவதற்கு முன்னால் ஸ்ரீ கோட்ஸ் சப்தம்போட்டு என்னைக் கூப்பிட் டார். அவர் அச்சமயம் அந்த வழியாகக் குதிரைமீது வந்துகொண்டிருந்தார். அவர் என்னிடம் வந்து, "ஸ்ரீ காந்தி, நடந்ததையெல்லாம் நான் பார்த்தேன். அந்த ஆள்மீது நீங்கள் வழக்குத் தொடருவீர்களானால். கோர்ட்

டில் உங்களுக்காக நான் மகிழ்ச்சியுடன் சாட்சிசொல் வேன். இவ்வளவு முரட்டுத்தனமாக நீங்கள் தாக்கப் பட்டதற்காக நான் மிகவும் வருந்துகிறேன்" என்ருர்.

அதற்கு நான், "நீங்கள் வருந்தவேண்டாம். பாவம், அவருக்கு என்ன தெரியும்? கறுப்பு மனிதர்கள் எல்லோ ரும் அவருக்கு ஒரேமாதிரிதான். என்னை இப்பொழுது நடத்தியதைப்போல அவர் நீக்கிரோக்களையும் நடத்து கிருர் என்பதில் சந்தேகமில்லை. என்னுடைய சொந்தக் குறை எதற்காகவும் கோர்ட்டுக்குப் போவதில்லை என் பதை நான் ஒரு விதியாகக் கொண்டிருக்கிறேன். ஆகை யால், அவர்மீது வழக்குத் தொடரும் உத்தேசமில்லை" என்றேன்.

உடனே, ஸ்ரீ கோட்ஸ், "உங்கள் உயரிய குணத்திற்கு அது சரி. ஆனல், அதைக் குறித்து மறுபடியும் சிந்தியுங் கள். இப்படிப்பட்டவனுக்கு நாம் பாடம் கற்பிக்க வேண்டும்" என்ருர். பின்னர் அந்தப் போலீஸ்காரரிடம் பேசினர். அவரைக் கண்டித்தார். போலீஸ்காரர் போயர் ஆனபடியால் இருவரும் டச்சு மொழியில் பேசினர். அவர்கள் என்ன பேசினர்கள் என்பது எனக்கு விளங்க வில்லை. ஆனல், அவர் என்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அப்படிக் கேட்பதற்கு அவசியமே இல்லை. ஏனெனில், அவரை முன்பே நான் மன்னித்துவிட்டேன்.

ஆனல், திரும்பவும் அத்தெரு வழியாக நான் போகவே இல்லை. அந்த ஆள் இருந்த இடத்தில் வேறு ஆள் வந்திருக்கக் கூடும். இந்தச் சம்பவத்தை அறியாமல் புதிதாக இருக்கும் ஆளும் இதேபோல நடந்துகொண்டு விடக் கூடும். அனாவசியமாக நான் ஏன் இன்னும் ஓர் உதையை வலிய வாங்கவேண்டும்? எனவே, நான் வேறு வழியில் போகத் தொடங்கினேன்.

குடியேறியிருக்கும் இந்தியரிடம் எனக்குள்ள அனுதாபத்தை இச் சம்பவம் அதிகமாக்கிவிட்டது. இத்தகைய சட்ட விதிகள் சம்பந்தமாக முதலில் பிரிட்டிஷ் ஏஜென்டைப் பார்ப்பது; பிறகு அவசியம் என்று தெரிந்தால் பரீட்சார்த்தமாக ஒரு வழக்கைப் போட்டுப் பார்ப்பது என்பதைக் குறித்து இந்தியர்களுடன் விவாதித்தேன்.

இவ்விதம் அங்கே இந்தியருக்கு இருந்து வந்த மிகக் கஷ்டமான நிலையை, அதைப்பற்றிப் படிப்பதனாலும் கேள்விப்படுவதனாலும் மாத்திரம் அன்றி என் சொந்த அனுபவங்களினாலும் மிக நன்றாக அறிந்துகொண்டேன். தென்னாப்பிரிக்கா, சுயமரியாதையுள்ள இந்தியனுக்கு உகந்த நாடன்று என்பதைக் கண்டேன். இத்தகைய நிலைமையில் மாறுதல் ஏற்படும்படி செய்வது எப்படி என்ற கேள்வியே என் மனத்தில் மேலும் மேலும் எழுந்த வண்ணம் இருந்தது. ஆனால், அப்பொழுது என்னுடைய முதன்மையான கடமை தாதா அப்துல்லாவின் வழக்கைக் கவனிப்பதே.

கட்டுரைகள் எழுதுக

1. *டிரான்ஸ்வாலில் இந்தியருக்கு இருந்த கஷ்டங்கள் யாவை?*
2. *பிரிட்டோரியாவில் நடைபாதையில் காந்திஜி நடந்து போனபோது அவர் தாக்கப்பட்டதை விவரிக்கவும்.*

21

வழக்கு

தாதா அப்துல்லாவின் வழக்கில், விவரங்கள் மிகவும் அனுகூலமானவைகளாக இருந்ததால் சட்டமும் நிச்சயமாக அவருக்கு அனுகூலமாகவே இருக்கும் என்பதைக் கண்டேன். வாதியும் பிரதிவாதியும் உறவினர்கள்; இருவரும் ஒரே ஊர்க்காரர்கள். ஆனால், விவகாரம் தொடர்ந்து நடத்தப்படுமானல், இரு தரப்பினருமே அழிந்துவிடுவார்கள் என்பதையும் கண்டுகொண்டேன். வழக்கு எவ்வளவு காலத்திற்கு நடந்துகொண்டு போகும் என்பது யாருக்கும் தெரியாது. சமரசம் செய்து வைத்துவிட என்னுலான முயற்சிகளை யெல்லாம் செய்தேன். கடைசியாக தயாப் சேத் சம்மதித்தார். ஒரு மத்தியஸ்தரும் நியமிக்கப்பட்டார். அவர் முன்னிலையில் வழக்கு விவாதிக்கப்பட்டு, தாதா அப்துல்லா வெற்றி பெற்ருர்.

வழக்கை மத்தியஸ்தத்திற்கு விடுவதற்கு இரு தரப்பினரும் சம்மதிக்கும்படி செய்ததைவிடத் தொகையைத் தவணையில்செலுத்துவது என்ற சலுகையைப் பெறுவதில் தான் எனக்கு அதிக சிரமம் இருந்தது. ஆனல், ஏற்பட்ட முடிவைக் குறித்து, இரு தரப்பாரும் மகிழ்ச்சி அடைந்தனர். பொது ஜனங்களிடையே அவர்களுடைய மதிப்பும் உயர்ந்தது. எனக்கு ஏற்பட்ட ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. உண்மையான வக்கீல் தொழிலை நான் கற்றுக்கொண்டேன். பிளவு பட்டிருக்கும் கட்சிக்காரர்களை ஒன்ருக்குவதே வக்கீலின் உண்மையான வேலை என்பதை உணர்ந்துகொண்டேன். இந்தப் பாடம் என்னுள் அழிக்க முடியாதபடி நன்ருகப் பதிந்துவிட்டது.

ஆகையால், நான் வக்கீலாகத் தொழில் நடத்திய இருபது ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான வழக்குகளில், தனிப்பட்ட முறையில் சமரசம் செய்து வைத்துவிடுவதிலேயே என் காலத்தின் பெரும்பகுதி கழிந்தது. இதனால் எனக்கு நஷ்டம் எதுவுமே இல்லை. பண நஷ்டமும் இல்லை; நிச்சயமாக ஆன்ம நஷ்டம் இல்லவே இல்லை.

கட்டுரை எழுதுக

1. *சட்டம் சம்பந்தமான வழக்குகளைச் சமாளிக்க காந்திஜி என்ன முறையைக் கைக்கொள்ள விரும்பினார்? ஏன்? ராஜி செய்து கொள்ளுவது என்பதன் அர்த்தம் என்ன? உதாரணம் காட்டுக.*

22

நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்

வழக்கு முடிவடைந்துவிட்டதால் நான் பிரிட்டோரியாவில் இருப்பதற்கு எந்தவிதமான காரணமும் இல்லை. ஆகவே, நான் டர்பனுக்குத் திரும்பினேன். தாய் நாட்டுக்குப் புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யலானேன். ஆனால், அப்துல்லா சேத், பிரிவுபசாரம் எதுவும் இல்லாமல் என்னை அனுப்பிவிட இசைபவர் அல்ல. சைடன்ஹாமில் அவர் எனக்கு ஒரு பிரிவுபசார விருந்து நடத்தினர்.

அன்று, நாள் முழுவதையும் அங்கேயே கழிப்பது என்பது ஏற்பாடு. அங்கே கிடந்த பத்திரிகைகளை நான் புரட்டிக்கொண்டிருக்கையில், அவற்றில் ஒன்றின் ஒரு மூலையில், 'இந்தியரின் வாக்குரிமை' என்ற தலைப்பில் ஒரு சிறு செய்தி என் கண்ணில் பட்டது. அப்பொழுது சட்ட சபை முன்பிருந்த ஒரு மசோதாவைப் பற்றியது அச் செய்தி. நேட்டால் சட்ட சபைக்கு மெம்பர்களைத் தேர்ந்தெடுக்க இந்தியருக்கு இருந்த உரிமையைப் பறிப்பதற்கென்று கொண்டு வரப்பட்டது அந்த மசோதா. அம் மசோதாவைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. விருந்துக்கு வந்திருந்தவர்களுக்கும் தெரியாது.

அதைக் குறித்து அப்துல்லா சேத்தை விசாரித்தேன். அவர் கூறியதாவது: "இந்த விஷயங்களைப் பற்றியெல்லாம் எங்களுக்கு என்ன தெரிகிறது? எங்கள்

வியாபாரத்தைப் பாதிக்கும் விஷயம் மாத்திரமே எங்களுக்குப் புரிகிறது".

ஆனால், நானே தாய்நாட்டுக்குத் திரும்பும் நிலையில் இருந்தேன். ஆகவே, இவ் விஷயத்தில் என் மனத்தில் தோன்றிய எண்ணங்களை வெளிக்குக் கூறத் தயங்கினேன். "இந்த மசோதா சட்டமாகிவிட்டால், நமது கதியை அது இன்னும் அதிகக் கஷ்டமான தாக்கிவிடும். நமது சுய மதிப்பின் வேரையே இது தாக்குகிறது" என்று மாத்திரம் அப்துல்லா சேத்திடம் கூறினேன்.

விருந்துக்கு வந்திருந்த மற்றவர்களும் நாங்கள் பேசிக்கொண்டிருந்ததைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர், "செய்யவேண்டியது என்ன என்பதை நான் சொல்லட்டுமா? இந்தக் கப்பலில் நீங்கள் புறப்படுவது என்பதை ரத்துச் செய்துவிடுங்கள். இன்னும் ஒரு மாதம் இங்கே இருங்கள். நீங்கள் கூறுகிறபடி நாங்கள் போராடுகிறோம்" என்றார்.

மற்றவர்கள் எல்லோரும், "அதுதான் சரி; அதுதான் சரி; அப்துல்லா சேத், காந்திஜியை நிறுத்தி வையுங்கள்" என்றனர்.

இச்சமயத்தில் நான் நேட்டாலை விட்டுப் போய்விடுவது என்பது முடியாத காரியம் ஆகிவிட்டது. இந்திய நண்பர்கள் நாலாபக்கங்களிலும் என்னைச் சூழ்ந்துகொண்டிருந்தனர். நிரந்தரமாக அங்கே தங்கிவிடுமாறும் மன்றாடினர். இவ்வாறு நான் நேட்டாலில் குடியேறினேன். குடியேற்ற நாட்டு மந்திரி, இதில் கவனஞ் செலுத்தும்படி செய்வதற்கு இடைவிடாது கிளர்ச்சி செய்து கொண்டிருப்பதும் அத்தியாவசியம் ஆகும். இக் காரியத்திற்காக ஒரு நிரந்தரமான ஸ்தாபனம் இருப்பது முக்கியம் என்று கருதினேன். சேத் அப்துல்லாவையும் மற்ற நண்

பர்களையும் கலந்து ஆலோசித்தேன். நிரந்தரமான ஒரு பொது ஸ்தாபனத்தை ஆரம்பிப்பது என்று நாங்கள் எல்லோரும் முடிவுக்கு வந்தோம்.

மே மாதம் 22-ஆம் தேதி, நேட்டால் இந்தியர் காங்கிரஸ் பிறந்தது.

கட்டுரை எழுதுக

1. அப்துல்லா வழக்கில் வேலை முடிந்த பிறகு இந்தியாவுக்குத் திரும்பிவிடுவது என்று இருந்த திட்டத்தை காந்திஜி மாற்றிக்கொண்டது ஏன்?

23

மூன்று பவுன் வரி

1860-ஆம் ஆண்டு வாக்கில் நேட்டாலில் இருந்த ஐரோப்பியர்கள், அங்கே கரும்பு சாகுபடிக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது என்று கண்டனர். இதற்குத் தொழிலாளர் தேவை என்றும் உணர்ந்தார்கள். இத் தகைய வேலைக்கு நேட்டால் ஜூலுக்கள் பயன்பட மாட் டார்கள். கரும்புச் சாகுபடிக்கும், சர்க்கரை தயாரிப்ப தற்கும் வெளியில் இருந்து தொழிலாளரைக் கொண்டு வந்தாலன்றிச் சாத்தியமில்லை. அதன்பேரில் நேட்டால் அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்கும் கடிதப் போக்குவரத்து நடந்தது. இந்தியத் தொழிலாளரைத் திரட்டிக் கொண்டுவர, நேட்டால் அரசாங்கம் அனுமதி பெற்றது. இவ்விதம் திரட்டப்படும் தொழிலாளர்கள், நேட்டாலில் ஐந்து ஆண்டுகள் வேலை செய்வதாக ஒப்பந் தத்தில் கையெழுத்திட வேண்டும். இந்த ஐந்து வருட காலம் முடிந்ததும் அங்கேயே குடியேறி விடலாம். முழு உரிமையுடன் அவர்கள் நிலத்தையும் வைத்துக்கொள்ள லாம். அவர்களுக்கு இவ்விதமெல்லாம் ஆசை காட்டப் பட்டது.

இந்தியரோ, அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட தற்கு அதிகமாகவே தென்னாப்பிரிக்காவுக்குப் பயன்பட் டனர். ஏராளமாகக் காய்கறிகளைப் பயிரிட்டார்கள். இந்தியாவிலிருந்து பல ரகக் கறிகாய்களையும் கொண்டு வந்து அங்கே பயிரிட்டனர். அந் நாட்டுக் காய்கறித் தினுசுகளைக் குறைந்த செலவில் பயிரிடுவதையும் சாத் தியமாக்கினர். மாமரத்தையும் அங்கே முதன்முதல்

பயிரிட்டனர். அவர்களுடைய உழைப்பும் முயற்சியும் விவசாயத்தோடு நின்று விடவில்லை, வர்த்தகத்திலும் புகுந்தன. நிலம் வாங்கி, வீடுகள் கட்டினர். பலர் தொழிலாளர் நிலையிலிருந்து, நிலத்திற்கும் வீடுகளுக்கும் தாங்கள் சொந்தக்காரர் என்ற நிலைக்கும் உயர்ந்தனர். இவர்களைத் தொடர்ந்து இந்தியாவிலிருந்து வர்த்தகர்களும் அங்கே போய் வியாபாரம் செய்யக் குடியேறினர்.

வெள்ளை வர்த்தகர்கள் திகிலடைந்து விட்டனர். ஆரம்பத்தில் இந்தியத் தொழிலாளர் வேண்டுமென்று விரும்பியபோது, அவர்களுக்கு வர்த்தகத் திறமையும் இருக்கும் என்று அவர்கள் எண்ணவில்லை. சுயேச்சையான விவசாயிகள் என்ற அளவோடு மாத்திரம் இந்தியர்கள் இருந்திருந்தாலும் சகித்துக்கொண்டிருப்பார்கள். ஆனால், வர்த்தகத்திலும் அவர்கள் தங்களுக்குப் போட்டியாக இருப்பதை நினைத்துப்பார்க்கவும் வெள்ளை வர்த்தகருக்குச் சகிக்கவில்லை.

இந்தியர்மீது விரோதத்திற்கு விதைவிதைத்தது இதுதான். இது வளர்வதற்கு மற்றும் பல விஷயங்களும் உதவியாக இருந்துவிட்டன. ஒப்பந்த இந்தியருக்கு வரி விதிக்கும் மசோதாவின் மூலம் சட்ட ரீதியில் இவ்விரோதம் வெளிப்பட்டது.

இவ் வரியை எதிர்த்துத் தீவிரமாகக் கிளர்ச்சி செய்தோம். சமூகம், போராட்டத்தை நடத்தாமல் விட்டிருந்தால், காங்கிரஸ் கிளர்ச்சியைக் கைவிட்டு, 'வரி தவிர்க்க முடியாத ஒன்று' எனப் பணிந்து போயிருக்குமாயின், வெறுக்கப்பட்ட அந்த வரி இன்றளவும் வசூலிக்கப்பட்டு வந்திருக்கும். தென்னாப்பிரிக்க இந்தியருக்கும், இந்தியா முழுமைக்குமே அது நிரந்தரமான அவமானமாகவும் இருந்திருக்கும்.

நான் தென்னாப்பிரிக்காவுக்கு வந்து, இப்பொழுது மூன்று ஆண்டுகள் ஆயின. அங்கிருந்த மக்களை நான் தெரிந்துகொண்டேன்; அவர்களும் என்னை அறிந்து கொண்டார்கள். அங்கே நான் நீண்ட காலம் தங்க வேண்டியிருக்குமென்று கண்டதால் ஆறு மாதங்களுக்குத் தாய்நாடு போய்வர 1896-ல் நான் அனுமதி கேட்டேன். வக்கீல் தொழிலும் நன்ருகவே நடந்து வந்தது. நான் இருக்க வேண்டியது அவசியம் என்று மக்கள் உணர்ந்தனர் என்பதையும் கண்டேன். ஆகவே, தாய்நாட்டிற்குச் சென்று மனைவியையும் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு வந்து, அங்கேயே தங்குவது என்று தீர்மானித்துக் கொண்டேன். மேலும், தாய் நாட்டிற்குச் சென்ருல், விஷயங்களைப் பொதுமக்களுக்கு எடுத்துக் கூறித் தென்னாப்பிரிக்காவில் இருக்கும் இந்தியர் சம்பந்தமாக அவர்களுக்கு அதிக சிரத்தை உண்டாகும்படி செய்து, ஏதாவது பொது வேலை செய்யலாம் என்றும் நினைத்தேன்.

கட்டுரைகள் எழுதுக

1. 'ஒப்பந்தக் கூலி' என்பதன் பொருள் என்ன?
2. 3 பவுன் வரி என்ன? ஒப்பந்தப்படி வந்த இந்தியருக்கு அது ஏன் விதிக்கப்பட்டது?

ஐந்தாம் பாகம்

தாய்நாடு விஜயம்

24

இந்தியாவில்

பம்பாயில் தங்காமல் நேரே ராஜ்கோட்டிற்குச் சென்றேன். அங்கே தென்னுப்பிரிக்க இந்தியர் நிலைமையைக் குறித்து, ஒரு துண்டுப் பிரசுரத்தை எழுதுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தேன். அதை எழுதவும் அச்சிடவும் ஒரு மாதம் ஆயிற்று. அதற்குப் பச்சை நிற மேல் அட்டை போடப்பட்டது. ஆகவே, அது 'பச்சைத் துண்டுப் பிரசுரம்' என்று வழங்கலாயிற்று. அதில், தென்னுப்பிரிக்க இந்தியரின் நிலையைக் குறித்து, வேண்டுமென்றே, அடக்கமாக, குறைத்தே கூறியிருந்தேன்.

பத்தாயிரம் பிரதிகள் அச்சிட்டேன். இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் இருக்கும் பத்திரிகைகளுக்கும் தலைவர்களுக்கும் அவற்றை அனுப்பினேன்.

அத் தலையங்கத்தின் சுருக்கத்தை ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் இங்கிலாந்துக்குத் தந்தி மூலம் அனுப்பியது. அந்தச் சுருக்கத்திற்கு ஒரு சுருக்கத்தை ராய்ட்டரின் லண்டன் காரியாலயம் நேட்டாலுக்கு அனுப்பிற்று. அந்தத் தந்தி, அச்சில், மூன்று வரிக்குமேல் இல்லை. செய்தி, அவ்வளவு சிறியதாக இருந்தாலும், நேட்டாலில் இந்தியர்கள் நடத்தப்படும் விதத்தைக் குறித்து, நான் கூறியதை அச் செய்தி மிகைப்படுத்திக் கூறுவதாக இருந்தது. மேலும், அச் செய்தி என் வார்த்தைகளைக்கொண்டு வரையப்பட்டதாகவும் இல்லை. நேட்டாலில் இதன் விளைவு என்னவாயிற்று என்பதைப் பிறகு கவனிப்போம். இதற்கு மத்தியில், முக்கியமான பத்-

திரிகைகள் எல்லாமே இப் பிரச்சினையைக் குறித்து விரிவாக அபிப்பிராயங்கள் கூறின.

இத் துண்டுப் பிரசுரங்களைத் தபாலில் அனுப்புவதற்குத் தயார் செய்வது சுலபமான வேலையே அல்ல. இவற்றைக் காகிதம் போட்டுச் சுற்றி அனுப்புவது போன்ற வேலைகளுக்குக் கூலி கொடுத்து ஆள் அமர்த்தினால் அதிகச் செலவு ஆகியிருக்கும். ஆகவே, மிக எளிதான உபாயம் ஒன்றைக் கண்டுபிடித்தேன். பக்கத்தில் இருந்த குழந்தைகளை யெல்லாம் திரட்டினேன். பள்ளிக்கூடம் இல்லாதபோது காலையில் இரண்டு, மூன்று மணி நேர உழைப்பை வலிய அளிக்க முன்வருமாறு அவர்களைக் கேட்டுக் கொண்டேன். அப்படியே செய்ய அவர்கள் மனம் உவந்து ஒப்புக்கொண்டார்கள். அவர்களை வாழ்த்தி, நான் சேர்த்துவைத்திருந்த பழைய தபால் ஸ்டாம்புகளை அவர்கட்குப் பரிசாகக் கொடுப்பதாகவும் கூறினேன். குழந்தைகள் கொஞ்ச நேரத்தில் வேலையை முடித்துவிட்டார்கள். சிறு குழந்தைகளைத் தொண்டர்களாக உபயோகிப்பதில் இதுவே என் முதல் பரீட்சை. அக் குழந்தைகளில் இருவர் இன்று என் சக ஊழியர்களாக இருக்கின்றனர்.

எதிர்பாராத வகையில் ஸ்ரீ சாண்டர்ஸின் உதவி கிடைத்ததால், முடிவில், ‘கல்கத்தாவிலும் பொதுக்கூட்டத்தை நடத்துவதில் வெற்றிபெற முடியும்’ என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது. அப்பொழுது டர்பனிலிருந்து, ‘பார்லிமென்டு ஜனவரியில் ஆரம்பமாகிறது. விரைவில் திரும்புக’ என்ற தந்தி வந்தது.

டிசம்பர் ஆரம்பத்தில் இரண்டாம் முறையாக நான் தென்னாப்பிரிக்காவுக்குப் புறப்பட்டேன். அப்பொழுது என் மனைவி, இரு குமாரர்கள், விதந்துவாகிவிட்ட என் சகோதரியின் ஒரே குமாரன் ஆகியவர்களுடன் பயண

மானேன். அதே சமயத்தில் 'நாதேரி' என்ற மற்றொரு கப்பலும் டர்பனுக்குப் புறப்பட்டது. அக் கப்பல் கம்பெனிக்கு தாதா அப்துல்லா கம்பெனியே ஏஜெண்டுகள். இந்த இரு கப்பல்களிலும் சுமார் எண்ணூறு பிரயாணிகள் இருந்திருப்பார்கள். அவர்களில் பாதிப்பேர் டிரான்ஸ்வாலுக்குப் போக வேண்டியவர்கள்.

கட்டுரை எழுதுக

தென்னப்பிரிக்காவில் இந்தியர் கொடுமையாக நடத்தப்படுவதை இந்தியாவில் பொது மக்கள் அறியும்படி செய்வதற்குக் காந்திஜி என்ன செய்தார்?

ஆரும் பாகம்

மீண்டும் தென்னுப்பிரிக்காவில்

25

தென்னுப்பிரிக்காவில் வந்ததும் கொந்தளிப்பு

டிசம்பர் 18 அல்லது 19-ஆம் தேதி கப்பல் டர்பன் துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சியது. 'நா்தேரி' என்ற கப்பலும் அன்றே வந்து சேர்ந்தது.

தென்னுப்பிரிக்கத் துறைமுகங்களில், நன்ருக வைத்தியப் பரிசோதனை செய்யப்படுவதற்கு முன், பிரயாணிகள் இறங்க அனுமதிக்கப்படுவதில்லை. தொத்து நோயால் பீடிக்கப்பட்டவர் எவராவது கப்பலில் இருந்தால், அந்தக் கப்பலிருந்து யாரையும் இறங்கவிடாமல் குறிப்பிட்ட காலத்திற்கு வைத்தியக் கண்காணிப்பில், தூரத்தில் நிறுத்தி வைத்துவிடுவார்கள். நாங்கள் கப்பல் ஏறிய சமயத்தில் பம்பாயில் பிளேக் நோய் பரவி இருந்ததால், கொஞ்ச காலத்திற்கு இந்த விதமான 'சுத்தீகரண'த்திற்கு நாங்கள் ஆளாக நேரலாம் என்று பயந்தோம். டாக்டர் வந்து, எங்களைப் பரிசோதித்துப் பார்த்தார். 'ஐந்து நாட்களுக்கு இக் கப்பலிலிருந்து யாரையும் இறங்க அனுமதிக்கக் கூடாது' என்று அவர் உத்தரவிட்டார். ஏனெனில், பிளேக் கிருமிகள் வளருவதற்கு அதிகப் பட்சம் இருபத்து மூன்று நாட்கள் ஆகும் என்பது அவர் கருத்து. ஆகையால், எங்கள் கப்பல் பம்பாயிலிருந்து புறப்பட்டு இருபத்து மூன்ரும் நாள் முடியும் வரையில் அதிலிருந்து பிரயாணிகளை இறக்காமல் தனித்து வைக்குமாறு உத்தரவிட்டார். இந்த உத்தரவுக்குக் காரணம் சுகாதாரத்தைப் பற்றிய கவலை

மட்டும் அல்ல, அதைவிட முக்கியமான வேறு காரணங்களும் உண்டு.

டர்பனில் இருந்த வெள்ளைக்காரர்கள், எங்களைத் திருப்பி அனுப்பிவிட வேண்டும் என்று கிளர்ச்சி செய்து கொண்டிருந்தார்கள். அந்த உத்தரவுக்கு இக் கிளர்ச்சி ஒரு காரணம். டர்பனில் அன்றாடம் என்ன நடந்து கொண்டிருந்தது என்பதைத் தாதா அப்துல்லா கம்பெனியார் தவருமல் எங்களுக்கு அறிவித்துக்கொண்டிருந்தனர். வெள்ளைக்காரர்கள் தினந்தோறும் பெரிய பொதுக் கூட்டங்களை நடத்தி வந்தனர். ஒரு பக்கத்தில் ஒரு சிலரேயான ஏழை இந்தியரும், அவர்களுடைய ஆங்கில நண்பர்கள் சிலரும்; மற்றொரு பக்கத்திலோ, ஆயுதங்களிலும், எண்ணிக்கையிலும், படிப்பிலும், செல்வத்திலும் பலம் படைத்திருந்த வெள்ளையர்கள். நேட்டால் அரசாங்கமும் அவர்களுக்குப் பகிரங்கமாக உதவி செய்து வந்ததால், அரசாங்கத்தின் பக்க பலமும் அவர்களுக்கு இருந்தது.

பிரயாணிகளின் பொழுதுபோக்குக்காக எல்லா வகையான விளையாட்டுக்களுக்கும் ஏற்பாடு செய்தோம். நடந்த களியாட்டங்களில் நானும் பங்கெடுத்துக்கொண்டேன். ஆனால், என் மனமெல்லாம் டர்பனில் நடந்து கொண்டிருந்த போராட்டத்திலேயே ஈடுபட்டிருந்தது. உண்மையில் அப் போர் என்னை எதிர்த்து நடந்ததேயாகும். என்மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள் இரண்டு:

1. நான் இந்தியாவில் இருந்தபோது நேட்டால் வெள்ளைக்காரர்களை அக்கிரமமாகக் கண்டித்தேன் என்பது.

2. நேட்டாலை இந்திய மயம் ஆக்கிவிட வேண்டும் என்பதற்காக, அங்கே குடியேறுவதற்கு இரு கப்பல்கள் நிறையப் பிரயாணிகளைக் கொண்டுவந்திருந்தேன் என்பது.

ஆனல், நான் முற்றும் குற்றம் அற்றவன். நேட்டாலுக்குப் போகுமாறு நான் எவரையும் தூண்டவில்லை. பிரயாணிகள் கப்பலில் ஏறியபோது அவர்கள் யார் என்பதே எனக்குத் தெரியாது. என் உறவினர் இருவரைத் தவிர, கப்பலில் இருந்த பிரயாணிகளில் ஒருவருடைய பெயர், விலாசம் கூட எனக்குத் தெரியாது. நேட்டாலில் நான் இருந்தபோது வெள்ளைக்காரர்களைக் குறித்து நான் கூருதவார்த்தை ஒன்றையேனும், இந்தியாவில் இருந்தபோது நான் சொன்னதே இல்லை. மேலும் நான் சொன்னது இன்னது என்பதற்கு ஏராளமான சாட்சியங்களும் இருந்தன.

இப்படியாக நாட்கள், ஆயாசத்தை உண்டு பண்ணிய வண்ணம் நீண்டுகொண்டே இருந்தன.

இருபத்து மூன்று நாட்கள் கழித்து, எங்கள் கப்பல்கள் துறை முகத்திற்கு வர அனுமதித்தார்கள். பிரயாணிகள் இறங்குவதை அனுமதிக்கும் உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டன.

கப்பல்களைக் கரையோரமாகக் கொண்டு போய் நிறுத்தினர்; பிரயாணிகளும் இறங்க ஆரம்பித்தார்கள். அப்பொழுது ஸ்ரீ எஸ்கோம்பு, காப்டனுக்கு ஒரு சமாசாரம் சொல்லியனுப்பியிருந்தார்: வெள்ளைக்காரர்கள் என் மீது மிகுந்த கோபத்துடன் இருக்கிருர்கள் என்றும், அதனல் என் உயிர் ஆபத்தில் இருக்கிறது என்றும், நானும் என் குடும்பத்தினரும் இருட்டிய பிறகு கப்பலிலிருந்து இறங்கும்படி சொல்லுமாறும்,அப்பொழுது துறைமுக சூப்பரின்டெண்டெண்டு ஸ்ரீ டாட்டம், எங்களைப் பத்திரமாய் வீடு கொண்டு போய்ச் சேர்ப்பார் என்றும் சொல்லி எச்சரித்தார். அப்படியே செய்வதாக நானும் ஒப்புக்கொண்டேன். அரை மணி நேரம் கூட ஆகியிராது: ஸ்ரீ லாப்டன், காப்டனிடம் வந்தார். அவர்சொன்னதாவது:

“ஸ்ரீ காந்திக்கு ஆட்சேபம் இல்லையென்றால் அவரை என்னுடன் அழைத்துப் போக விரும்புகிறேன். ஸ்ரீ எஸ் கோம்பு உங்களுக்குச் சொல்லியனுப்பி யிருப்பதை நிறைவேற்ற வேண்டிய கடமை உங்களுக்கு இல்லை. கப்பல் ஏஜென்டான கம்பெனியின் சட்ட ஆலோசகன் என்ற முறையில் இதைக் கூறுகிறேன்.”

பிறகு அவர் என்னிடம் வந்து பின்வருமாறு கூறினார்: “நீங்கள் பயப்படவில்லையானால், நான் ஒரு யோசனை கூறுகிறேன். ஸ்ரீமதி காந்தியும் குழந்தைகளும் ஸ்ரீ ருஸ்தம்ஜியின் வீட்டிற்கு, வண்டியில் முன்னால் போகட்டும். அவர்களுக்குப் பின்னால் நீங்களும் நானும் நடந்தே போவோம். இரவில் திருடனைப்போல் நகருக்குள் நீங்கள்பிரவேசிப்பது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. உங்களைத் துன்புறுத்தி விடுவார்கள் என்று அஞ்சுவதற்கு இடம் இருப்பதாக நான் நினைக்கவில்லை. இப்பொழுது எல்லாம் அமைதியாக இருக்கிறது. வெள்ளைக்காரர்கள் எல்லோரும் கலைந்து போய்விட்டனர். ஆனால், எப்படியும் நீங்கள் ஒளிந்துகொண்டு நகருக்குள் வரக்கூடாது என்று மாத்திரம் நான் உறுதியாக எண்ணுகிறேன்.” இதற்கு நான் உடனே ஒப்புக்கொண்டேன். என் மனைவியும் குழந்தைகளும் வண்டியில் பத்திரமாக ஸ்ரீ ருஸ்தம்ஜியின் இடத்துக்குப் போய்ச் சேர்ந்து விட்டனர். காப்டனின் அனுமதியின் பேரில் ஸ்ரீ லாப்டனுடன் நான் கப்பலிலிருந்து இறங்கினேன். துறைமுகத்திலிருந்து ஸ்ரீ ருஸ்தம்ஜி வீடு இரண்டு மைல் தூரம் இருந்தது.

நாங்கள் கீழே இறங்கியதும், சில சிறுவர்கள் என்னை அடையாளம் கண்டு கொண்டனர். “காந்தி, காந்தி” என்று சப்தம்போட்டனர். இதைக்கேட்டதும் ஐந்தாறு பேர் அங்கே ஓடி வந்தார்கள். அவர்களும் சேர்ந்து கூச்சல் போட்டனர். கூட்டம் பலத்துவிடக் கூடும் என்று ஸ்ரீ லாப்டன் பயந்தார். பக்கத்தில் நின்ற ஒரு ரிக்ஷாவைக்

கூப்பிட்டார். ரிக்ஷாவில் ஏறுவது என்பதே எனக்கு எப்பொழுதும் பிடிப்பதில்லை. அப்படி ஏறியிருந்தால் அதுவே எனக்கு முதல் அனுபவமாக இருந்திருக்கும். ஆனால் நான் ரிக்ஷாவில் ஏறச் சிறுவர்கள் விடவில்லை. ரிக்ஷாக்காரனைக் கொன்றுவிடுவதாக மிரட்டினார்கள். அவன் ஓட்டம் எடுத்து விட்டான். நாங்கள் போக ஆரம்பித்தோம். கூட்டம் அதிகமாகிக் கொண்டே வந்தது. மேற்கொண்டும் போக முடியாத அளவுக்குக் கூட்டம் பெருகிவிட்டது. முதலில் ஸ்ரீ லாப்டனைப் பிடித்து அப்புறப் படுத்தி எங்களைத் தனித்தனியாக பிரித்து விட்டனர். பிறகு என்னைக் கற்களாலும் அழுகிய முட்டைகளாலும் அடித்தார்கள். ஒருவர் தன் தலைப்பாகையைப் பிடுங்கிக் கொண்டார். மற்றவர்கள் என்னை அடிக்கவும் உதைக்கவும் ஆரம்பித்தனர். உணர்வு இழந்து சோர்ந்துவிட்டேன். கீழே விழுந்து விடாமல் இருக்க ஒரு வீட்டின் முன்புறக் கிராதியைப் பிடித்துக்கொண்டேன். சற்று மூச்சுவிடலாம் என்று அங்கே நின்றேன். ஆனல், முடியவில்லை. அங்கே வந்ததும் என்னை முஷ்டியால் குத்தினர் ; அடித்தனர். எனக்குத் தெரிந்தவரான போலீஸ் சூப்பரின்டெண்டென்டின் மனைவியார் அப்பக்கம் வந்தார். அந்த வீரப் பெண்மணி என்னிடம் வந்தார். அப்பொழுது வெயில் இல்லை என்ருலும், தம் கைக்குடையை விரித்துக் கொண்டு எனக்கும் கூட்டத்திற்கும் நடுவில் நின்று கொண்டார். ஜனக்கூட்டத்தின் கோப வெறியை இது தடுத்தது. போலீஸ் சூப்பரின்டெண்டென்டான ஸ்ரீ அலெக்ஸாண்டரின் மனைவிக்குத் துன்பம் இழைக்காமல் அந்த வெறியர்கள் என்னை அடிப்பது சிரமம் ஆகி விட்டது.

இதற்கு மத்தியில் இச்சம்பவத்தைப் பார்த்த ஓர் இந்திய இளைஞர், போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடினர். என்னைச் சுற்றி நின்றுகொண்டு நான் போக வேண்டிய

இடத்தில் என்னைக் கொண்டு போய்ச் சேர்த்து விட்டு வருமாறு கூறிப் போலீஸ் சூப்பரின்டெண்டென்டான ஸ்ரீ அலெக்ஸாண்டர், போலீஸ்காரர்களை அனுப்பினர். நல்ல சமயத்தில் அவர்களும் வந்து சேர்ந்தனர். போலீஸ் ஸ்டேஷன், நாங்கள் போகும் வழியில் இருந்தது. நாங்கள் அங்கே போனதும், ஸ்டேஷனிலேயே பத்திரமாகத் தங்கிவிடுமாறு சூப்பரின்டெண்டென்டு கூறினர். அவர் யோசனைக்கு நன்றி கூறினேன். ஆனால், அங்கே தங்க மறுத்து விட்டேன். "தங்கள் பிழையை உணரும்போது அவர்கள் சாந்தம் அடைந்துவிடுவது நிச்சயம். அவர்களுக்கு நியாய புத்தியும் இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு" என்றேன். பின்னர், போலீஸ் பாதுகாப்புடன், மேற்கொண்டு எவ்விதத் துன்பமும் இல்லாமல் ஸ்ரீ ருஸ்தம்ஜியின் வீட்டை அடைந்தேன். உடம்பெல்லாம் இசிவு, ஊமைக்காயம். ஓர் இடத்தில் மாத்திரம் தோல் பெயர்ந்து, காயம் ஏற்பட்டிருந்தது. அங்கே இருந்த கப்பலின் டாக்டர் தம்மால் சாத்தியமான எல்லா உதவிகளையும் செய்தார்.

வீட்டிற்குள் அமைதியாக இருந்தது; ஆனால், வெளியிலே வெள்ளையர், வீட்டைச் சுற்றி வளைத்துக்கொண்டனர். இரவும் வந்தது. 'காந்தியை வெளியே அனுப்பு' என்று அந்த ஆவேசக் கூட்டம் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தது. நிலைமையை உடனே அறிந்துகொண்ட போலீஸ் சூப்பரின்டெண்டென்டு, கூட்டம் கட்டுக்கடங்காது போய்விடாதபடி ஏற்கெனவே வந்து சமாளித்துக் கொண்டிருந்தார். கூட்டத்தை அவர் விரட்டவில்லை. அவர்களிடம் தமாஷ் செய்தே சமாளித்து வந்தார். என்றாலும் நிலைமை அவரும் கவலைப்பட வேண்டியதாகவே இருந்தது. பின் வருமாறு எனக்குச் செய்தி அனுப்பினர்: "உங்கள் நண்பரின் வீட்டையும் சொத்துக்களையும் உங்கள் குடும்பத்தையும் நீங்கள் பாதுகாக்க விரும்பினால்,

என் யோசனைப்படி மாறுவேடத்துடன் நீங்கள் வீட்டிலிருந்து தப்பி, வெளியே வந்துவிட வேண்டும்."

சூப்பரின்டெண்டென்டின் யோசனைப்படி, இந்தியக் கான்ஸ்டபிளின் உடையைப் போட்டுக்கொண்டேன். ஒரு சட்டி மீது மதராஸி அங்கவஸ்திரத்தைச் சுற்றிக் கவசமாகத் தலையில் வைத்துக்கொண்டேன். என்னுடன் இரண்டு துப்பறியும் போலீஸார் வந்தனர். அவர்களில் ஒருவர், இந்திய வர்த்தகர்வேஷம் போட்டுக்கொண்டார். இந்தியரைப்போல் தெரியவேண்டும் என்பதற்காக தம் முகத்தில் வர்ணம் பூசிக்கொண்டார். மற்றொருவர் என்ன வேடம் போட்டுக் கொண்டார் என்பது எனக்கு ஞாபகம் இல்லை. ஒரு குறுக்குச் சந்தின் வழியாகப் பக்கத்துக் கடைக்குள் புகுந்தோம். அங்கே அடுக்கிக் கிடந்த சாக்குக் கட்டுகளின் ஊடே சென்று, அக் கடையின் வாசலை அடைந்தோம். அங்கிருந்து கூட்டத்திற்குள் புகுந்து தெருக் கோடிக்குப் போனோம். அங்கே ஒரு வண்டி எங்களுக்கென்று தயாராக வைக்கப்பட்டிருந்தது. அதில் ஏறி, போலீஸ் ஸ்டேஷனை அடைந்தோம். எனக்கு அடைக்கலம் தருவதாக ஸ்ரீ அலெக்ஸாண்டர், கொஞ்ச நேரத்திற்கு முன்னால் சொன்னதும், அதே போலீஸ் ஸ்டேஷன்தான். அவருக்கும் துப்பறியும் அதிகாரிகளுக்கும் நன்றி கூறினேன்.

இவ்வாறு நான் தப்பி வந்துகொண்டிருந்த சமயத்தில் ஸ்ரீ அலெக்ஸாண்டர், 'புளிப்பு ஆப்பிள் மரத்தில், கிழட்டுக் காந்தியை தூக்கில் போடு' என்று பாட்டுப் பாடி, அவர்களுக்குச் சுவாரஸ்யம் அளித்துக்கொண்டிருந்தார். நான் போலீஸ் ஸ்டேஷனுக்குப் பத்திரமாகப் போய்ச்சேர்ந்துவிட்டேன் என்பது தெரிந்ததும் அவர், பின்வரும்செய்தியைக் கூட்டத்தினருக்கு வெளியிட்டார். "சரி, நீங்கள் தேடும் ஆசாமி, பக்கத்துக் கடை வழியாகத்

தப்பிப் போய்விட்டார். ஆகையால், இப்பொழுது நீங்கள் வீட்டுக்குப் போகலாம்." இதைக் கேட்டுச் சிலர் கோபம் அடைந்தனர். மற்றவர்களோ சிரித்தனர் இக்கதையைச் சிலர் நம்பவே மறுத்துவிட்டனர்.

சூப்பரின்டெண்டென்டு கூறியதாவது: "நான் சொல்லுவதை நீங்கள் நம்பவில்லையென்ருல், உங்கள் பிரதிநிதியாக ஒருவரை நியமியுங்கள். அவரை வீட்டிற்குள் அழைத்துப் போக நான் தயார். அவர் காந்தியை அங்கே கண்டு பிடித்துவிட்டால், அவரை உங்களிடம் ஒப்படைத்து விடுகிறேன். அவர் கண்டு பிடிக்கவில்லையென்ருல் நீங்கள் கலைந்து போய்விட வேண்டும். ஸ்ரீ ருஸ்தம்ஜியின் வீட்டை நாசப்படுத்த வேண்டும் என்பதோ, ஸ்ரீ காந்தியின் மனைவியையும் குழந்தைகளையும் துன்புறுத்த வேண்டும் என்பதோ உங்கள் நோக்கம் அல்ல என்று நம்புகிறேன்."

வீட்டைச் சோதிக்கக் கூட்டத்தினர் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பினுர்கள். ஏமாற்றச் செய்தியுடன் அவர்கள் சீக்கிரமே திரும்பிவிட்டனர். கடைசியாகக் கூட்டமும் கலைந்தது. அவர்களில் பெரும்பாலானவர், சூப்பரின்டெண்டென்டு சாமர்த்தியமாக நிலைமையைச் சமாளித்ததைப் பாராட்டினர். மற்றுஞ் சிலரோ, ஆத்திரத்தினுல் குமுறிக்கொண்டே போனுர்கள்.

காலஞ்சென்ற ஸ்ரீ சேம்பர்லேன், அப்பொழுது குடியேற்ற நாடுகளின் மந்திரியாக இருந்தார். என்னைத் தாக்கியவர்களைக் கைதுசெய்து, வழக்குத் தொடருமாறு நேட்டால் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு அவர் தந்தி கொடுத்தார். ஸ்ரீ எஸ்கோம்பு என்னைக் கூப்பிட்டனுப்பினுர். எனக்கு ஏற்பட்ட காயங்களுக்காக வருத்தம் தெரிவித்துக்கொண்டார். அவர் கூறியதாவது: "உங்கள் உடம்புக்கு மிகச் சொற்பத் தீங்கு இழைக்கக்

கூடினும் அதற்காக நான் வருந்தாமல் இருக்க முடியாது. இதை நீங்கள் நம்புங்கள். என்ன வந்தாலும் சரி என்று ஸ்ரீ லாப்டனுடைய யோசனையை ஏற்றுக்கொள்ளுவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. ஆனால், என் யோசனையை நீங்கள் கொஞ்சம் கவனித்திருப்பீர்களாயின், இந்தத் துக்ககரமான சம்பவங்கள் நிகழ்ந்தே இரா என்பது நிச்சயம். உங்களைத் தாக்கியவர்களை நீங்கள் அடையாளம் காட்டினால், அவர்களைக் கைது செய்து, வழக்குத் தொடர நான் தயாராக இருக்கிறேன். நான் அவ்வாறு செய்ய வேண்டும் என்றே ஸ்ரீ சேம்பர்லேனும் விரும்புகிறார்."

அதற்கு நான் பின் வருமாறு பதில் சொன்னேன்: "யார்மீதும் குற்றஞ்சாட்டி, வழக்குத் தொடர நான் விரும்பவில்லை. அவர்களில் இரண்டொருவரை நான் அடையாளம் கண்டுபிடிப்பதும் சாத்தியமாக இருக்கலாம். ஆனால், அவர்கள் தண்டனை அடையும்படி செய்வதால் என்ன பயன்? மேலும் அடித்தவர்களே குற்றஞ் செய்தவர்கள் என்று நான் கருதவில்லை. நேட்டால் வெள்ளையரைக் குறித்து, இந்தியாவில் இல்லாதது பொல்லாததையெல்லாம் நான் கூறி, அவர்களை அவமானப்படுத்தி விட்டதாக அவர்கள் எண்ணும்படி செய்யப்பட்டிருக்கின்றனர். இவ்வாறு கூறப்பட்டதை அவர்கள் நம்பினார்கள் என்றால், அவர்கள் ஆத்திரம் அடைந்ததில் ஆச்சரியம் எதுவும் இல்லை. தலைவர்களைப் பற்றியும் நான் இப்படிக் கூறுவதை நீங்கள் அனுமதிப்பதாக இருந்தால், உங்களையுந்தான் இதற்கெல்லாம் குற்றஞ்சொல்ல வேண்டும். மக்களைச் சரியான வழியில் நீங்கள் நடத்திச் சென்றிருக்கலாம். ஆனால், ராய்ட்டரின் செய்தியை நீங்களும் நம்பிவிட்டீர்கள். இல்லாததையெல்லாம் நான் கூறியிருப்பேன் என்று நீங்களும் எண்ணிக்கொண்டீர்கள். யார்மீதும் குற்றஞ்சாட்டி வழக்குத்

தொடர நான் விரும்பவில்லை. உண்மை தெரிந்ததும், தாங்கள் நடந்துகொண்டு விட்டதற்கு அவர்களே வருந்து வார்கள் என்பதை நான் நிச்சயமாக அறிவேன்.''

“நீங்கள் கூறியதைத் தயவுசெய்து எழுத்து மூலம் கொடுக்கிறீர்களா?'' என்று ஸ்ரீ எஸ்கோம்பு கேட்டார். அவர் மேலும் கூறியதாவது: “ஏனெனில், அப்படியே நான் ஸ்ரீ சேம்பர்லேனுக்குத் தந்தி மூலம் அறிவித்துவிட வேண்டி யிருக்கிறது. அவசரத்தில் நீங்கள் எதையும் எழுதிக் கொடுக்க வேண்டும் என்று நான் விரும்பவில்லை. திட்டமான ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்னால், நீங்கள் விரும்பினால், ஸ்ரீ லாப்டனையும் மற்ற நண்பர்களையும் கலந்து ஆலோசித்துக்கொள்ளுங்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் ஒன்றை மாத்திரம் உங்களிடம் ஒப்புக்கொண்டு விடுகிறேன். உங்களைத் தாக்கியவர்கள்மீது குற்றஞ் சாட்டி, வழக்குத் தொடரும் உரிமையை நீங்கள் விட்டுக் கொடுத்துவிடுவீர்களாயின், அமைதியை நிலை நாட்டுவதற்கு அதிக அளவு எனக்கு உதவிசெய்தவர்கள் ஆவீர்கள். அதோடு உங்கள் பெருமையையும் உயர்த்திக் கொண்டவர்கள் ஆவீர்கள்.''

“உங்களுக்கு நன்றி. நான் யாரையும் கலந்து ஆலோசிக்க வேண்டியதில்லை. உங்களிடம் வருவதற்கு முன்னாலேயே இது சம்பந்தமாக நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். என்னைத் தாக்கியவர்கள்மீது குற்றஞ் சாட்டி, வழக்குத் தொடரக்கூடாது என்பது என் கொள்கை. என் தீர்மானத்தை இப்பொழுதே எழுத்து மூலம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.'' இப்படிக் கூறி அவசியமான அறிக்கையை எழுதிக் கொடுத்தேன்.

கப்பலிலிருந்து இறங்கிய அன்று, ‘நேட்டால் அட்வர்ட்டைஸர்’ பத்திரிகையின் பிரதிநிதி, என்னைப் பேட்டி காண்பதற்குக் கப்பலுக்கு வந்தார். அவர்

என்னைப் பல கேள்விகள் கேட்டார். அவற்றிற்குப் பதில் அளிக்கையில், என்மீது கூறப்பட்ட ஒவ்வொரு குற்றச் சாட்டையும் நான் மறுக்கமுடிந்தது.

பத்திரிகை நிருபருக்கு அளித்த அந்தப் பேட்டியும் என்னைத் தாங்கியவர்கள்மீது வழக்குத் தொடர நான் மறுத்ததும், மிகச் சிறந்த வகையில் என்பேரில் நல்லெண்ணத்தை உண்டாக்கிவிட்டன. தங்கள் நடத்தைக்காக டர்பன் ஐரோப்பியர்கள் வெட்கப்பட்டனர். நான் ஒரு பாவமும் அறியாதவன் என்று பத்திரிகைகள் கூறின; ஜனக்கூட்டத்தின் செயலைக் கண்டித்தன. இவ்விதம், என்னை ஆத்திரத்துடன் கொல்ல முயன்றது, எனக்கு—அதாவது என் லட்சியத்திற்கு—பெரு நன்மையாகவே முடிந்தது. தென்னுப்பிரிக்காவில் இந்திய சமூகத்தின் கௌரவம் இதனுல் உயர்ந்தது; என் வேலையையும் இது எளிதாக்கியது.

மூன்று, நான்கு நாட்களில் நான் என் வீட்டிற்குத் திரும்பினேன். சீக்கிரத்திலேயே வழக்கம்போல் வாழ்க்கையை நடத்த ஆரம்பித்துவிட்டேன். மேற்கண்ட சம்பவம் என் வக்கீல் தொழிலிலும் வருமானம் அதிகமாகும்படி செய்தது.

கட்டுரைகள் எழுதுக

1. 'குவாரன்டீன்' என்றுல் என்ன? அது ஏன் செய்யப்படுகிறது?
2. காந்திஜி தென்னுப்பிரிக்காவுக்குத் திரும்பி வந்ததை எதிர்த்து வெள்ளைக்காரர்கள் கிளர்ச்சி செய்ததற்குக் காரணங்கள் யாவை?
3. காந்திஜி குழப்பத்தினிடையே டர்பனுக்கு வந்ததை விவரிக்கவும்.
4. காந்திஜிக்குக் காட்டிய எதிர்ப்பை வெள்ளையர் முடிவில் கைவிடும்படிச் செய்தது எது?

26

எளிய வாழ்க்கை

சலவைச் செலவு அதிகமாகிக்கொண்டிருந்தது அதோடு ஒழுங்காகக் காலத்தில் வராமல் இருப்பதிலும் அந்தச் சலவைக்காரர் பெயர் பெற்றவர். இதனால் இருபது முப்பது சட்டைகளும் காலர்களும் இருந்தாலும் அவையும் எனக்குப் போதா என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. காலர்களைத் தினந்தோறும் மாற்றியாகவேண்டும். சட்டையைத் தினமும் மாற்றாவிட்டாலும் ஒன்று விட்டு ஒரு நாளாவது மாற்றியாகவேண்டும். இதனால் எனக்கு இரட்டிப்புச் செலவு ஆயிற்று. அது அனாவசியமான செலவு என்று எனக்குத் தோன்றிற்று. ஆகையால், அந்தப் பணத்தை மிச்சப்படுத்துவதற்காக நானே சலவைச் சாமான்களைச் சேகரித்துக்கொண்டேன். சலவையைப்பற்றிய ஒரு புத்தகத்தை வாங்கிப் படித்து, அக் கலையைக் கற்றுக்கொண்டதோடு, என் மனைவிக்கும் சொல்லிக் கொடுத்தேன். இதனால் எனக்கு வேலை அதிகமாயிற்று என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், அத் தொழில் எனக்குப் புதுமையான தாகையால் அதைச் செய்வது இன்பமாகவே இருந்தது.

நானே சலவை செய்து போட்டுக்கொண்ட முதல் கழுத்துப் பட்டை (காலர்)யை நான் என்றும் மறந்துவிட முடியாது. தேவைக்கு அதிகமாகக் கஞ்சி போட்டுவிட்டேன். தேய்க்கும் பெட்டியின் இரும்பில் போதுமான சூடு இல்லை. கழுத்துப்பட்டை எங்கே பொசுங்கி விடுமோ என்ற பயத்தில் அதைச் சரியாக நான் அழுத்தித் தேய்க்கவும் இல்லை. இதன் பலன் என்னவெனில்

கழுத்துப்பட்டை ஓரளவு விறைப்பாகத்தான் இருந்தது என்றாலும், அதிகப்படியாக அதற்குப் போட்டுவிட்ட கஞ்சி, அதிலிருந்து உதிர்ந்துகொண்டே இருந்தது. அந்தக் கழுத்துப்பட்டையைக் கட்டிக் கொண்டு கோர்ட்டுக்குப் போனேன். மற்றப் பாரிஸ்டர் களின் பரிகாசத்துக்கு ஆளானேன். ஆனால், அந்த நாளிலேயே நான் பரிகாசத்துக்குப் பயப்படாதவன் ஆகிவிட்டேன்.

“என் கழுத்துப்பட்டைகளை நானே சலவை செய்து கொள்ளுவதில், இது என் முதல் பரிசோதனை. அதனால் தான் கஞ்சி உதிர்ந்துகொண்டிருக்கிறது. அது எனக்கு எந்தவிதத் தொல்லையையும் கொடுக்கவில்லை. அதோடு நீங்கள் இவ்வளவு சிரித்து இன்புறுவதற்கு இது காரண மாகவும் இருக்கிறது” என்றேன்.

“ஆனால், இங்கே சலவைக் கடைகளுக்குப் பஞ்சமே இல்லையே?” என்று ஒரு நண்பர் கேட்டார்.

“சலவைச் செலவு அதிகமாகிறது. ஒரு கழுத்துப் பட்டையின் விலை எவ்வளவோ அவ்வளவு ஆகிவிடுகிறது அதைச் சலவை செய்யும் கூலி. அப்படியானாலும் ஆகட் டும் என்றால், என்றென்றைக்கும் சலவைத் தொழிலாளி யையே நம்பி வாழ வேண்டியதாக இருக்கிறது. ஆகை யால், என் துணிகளை நானே சலவை செய்துகொள்வது மேல் என்று எண்ணுகிறேன்” என்றேன்.

சலவைத் தொழிலாளிக்கு அடிமையாக இருப்பதி லிருந்து என்னை நான் விடுவித்துக் கொண்டதைப் போலவே க்ஷவரத் தொழிலாளியை எதிர்பார்ப்பதையும் போக்கிக்கொண்டு விட்டேன். இங்கிலாந்துக்குப் போகிறவர்கள் எல்லோரும் க்ஷவரம் செய்துகொள்ளவா வது கற்றுக்கொள்கின்றனர். ஆனால் நான் அறிந்த வரையில், தங்கள் தலைமுடியையும் தாங்களே கத்தரித்

துக்கொள்வது என்பதை யாரும் கற்றுக்கொண்ட தில்லே. நான் இதையும் கற்றுக்கொண்டுவிட வேண்டிய தாயிற்று. நான் ஒரு சமயம் பிரிட்டோரியாவில் ஆங்கிலே யர் ஒருவரிடம் முடி வெட்டிக்கொள்ளப் போனேன். அவர், அதிக வெறுப்புடன் என் தலே மயிரை வெட்ட மறுத்துவிட்டார். எனக்கு இது அவமரியாதையாக இருந்தது. உடனே மயிர்க் கத்தரி ஒன்றை வாங்கினேன். கண்ணுடி முன்பு நின்றுகொண்டு, என் தலே மயிரை நானே கத்தரித்துக் கொண்டேன். முன் மயிரை வெட்டிக் கொள்ளுவதில் ஓரளவுக்கு வெற்றிபெற்றேன். ஆனல், பின் பக்கத்து மயிரை வெட்டிக் கெடுத்துவிட்டேன். கோர்ட் டில் இருந்த நண்பர்கள் அதைப் பார்த்துவிட்டுக் குலுங் கக் குலுங்கச் சிரித்தார்கள்.

“உமது தலே மயிருக்கு என்ன ஆபத்து வந்தது, காந்தி? எலிகள் எவையேனும் வேலே செய்துவிட்ட னவா?” என்று கேட்டனர்.

“அப்படி யெல்லாம் ஒன்றும் இல்லே. வெள்ளேக் காரரான க்ஷவரத் தொழிலாளி என் கறுப்பு மயிரைத் தொட இஷ்டப்படவில்லே. ஆகவே, எவ்வளவு மோச மாக இருந்தாலும் சரி, என் மயிரை நானே வெட்டிக் கொள்வது என்று வெட்டிக்கொண்டு விட்டேன்” என்றேன்.

என் பதில் அந்த நண்பர்களுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கவில்லே. என் தலேமயிரை வெட்ட மறுத்தது அந்த க்ஷவரத் தொழிலாளியின் குற்றமல்ல. கறுப்பு மனிதருக்கு அவர் மயிர் வெட்டி விடுவாராஞல் வெள்ளேக் காரர்கள் அவரிடம் மயிர் வெட்டிக்கொள்ள வர மறுத்து விடக் கூடும். நமது தீண்டாத சகோதரர்களுக்கு க்ஷவரம் செய்ய, நம் க்ஷவரத் தொழிலாளியை நாம் அனு மதிப்பதில்லேயே! இந்தப் பாவத்திற்கு உரிய பலனே

நான் தென்னாப்பிரிக்காவில் ஒரு தடவை அல்ல, பல தடவைகளில் அனுபவித்தேன். 'இதெல்லாம் நாம் செய்த பாவத்திற்குத் தண்டனையே' என்ற நம்பிக்கை எனக்கு இருந்ததால் நான் கோபம் அடையவில்லை.

கட்டுரைகள் எழுதுக

1. தம் துணிகளைத் தாமே சலவை செய்து, தலை மயிரையும் கத்தரித்துக்கொள்ள காந்திஜி செய்த முயற்சிகளை விவரித்துக் கூறுக.
2. உடலுழைப்பின் கௌரவத்தையும் நலன்களையும் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
3. 'தீண்டாதார்' என்போரை நாம் அக்கிரமமாக நடத்தி வருவதற்குத் தண்டனையாகவே தென்னாப்பிரிக்காவில் இந்தியருக்கு எதிராக நிறக் கொடுமைகள் நடக்கின்றன என்று காந்திஜி கூறுகிறார். இதை விளக்கவும்.
4. 'தீண்டாதா'ரின் துயரங்களைப் போக்குவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்?

27

புனித ஞாபகமும் பிராயச்சித்தமும்

டர்பனில் நான் வக்கீல் தொழில் நடத்தி வந்த போது, என் அலுவலகக் குமாஸ்தாக்கள் பெரும்பாலும் என்னுடனேயே தங்குவார்கள். அவர்களில் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் இருந்தனர். மாகாண வாரியாகச் சொல்லுவதாயின், அவர்கள் குஜராத்திகளும் தமிழர்களும் ஆவார்கள். அவர்களும் என் உற்ருர் உறவினர்களே என்பதைத் தவிர அவர்களை வேறுவிதமாக நான் எப்பொழுதாவது கருதியதாக எனக்கு ஞாபகம் இல்லை; என் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே அவர்களைப் பாவித்து நடத்தி வந்தேன்; குமாஸ்தாக்களில் ஒருவர் கிறிஸ்தவர்; தீண்டாத வகுப்பைச் சேர்ந்த பெற்றோருக்குப் புதல்வராகப் பிறந்தவர்.

நான் குடியிருந்த வீடு மேனாட்டு நாகரிகத்தையொட்டிக் கட்டப்பட்டிருந்தது. அறைகளிலிருந்து அழுக்கு நீர் வெளியே போவதற்கு அவற்றில் வழி வைக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், ஒவ்வோர் அறையிலும் அழுக்கு நீருக்கு எனத் தனித்தனிப் பானைகள் உண்டு. இப்பானைகளை வேலைக்காரரோ, தோட்டியோ சுத்தம் செய்வதற்குப் பதிலாக அந்த வேலையை என் மனைவியோ, நானே செய்து வந்தோம். வீட்டில் இருந்து பழகிவிட்ட குமாஸ்தாக்கள், அவரவர்கள் அறையிலிருக்கும் பானைகளை அவர்களே சுத்தம் செய்து கொள்வார்கள். ஆனால் கிறிஸ்தவ குமாஸ்தாவோ புதிதாக வந்தவர். அவருடைய படுக்கை அறையைக் கவனித்துக்கொள்ள வேண்டியது எங்கள் வேலையா

யிற்று. மற்றவர்களுடைய பானைகளையெல்லாம் சுத்தம் செய்வதில் என் மனைவிக்கு ஆட்சேபமில்லை. ஆனால், பஞ்சமராக இருந்த ஒருவர் உபயோகித்த பானையைச் சுத்தம் செய்வதென்பது அவளுடைய வரம்புக்கு மீறியதாக இருந்தது. ஆகவே எங்களுக்குள் தகராறு ஏற்பட்டது. அப்பானைகளை நான் சுத்தம் செய்வதென்பதையும் அவளால் சகிக்க முடியவில்லை. பானையும் கையுமாக அவள் ஏணியின் வழியாக இறங்கி வந்துகொண்டிருந்தாள். என்னைக் கடிந்துகொண்டாள். கோபத்தில் அவளுடைய கண்களெல்லாம் சிவந்திருந்தன. அவளுடைய கன்னங்களில் முத்துப்போலக் கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. அந்தக் காட்சியை நான் இன்றும் அப்படியே நினைவுபடுத்திக்கொள்ள முடியும். நானோ, அன்போடு கொடூரமும் நிறைந்த கணவன். அவளுக்கு நானே உபாத்தியாயர் என்று கருதி வந்தேன். எனவே, அவளிடம் எனக்கு இருந்த குருட்டுத்தனமான அன்பின் காரணமாக அவளை மிகவும் துன்பப்படுத்தினேன்.

அவள் பானையை எடுத்துச் சென்றதனால் மாத்திரம் நான் திருப்தி யடைந்துவிடவில்லை. அவள் அவ் வேலையைச் சந்தோஷத்துடன் செய்ய வேண்டும் என்று விரும்பினேன். ஆகவே, உரத்த சப்தத்துடன், "அம்மாதிரியான மடத்தனத்தை யெல்லாம் என் வீட்டில் சகிக்க மாட்டேன்" என்றேன்.

இச் சொற்கள் கூரிய அம்புகளாக அவள் உள்ளத்தில் தைத்துவிட்டன. "உங்கள் வீட்டை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். என்னைத் தொலைத்துவிடுங்கள்" என்று அவள் திருப்பிக் கூச்சல் போட்டாள். நான் என்னையே மறந்துவிட்டேன். என் உள்ளத்திலிருந்த இரக்க ஊற்று வற்றிப் போய்விட்டது. அவள் கைகளைப் பிடித்து, அத்திக்கற்ற மாதை ஏணிக்கு எதிரிலிருந்த

வாயிற்படிக்கு இழுத்துக்கொண்டு போனேன். அவளை வெளியே பிடித்துத் தள்ளிவிடுவதற்காகக் கதவைத் திறக்கப் போனேன். அவளுடைய கன்னங்களின் வழியே கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது. அழுது கொண்டே அவள் கூறியதாவது: "உங்களுக்கு வெட்கம் என்பதே இல்லையா? இப்படியும் உங்களுக்குச் சுய உணர்வு அற்றுப் போய்விட வேண்டுமா? எனக்குப் போக்கிடம் எங்கே இருக்கிறது? எனக்குப் புகலிடம் அளிப்பதற்கு இங்கே என் பெற்றோர்களாவது, உறவினர்களாவது இருக்கிறார்களா? நான் உங்கள் மனைவி என்பதனால் அடித்தாலும் உதைத்தாலும் நான் பொறுத்துக் கொள்ள வேண்டியதுதான் என்று நினைக்கிறீர்கள். உங்களுக்குப் புண்ணியமாகப் போகிறது. நல்லவிதமாக நடந்துகொள்ளுங்கள். கதவை மூடுங்கள். நம்மைப் பார்த்து யாராவது சிரிக்கப்போகிறார்கள்!"

இதைக் கேட்ட நான் என் முகத்தைக் கம்பீரமாக வைத்துக்கொண்டேன். ஆனால், உண்மையில் வெட்கமடைந்தேன். கதவையும் மூடினேன். என்னை விட்டு என் மனைவி போய்விட முடியாது என்றால், அவளைவிட்டு நானும் பிரிந்துவிட முடியாது. எங்களுக்குள் எத்தனையோ சச்சரவுகள் இருந்திருக்கின்றன. ஆனால் அவற்றின் முடிவில் எங்களுக்குள் சமாதானமே நிலவும். சகிப்புத்தன்மையின் இணையில்லாத சக்தியினால் எப்பொழுதும் வெற்றி பெறுகிறவள் என் மனைவியே.

கட்டுரைகள் எழுதுக

1. 'தீண்டாதா'ரான விருந்தினரின் பானையை கஸ்தூரிபா சுத்தம் செய்யாததைக் குறித்து அவருக்கும் காந்திஜிக்கும் ஏற்பட்ட தகராறை விவரித்துக் கூறுக.

2. நியாயமானதைச் செய்யும்படி கட்டாயப்படுத்துவது சம்பந்தமாக நீங்கள் அறிந்துகொள்ளும் படிப்பினை யாது? அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெறுவதற்கு நாம் செய்ய வேண்டியது என்ன?

28

போயர் யுத்தம்

1894-ஆம் ஆண்டுக்கும் *1899*-ஆம் ஆண்டுக்கும் இடையே ஏற்பட்ட மற்றும் பல அனுபவங்களையெல்லாம் விட்டுவிட்டு நேரே போயர் யுத்தத்திற்கு வரவேண்டும்.

அந்தப் போர் ஆரம்பம் ஆனபோனது என் சொந்தக் கருத்துக்களை வற்புறுத்தும் உரிமை எனக்கு இல்லை என்றே நான் நம்பினேன். இது சம்பந்தமாக என் உள்ளத்தில் அப்பொழுது ஏற்பட்ட போராட்டத்தைக் குறித்து, நான் எழுதியிருக்கும் 'தென்னுப்பிரிக்கச் சத்தியாக்கிரக சரித்திர'த்தில் விவரமாகக் கூறியிருக்கிறேன். அந்த வாதங்களை இங்கே திரும்பவும் சொல்லிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. அதை அறிய விரும்புவோர் அப் புத்தகத்தில் பார்த்துக்கொள்ளுவார்களாக. பிரிட்டிஷ் ஆட்சியிடம் நான் கொண்டிருந்த விசுவாசம், அப் போரில் பிரிட்டிஷ் பக்கம் என்னைச் சேரும்படி செய்துவிட்டது என்பதைச் சொல்லுவது மட்டும் இங்கே போதுமானது. பிரிட்டிஷ் பிரஜை என்ற வகையில் நான் உரிமைகளைக் கோரினால், அந்தப் பிரஜை என்ற வகையில், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பாதுகாப்புக்காகப் போரில் ஈடுபட வேண்டியதும் என் கடமை என்றே நான் கருதினேன்.

எங்கள் படை *1,100* பேரையும் *40* தலைவர்களையும் கொண்டது. இவர்களில் சுமார் முந்நூறு பேர் சுயேச்சையான இந்தியர்; காயம் பட்டவர்களை, டோலியில் வைத்துத் தூக்கிக்கொண்டு, அந்த நாட்களில் நாங்கள்

தினந்தோறும் இருபது, இருபத்தைந்து மைல் தூரம் நடக்கவேண்டியிருந்தது. காயம் அடைந்தவர்களில் ஜெனரல் வுட்கேட் போன்ற போர்வீரர்களைத் தூக்கிச் சென்ற கௌரவமும் எங்களுக்குக் கிடைத்தது.

ஆறு வாரங்கள் சேவை செய்த பிறகு, எங்கள் படை கலைக்கப்பட்டுவிட்டது.

எங்களுடைய சொற்ப சேவை அச்சமயம் மிகப் பாராட்டப் பெற்றது. இந்தியரின் கௌரவமும் உயர்ந்தது.

கட்டுரை எழுதுக

போயர் யுத்தத்தில் பிரிட்டிஷாருக்கு எந்த வகையில் காந்திஜி உதவி செய்தார்? அவர்களுக்கு அவர் உதவி செய்தது ஏன்?

29

விலையுயர்ந்த வெகுமதிகள்

யுத்த சேவையிலிருந்து நான் விடுவிக்கப்பட்டதும், 'இனி நான் செய்ய வேண்டிய வேலை, இந்தியாவில்தானே அன்றி, தென்னாப்பிரிக்காவில் அல்ல' என்பதை நான் உணர்ந்தேன்.

தாய் நாட்டில் இருந்த நண்பர்களும், திரும்பி வந்துவிடுமாறு என்னை வற்புறுத்திக்கொண் டிருந்தார்கள். இந்தியாவில் நான் அதிகமாகச் சேவை செய்ய முடியும் என்றும் எண்ணினேன். ஆகையால், என்னை விடுவிக்குமாறு எனது சக ஊழியர்களைக் கேட்டுக்கொண்டேன். என் கோரிக்கை அதிகச் சிரமத்தின் பேரிலும், ஒரு நிபந்தனையின் பேரிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஓர் ஆண்டிற்குள் தென்னாப்பிரிக்க இந்தியர் சமூகம் என்னை விரும்பினால், தென்னாப்பிரிக்காவுக்குத் திரும்பிவிட நான் தயாராக இருக்க வேண்டும் என்பதே அந்த நிபந்தனை. ஒவ்வோர் இடத்திலும் பிரிவுபசாரக் கூட்டம் நடத்தினார்கள். விலையுயர்ந்த வெகுமதிகளையும் எனக்கு அளித்தார்கள். வெள்ளி, தங்கச் சாமான்களும் அன்பளிப்பில் அடங்கியிருந்ததோடு, விலையுயர்ந்த வைரச் சாமான்களும் இருந்தன.

ஒரு நாள், மாலை, இந்த வெகுமதிகளில் பெரும் பகுதியை எனக்கு அளித்தார்கள். அன்று இரவெல்லாம் என்னால் தூங்கவே முடியவில்லை. என் அறையில் அங்கும் இங்கும் இரவெல்லாம் உலாவினேன்; தீவிரமாகச் சிந்தித்தேன். ஆனால், ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. ஆயிரக்கணக்கில் மதிப்புள்ள இந்த வெகுமதிகளை வேண்

டாம் என்று துறந்துவிடுவது எனக்குக் கஷ்டமாக இருந்தது. அவைகளை வைத்துக்கொள்ளுவதோ இன்னும் அதிகக் கஷ்டமாக இருந்தது. அவைகளை நான் வைத்துக்கொள்ளுகிறேன் என்றாலும் என் குழந்தைகளின் சங்கதி என்ன? என் மனைவியின் விஷயம் என்ன? சேவைக்கு வேண்டிய வாழ்க்கை நடத்த அவர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். சேவை ஒன்றே அதற்குரிய சன்மானம் என்றும் அவர்களுக்குச் சொல்லி வந்திருக்கிறேன்.

வீட்டில் என்னிடம் விலை உயர்ந்த நகை எதுவும் இல்லை. எங்கள் வாழக்கையையே விரைவாக எளிமை ஆக்கிக்கொண்டு வந்திருக்கிறோம். அப்படியிருக்கத் தங்கக் கடிகாரங்களை நாங்கள் எவ்வாறு வைத்துக்கொள்ள முடியும்? தங்கச் சங்கிலிகளையும் வைர மோதிரங்களையும் நாங்கள் எவ்வாறு அணிந்துகொள்ள முடியும்? மக்கள், நகைகளின் மீது இருக்கும் ஆசையை விட்டுவிட வேண்டும் என்று பல தடவை நான் மக்களுக்கு உபதேசம் செய்தும் இருக்கிறேன். அப்படியிருக்க என்னிடம் வந்திருக்கும் நகைகளை நான் என்ன செய்வது?

இந்த வெகுமதிகளை யெல்லாம் நான் வைத்துக்கொள்ளக்கூடாது என்ற முடிவுக்கு வந்தேன். இவற்றை யெல்லாம் சமூகத்திற்கே சொந்தமானதாக்கி, இதற்குச் சில தருமகர்த்தாக்களை நியமித்து, ஒரு கடிதம் எழுதினேன். பார்ஸி ருஸ்தம்ஜியையும் மற்றுஞ் சிலரையும் தருமகர்த்தாக்களாக நியமித்தேன். காலையில் என் மனைவியுடனும் குழந்தைகளோடும் ஆலோசனையை நடத்தி இப் பெரும் பாரத்தை நிவர்த்தி செய்துகொண்டேன்.

இதற்கு என் மனைவியைச் சம்மதிக்கச் செய்வதில் கொஞ்சம் சிரமம் இருக்கும் என்பதை அறிவேன். குழந்தைகளைப் பொறுத்த வரையில் எந்தவிதமான கஷ்டமும்

இராது என்பதும் எனக்குத் தெரியும். ஆகவே, அவர்களையே என் வக்கில்கள் ஆக்கிக்கொண்டுவிடுவது என்ற முடிவுக்கு வந்தேன்.

என் யோசனையைக் குழந்தைகள் உடனே ஏற்றுக் கொண்டு விட்டனர். "இந்த விலையுயர்ந்த வெகுமதிகள் நமக்குத் தேவையில்லை. ஆகையால். அவற்றைச் சமூகத்திற்குத் திருப்பிக்கொடுத்துவிட வேண்டியதே. அவை நமக்கு எப்பொழுதாவது தேவைப்பட்டால் நாம் அவற்றை எளிதில் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்" என்று குழந்தைகள் கூறினர்.

நான் ஆனந்தம் அடைந்தேன். "அப்படியானால், உங்கள் தாயாரிடம் இதைக் குறித்து எடுத்துக் கூறி, அவளும் இதற்குச் சம்மதிக்கச் செய்வீர்கள் அல்லவா?" என்று கேட்டேன். "நிச்சயமாகச் செய்வோம். அது எங்கள் வேலை. அம்மாவுக்கு நகைகள் வேண்டியதில்லை. அவைகளை எங்களுக்காக வைத்திருக்க வேண்டும் என்றே அவர் விரும்புவார். 'எங்களுக்கு அவை தேவையில்லை' என்று நாங்கள் கூறும்போது, அவைகளைக் கொடுத்துவிட அம்மா ஏன் சம்மதிக்க மாட்டார்?" என்றும் கூறினார்கள்.

பேச்சளவில் அது எளிதாகத்தான் இருந்தது. ஆனால், காரியத்திலோ அது அதிகக் கஷ்டமாக இருந்தது. என் மனைவி கூறியதாவது: "இவையெல்லாம் உங்களுக்குத் தேவைப்படாமல் இருக்கலாம். உங்கள் குழந்தைகளுக்கும் அவை வேண்டாம் என்று இருக்கலாம். அவர்களை நீங்கள் தட்டிக் கொடுத்தால், உங்கள் இஷ்டப்படியெல்லாம் அவர்கள் கூத்தாடுவார்கள். நகைகளை நான் போட்டுக்கொள்ள நீங்கள் அனுமதிக்காமல் இருப்பதை நான் புரிந்துகொள்ளுகிறேன். ஆனால், என் மருமகப் பெண்கள் வரும்போது அவர்கள் விஷயம்

என்ன? நிச்சயம் அவர்களுக்கு நகைகள் வேண்டியிருக்கும். நாளைக்கு நம் நிலைமை எப்படி இருக்கும் என்பது யாருக்குத் தெரியும்? அதிக அன்போடு அளிக்கப்பட்ட இந்த வெகுமதிகளைத் திருப்பிக் கொடுத்துவிட நான் ஒரு போதும் சம்மதிக்கவே மாட்டேன்."

ஆனாலும், நகைகளைத் திருப்பிக் கொடுத்து விடுவது என்று நான் உறுதி கொண்டுவிட்டேன். இதற்கு அவளும் முடிவாகச் சம்மதித்துவிடும்படி செய்வதில் எப்படியோ வெற்றி பெற்றேன். *1896*, *1901*-ஆம் ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட அன்பளிப்புகள் யாவும் திருப்பிக் கொடுக்கப்பட்டு விட்டன. ஒரு தருமகர்த்தாப் பத்திரம் தயாரித்தேன். அந்த வெகுமதிகளையெல்லாம் ஒரு பாங்கில் ஒப்படைத்தேன். என் விருப்பப்படியோ, தருமகர்த்தாக்களின் விருப்பப்படியோ, இந் நிதியைச் சமூகத்தின் சேவைக்குப் பயன்படுத்துவது என்று ஏற்பாடு செய்தேன்.

பொதுஜன காரியங்களுக்கு நிதி எனக்குத் தேவைப்பட்டு, 'இந்தத் தரும நிதியிலிருந்து எடுத்துக்கொள்ள வேண்டியதே' என்று நான் எண்ணிய போதெல்லாம், தேவைக்கு வேண்டிய பணத்தை வெளியிலேயே வசூல் செய்துகொள்ள என்னால் முடிந்திருக்கிறது. ஆகையால் அந்த நிதி அப்படியே செலவாகாமல் இருந்தது. அந்த நிதி இன்னும் இருந்து வருகிறது. தேவைப்படும்போது செலவிட்டு வருகிறார்கள். ஒழுங்காக அந் நிதி சேர்ந்து கொண்டும் வருகிறது.

இவ்வாறு அந் நிதியை உண்டாக்கியதற்காக நான் என்றும் வருந்தியதே இல்லை. சில ஆண்டுகளானதும், அப்படிச் செய்ததுதான் புத்திசாலித்தனமானது என்பதை என் மனைவியும் அறிந்துகொண்டாள். எத்தனையோ ஆசைகளிலிருந்து அது எங்களைப் பாதுகாத்தது.

பொதுஜன சேவையில் ஈடுபட்டிருப்பவர்கள், விலையுயர்ந்த வெகுமதிகளை ஏற்றுக்கொள்ளவே கூடாது என்பது என்னுடைய திடமான அபிப்பிராயம்.

கட்டுரைகள் எழுதுக

1. விலையுயர்ந்த வெகுமதிப் பொருள்களை தமக்கென்று காந்திஜி ஏற்றுக்கொண்டு விடாததற்குக் காரணங்கள் யாவை?
2. நகைகளை ஏற்றுக்கொள்ளாதது சம்பந்தமாக காந்திஜி செய்தது சரி என்று நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்களா? நகைகளை உபயோகிப்பதற்குச் சாதகமான, எதிரான காரணங்களைக் கூறுக.

பாகம் ஏழு

மீண்டும் இந்தியாவில்

30

எனது முதல் காங்கிரஸ்

இந்தியாவுக்கு வந்து சேர்ந்ததும் நாட்டைச் சுற்றிப் பார்ப்பதில் கொஞ்ச காலத்தைக் கழித்தேன். அது *1901*-ஆம் ஆண்டு. அப்போது கல்கத்தாவில் ஸ்ரீ (பிறகு ஸர்) தின்ஷா வாச்சாவின் தலைமையில் காங்கிரஸ் மகா நாடு நடந்தது. நானும் மகாநாட்டிற்குப் போயிருந்தேன். காங்கிரஸைப்பற்றிய என் முதல் அனுபவம் அதுதான்.

நான் எங்கே போகவேண்டும் என்று ஒரு தொண்ட ரைக் கேட்டேன். என்னை ரிப்பன் கல்லூரிக்கு அழைத் துச் சென்றார். அங்கே பல பிரதிநிதிகள் தங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அதிர்ஷ்டம் எனக்கு உதவி யது. நான் இருந்த பகுதியிலேயே லோகமான்யரின் ஜாகையும் இருந்தது.

இந்த முகாமின் நிலைமையைக் குறித்துக் கொஞ்சம் விவரமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். தொண்டர்கள் ஒருவரோடொருவர் சச்சரவிட்டுக்கொண் டிருந்தனர். அவர்களில் ஒருவரிடம் ஏதாவது செய்யுமாறு நீங்கள் கூறினால், அதை அவர் இன்னொருவரிடம் சொல்லுவார். அப்படிச் சொல்லப்பட்டவர், மூன்றாமவரிடம் கூறுவார். இப்படிப் போய்க்கொண்டே இருக்கும். பிரதிநிதிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் திக்குத் திசை தெரியாமல் தவித்தனர்.

அங்கே இருந்த சுகாதாரக் கேட்டிற்கோ எல்லையே இல்லை. எங்கும் தண்ணீர், குட்டை குட்டையாகத் தேங் கிக் கிடந்தது. சில கக்கூசுகளே இருந்தன. அங்கிருந்த நாற்றத்தை இப்பொழுது நினைத்தாலும் எனக்கு வெறுப்

பாக இருக்கிறது. இதைப்பற்றித் தொண்டர்களிடம் சொன்னேன். "அது எங்கள் வேலே அல்ல, தோட்டிகளின் வேலே" என்று அவர்கள் திட்டவட்டமாகப் பதில் சொல்லிவிட்டார்கள். விளக்குமாறு ஒன்று வேண்டும் என்று கேட்டேன். உடனே, அந்த மனிதர் ஆச்சரியத்தோடு என்னே விழித்துப் பார்த்தார். ஒரு விளக்குமாற்றைத் தேடிப் பிடித்துக் கக்கூசைச் சுத்தம் செய்தேன். ஆனல், எனக்காகவே நான் சுத்தம் செய்து கொண்டேன். கூட்டமோ மிகவும் அதிகம்; கக்கூசுகளோ மிகக் கொஞ்சம். ஆகையால், அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டியது அவசியமாயிற்று. ஆனல், அந்த வேலே நான் ஒருவனுகச் செய்துவிடக்கூடியது அல்ல. ஆகவே, என் காரியத்தை நான் பார்த்துக்கொள்ளுவதோடு திருப்தியடைய வேண்டியவனுனேன். மற்றவர்கள், துர்நாற்றத்தைக் குறித்தோ, அசுத்தத்தைப்பற்றியோ கவலேப்பட்டதாகவே தெரியவில்லே.

காங்கிரஸ் மகாநாடு ஆரம்பமாவதற்கு இன்னும் இரண்டு நாட்கள் இருந்தன. கொஞ்சம் அனுபவம் பெறுவதற்காகக் காங்கிரஸ் காரியாலயத்திற்கு என் சேவையை அளிப்பது என்று முடிவு செய்துகொண்டேன். கல்கத்தாவுக்கு வந்து, அன்ருடக் கடன்களே முடித்துக்கொண்டதும், நேரே காங்கிரஸ் காரியாலயத்திற்குச் சென்றேன்.

பாபு பூபேந்திரநாத வசுவும், ஸ்ரீ கோஷாலும் காரியதரிசிகள். பூபேன் பாபுவிடம் சென்று, நான் தொண்டு செய்ய விரும்புவதாகச் சொன்னேன். அவர் என்னே உற்றுப் பார்த்துவிட்டு, "உமக்குக் கொடுப்பதற்கு என்னிடம் வேலே இல்லே. கோஷால் பாபுவிடம் ஏதாவது வேலே இருக்கக் கூடும். தயவு செய்து அவரைப் போய்ப் பாரும்" என்ருர்,

ஆகவே, அவரிடம் போனேன். அவர் என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "உமக்குக் குமாஸ்தா வேலை தான் கொடுக்க முடியும். அதை நீர் செய்வீரா?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார்.

"நிச்சயம் செய்கிறேன். என் சக்திக்கு உட்பட்ட எந்தப் பணியையும் இங்கே செய்வதற்காகவே வந்திருக்கிறேன்" என்றேன்.

ஸ்ரீ கோஷாலின் சட்டைக்கு அவருடைய வேலைக்காரன் தான் பித்தான் போட்டுவிடுவது வழக்கம். அப்பணியாளின் வேலையை நான் செய்ய முன்வந்தேன். பெரியவர்களிடம் எப்பொழுதுமே எனக்கு அதிக மரியாதை உண்டு. ஆகையால், இப்பணியைச் செய்ய நான் விரும்பினேன். இதை ஸ்ரீ கோஷால் அறிய நேர்ந்த போது, அவருக்குத் தொண்டாக இதுபோன்ற சிறு காரியங்களை நான் செய்வதை அவர் ஆட்சேபிக்கவில்லை. உண்மையில் இதற்காக அவர் மகிழ்ச்சியே அடைந்தார்.

இத்தகைய சேவையினால் நான் அடைந்த நன்மை அளவிடமுடியாதது.

சில தினங்களுக்குள், காங்கிரஸின் நடைமுறையைப் பற்றியெல்லாம் தெரிந்துகொண்டு விட்டேன். தலைவர்களில் பெரும்பாலோரைச் சந்தித்தேன்.

என் தீர்மானத்தை அனுமதிப்பதாக ஸர் பிரோஸ்ஷா ஒப்புக்கொண்டிருந்தார். ஆனால் விஷயாலோசனைக் கமிட்டி முன்பு அதை யார், எப்பொழுது கொண்டு வருவார்கள் என்று திகைத்துக்கொண்டிருந்தேன். ஏனெனில், ஒவ்வொரு தீர்மானத்தின் பேரிலும் நீண்ட சொற்பொழிவுகள் நடந்தன. எல்லாம் முழுக்க முழுக்க ஆங்கிலத்தில்தான். ஒவ்வொரு தீர்மானத்தையும் யாராவது ஒரு பிரபலமான தலைவர் ஆதரித்து வந்தார். முக்கியஸ்தர்களின் பேரிகை முழக்கத்தின்

நடுவே என் குரல் ஈனக்குரலாக இருந்தது. இரவும் நெருங்கவே என் நெஞ்சு படபடத்துக்கொண்டிருந்தது.

வெளியே போவதற்கு ஒவ்வொருவரும் அவசரப்பட்டுக்கொண்டிருந்தனர். அப்பொழுது இரவு 11 மணி. எழுந்து பேச எனக்குத் துணிவு இல்லை. முன்னாலேயே கோகலேயைப் பார்த்தேன். என் தீர்மானத்தை அவர் பார்த்தும் இருக்கிறார். அவர் உட்கார்ந்திருந்த இடத்திற்கு அருகே போய், "தயவுசெய்து எனக்கு ஏதாவது செய்யுங்கள்" என்று குசுகுசுவென்று சொன்னேன்.

"ஆகவே, எல்லாவற்றையும் முடித்துவிட்டோமல்லவா?" என்றார், ஸர் பிரோஸ்ஷா மேத்தா.

"இல்லை, இல்லை. தென்னாப்பிரிக்கா பற்றிய தீர்மானம் பாக்கியாக இருக்கிறது. ஸ்ரீ காந்தி நீண்ட நேரமாகக் காத்துக்கொண்டிருக்கிறார்" என்று உரக்கக் கூறினார், கோகலே.

"நீங்கள் தீர்மானத்தைப் பார்த்தீர்களா?" என்று கேட்டார் ஸர் பிரோஸ்ஷா.

"பார்த்தேன்."

"அது உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?"

"மிக நன்றாகவே இருக்கிறது."

"அப்படியானால், அதை எடுத்துக்கொள்ளுவோம். காந்தி, அதைப் படியும்."

நான் நடுங்கிக்கொண்டே அதைப் படித்தேன். கோகலே அதை ஆமோதித்தார். "ஏகமனதாக நிறைவேறியது" என்று எல்லோரும் கூவினார்கள்.

"காந்தி, இத் தீர்மானத்தின்மீது நீர் ஐந்து நிமிட நேரம் பேசலாம்" என்றார், ஸ்ரீ வாச்சா.

இந்த நடைமுறை எனக்குக் கொஞ்சமும் திருப்தியளிக்கவே இல்லை; தீர்மானத்தைப் புரிந்துகொள்ள யாருமே கவலைப்படவில்லை. ஒவ்வொருவரும் போவதற்கு அவசரப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இத் தீர்மானத்தைக் கோகலே பார்த்துவிட்டார் என்பதனால் மற்றவர்கள் அதைப் பார்க்க வேண்டியதோ, புரிந்துகொள்ள வேண்டியதோ அவசியம் என்று எண்ணவில்லை. என்றாலும், காங்கிரஸில் அது நிறைவேறியது என்பது மாத்திரமே என் மனத்திற்கு மகிழ்ச்சியை அளிக்கப் போதுமானதாக இருந்தது. காங்கிரஸ், முத்திரை வைத்துவிட்டதென்றால், அதை நாடு முழுவதும் அங்கீகரித்துவிட்டது என்று ஆகுமாகையால் எவருக்கும் மகிழ்ச்சியளிக்க அதுவே போதும்.

கட்டுரை எழுதுக

காந்திஜி முதன்முதல் சென்ற காங்கிரஸ் மகாநாட்டில் அவருக்கு ஏற்பட்ட அனுபவங்களைக் கூறுக.

31

பம்பாயில்

நான் பம்பாயில் குடியேறி, வக்கீல் தொழிலை நடத்திக் கொண்டு, பொதுவேலையில் தமக்கு உதவியாக இருக்க வேண்டும் என்று கோகலே அதிக ஆவலுடன் இருந்தார்.

வக்கீல் தொழிலில் நான் எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே எனக்கு வருமானம் கிடைத்து வந்தது. எனது தென்னுப்பிரிக்கக் கட்சிக்காரர்கள், அவ்வப்போது எனக்கு ஏதாவது வேலை கொடுத்துக் கொண்டிருந்தார்கள். கிடைத்த வருமானம், என் வாழ்க்கையை நடத்திக்கொண்டு போவதற்குப் போதுமானதாக இருந்தது.

நான் எண்ணியவாறு நான் பம்பாயில் நிலைத்துவிட்டதாகத் தோன்றிய சமயத்தில் எதிர்பாராத விதமாகத் தென்னுப்பிரிக்காவிலிருந்து எனக்கு ஒரு தந்தி வந்தது. ''சேம்பர்லேன் இங்கே எதிர்பார்க்கப்படுகிறுர். தயவு செய்து உடனே திரும்பி வாருங்கள்'' என்பதே அந்தத் தந்தி. நான் வாக்களித்திருந்தது நினைவுக்கு வந்தது. பிரயாணத்திற்கு எனக்குப் பணம் அனுப்பியதுமே நான் புறப்படத் தயாராக இருப்பதாகப் பதில் தந்தி கொடுத்தேன். அவர்களும் உடனே பணம் அனுப்பிவிட்டார்கள். என் அலுவலகத்தைக் கைவிட்டுவிட்டுத் தென்னுப்பிரிக்காவுக்குப் புறப்பட்டேன்.

பாகம் எட்டு

திரும்பவும் தென்னுப்பிரிக்காவில்

32

திரும்பவும் தென்னுப்பிரிக்காவில்

சரியான தருணத்தில் நான் டர்பன் போய்ச் சேர்ந்தேன். அங்கே வேலை எனக்காகக் காத்துக்கொண்டிருந்தது. சேம்பர்லேனிடம் தூது செல்வதற்குத் தேதியும் நிச்சயிக்கப்பட்டிருந்தது. அவரிடம் சமர்ப்பிப்பதற்கு மகஜரைத் தயாரிப்பதோடு நானும் தூது கோஷ்டியுடன் சென்று அவரைப் பார்க்கவேண்டும்.

ஸ்ரீ சேம்பர்லேன் இந்தியரின் தூதுகோஷ்டிக்கு திருப்திகரமான பதில் கூறவில்லை. "சுயாட்சி பெற்றுள்ள குடியேற்ற நாடுகளின்மீது பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அதிகாரம் எதுவும் இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். உங்கள் குறைகள் நியாயமானவை என்றே தோன்றுகிறது. என்னுல் முடிந்ததைச் செய்கிறேன். ஆனுல், ஐரோப்பியரின் மத்தியிலிருந்து வாழ நீங்கள் விரும்பினுல், அவர்கள் உங்களிடம் பிரியங்கொள்ளும்படி செய்ய நீங்கள் முயல வேண்டும்" என்று அவர் கூறினுர்.

இந்தப் பதில், தூது சென்ற இந்தியரின் உற்சாகத்தைக் குலைத்துவிட்டது. நானும் ஏமாற்றமடைந்தேன். எங்கள் எல்லோருக்குமே இது கண்களைத் திறந்து விடுவதாக இருந்தது. இனித் தீவிரமாக வேலையை ஆரம்பித்துவிட வேண்டியதே என்று கண்டேன். என் சகாக்களுக்கு நிலைமையை விளக்கிக் கூறினேன்.

நான் மேலும் கூறியதாவது: "உண்மையைச் சொன்னுல், நீங்கள் எந்த வேலைக்காக என்னை அழைத்திருந்தீர்களோ அந்த வேலை இப்பொழுது முடிந்துவிட்டது. நான்

தாய்நாடு திரும்புவதற்கு என்னை நீங்கள் அனுமதிப்பது சாத்தியமே என்று இருந்தாலும் நான் டிரான்ஸ்வாலை விட்டுப் போகக்கூடாது என்று எண்ணுகிறேன். முன்போல நேட்டாலில் இருந்துகொண்டு என் வேலையைச் செய்துகொண்டிருப்பதற்குப் பதிலாக, இங்கிருந்து கொண்டே நான் அதைச் செய்து வரவேண்டும். ஓர் ஆண்டுக்குள் இந்தியாவுக்குத் திரும்புவது என்று நான் இனியும் எண்ணிக் கொண்டிருப்பதற்கில்லை. டிரான்ஸ்வால் சுப்ரீம் கோர்ட்டில் வக்கீலாக நான் பதிவு செய்துகொள்ள வேண்டியதே. இப்புதிய இலாகாவைச் சமாளித்துக்கொண்டுவிட முடியும் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. இதை நாம் செய்யவில்லையென்ருல், சமூகம் அடியோடு கொள்ளையடிக்கப்பட்டு விடுவதோடு இந்நாட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்டும் விடும்.

எனவே, நான் வேலையைச் செய்துகொண்டு போக ஆரம்பித்தேன். பிரிட்டோரியாவிலும் ஜோகன்னஸ்பர்க்கிலும் இருக்கும் இந்தியருடன் விஷயங்களை விவாதித்தேன். முடிவாக ஜோகன்னஸ்பர்க்கில் எனது அலுவலகத்தை அமைப்பது என்று தீர்மானித்தேன்.

33

கீதை

கீதையினிடம் இதற்கு முன்பே எனக்குப் பக்தி இருந்தது; அது என் உள்ளத்தைக் கவர்ந்தும் இருந்தது. அதை ஆழ்ந்து படிக்க வேண்டிய தன் அவசியத்தை இப்பொழுது உணர்ந்தேன். என்னிடம் கீதையின் இரண்டொரு மொழிபெயர்ப்புக்கள் இருந்தன. அவற்றைக் கொண்டு சமஸ்கிருத மூல நூலைப் புரிந்துகொள்ள முயன்றேன். தினம் இரண்டொரு சுலோகத்தை மனப்பாடம் செய்து விடுவது என்றும் தீர்மானித்தேன். எனது காலைக் கடன்களைச் செய்யும் நேரத்தை இதற்குப் பயன்படுத்திக் கொண்டேன். இவ்வேலைகளை முடிப்பதற்கு எனக்கு முப்பத்தைந்து நிமிடங்களாகும். பல் துலக்குவதற்குப் பதினைந்து நிமிடங்கள்; குளிக்க இருபது நிமிடங்கள். மேனாட்டு வழக்கத்தை அனுசரித்து, நின்றுகொண்டே பல் துலக்குவேன். அப்போது எதிரேயுள்ள சுவரில் கீதையின் சுலோகங்களை எழுதிய காகிதத்தை ஒட்டிவிடுவேன். நினைவுபடுத்திக்கொள்ள அவ்வப்போது அதைப் பார்த்துக்கொள்ளுவேன். அன்றாடம் மனப்பாடம் செய்துகொள்ள வேண்டிய சுலோகங்களை மனப்பாடம் செய்துகொள்ளுவதற்கும், முன்னால் மனப்பாடம் செய்திருந்த சுலோகங்களை நினைவுபடுத்திக் கொள்ளுவதற்கும் எனக்கு அந்த நேரம் போதுமானதாக இருந்தது. இவ்வாறு பதின்மூன்று அத்தியாயங்களை மனப்பாடம் செய்து விட்டதாக எனக்கு ஞாபகம். என்னைப் பொறுத்தவரையில், எனக்கு வழிகாட்டும் தவறாத் துணையாகக் கீதை ஆகிவிட்டது.

அபரிக்கிரகம் (உடைமை வைத்துக்கொள்ளாமை), சமபாவம் (சமத்துவம்) போன்ற சொற்கள் என் உள்ளத்தைக் கவர்ந்தன. அந்தச் சமபாவத்தை எப்படி வளர்ப்பது, எப்படிப் பாதுகாப்பது என்பதே பிரச்சினை.

எனக்கு இருப்பவற்றை யெல்லாம் விட்டுவிட்டுக் கடவுளைப் பின் பற்ற வேண்டுமா? இதற்கெல்லாம் உடனே நேரான பதில் கிடைத்தது. 'என்னிடம் இருப்பவைகளை யெல்லாம் நான் துறந்து விட்டாலன்றிக் கடவுள் நெறியை நான் பின்பற்ற முடியாது' என்பதே அந்தப் பதில். உடனே நான் ரேவாசங்கர்பாய்க்கு எழுதி, இன்ஷூரன்ஸுக்கு மேற்கொண்டு பணம் கட்ட வேண்டாம் என்று அறிவித்தேன். இதுவரை கட்டிய பணத்தில் கிடைக்கக் கூடியதைப் பெறப் பார்க்கும்படியும், இல்லாவிட்டால் அத்தொகையைப் போனதாகவே வைத்துக் கொள்ளும்படியும் எழுதினேன். எனக்குத் தந்தையேபோல் இருந்து வந்தவரான என் சகோதரருக்கும் கடிதம் எழுதினேன். அதுவரையில் நான் மிச்சமாக வைக்க முடிந்ததை யெல்லாம் நான் அவருக்கே கொடுத்துவிட்டதாகவும், இனி என்னிடமிருந்து அவர் வேறு எதுவும் எதிர்பார்ப்பதற்கு இல்லை என்றும், மேற்கொண்டும் என்னிடம் ஏதாவது மீதமிருக்குமானால் அதை இந்திய சமூகத்தின் நன்மைக்காகவே செலவிட வேண்டியிருக்கிறது என்றும் அவருக்கு விளக்கினேன்.

கட்டுரைகள் எழுதுக

1. காந்திஜி கீதையை மனப்பாடம் செய்த விதத்தைக் கூறுக.
2. சொத்து வைத்துக்கொள்ளக்கூடாது என்ற கீதையின் உபதேசத்தினால் காந்திஜியிடம் ஏற்பட்ட மாறுதல் என்ன?

34

ஒரு நூலின் மந்திர சக்தி

ஸ்ரீ போலக் என் முழு நம்பிக்கைக்கும் பாத்திர மானவர் ஆகிவிட்டார். என்னை வழியனுப்ப ஸ்டேஷனுக்கு வந்திருந்தார், பிரயாணத்தின்போது படிக்க எனக்கு ஒரு புத்தகம் கொடுத்துவிட்டுப் போனார். அது எனக்குப் பிடித்தமான புத்தகமாக இருக்கும் என்றும் சொன்னார். ரஸ்கின் எழுதிய 'கடையனுக்கும் கதி மோட்சம்' என்ற நூலே அது.

இந்த நூலைப் படிக்க ஆரம்பித்த பின் நடுவில் கீழே வைக்கவே முடியவில்லை. அது என் உள்ளம் முழுவதையும் கவர்ந்து கொண்டு விட்டது. ஜோகன்ஸ்பர்க்கிற்கும் டர்பனுக்கும் இருபத்து நான்கு மணி நேரப் பிரயாணம். ரெயில் அங்கே மாலையில் போய்ச் சேர்ந்தது. அன்றிரவு என்னால் தூங்கவே முடியவில்லை. அந்நூலில் கண்ட இலட்சியங்களுக்கு ஏற்ற வகையில் என் வாழ்க்கையை மாற்றிக்கொண்டு விடுவது என்று தீர்மானித்தேன்.

ரஸ்கினுடைய இம் மகத்தான நூலில் என் உள்ளத்தில் உறுதிப்பட்டிருந்த கொள்கைகள் பிரதிபலித்திருப்பதை நான் கண்டுகொண்டதாகவே நினைக்கிறேன். அதனால் தான் அது என்னை ஆட்கொண்டதோடு என் வாழ்க்கையையும் மாற்றிக்கொள்ளும்படி செய்தது.

'கடையனுக்கும் கதிமோட்சம்' என்ற நூல் பின்வருபவைகளைப் போதிக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது:

1. எல்லோருடைய நலனில்தான் தனிப்பட்டவரின் நலனும் அடங்கியிருக்கிறது.

2. தங்கள் உழைப்பினால் ஜீவனோபாயத்தைத் தேடிக்கொள்ளுவதற்கு எல்லோருக்குமே ஒரே மாதிரி யான உரிமை இருப்பதால், க்ஷவரத் தொழிலாளியின் வேலைக்கு இருக்கும் அதே மதிப்புத்தான் வக்கீலின் வேலைக்கும் உண்டு.

3. ஒரு பாட்டாளியின் வாழ்க்கையும், அதாவது நிலத்தில் உழுது பாடுபடும் குடியானவரின் வாழ்க்கையும், கைத்தொழில் செய்பவரின் வாழ்க்கையுமே வாழ்வதற்கு உகந்த மேன்மையான வாழ்க்கைகள்.

இவைகளில் முதலில் கூறப்பட்டதை நான் அறிவேன். இரண்டாவதாகக் கூறப்பட்டிருந்ததை அரைகுறையாகவே அறிந்துகொண்டிருந்தேன். மூன்றாவதாகக் கூறப்பட்டதோ, என் புத்தியில் தோன்றவே இல்லை. இரண்டாவதும் மூன்றாவதும், முதலாவதாகக் கூறப்பட்டிருப்பதிலேயே அடங்கியிருக்கின்றன என்பதைக் 'கடையனுக்கும் கதிமோட்சம்' பட்டப்பகல் போல் எனக்கு வெட்ட வெளிச்சமாகி விடும்படி செய்தது. பொழுது புலர்ந்ததும் நான் எழுந்து இந்தக் கொள்கையை நடைமுறையில் கொண்டுவரத் தயாரானேன்.

கட்டுரைகள் எழுதுக

1. ரஸ்கின் எழுதிய 'கடையனுக்கும் கதி மோட்சம்' என்ற நூலிலிருந்து காந்திஜி அறிந்துகொண்ட படிப்பினைகள் யாவை?

2. காந்திஜியின் பிற்கால நடவடிக்கைகளைக் குறித்து நீங்கள் அறிந்திருப்பதில், எந்தெந்த வகைகளில் அந்தப் படிப்பினைகளை அனுசரித்து அவர் நடந்திருக்கிறார் என்பதைக் கூறுக.

35
போனிக்ஸ் குடியிருப்பு

எல்லாவற்றையும் குறித்து ஸ்ரீ வெஸ்ட்டுடன் பேசினேன். 'கடையனுக்கும் கதிமோட்சம்' என்ற நூல் என் உள்ளத்தில் உண்டாக்கியிருக்கும் மாறுதலை அவருக்கு விவரித்துச் சொன்னேன். 'இந்தியன் ஒப்பீனியன்' பத்திரிகையை ஒரு பண்ணைக்கு மாற்றிவிட வேண்டும், அப்பண்ணையில் ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும், வாழ்க்கைக்கு வேண்டிய ஒரே மாதிரியான ஊதியத்தை எல்லோரும் பெறவேண்டும், ஓய்வு நேரங்களில் அச்சக வேலையைக் கவனிக்க வேண்டும் என்று ஒரு யோசனையை அவரிடம் கூறினேன். இந்த யோசனையை ஸ்ரீ வெஸ்ட் அங்கீகரித்தார். எந்த நிறத்தினராக இருந்தாலும், எந்த நாட்டினராக இருந்தாலும், ஒவ்வொருவருக்கும் மாத ஊதியம் மூன்று பவுன் தான் என்றும் நிர்ணயிக்கப்பட்டது.

இவ்விதம் போனிக்ஸ் குடியிருப்பு 1904-ல் ஆரம்பமாயிற்று. எவ்வளவோ கஷ்டங்களெல்லாம் ஏற்பட்ட போதிலும் 'இந்தியன் ஒப்பீனியன்' அங்கிருந்தே பிரசுரிக்கப்பட்டு வருகிறது.

வருங்காலத்தில் இந்தியாவுக்குத் திரும்புவது என்ற நம்பிக்கையை யெல்லாம் இப்பொழுது அடியோடு கைவிட்டுவிட்டேன். ஓர் ஆண்டில் திரும்பி வந்துவிடுவேன் என்று என் மனைவிக்கு வாக்களித்திருந்தேன். நான் திரும்புவதற்கான ஏது எதுவுமில்லாமலேயே அந்த ஓராண்டும் முடிந்துவிட்டது. ஆகையால், அவளையும் குழந்தைகளையும் வரவழைத்துக்கொள்வது என்று தீர்மானித்தேன்.

36

ஜூலுக் கலகம்

ஜோகன்னஸ்பர்க்கில் நான் நிலை பெற்றுவிட்டேன் என்று நினைத்த பிறகும் எனக்கு நிலையான வாழ்க்கை ஏற்படவில்லை. இனிமேல் கொஞ்சம் அமைதியாக இருக்க முடியும் என்று நான் எண்ணிய சமயம், எதிர் பாராத ஒரு சம்பவம் நிகழ்ந்தது. நேட்டாலில் 'ஜூலுக் கலகம்' ஆரம்பமாயிற்று என்று பத்திரிகைகளில் செய்தியைப் படித்தேன். ஜூலுக்களிடம் எனக்கு எந்த விதமான விரோதமும் இல்லை. அவர்கள் இந்தியருக்குத் தீமை செய்து விடவுமில்லை. 'கலகம்' என்று சொல்லப் பட்டதைக் குறித்து எனக்குச் சந்தேகம் இருந்தது. ஆனால், பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் உலகத்தின் நன்மைக் காகவே இருக்கிறது என்று நான் அப்பொழுது நம்பி னேன்.

நேட்டாலுடன் நான் நெருங்கிய தொடர்பு கொண் டவன். ஆகையால், என்னை அதன் பிரஜையாகவே கருதி னேன். எனவே, அவசியமானால் இந்திய வைத்தியப் படை ஒன்றை அமைக்க நான் தயாராக இருக்கிறேன் என்று அறிவித்துக் கவர்னருக்கு எழுதினேன். என் யோசனையை ஏற்றுக்கொண்டு அவர் உடனே பதில் எழுதினார்.

டர்பனுக்குச் சென்று, ஆள் தேவை என்று கோரிக்கை வெளியிட்டேன்.

எனக்கு ஓர் அந்தஸ்தை அளிப்பதற்காகவும், வேலை எளிதாக நடப்பதற்காகவும், அப்பொழுது இருந்த சம் பிரதாயத்தை அனுசரித்தும், பிரதம வைத்திய அதிகா-

என்னைத் தற்காலிக சார்ஜன்டு மேஜராக நியமித்தார். நான் தேர்ந்தெடுத்த மூவரை சார்ஜன்டுகளாகவும், கார்ப் பொரலாகவும் நியமித்தார். அவ்வேலைகளுக்குரிய ஆடைகளையும் அரசாங்கத்தினர் எங்களுக்கு அளித்தனர். எங்கள் படை ஆறு வாரம் சேவை செய்தது. எங்களுடைய முக்கியமான வேலை, காயமடைந்த ஜுலுக்களுக்குப்பணிவிடை செய்வதே என்று தலைமைக் காரியாலயத்திற்குப் போனதும் நான் அறிந்து ஆனந்தமடைந்தேன். அங்கிருந்த வைத்திய அதிகாரி எங்களை வரவேற்றார். காயமடைந்த ஜுலுக்களுக்கு வெள்ளைக்காரர்கள் மனமாரப் பணிவிடைகள் செய்வதில்லை என்றும், அவர்கள் புண்கள் அழுகிக்கொண்டு வருகின்றன என்றும், என்ன செய்வதென்று தெரியாமல் தாம் திகைத்துக்கொண்டிருந்ததாகவும் அந்த அதிகாரி கூறினர். நாங்கள் வந்தது, ஒரு பாவமும் அறியாத ஜுலுக்களுக்குத் தெய்வ சகாயம் போல் ஆயிற்று என்று அவர் ஆனந்தம் அடைந்தார்.

கட்டுரைகள் எழுதுக

1. ஜுலு கலகத்தின்போது காந்திஜி செய்த உதவி என்ன?
2. அச்சமயத்திலும், போயர் யுத்தத்தின்போதும் அவர் செய்த சேவைகள், பிற்கால வேலைகளுக்கு அவருக்குப் பயிற்சிகளாக இருந்தன என்று சொல்லலாமா? எந்த வழியில்? ஆசிரமங்களில் அவர் செய்து வந்த வேலைகளைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பதிலிருந்து அதைக் கூறுக.

37

கஸ்தூரிபாயின் தீரம்

என் மனைவி முதல் முறை கடுமையாக நோயுற்றாள். ரண சிகிச்சை செய்வது அவசியம் என்று ஒரு வைத்திய நண்பர் ஆலோசனை கூறினர். என் மனைவி முதலில் கொஞ்சம் தயங்கினளெனினும் பிறகு சம்மதித்தாள். அவள் அதிகப் பலவீனமாக இருந்ததால் மயக்க மருந்து கொடுக்காமல் டாக்டர் ரண சிகிச்சை செய்யவேண்டி இருந்தது. சிகிச்சை வெற்றிகரமானதாயிற்று. ஆனல், அவள் அதிக நோவை அனுபவிக்க நேர்ந்தது. நானே அதிசயிக்கத்தக்க தீரத்துடன் அதை அவள் சகித்துக்கொண்டாள். டாக்டரும், அவருக்குத் தாதியாக இருந்து பணிவிடை செய்த அவருடைய மனைவியும் அதிகக் கவனத்துடன் அவளைப் பார்த்துக் கொண்டார்கள். இது டர்பனில் நடந்தது. பிறகு நான் ஜோகன்னஸ்பர்க் போக டாக்டர் அனுமதித்தார். 'அவளைக் குறித்துக் கவலைப்பட வேண்டாம்' என்றும் சொன்னர்.

ஆனல், அவளுடைய உடல்நிலை அதிக மோசமாகி விட்டது என்று சில தினங்களில் எனக்குக் கடிதம் வந்தது. படுக்கையில் உட்காருவதற்குக்கூட அவளுக்குப் பலமில்லை என்றும், ஒரு சமயம் பிரக்ஞையில்லாமல் இருந்தாள் என்றும் அறிந்தேன். என்னுடைய சம்மதமில்லாமல் அவளுக்கு மதுவாவது, மாமிசமாவது கொடுக்கக் கூடாது என்பது டாக்டருக்குத் தெரியும். எனவே, ஜோகன்னஸ்பர்க்கில் இருக்கும் என்னுடன் டெலிபோனில் பேசி, அவளுக்கு மாட்டு மாமிச சூப் கொடுக்க அவர் அனுமதி கேட்டார். அதற்கு நான் அனுமதி கொடுக்க முடியாது என்று அவருக்குப் பதில்

சொல்லிவிட்டேன். ஆயினும், அது விஷயமாக அபிப்பிராயம் கூறக்கூடிய நிலையில் அவள் இருந்தால், அவளைக் கலந்து ஆலோசிக்கலாம் என்றும், அவள் இஷ்டம் போல் செய்து கொள்ளலாம் என்றும் சொன்னேன். ஆனால், டாக்டரோ, "இவ் விஷயத்தில் நோயாளியின் விருப்பத்தைக் கேட்க நான் மறுக்கிறேன். நீங்கள் தான் இதில் அபிப்பிராயம் கூற வேண்டும். நான் கொடுக்க விரும்பும் ஆகாரத்தைக் கொடுக்கும் சுதந்திரத்தை எனக்கு அளிக்க நீங்கள் மறுப்பதானால், உங்கள் மனைவியின் உயிருக்கு நான் பொறுப்பாளியாகமாட்டேன்" என்றார்.

அன்றே ரெயிலில் டர்பனுக்குப் புறப்பட்டேன். அங்கே போனதும் டாக்டரைச் சந்தித்தேன். அவர் நிதானத்துடன் சமாசாரத்தை என்னிடம் கூறினார். "தங்களுடன் டெலிபோனில் பேசுவதற்கு முன்னாலேயே ஸ்ரீமதி காந்திக்கு மாட்டு மாமிச சூப் கொடுத்துவிட்டேன்" என்றார்.

"டாக்டர், நீங்கள் செய்தது பெரு மோசம்" என்றேன்.

"ஒரு நோயாளிக்கு மருந்தோ, ஆகாரமோ இன்னது கொடுப்பதென முடிவு செய்வதில் மோசம் என்பதற்கே இடமில்லை. நோயுற்றிருப்போரையோ, அவர்கள் உறவினரையோ இவ்விதம் ஏமாற்றி விடுவதன் மூலம் நோயாளியின் உயிரைக் காப்பாற்ற முடிவதாயின், டாக்டர்களாகிய நாங்கள் ஏமாற்றுவதையே புண்ணியமாகக் கருதுகிறோம்" என்றார் டாக்டர்.

அதைக் கேட்டதும் நான் பெரிதும் மனவேதனை அடைந்தேன். என்றாலும், அமைதியுடன் இருந்தேன். டாக்டர் நல்லவர்; என் சொந்த நண்பர். அவருக்கும் அவருடைய மனைவிக்கும் நான் எவ்வளவோ கடமைப்

பட்டிருக்கிறேன். என்ருலும், அவருடைய வைத்திய தருமத்தைச் சகித்துக்கொள்ள நான் தயாராயில்லை.

"டாக்டர், இப்பொழுது என்ன செய்வதாக உத்தேசம் என்பதைச் சொல்லுங்கள். என் மனைவி சாப்பிட விரும்பினலன்றி, என் மனைவிக்கு ஆட்டிறைச்சி அல்லது மாட்டிறைச்சி கொடுப்பதை நான் அனுமதிக்கவே மாட்டேன். இதனல், அவள் இறந்துவிட நேர்ந்தாலும் சரிதான்" என்றேன்.

"உங்களுடைய தத்துவத்தை நீங்கள் தாராளமாக வைத்துக்கொள்ளுங்கள். உங்களுடைய மனைவி என்னிடம் சிகிச்சையில் இருக்கும் வரையில் நான் விரும்பும் எதையும் அவருக்குக் கொடுக்கும் உரிமை எனக்கு இருக்க வேண்டும். இது உங்களுக்குப் பிடிக்கவில்லையானல், அவரை அழைத்துக்கொண்டு போய்விடும்படியே வருத்தத்துடன் நான் கூறவேண்டியிருக்கும். என் வீட்டில் அவர் சாகப் பார்த்துக்கொண்டிருக்கமுடியாது" என்ருர் டாக்டர்.

என் புதல்வர்களில் ஒருவனும் என்னுடன் இருந்தான் என்று நினைக்கிறேன். என் கருத்தை அவனும் முற்றும் ஆதரித்தான். தன் தாயாருக்கு மாட்டு மாமிச சூப் கொடுக்கக் கூடாது என்ருன். பிறகு நான் கஸ்தூரிபாயிடமே இதைக் குறித்துப் பேசினேன். உண்மையில் அவள் அதிகப் பலவீனமாக இருந்தாள். இதுபற்றிக் கலந்து ஆலோசிக்கும் நிலையிலும் அவள் இல்லை. என்ருலும், அவளுடன் ஆலோசிக்க வேண்டியது என் வருந்தத்தக்க கடமை என்று எண்ணினேன். டாக்டரும் நானும் பேசிக்கொண்டிருந்த விவரத்தை அவளிடம் கூறினேன். அவள் தீர்மானமாகப் பதில் சொல்லிவிட்டாள். "நான் மாட்டு மாமிச சூப் சாப்பிடமாட்டேன். இவ்வுலகில் மானிடராய்ப் பிறப்பதே அரிது.

அப்படியிருக்க, இத்தகைய பாதகங்களினுல் இவ்வுடலை அசுத்தப்படுத்திக்கொள்ளுவதைவிட உங்கள் மடியி லேயே இறந்துபோய்விட நான் தயார்'' என்ருள்.

அவளுக்குச் சொல்லிப் பார்த்தேன். என்னைப் பின் பற்றித் தான் நடக்கவேண்டும் என்ற கட்டாயம் எது வும் இல்லை என்றேன். மதுவையும் மாமிசத்தையும் மருந்தாகச் சாப்பிடுவதில் தவறு இருப்பதாக நினைக் காமல் நண்பர்களான ஹிந்துக்கள் சிலர் சாப்பிட்டிருக் கும் உதாரணங்களையும் அவளுக்கு எடுத்துக் கூறி னேன். அவள் பிடிவாதமாக இருந்தாள்; "தயவு செய்து என்னை இங்கிருந்து அழைத்துச் சென்றுவிடுங்கள்" என்ருள்.

ஆகவே, அந்த இடத்தைவிட்டு உடனே புறப்பட்டு விட முடிவு செய்தோம். மழை தூறிக்கொண்டிருந்தது. ரெயில்வே ஸ்டேஷனுக்குக் கொஞ்ச தூரம் போக வேண் டும். டர்பனிலிருந்து போனிக்ஸுக்கு ரெயிலில்போய், அங்கிருந்து எங்கள் குடியிருப்புக்கு இரண்டரை மைல் போகவேண்டும். நான் பெரிய அபாயகரமான காரியத் தையே மேற்கொண்டேன் என்பதில் சிறிதும் சந்தேக மில்லை. ஆனுல், கடவுளிடம் நம்பிக்கை வைத்து இவ் வேலையில் இறங்கினேன். முன் கூட்டிப் போனிக்ஸுக்கு ஓர் ஆள் அனுப்பினேன். ஓர் ஏணை, ஒரு புட்டி சூடான பால், ஒரு சுடு நீர்ப் புட்டி ஆகியவைகளுடன் ஸ்டேஷ னுக்கு வந்து எங்களைச் சந்திக்குமாறு வெஸ்ட்டுக்குச் சொல்லியனுப்பினேன். ஏணையில் வைத்துக் கஸ்தூரி பாயைத் தூக்கிச் செல்ல ஆறு ஆட்களும் வேண்டும் என்று அறிவித்தேன். அடுத்த ரெயிலில் கஸ்தூரிபாயை அழைத்துச் செல்ல ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போக ஒரு ரிக்ஷாவை அமர்த்தினேன். அபாய நிலையிலிருந்த அவளை அதில் வைத்துக்கொண்டு புறப்பட்டேன்.

கஸ்தூரிபாயை உற்சாகப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அதற்குப் பதிலாக அவள் எனக்கு ஆறுதல் கூறினுள். ''எனக்கு ஒன்றும் நேர்ந்துவிடாது. நீங்கள் கவலைப்படாதீர்கள்'' என்ருள்.

பல நாட்களாக ஆகாரமே இல்லாததனுல் அவள் எலும்பும் தோலுமாக இருந்தாள். ஸ்டேஷன் பிளாட்பாரம் மிகப் பெரியது. ரிக்ஷாவைப் பிளாட்பாரத்திற்குள் கொண்டு போக முடியாததனுல் கொஞ்ச தூரம் நடந்துதான் ரெயில் நிற்கும் இடத்திற்குச் செல்ல வேண்டும். ஆகையால், அவளை என் கைகளிலேயே தூக்கிக் கொண்டு போய் ரெயில் வண்டியில் ஏற்றினேன். போனிக்ஸ் ஸ்டேஷனிலிருந்து ஏணையில் வைத்துக் கொண்டு போனேம். அங்கே நீர்ச் சிகிச்சை செய்ததில் கொஞ்சம் கொஞ்சமாகப் பலம் பெற்று வந்தாள்.

கட்டுரை எழுதுக

'மாட்டிறைச்சி சூப்' சாப்பிட முடியாது என்று கஸ்தூரிபா மறுத்துவிட்டதையும், இதில் காந்திஜியின் சம்பந்தத்தையும் பற்றிய கதையைக் கூறுக.

38

குடும்ப சத்தியாக்கிரகம்

ரண சிகிச்சைக்குப் பிறகு குணமடைந்து வந்த கஸ்தூரிபாய் திரும்பவும் நோய்வாய்ப்பட்டாள். என்னுடைய சிகிச்சை முறைகளை அவள் எதிர்க்கவில்லையாயினும் அவற்றில் அவளுக்கு அவ்வளவாக நம்பிக்கையில்லை. ஆனாலும், வெளி வைத்திய உதவிவேண்டும் என்று அவள் கேட்கவே இல்லை. ஆகவே, என் வைத்திய முறைகளெல்லாம் பயன்படாது போய்விட்டதால் உப்பையும் பருப்பு வகைகளையும் தள்ளும்படி அவளைக் கேட்டுக் கொண்டேன். தக்க ஆதாரங்களையெல்லாம் எடுத்துச் சொல்லி நான் எவ்வளவோ விவாதித்துப் பார்த்தும் இதற்கு அவள் சம்மதிக்க மறுத்து விட்டாள். கடைசியாக அவள் எனக்கு ஒரு சவாலும் விட்டாள். உப்பையும் பருப்பையும் விட்டுவிடுமாறு எனக்கு யாராவது யோசனை கூறினாலும் அவற்றை என்னாலும் விட்டுவிட முடியாது என்றாள். இதைக் கேட்டு நான் வருந்தினேன். என்றாலும் அதே சமயத்தில் மகிழ்ச்சியும் அடைந்தேன். அவளிடம் எனக்குள்ள அன்பைப் பொழிவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது என்பதே மகிழ்ச்சிக்குக் காரணம். நான் அவளிடம் சொன்னேன்: "நீ தவறாக நினைத்துவிட்டாய்; நான் நோயுற்று இருந்து, இவற்றையும் மற்றவைகளையும் தவிர்த்துவிடுமாறு வைத்தியர் யோசனை கூறினால், கொஞ்சமும் தயங்காமல் அப்படியே செய்வேன். அது போகட்டும். வைத்திய ஆலோசனை எதுவும் இல்லாமலேயே, நீ விட்டாலும் விடாது போனாலும், உப்பையும் பருப்புக்களையும் ஓர் ஆண்டு நான் கைவிடுகிறேன்."

இதைக் கேட்டதும் அவள் திடுக்கிட்டுப் போனாள். மிகுந்த துயரத்தோடு அவள் கூறியதாவது: "தயவு செய்து என்னை மன்னித்துவிடுங்கள். உங்கள் இயல்பு தெரிந்திருந்தும் நான் இப்படி உங்களுக்குக் கோபம் மூட்டியிருக்கக் கூடாது. உப்பையும் பருப்பையும் சாப்பிடுவதில்லை என்று உறுதி கூறுகிறேன், கடவுள் ஆணை; உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். இந்த விரதத்தை மட்டும் நீங்கள் விட்டுவிடுங்கள். இப்படி நீங்கள் என்னைத் தண்டிக்கக் கூடாது."

"உப்பையும் பருப்பையும் சாப்பிடாமல் இருப்பது உனக்கு மிகவும் நல்லது. அவைகள் இல்லாமல் நீ நன்ருகவே இருப்பாய் என்பதில் எனக்குக் கொஞ்சமும் சந்தேகமில்லை. என்னைப் பொறுத்தவரையில், நான் நிச்சயமாக எடுத்துக் கொண்டுவிட்ட விரதத்தைக் கைவிட முடியாது. இது எனக்கும் நன்மையே செய்வது நிச்சயம். ஏனெனில், ஒரு கட்டுத் திட்டம், அது எக் காரணத்திஞல் ஏற்பட்டதாயினும், மனிதருக்கு நல்லதே. ஆகையால், என்னைப் பற்றிக் கவலைப்படாதே. இது எனக்கு ஒரு சோதனை. அதோடு நமது தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு இது உனக்கு ஒரு தார்மிக ஆதரவாகவும் இருக்கும்" என்றேன்.

எனவே, என்னை மாற்றுவதற்கில்லை என்று விட்டுவிட்டாள். "நீங்கள் மிகுந்த பிடிவாதக்காரரர். யார் சொன்ஞலும் கேட்கமாட்டீர்கள்" என்று கூறிக் கண்ணீர் வடித்து ஆறுதல் அடைந்தாள்.

இந்தச் சம்பவத்தைச் சத்தியாக்கிரகத்திற்கு ஓர் உதாரணமாகவே கொள்ள விரும்புவேன். என்னுடைய வாழ்க்கையின் இனிமையான நினைவுகளில் இதுவும் ஒன்று.

இதற்குப் பிறகு கஸ்தூரிபாயின் தேக நிலை வெகு வேகமாகக் குணமடைந்து வந்தது.

கட்டுரைகள் எழுதுக

1. எதிராளியின் மனத்தை மாற்றுவதற்காகத் தான் கஷ்டத்தை அனுபவிக்கத் தயாராக இருப்பது என்பதுதான் சத்தியாக்கிரகம். அப்படியானல், உப்பையும் பருப்பு வகைகளையும் சாப்பிடுவதைக் கஸ்தூரிபா விட்டுவிடும்படி செய்ய காந்திஜி அனுசரித்த முறையும் எப்படி சத்தியாக்கிரகமாகிறது என்பதைக் காட்டுக.
2. நீங்கள் எப்பொழுதாவது சத்தியாக்கிரகத்தை அனுசரித்திருக்கிறீர்களா? அனுசரித்திருந்தால் அதில் அடைந்த வெற்றி என்ன?

39

சத்தியாக்கிரகத்தின் உதயம்

"ஜூலு கலகம்" சம்பந்தமான எனது கடமைகளை முடித்துத் திரும்பியதும் நண்பர்களைப் போனிக்ஸில் சந்தித்துவிட்டு ஜொஹான்னஸ்பர்க் போய்ச் சேர்ந்தேன். அங்கு நான் மிகவும் ஆழ்ந்த அருவருப்புடன் 1906-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 22-ம் தேதி அரசாங்கத்தின் விசேச கெஜட்டில் பிரசுரமாயிருந்த அவசரச் சட்டத்தின் நகலைப் படித்தேன். அது தென்னாப்பிரிக்காவிலிருக்கும் இந்தியர்களை முற்றிலும் நாசமாக்கும். டிரான்ஸ்வாலில் குடியிருக்கும் உரிமை பெற்ற ஒவ்வோர் இந்திய ஆணும் பெண்ணும், எட்டு வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளும், ஆசியாவாசிகளின் பதிவாளரிடத்தில் தத்தம் பெயரைப் பதிவு செய்து, அப்பதிவுக்கு அத்தாட்சியைப் பெற வேண்டும். பதிவு செய்துகொள்ள விண்ணப்பம் செய்வோர், தங்கள் பழைய அனுமதிச் சீட்டுக்களைப் பதிவாளரிடத்தில் ஒப்படைத்து, விண்ணப்பங்களில் தங்கள் பெயர், முகவரி, சாதி, வயது முதலிய விவரங்களைக் குறிப்பிட வேண்டும். பதிவாளர் விண்ணப்பம் செய்வோருடைய உடம்பிலிருக்கும் முக்கியமான குறிகளை எழுதிக்கொள்வதுடன், அவர்களுடைய எல்லா விரல்களின் ரேகை முத்திரைகளையும் எடுக்க வேண்டும். குறிப்பிட்ட ஒரு தேதிக்கு முன் இவ்விதம் பதிவு செய்துகொள்ள விண்ணப்பம் தராத ஒவ்வோர் இந்தியரும் டிரான்ஸ்வாலில் குடியிருக்கும் சுதந்திரத்தை இழந்துவிடுவார். விண்ணப்பம் செய்யத் தவறினால் அது சட்டப்படி ஒரு குற்றமாகக் கருதப்படும். விண்ணப்பிக்கத் தவறிய

வர்களுக்குக் கோர்ட்டார் விரும்பினல் அபராதம் விதிக்கலாம்; அல்லது அவர்களைச் சிறைக்கு அனுப்பலாம்; அல்லது நாடு கடத்தலாம். பொதுச்சாலைகளில் நடந்து போய்க்கொண்டிருக்கும் எவரையும் தனது சர்டிபிகேட்டைக் காட்டுமாறு கேட்கலாம். போலீஸ் உத்தியோகஸ்தர்கள் சர்டிபிகேட்டுகளைச் சோதனை செய்வதற்காக தனிப்பட்ட எவர் வீட்டினுள்ளும் நுழையலாம். இம்மாதிரியான ஒரு சட்டத்தை சுதந்திரமான மனிதருக்கு விரோதமாக உலகில் எந்தப் பகுதியிலும் இயற்றி இருப்பதாக நான் கேள்விப்பட்டதே இல்லை.

அடுத்த நாள் முக்கியமான இந்தியர்களின் சிறு கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. அவர்களுக்கு அவசரச் சட்டத்தைச் சொல் சொல்லாகப் பிரித்து எடுத்துரைத்து விளக்கினேன். என்னைத் திடுக்கிடச் செய்தது போலவே அது அவர்களையும் திடுக்கிடச் செய்தது. அங்கே வந்திருந்தவர்கள் அனைவரும் நிலைமை எவ்வளவு மோசமானது என்பதை உணர்ந்தனர்; ஒரு பொதுக்கூட்டம் கூட்ட வேண்டுமென்றும் தீர்மானித்தனர்.

1906-ஆம் வருடம் செப்டெம்பர் மாதம் 21-ந்தேதி கூட்டம் நடந்தது. தீர்மானங்கள் எல்லாவற்றிலும் முக்கியமானது, பிரசித்தி பெற்ற அந்த நான்காவது தீர்மானமாகும். இந்தியர்களின் எதிர்ப்புக்கு விரோதமாய் அவசரச் சட்ட மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டால் இந்தியர்கள் அதற்குக் கீழ்ப்படிய மாட்டார்கள் என்றும், அப்படிக் கீழ்ப்படியாததால் வரும் எத்தகைய தண்டனையையுப் ஏற்றுக்கொள்ளுவார்களென்றும் அத்தீர்மானம் கூறிற்று.

இயக்கத்திற்கு என்ன பெயர் கொடுப்பதென எங்களில் யாருக்கும் தெரியவில்லை. ஸ்ரீ மகன்லால் காந்தி 'சதாக்கிரகம்' என்ற வார்த்தையைச் சொன்னர். சதாக்

கிரகம் என்ருல் நல்ல விஷயத்தில் உறுதி என்று பொருள். அவ் வார்த்தை எனக்குப் பிடித்தது. ஆயினும், நான் எதிர்பார்த்த முழுக் கருத்தையும் அது தெரிவிக்கவில்லே. எனவே, அதைச் சத்தியாக்கிரகம் என்று திருத்தினேன். உண்மை (சத்தியம்) என்னும் வார்த்தையில் அன்பு என்னும் பொருள் மறைந்து நிற்கிறது. ஆக்ரஹ என்ருல் உறுதி. உறுதி சக்தியை உண்டாக்குவதால் சக்தி என்ற அர்த்தத்துடன் விளங்குகிறது. இவ்விதம் இந்திய இயக்கத்தைச் "சத்தியாக்கிரகம்" என்று கூற ஆரம்பித்தேன். அதாவது உண்மையிலிருந்தும் அன்பு அல்லது அகிம்சையிலிருந்தும் பிறந்த சக்தி என்பது அதன் பொருள். பாஸிவ் ரெஸிஸ்டன்ஸ் என்னும் சொற்ருெடரின் பிரயோகத்தை அதிலிருந்து விட்டுவிட்டேன்.

கட்டுரை எழுதுக

1. அகிம்சா எதிர்ப்பாகிய தமது இயக்கத்திற்கு 'சத்தியாக்கிரகம்' என ஏன், எப்படி காந்தியடிகள் பெயரிட்டார்? பாஸிவ் ரெஸிஸ்டன்ஸ் என்னும் பழைய பெயரை ஏன் விட்டுவிட்டார்?

40

சிறை வாசம்

சில தலைவர்கள் வெளியில் இருக்கும் வரை இயக்கத்தை ஒடுக்க இயலாதென ஆசிய வாசிகள் பகுதி அலுவலர்கள் கண்டுகொண்டார்கள். எனவே எங்களில் சிலரைக் கைது செய்தார்கள்.

நாங்கள் கைது செய்யப்பட்ட உடனே சிறைகளை நிரப்பி விடுவதென சமூகத்தினர் முடிவு செய்தனர்.

இவ்விதம் சுமார் இரு வாரங்கள் சிறையில் இருந்தோம். புதிதாக வந்தவர்கள் அரசாங்கத்துடன் சமரசத்திற்குப் பேச்சுக்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்று செய்தி கொண்டுவந்தார்கள். அச்சமாதானப் பேச்சின் முக்கிய அமிசங்களாவன: இந்தியர்கள் ஒரு சட்டத்தின் கீழ் அல்லாமல், தாங்களே பதிவு செய்து கொள்ள வேண்டும்; இப்புதிய சர்டிபிகேட்டுகளில் வேண்டிய விவரங்களை இந்திய சமூகத்துடன் கலந்து அரசாங்கம் நிருணயிக்க வேண்டும்; இந்தியர்களில் பெரும்பான்மையோர் தாங்களாகவே பதிவு செய்துகொண்டார்களானல், அரசாங்கத்தார் கறுப்புச் சட்டத்தை ரத்து செய்வதுடன் சுயேச்சையாகச் செய்யப்பட்ட பதிவுகளைச் சட்ட பூர்வமாக்கச் சர்க்கார் ஏற்பாடுகளைச் செய்யும்.

ஜெனரல் ஸ்மட்சைச் சந்திப்பதற்காக என்னைப் பிரிட்டோரியாவுக்கு அழைத்துச் சென்றனர். அவருடன் விவாதம் நடந்தது. நான் கூறிய மாறுதல்களுடன் ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கைதிகள் விடுதலையாயினர். நம் தேசவாசிகளுக்கு ஒப்பந்தத்தின் ஷரத்

துக்களை விளக்குவதற்காகப் பல இடங்களுக்கும் சென்றேன்.

கட்டுரை எழுதுக

ஆசியப் பதிவுச் சட்டத்தை எதிர்த்துச் சத்தியாக்கிரகம் என்ன உருவம் கொண்டது? அதன் பயனுக என்ன சமரசம் ஏற்பட்டது?

41

தாக்குதல்

கை ரேகைகளைக் கொடுக்க இசைந்ததற்காக, இரண்டு பட்டாணியர்கள் என்மீது கோபம் கொண்டார்கள். முதல் நாளன்று தலைவர்கள்தான் முதலில் பதிவுப் பத்திரங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஏற்பாடாகி யிருந்தது. நான் எனது காரியாலயத்திற்குச் சென்றபோது, —சத்தியாக்கிரக சங்கக் காரியாலயமும் அதுதான்—ஒரு பட்டாணியரான மீர் ஆலமும், அவரது தோழர்களும் கட்டடத்திற்கு வெளியில் நின்றுகொண்டிருப்பதைக் கண்டேன். மீர் ஆலம் நீண்டகாலமாக எனது கட்சிக்காரர். அவரது எல்லா விஷயங்களை யொட்டியும் அவர் என்னுடைய ஆலோசனையையே நாடுவது வழக்கம். அவர் பூரணமாக ஆறு அடி உயரமுள்ளவர்; பருத்த, பலம் வாய்ந்த உடற்கட்டுள்ளவராகவும் இருந்தார். மீர் ஆலம் காரியாலயத்திற்கு உள்ளே இருப்பதற்குப் பதிலாக வெளியே நின்றுகொண்டிருந்ததை நான் பார்த்தது அதுதான் முதல் தடவையாகும். அவர் கண்கள் என் கண்களைச் சந்தித்தன வெனினும், அவர் எனக்கு சலாம் வைக்காமல் இருந்ததும் அதுதான் முதல் தடவையாகும். நான் அவருக்கு சலாம் வைத்தேன். உடனே பதிலுக்கு அவரும் சலாம் வைத்தார். எனினும், அவரது வழக்கமான புன்முறுவல் அன்று அவரது முகத்தில் இல்லை. அவரது கோபமான கண்களை நான் கவனித்து, அந்த உண்மையை மனத்தில் குறித்துக் கொண்டேன். ஏதோ விபரீதம் நேரப்போகிறதென நான் நினைத்தேன். அக்கிராசனர் ஸ்ரீ யூசப் மியானும், மற்ற நண்பர்களும் வந்து சேர்ந்தனர். நாங்கள் ஆசியாக்

காரர் அலுவலகத்திற்குப் புறப்பட்டோம். மீர் ஆலமும் அவர் தோழர்களும் எங்களைப் பின்தொடர்ந்தார்கள். ரிஜிஸ்திரேஷன் காரியாலயத்துக்குச் செல்ல இன்னும் மூன்று நிமிஷங்களுக்குமேல் எனக்கு வேண்டியிராது. அச்சமயத்தில் மீர் ஆலம் என்னிடம் வந்து, 'எங்கே போய்க் கொண்டிருக்கிறீர்கள் ?' என்று கேட்டார்.

'பத்து விரல்களின் ரேகைகளையும் வைத்து நான் பதிவுப்பத்திரம் ஒன்று எடுக்க உத்தேசித்திருக்கிறேன். நீங்கள் என்னுடன் வந்தால், இரண்டு கட்டை விரல்களை மாத்திரம் வைத்து உங்களுக்கு முதலில் ஒரு பத்திரம் எடுத்துத் தருகிறேன். பிறகு நான் என் கைரேகைகளை வைத்து எனக்கு ஒன்று எடுத்துக் கொள்ளுகிறேன்' என்று பதில் அளித்தேன்.

கடைசி வாக்கியத்தை நான் முடித்ததுதான் தாமதம், பின்புறத்திலிருந்து என் தலையின்மீது ஒரு கனமான தடியடி விழுந்தது. உடனே 'ஹே ராமா' என்ற வார்த்தைகளைக் கூறிக்கொண்டே நான் மூர்ச்சையடைந்து தரையில் விழுந்துவிட்டேன். அதன்பின் என்ன நடந்தது என்பதே எனக்குத் தெரியாது. ஆனால், மீர் ஆலமும் அவர் தோழர்களும் என்னை மேற்கொண்டு அடிமேல் அடி அடித்தார்கள், உதைத்தார்கள் அந்த அடிகளும் உதைகளும் என்மீது விழாமல் யூசப் மியானும் தம்பி நாயுடும் தடுத்தார்கள். அதன் விளைவாக அவர்களும் அடிபட நேர்ந்தது. அவ்வழியாகச் சென்றுகொண்டிருந்த சில ஐரோப்பியர்கள் அந்தச் சந்தடியைக் கேட்டு, அந்த இடத்திற்கு ஓடி வந்தார்கள். அதைக் கண்டு மீர் ஆலமும் அவர் தோழர்களும் ஓட்டம் பிடித்தார்கள் என்றாலும், ஐரோப்பியர்கள் அவர்களைப் பிடித்துவிட்டனர். இதன் மத்தியில் போலீசார் வந்து அவர்களைப் பிடித்துச் சென்றனர். என்னை, ஸ்ரீ

ஜே. ஸி. ஜிப்சனின் சொந்த அலுவலகத்திற்குத் தூக்கிச் சென்றூர்கள். எனக்கு மீண்டும் பிரக்ஞை வந்தபோது, ஸ்ரீ டோக் குனிந்து என்னைக் கவனித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தேன். 'உங்களுக்கு உடம்பு எப்படி இருக்கிறது?' என்று அவர் என்னைக் கேட்டார்.

'எனக்கு எல்லாம் சரியாக இருக்கிறது. ஆனல் பற்களிலும், விலா எலும்புகளிலும் வலி இருக்கிறது. மீர் ஆலம் எங்கே இருக்கிறூர்?' என்றேன்.

'மற்றவர்களுடன் அவரும் கைது செய்யப்பட்டிருக்கிறூர்'.

'அவர்களை விடுதலை செய்துவிட வேண்டும்'.

'அதெல்லாம் மிகவும் சரிதான். இப்போது நீங்கள் ஓர் அந்நியரின் அலுவலகத்தில் இருக்கிறீர்கள். உங்கள் உதட்டிலும் கன்னத்திலும் கடுமையான காயங்கள் ஏற்பட்டுள்ளன. போலீசார் உங்களை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லத் தயாராக இருக்கிறூர்கள். ஆனல், நீங்கள் என் வீட்டிற்கு வந்தால் நானும் ஸ்ரீமதி டோக்கும் எங்களால் முடிந்த வரையில் உங்களைக் கவனித்து வருவோம்.'

'ஆமாம், தயவு செய்து என்னை உங்கள் வீட்டுக்கு அழைத்துச் செல்லுங்கள். போலீசாரின் ஆதரவுக்காக அவர்களுக்கு வந்தனம் அளிக்கிறேன். எனினும், உங்களுடன் செல்லவே நான் விரும்புகிறேன் என்று அவர்களிடம் சொல்லுங்கள்.'

அப்போது அந்த இடத்திற்கு, ஆசியாக்காரர் பதிவு ரிஜிஸ்திரார் ஸ்ரீ சாம்னியும் வந்து சேர்ந்தார். ஸ்மிட் தெருவில் உள்ள இந்த நல்ல மனிதரான பாதிரியாரின் (ஸ்ரீ டோக்) வீட்டிற்கு என்னை ஒரு வண்டியில் அழைத்துச் சென்றூர்கள். டாக்டரும் அழைத்து வரப்பட்டார். இதன் மத்தியில் நான் ஸ்ரீ சாம்னியிடம் கூறினேன்

'நான் உங்கள் அலுவலகத்திற்கு வந்து பத்து விரல் முத்திரைகளை வைத்து, முதல் பதிவுப் பத்திரத்தை எடுத்துக்கொள்ள விரும்பினேன். ஆனால், கடவுளின் சித்தம் வேறு விதமாக இருந்தது. எனினும், அதன் சம்பந்தமான காகிதங்களைக் கொண்டு வரும்படியும், உடனே என்னைப் பதிவு செய்துகொள்ளும்படியும் நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். எனக்கு முன் யாரும் பதிவு செய்துகொள்ளும்படி நீங்கள் விட்டுவிடமாட்டீர்கள் என்று நம்புகிறேன்.'

ஸ்ரீ சாம்னி கேட்டார்: 'அதற்கு அவசரம் என்ன? டாக்டர் சீக்கிரத்தில் இங்கே வருவார். நீங்கள் தயவு செய்து ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள். எல்லாம் சரியாகிவிடும். நான் மற்றவர்களுக்குப் பதிவுப் பத்திரங்கள் வழங்குகிறேன். ஆனால், உங்களுடைய பெயரை ஜாப்தாவின் முதல் ஸ்தானத்தில் விட்டு வைக்கிறேன்'.

நான் பதில் கூறினேன்: 'அப்படியல்ல. நான் உயிருடன் இருந்தால், கடவுளுக்கு விருப்பமிருந்தால் முதல் பத்திரத்தை எடுத்துக்கொள்ளுவதாக நான் பிரதிக்ஞை செய்திருக்கிறேன். ஆகையால், இப்போதே இங்கே காகிதங்களைக் கொண்டு வரும்படி வற்புறுத்துகிறேன்.'

இதன்மீது ஸ்ரீ சாம்னி காகிதங்களைக் கொண்டு வருவதற்காகச் சென்றார்.

மீர் ஆலமும் மற்றவர்களும் என்னைத் தாக்கியதற்காக நான் அவர்களைக் குற்றவாளிகளாகக் கருதவில்லை. அது எப்படியாயினும், அவர்கள் மீது வழக்குத் தொடரப்படுவதை நான் விரும்பவில்லை; எனக்காக அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் நான் நம்புகிறேன். இவ்விதம் அட்டர்னி ஜெனரலுக்குத் தந்தி கொடுப்பதே நான் இரண்டாவதாகச் செய்ய வேண்டிய காரியமாக இருந்தது. ஆனால், ஜோகன்னஸ்பர்க்கில் உள்ள

ஐரோப்பியர்கள் அட்டர்னி ஜெனரலுக்குக் கடுமையாக ஒரு கடிதம் எழுதினர்கள். குற்றவாளிகளுக்குத் தண்டனை கொடுக்கும் விஷயமாக காந்திஜியின் கருத்துக்கள் என்னவாயினும், அவற்றைத் தென்னுப்பிரிக்காவில் அமலுக்குக் கொண்டுவர முடியாது. அவ்விஷயமாக காந்தி எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காமல் இருக்கலாம், ஆனல், தாக்குதல் தனி நபருக்குச் சொந்தமான இடத்தில் நடக்கவில்லை; ஆனல், நெடுஞ்சாலையில் நடந்தது. எனவே, அது அரசாங்க சட்டத்துக்கு விரோதமான குற்றமாகும். பல ஆங்கிலேயர்கள் சாட்சியம் கூறவும் தயாராக இருக்கிருர்கள். எனவே, அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட வேண்டும் என்றெல்லாம் ஐரோப்பியர்கள் தங்கள் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்கள். அதன்மீது அட்டர்னி ஜெனரல் அவர்களைக் கைது செய்தார். மீர் ஆலமும் அவர் தோழர்களில் ஒருவரும் மூன்று மாதம் கடுங்காவல் தண்டனை அடைந்தார்கள். என்னை மாத்திரம் சாட்சியாக அழைக்கவில்லை.

நான் அக்கிராசனர் மூலம் சமூகத்திற்குக் கீழ்க்கண்டவாறு ஓர் அறிக்கை விடுத்து, பிரசுரிப்பதற்காக அதைப் பத்திரிகைகளுக்கும் அனுப்பினேன்.

'நான் செளகரியமாக இருக்கிறேன். ஸ்ரீ டோக் தம்பதிகள் சகோதரர் போலவும் சகோதரி போலவும் என்னைக் கவனித்து வருகிருர்கள். கூடிய சீக்கிரம் எனது கடமையை மேற்கொள்ளலா மென நம்புகிறேன்."

'இவ்வித நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் தாங்கள் என்ன செய்கிருேம் என்பதை அறியவில்லை. நான் தவறு இழைப்பதாக அவர்கள் நினைத்தார்கள். அவர்களுக்குத் தெரிந்த ஒரே வழியில் அவர்கள் வஞ்சம் தீர்த்துக்கொண்டுவிட்டார்கள். எனவே, அவர்களுக்கு எதிராக எவ்வித முறைகளையும் கைக்கொள்ள வேண்டாம் என்று நான் வேண்டிக்கொள்ளுகிறேன்.'

ஸ்ரீ சாம்னி காகிதங்களுடன் திரும்பிவந்தார். நான் எனது கைவிரல் முத்திரைகளை வைத்தேன். இருந்தாலும் வலியின்றி அவ்விதம் செய்ய முடியவில்லை. அப்போது ஸ்ரீ சாம்னியின் கண்களில் கண்ணீர் ததும்புவதை நான் பார்த்தேன். அவருக்கு எதிராகக் கசப்பான முறையில் நான் பல தடவை எழுதியுள்ளேன். எனினும், சம்பவங்களில் மனிதனின் உள்ளம் எவ்விதம் நெகிழ்ந்து விடுகிறது என்பதையே இது காட்டியது.

கட்டுரைகள் எழுதுக

1. மீர் ஆலம் என்பவரால் காந்திஜி தாக்கப்பட்டதைப்பற்றி விவரித்து எழுதுக.
2. மீர் ஆலம் தண்டிக்கப்படுவதை காந்திஜி ஏன் விரும்பவில்லை? காந்திஜியின் மன்னிப்பு, மீர் ஆலமின் மனத்தில் என்ன எண்ணத்தை உண்டாக்கியிருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

42

மீண்டும் சத்தியாக்கிரகம்

இந்தியர்கள் தாங்களாக வலுவில் முன்வந்து பதிவு செய்துகொண்டார்கள். எனவே, அரசாங்கம் கறுப்புச் சட்டத்தை ரத்துச் செய்து தங்கள் பங்கைச் செய்திருக்க வேண்டும். ஆனால், கறுப்புச் சட்டத்தை ரத்துச் செய்வதற்குப் பதிலாக ஜெனரல் ஸ்மட்ஸ் சட்டப் புத்தகத்தில் அச் சட்டத்தை நிலை நிறுத்தியதுடன், ஆசியாக்காரர்கள் பதிவு செய்து கொள்ளும் விஷயமாக மேற்கொண்டும் விதிகள் அடங்கிய ஒரு மசோதாவை சட்ட சபையில் கொண்டு வந்தார். அம் மசோதாவை வாசித்த போது நான் அதிர்ச்சியடைந்தேன்.

எனவே, சத்தியாக்கிரகிகளால் அரசாங்கத்திற்கு இறுதி எச்சரிக்கை ஒன்று அனுப்பப்பட்டது. அந்த அறிக்கை கூறியது இதுதான்: 'ஆசியாக்காரர் சட்டம் ரத்துச் செய்யப்படாவிட்டால், இந்தியர்கள் சேகரித்துள்ள பதிவுச் சட்டங்கள் எரிக்கப்படும். இந்தியர்கள் பணிவுடனும் ஆனால், உறுதியுடனும் பலாபலன்களை அனுபவிக்கத் தயாராக இருக்கிறார்கள்.'

பதிவுப் பத்திரங்களை எரிக்கும் சடங்கை பகிரங்கமாக நடத்துவதற்காக ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. கூட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாகும் சமயத்தில் அரசாங்கத்திடமிருந்து வந்த தந்தி ஒன்றை எடுத்துக் கொண்டு ஒரு தொண்டர் சைகிளில் வந்தார். இந்தியர் சமூகத்தின் தீர்மானத்தைக் குறித்துத் தாங்கள் வருந்துவதாகவும், தங்கள் நடவடிக்கை முறையை மாற்றிக் கொள்ளுவது இயலாத காரியம் என்றும் அத் தந்தியில்

குறிப்பிடப்பட்டிருந்தது. தந்தியை கூட்டத்தினருக்கு வாசித்துக் காட்டியபோது, பத்திரங்களை எரிக்கும் சுப கரமான சந்தர்ப்பம் தங்கள் கையிலிருந்து நழுவி விடா ததைக் குறித்து மகிழ்ச்சியடைவதுபோல், எல்லோரும் சந்தோஷ ஆரவாரத்துடன் அதைக் கேட்டனர்.

இந்தக் கூட்டத்திற்கு மீர் ஆலமும் வந்திருந்தார். என்னைத்தாக்கியது தவறு என்று அவர் அறிவித்ததுடன், அவர் தாமாக வலுவில் பதிவுப் பத்திரம் எடுத்துக்கொள் ளாததால் எரிப்பதற்காக அவரது அசல் பத்தி ரத்தையும் கொடுத்தார். இதைக் கண்டு கூட்டத்தினர் மிகவும் ஆனந்தம் அடைந்தனர். நான் மகிச்சியுடன் அவரது கையைப் பிடித்துக்கொண்டு, அவருக்கு விரோத மாக என் மனத்தில் ஒரு காலத்திலும் நான் கோபம் கொள்ளவில்லை என்று அவருக்கு மீண்டும் உறுதி கூறி னேன்.

எரிப்பதற்காக 2000 பத்திரங்களுக்கு மேல் கமிட் டிக்கு ஏற்கெனவே கிடைத்துவிட்டன. ஸ்ரீ யூசப் மியான் தீ மூட்டினர். அவற்றையெல்லாம் மண்ணெண்ணெயில் நனைத்து நெருப்பில் எறிந்தனர். அப்போது கூட்டத்தி லிருந்த எல்லோரும் எழுந்து, பத்திரங்களெல்லாம் எரிந்தபோது இடைவிடாது சந்தோஷ ஆரவாரம் செய் தனர். அவர்களுடைய ஆரவாரத்தின் எதிரொலிகளால் அந்த இடம் வியாபிக்கப்பட்டிருந்தது. தங்களுடைய பத்திரங்களைக் கொடுக்காமல் வைத்துக்கொண்டிருந்த சிலர் அந்தப் பத்திரங்களையெல்லாம் சேர்த்து மேடைக் குக் கொண்டுவந்தனர். அவைகளும் சுவாலைகளில் எறி யப்பட்டன.

அக்காட்சியெல்லாம் கூட்டத்திற்கு வந்திருந்த ஆங் கிலப்பத்திரிகைகளின் பிரதிநிதிகளை வெகுவாகக் கவர்ந்தன. அவர்கள் தங்களுடைய பத்திரிகைகளில்

அக்கூட்டத்தைப் பற்றிய விரிவான வர்ணனைகளை வெளியிட்டனர்.

கறுப்புச் சட்டம் நிறைவேறிய அதே வருஷத்தில், திரான்ஸ்வால் குடியேற்றக் கட்டுப்பாடு மசோதா என்ற மற்றொரு மசோதாவை ஜெனரல் ஸ்மட்ஸ் சட்ட சபையில் கொண்டுவந்து நிறைவேறும்படி செய்தார். இந்தச் சட்டம், திரான்ஸ்வாலுக்குள் புதிதாகப் பிரவேசிக்கும் கலியாணமாகாத இந்தியரை மறைமுகமாகத் தடுப்பதாக இருந்தது.

இந்தியர்களுடைய உரிமைகளில் இவ்விதம் மேலும் தலையிடுவதைத் தடுக்க வேண்டியது இந்தியர்களுக்கு முற்றிலும் அத்தியாவசியமாகியது. எனவே, பல சத்தியாக்கிரகிகள் வேண்டுமென்றே திரான்ஸ்வாலுக்குள் பிரவேசித்து, சிறைப்படுத்தப்பட்டாகள். நானும் மீண்டும் கைது செய்யப்பட்டேன்.

சத்தியாக்கிரகிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே சமரசம் செய்துவைப்பதற்காக 1912 அக்டோபரில் கோகலே தென்னாப்பிரிக்காவுக்கு வந்தார். கறுப்புச் சட்டம் ஒரு வருஷ காலத்தில் ரத்துச் செய்யப்படும் என்றும், 3 பவுன் வரியும் அகற்றப்படும் என்றும் ஜெனரல் போத்தா வாக்குறுதி அளித்ததாக கோகலே கூறினார். ஆனால், பின்னர் அவ்விதம் செய்யப்படவில்லை.

வாக்குறுதி மீறப்பட்டதைக் குறித்து நான் கோகலேவுக்கு எழுதினேன். வரப்போகும் இயக்கத்திற்கான ஏற்பாடுகளையும் செய்ய முற்பட்டேன்.

இதுவரையில், சிறைத் தண்டனையை நாடவேண்டாம் என்று நாங்கள் பெண்களைத் தடுத்துவந்தோம். ஆனால், இச் சமயத்தில் தென்னாப்பிரிக்கா அரசாங்கத்தினால் ஒரு தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதாவது கிறிஸ்தவச் சடங்குகளுக்கு இணங்க நடைபெறாத, கலியாணப்

பதிவு ரிஜிஸ்திரார்ரால் பதிவு செய்யப்படாத திருமணங்கள் யாவும் செல்லுபடியாகா என்பதேயாகும். இவ்விதமாக ஹிந்து, முஸ்லிம், ஸொரோஷ்டிரியச் சடங்குகளின்படி நடைபெற்ற கலியாணங்கள் யாவும் சட்டத்திற்கு விரோதமானவை என்று பேனு முனையால் முடிவு செய்யப்பட்டுவிட்டன. இவ்விதமாக, சம்பந்தப்பட்ட மனைவிமார் வைப்பாட்டிகளின் நிலைக்குத் தாழ்த்தப்பட்டனர். அவர்களுடைய குழந்தைகளும் சொத்துக்களின் வார்சு பாத்தியத்தை இழந்தன. இது ஆடவர்களைப் போல் பெண்களுக்கும் சகிக்க முடியாத ஒரு நிலைமையாகியது.

நமது பெண் குலத்திற்கு இழைக்கப்பட்ட இந்த அவமதிப்புக்கு முன் பொறுமை காட்டுவதென்பது முடியாத காரியம். போராடுபவர்களின் தொகை என்னவாயினும் உறுதியுடன் சத்தியாக்கிரகத்தை மேற்கொள்ளுவதென்று தீர்மானித்தோம். இப்போது போராட்டத்தில் சேருவதிலிருந்து பெண்களைத் தடுப்பதில்லை என்பது மாத்திரமல்ல. ஆடவர்களுக்குச் சமமாகப் போராட்டத்தில் கலந்து கொள்ளும்படி பெண்களை அழைப்பதென்றும் நாங்கள் தீர்மானித்தோம்.

பெண்கள் சிறைப்பட்டது, நியூ காசிலுக்கு அருகில் உள்ள சுரங்கங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் விஷயத்தில் ஒரு மந்திர சக்தியைப் போல் வேலை செய்தது. அவர்கள் தங்கள் கருவிகளைக் கீழே வைத்துவிட்டு, கோஷ்டி கோஷ்டியாக நகருக்குள் பிரவேசித்தார்கள். இச் செய்தி எனக்குக் கிடைத்த உடனே, நான் போனிக்ஸிலிருந்து நியூ காசிலுக்குப் புறப்பட்டேன்.

தொழிலாளர்களை, பத்துக் கணக்கில் அல்ல, நூற்றுக் கணக்கிலேயே எண்ண வேண்டியிருந்தது. அவர்களின் தொகை எளிதில் ஆயிரக்கணக்காகப் பெருகிவிட

லாம். பெருகிவரும் இந்தக் கூட்டத்தினருக்கு நான் இருக்க இடமும் உணவும் எப்படி அளிப்பது? ஆடவர்களின் பெரும் கூட்டம் தொடர்ந்து பெரிதாகிக் கொண்டிருந்தது. வேலையில்லாத அவர்களை ஒரே இடத்தில் வைத்துப் பராமரிப்பது அசாத்தியமான காரியம் அல்லவாயினும், அது ஆபத்தானது. எனது இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் என்ன என்பது பற்றி ஆலோசித்தேன். இந்த 'ராணுவ'த்தை நான் திரான்ஸ்வாலுக்குக் கொண்டு சென்று, அங்கே அவர்கள் பத்திரமாகச் சிறையில் அடைபடும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த 'ராணுவ'த்தின் தொகை சுமார் ஐயாயிரம் பேர்களாகும்.

கட்டுரைகள் எழுதுக

1. ஆசியாக்காரர் பதிவுச் சட்டத்தை எதிர்த்து மீண்டும் காந்திஜி சத்தியாக்கிரகத்தைத் தொடங்கும்படி செய்தது எது?
2. நற்சாட்சிப் பத்திரங்களை எரித்தபோது என்ன நேர்ந்தது என்பதை உங்களுடைய சொந்த வார்த்தைகளில் விவரித்துக் கூறுங்கள்.
3. இறுதியில் அரசாங்கம் பணிந்து வழிக்குவரும் வரையில் காந்திஜி எந்த விதங்களில் இயக்கத்தை தீவிரப்படுத்தினர்?
4. இயக்கத்தின் பல கட்டங்களையும் விவரித்துக் கூறுக.

43

சத்தியாக்கிரகத்தின் வெற்றி

நிரபராதிகளான ஆயிரக்கணக்கான மனிதர்களைச் சிறையில் வைத்திருக்கத் தென்னுப்பிரிக்க யூனியன் அரசாங்கத்துக்கு அதிகாரம் இல்லை. வைஸ்ராய் அதைச் சகித்துக்கொண் டிருக்கமாட்டார். எனவே, ஜெனரல் ஸ்மட்ஸ் என்ன செய்யப்போகிருர் என்பதைக் காண உலகம் முழுவதும் காத்துக் கொண்டிருந்தது. அத்தகைய நிலைமையில் உள்ள எல்லா அரசாங்கங்களும் பொதுவாக என்ன செய்யுமோ அதையே யூனியன் அரசாங்கமும் இப்போது செய்தது. ஒரு கமிஷனை நியமிப்பதன் மூலம் அத்தகைய தரும சங்கடமான நிலையிலிருந்து அரசாங்கங்கள் தப்பித்துக் கொள்ளுகின்றன. அத்தகைய ஒரு கமிஷனின் சிபாரிசுகளை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப் படுவதே பொதுவான ஒரு வழக்கமாகும். எனவே, சிபாரிசுகளை நிறைவேற்றுவதாகக் கூறிக்கொண்டு, அரசாங்கங்கள் முதலில் மறுத்து விட்ட நீதியைப் பின்னர் வழங்குகின்றன. ஜெனரல் ஸ்மட்ஸும் மூன்று அங்கத்தினர்கள் அடங்கிய ஒரு கமிஷனை நியமித்தார்.

கமிஷனின் அலுவல்கள் சம்பந்தமாக நான் ஜெனரல் ஸ்மட்ஸுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டு, ஓர் ஒப்பந்தத்திற்கு வந்தேன். கமிஷன் தனது அறிக்கையில், இந்திய சமூகத்தின் கோரிக்கைகளை அங்கீகரிக்கும்படி சிபாரிசு செய்தது. அறிக்கை வெளியான பின் சிறிது காலத்திற்குள் அரசாங்கம் யூனியனின் அதிகார பூர்வமான கெஜட்டில் இந்தியர்களின் கஷ்ட

நிவாரண மசோதாவைப் பிரசுரித்திருந்தது. அம்மசோதா 3 பவுன் வரியை ரத்துச் செய்தது; இந்தியாவில் சட்ட பூர்வமானவை என்று கருதப்படும் எல்லாத் திருமணங் களும் யூனியனிலும் சட்டபூர்வமானவை என்று அங்கீகரிக் கப்பெற்றன; நபரின் கட்டை விரல் முத்திரை தாங்கிய குடியேற்றப் பத்திரமே யூனியனில் பிரவேசிக்கும் உரிமைக்கான போதிய சாட்சியமாகும் என்றும் நிர்ண யிக்கப்பெற்றது.

அவ்விதமாக, எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு மகத் தான சத்தியாக்கிரகப் போராட்டம் முடிவடைந்தது. அப்போது தென்னுப்பிரிக்காவில் இந்தியர்களுக்கு அமை தியான வாழ்வு ஏற்பட்டதுபோல் தோன்றியது. 1914 ஜூலை 18-ல் நான் இந்தியாவிற்குத் திரும்பும் நோக்கத் துடன் இங்கிலாந்திற்குப் புறப்பட்டேன். தென்னுப்பிரிக் காவை விட்டுப் பிரிவது எனக்குக் கஷ்டமாக இருந்தது. அங்கே நான் எனது வாழ்க்கையில் இருபத்தொன்று ஆண்டுகளைக் கழித்தேன். இனிமையானவையும் கசப் பானவையுமான மானிடர்க்கு உரிய அனுபவங்களில் முழுப் பங்கு எடுத்துக் கொண்டேன். வாழ்க்கையில் நான் செய்ய வேண்டிய அலுவல்கள் என்ன என்பதை அங்கேதான் உணர்ந்துகொண்டேன்.

[illegible]

[illegible]

பாகம் ஒன்பது

இந்தியாவில் ஆசிரமம் ஸ்தாபித்தல்

44

புனாவில்

நீண்ட நாள் வெளிநாடுகளில் இருந்துவிட்டுத் தாய் நாடு திரும்புவதில் மகிழ்ச்சி யடைந்தேன்.

கோகலேயும், இந்திய ஊழியர் சங்கத்தின் மற்ற அங்கத்தினர்களும் என்னைத் தங்கள் அன்பு வெள்ளத்தில் மூழ்கடித்து விட்டனர். என்னைச் சந்திப்பதற்காக அவர்களையெல்லாம் கோகலே அங்கே வரவழைத்திருந்தார் என்றுதான் எனக்கு ஞாபகம். எல்லா விஷயங்களைப் பற்றியும் அவர்களுடன் நான் மனம் விட்டுத் தாராளமாக விவாதித்தேன்.

ஓர் ஆசிரமத்தை அமைத்து, அதில் என் போனிக்ஸ் குடும்பத்துடன் வாழ விரும்பினேன். குஜராத்தில் எங்காவது ஆசிரமத்தை அமைப்பதே உத்தேசம். நான் குஜராத்தி யாகையால், குஜராத்துக்குச் சேவை செய்து, அதன் மூலம் நாட்டுக்குச் சேவை செய்ய எண்ணினேன். இந்த என் உத்தேசம் கோகலேக்குப் பிடித்திருந்தது. அவர் கூறியதாவது: "நீங்கள் நிச்சயம் அப்படியே செய்ய வேண்டும். அங்கத்தினர்களுடன் நீங்கள் பேசியதன் பலன் எதுவாக இருந்தாலும் சரி, உங்கள் ஆசிரமத்தை என் சொந்த ஆசிரமமாகவே கருதுவேன். ஆசிரமத்தின் செலவுக்கு நீங்கள் என்னையே எதிர் பார்க்கவேண்டும்."

இதைக் கேட்டு நான் அளவுகடந்த ஆனந்த மடைந்தேன். நிதி திரட்டும் பொறுப்பிலிருந்து விடுபடுவது ஓர் ஆனந்தமே.

45

ஆசிரமத்தின் ஆரம்பம்

அகமதாபாதிலுள்ள கோசரப் என்னுமிடத்தில் 1915 மே 25 ஆம் தேதி சத்தியாக்கிரக ஆசிரமம் ஆரம்பமாயிற்று.

நாங்கள் மொத்தம் ஆண்களும் பெண்களுமாக இருபத்தைந்து பேர்.

எல்லோரும் பொதுவான ஒரே சமையலுடன் ஒரே குடும்பமாக வாழ முயன்று வந்தோம்.

ஆசிரமம் ஆரம்பமாகிச் சில மாதங்களே ஆயின. அதற்குள் நான் எதிர்பார்த்தே இராத வகையில் நாங்கள் சோதனைக்கு ஆளானோம். அமிர்தலால் தக்கரிடமிருந்து கீழ்வருமாறு ஒரு கடிதம் வந்தது: "அடக்கமும் நேர்மையும் உள்ள ஒரு தீண்டாதாரின் குடும்பம் உங்கள் ஆசிரமத்தில் சேர்ந்துகொள்ள விரும்புகிறது. அவர்களை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா?"

விதிகளுக்கு உட்பட்டு நடந்துகொள்ள அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். நாங்களும் அவர்களை ஏற்றுக்கொண்டோம்.

ஆனால், அவர்களைச் சேர்த்துக்கொண்டது, ஆசிரமத்திற்கு உதவி செய்து வந்த நண்பர்களிடையே பெரும் பரபரப்பை உண்டாக்கிவிட்டது. கிணற்றை உபயோகிப்பது சம்பந்தமாக முதலில் கஷ்டம் ஏற்பட்டது. அந்தக் கிணற்றை அந்தப் பங்களாவின் சொந்தக்காரரும் உபயோகித்து வந்தார். அதிலிருந்து தண்ணீர் இறைப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்தவர், எங்கள் வாளியி

லிருந்து தண்ணீர் துளிகள் விழுவதால் தமக்குத் தீட்டுப் பட்டுப் போகும் என்று கூறி ஆட்சேபித்தார். ஆகவே, எங்களைத் திட்டினர்; தூதாபாயைத் தொந்தரவும் செய் தார். அவர் திட்டுவதையெல்லாம் சகித்துக் கொண்டு, என்ன வந்தாலும் சரி என்று கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டிருக்கும்படி எல்லோரிடமும் கூறி னேன். தாம் திட்டினாலும் நாங்கள் திருப்பித் திட்டு வதில்லை என்பதைக் கண்டதும் அவருக்கே வெட்கமாகப் போய்விட்டது. எங்களுக்குத் தொந்தரவு கொடுப்பதை விட்டுவிட்டார்.

பண உதவியை யெல்லாம் நிறுத்திவிட்டதோடு எங் களைச் சமூக பகிஷ்காரம் செய்வதற்கும் யோசிக்கிறார்கள் என்றும் வதந்திகள் கிளம்பின. இவைகளினால் நாங்கள் கலக்கமடைந்தோம். நாம் பகிஷ்காரம் செய்யப்பட்டுச் சாதாரண வசதிகளெல்லாம் மறுக்கப்பட்டாலும், அக மதாபாத்தைவிட்டு நாம் போய்விடக்கூடாது என்று என் சகாக்களுக்குக் கூறினேன். வெளியேறி விடுவதைவிடத் தீண்டாதாரின் இடத்திலேயே போய் வசித்து, உடலை வருத்தி வேலை செய்வதால் கிடைப்பதைக்கொண்டு வாழ் வதே மேல் என்றும் கூறினேன்.

“நம்மிடம் பணம் இல்லை. அடுத்த மாதச் செலவுக்கு நம்மிடம் ஒன்றும் கிடையாது” என்று ஒரு நாள் மகன் லால் காந்தி எனக்கு அறிவித்துவிட்டார். நிலைமை அத் தகைய நெருக்கடியான கட்டத்திற்கு வந்துவிட்டது. “அப்படியானால், தீண்டாதார் வசிக்கும் இடத்திற்கே நாம் போய் விடுவோம்” என்று நான் அமைதியோடு பதில் சொன்னேன்.

இதுபோன்ற சோதனை எனக்கு ஏற்பட்டது இது முதல் தடவை அல்ல. இத்தகைய நிலைமைகளிலெல்லாம் கடைசி நேரத்தில் கடவுளே எனக்கு உதவியை அனுப்பி

யிருக்கிறார். எங்களுக்கு ஏற்பட்டுவிட்ட பணக் கஷ்டத்தைக் குறித்து மகன்லால் எனக்கு எச்சரிக்கை செய்த பிறகு ஒரு நாள் காலை, குழந்தைகளில் ஒன்று ஓடி வந்து, ஒரு சேத் வெளியில் மோட்டாரில் இருக்கிறார் என்றும், என்னைப் பார்க்க விரும்புகிறார் என்றும் கூறியது. அவரைப் பார்க்க வெளியே போனேன். 'ஆசிரமத்திற்குக் கொஞ்சம் உதவி செய்ய விரும்புகிறேன். அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளுவீர்களா?" என்று அவர் என்னைக் கேட்டார்.

"நிச்சயமாக ஏற்றுக்கொள்ளுவோம். எங்கள் கையில் இருந்ததெல்லாம் செலவழிந்து போய்விட்ட நிலையில் நாங்கள் இருக்கிறோம் என்பதையும் உங்களிடம் கூறுகிறேன்" என்றேன்.

"நாளை இதே நேரத்தில் இங்கு வருகிறேன். நீங்கள் இருப்பீர்களல்லவா?" என்றார்.

"ஆம்" என்று நான் சொன்னதும் அவர் போய்விட்டார்.

அடுத்த நாள், சரியாக அந்த நேரத்தில் நாங்கள் இருந்த இடத்திற்கு அருகில் மோட்டார் வந்து நின்றது. வந்ததற்கு அறிகுறியாகச் சப்தம் கொடுக்கப்பட்டது. குழந்தைகளும் ஓடி வந்து சமாசாரத்தைச் சொன்னார்கள். சேத் உள்ளே வரவில்லை; நானே அவரைப் பார்க்கப் போனேன். அவர் என் கையில் ரூ. 13,000-க்கு நோட்டுக்களைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார்.

இந்த உதவியை நான் எதிர்பார்க்கவே இல்லை. எப்படிப்பட்ட புதிய வகையில் உதவி! அந்தக் கனவான் இதற்கு முன்னால் ஆசிரமத்திற்கு வந்ததே இல்லை. ஒரே ஒரு முறைதான் அவரை நான் சந்தித்திருக்கிறேன் என்று எனக்கு ஞாபகம். உள்ளே வரவும் இல்லை;

விசாரிக்கவும் இல்லை! உதவியை செய்துவிட்டுப் போய் விட்டார். எனக்கு இது ஒப்பற்றதோர் அனுபவம்.

இனி ஓர் ஆண்டுக்குக் கவலை இல்லை என்று அப்பொழுது உணர்ந்தோம்.

கட்டுரைகள் எழுதுக

1. சாபர்மதி ஆசிரமத்தில் 'தீண்டாதார்களை'ச் சேர்த்துக் கொள்ளுவதன் சம்பந்தமாக காந்திஜிக்கு ஏற்பட்ட கஷ்டங்களைக் கூறுக. அவற்றை அவர் எப்படிச் சமாளித்தார்?

2. சாதிகளும் சமூகங்களும் கலந்து பழகாத ஒருவிதத் தீண்டாமையை அனுசரிப்பது தவறு? அது ஏன் தவறாகும்?

3. (அ) எல்லா சாதிகளுக்கும், (ஆ) எல்லாக் கொள்கையுடையவர்களுக்கும், (இ) இந்தியாவிலுள்ள எல்லா மொழியினருக்கும் இடையே ஐக்கிய உணர்ச்சி ஏற்பட நாம் என்ன செய்ய வேண்டும்?

4. இத்தகைய நோக்கங்கள் நிறைவேற உங்கள் குடும்பங்களில் நீங்கள் என்ன செய்ய முடியும் என்பதை விவரித்துக் கூறுக.

பாகம் பத்து

சம்பாரண்

46

அவுரிச் சாகுபடி அநீதி

சம்பாரண் குடியானவர் ஒவ்வொருவரும், தாம் சாகுபடி செய்யும் நிலத்தின் இருபதில் மூன்று பாகத்தில் தமது நிலச்சுவான்தாருக்காக அவுரியைக் கட்டாயம் பயிர் செய்தாகவேண்டும் என்று சட்டம் இருந்தது. இதற்குத் 'தீன் கதியா' முறை என்று பெயர். இருபது 'கதியா'க்கள் கொண்டது ஒரு ஏக்கர். அதில் மூன்று 'கதியா'வில் அவுரிச் சாகுபடி செய்யவேண்டும் என்று இருந்ததால் அம்முறைக்குத் 'தீன் கதியா' என்று பெயர்.

இத்துன்பங்களை அனுபவித்து வந்த விவசாயிகளில் ஒருவர் ராஜ்குமார் சுக்லா. தம்மைப்போல மற்றும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் அனுபவித்து வரும் அநீதியை எப்படியும் போக்கவேண்டும் என்ற ஆர்வம் மிகுந்தவர் அவர்.

ஆகவே, *1917*-ஆம் ஆண்டு ஆரம்பத்தில் நாங்கள் கல்கத்தாவிலிருந்து சம்பாரணுக்குப் புறப்பட்டோம்.

சம்பாரண் விவசாயிகளின் நிலைமையும், அவுரித் தோட்ட முதலாளிகளுக்கு எதிராக அவர்களுக்கு இருந்த குறைகளையும் விசாரித்து அறிந்துகொள்ளுவதே என்னுடைய நோக்கம். ஆயிரக்கணக்கான விவசாயிகளை நான் சந்தித்தாக வேண்டியது இக்காரியத்திற்கு அவசியமாயிற்று. ஆனால், என்னுடைய விசாரணையை ஆரம்பிப்பதற்கு முன்னால், இவ்விஷயத்தில் தோட்ட முதலாளிகளின் கட்சி இன்னது என்பதைத் தெரிந்து கொள்ளுவதும், அந்த டிவிஷனின் கமிஷனரைக் கண்டு

பேசுவதும் மிக முக்கியம் என்று கருதினேன். இவ்விரண்டிற்கும் அனுமதி கேட்டு அதையும் பெற்றேன்.

தோட்ட முதலாளிகளின் சங்கக் காரியதரிசியைக் கண்டு பேசினேன். நான் வெளியான் என்றும், தோட்ட முதலாளிகளுக்கும் அவர்களுடைய சாகுபடியாளருக்கும் இடையே தலையிடுவதற்கு எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றும் அவர் ஒளிவு மறைவு இன்றிச்சொல்லி விட்டார். ஆனால், நான் சொல்லிக்கொள்ள வேண்டியது ஏதாவது இருந்தால், அதை எழுத்து மூலம் தெரிவித்துக்கொள்ளுமாறும் என்னிடம் கூறிவிட்டார். வெளியான் என்று நான் என்னை எண்ணிக்கொள்ளவில்லை என்றும், சாகுபடியாளர்கள் தங்கள் நிலைமையைப் பற்றி நான் விசாரிக்க வேண்டும் என்று விரும்புவார்களாயின் அப்படி விசாரிப்பதற்கு எனக்கு எல்லாவிதமான உரிமையும் இருக்கிறது என்றும் அவரிடம் பணிவாகச் சொன்னேன்.

கமிஷனரையும் போய்ப் பார்த்தேன். திர்ஹூத்திலிருந்து உடனே போய்விடுமாறும் அவர் எனக்குப் புத்திமதி சொன்னார்.

இவையெல்லாவற்றையும் என் சக ஊழியர்களுக்குத் தெரிவித்தேன். மேற்கொண்டும் நான் செல்ல முடியாதபடி அரசாங்கம் என்னைத் தடுத்துவிடக்கூடும் என்றும், ஆகவே நான் எதிர்பார்த்ததற்கும் முன்னாலேயே நான் சிறை சென்று விட நேரலாம் என்றும், நான் கைது செய்யப்பட்டால், அப்படிச் செய்யப்படுவது பேதியாவில் சாத்தியமானால் நடக்க வேண்டும் அல்லது மோதிகாரியில் நடப்பது மிகச் சிறந்தது என்றும் சொன்னேன். ஆகையால், சாத்தியமான வரையில் சீக்கிரத்திலேயே நான் அந்த இடங்களுக்குப் போவதே நல்லது என்றும் கூறினேன்.

திர்ஹூத் டிவிஷனில் சம்பாரண் ஒரு ஜில்லா; மோதிகாரி அதன் தலைநகரம். ராஜ்குமார் சுக்லாவின் ஊர் பேதியாவுக்குப் பக்கத்தில் இருந்தது. அதற்குப் பக்கத்திலிருந்த கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளே, அந்த ஜில்லாவில் மிகவும் ஏழைகள். அவர்களை நான் பார்க்க வேண்டும் என்று ராஜ்குமார் சுக்லா விரும்பினார்; நானும் அவர்களைப் பார்க்க வேண்டும் என்று ஆவலுடன் இருந்தேன்.

ஆகவே, அன்றே என் சக ஊழியர்களுடன் நான் மோதிகாரிக்குப் புறப்பட்டேன்.

மோதிகாரிக்கு ஐந்து மைல் தூரத்தில் ஒரு விவசாயி துன்புறுத்தப்பட்டார் என்று அன்றே நாங்கள் கேள்விப் பட்டோம். அடுத்த நாள் காலையில் பாபு தரணீதர் பிரசாத்துடன் நான் அங்கே போய் அந்த விவசாயியைப் பார்ப்பது என்று முடிவு செய்தோம். அதன்படி யானை மீது ஏறி நாங்கள் அவ்விடத்திற்குப் புறப்பட்டோம் குஜராத்தில் மாட்டுவண்டி எப்படிச் சர்வ சாதாரணமோ அதேபோலச் சம்பாரணில் யானை சர்வ சாதாரணம். பாதி தூரங்கூடப் போயிருக்க மாட்டோம். அதற்குள் போலீஸ் சூப்பரின்டெண்டென்டிடமிருந்து வந்த ஓர் ஆள் எங்களைப் பிடித்தார். போலீஸ் சூப்பரின்டெண்டென்ட் தமது வந்தனத்தை எனக்கு அனுப்பியதாக அந்த ஆள் கூறினார். அவர் கூறியதன் கருத்தை நான் அறிந்துகொண்டேன். போக இருந்த இடத்திற்குத் தரணீதர் பிரசாரத்தை மாத்திரம் போகச் சொல்லிவிட்டு, அந்த ஆள் கொண்டு வந்திருந்த வாடகை வண்டியில் நான் ஏறிக்கொண்டேன். சம்பாரணிலிருந்து நான் போய்விட வேண்டும் என்ற உத்தரவைப் பிறகு அந்த ஆள் எனக்குச் சாதரா செய்து, என்னை நான் தங்கி இருந்த இடத்துக்குக் கொண்டுவந்துவிட்டுவிட்டார். உத்

தரவைப் பெற்றுக்கொண்டதற்குக் கையெழுத்துப் போட்டுத் தரும்படி அவர் கேட்டார். அந்த உத்தரவுக்கு நான் கீழ்ப்படியப் போவதில்லை என்றும், என் விசாரணை முடியும் வரையில் நான் சம்பாரணிலிருந்து போகப் போவதில்லை என்றும் எழுதிக் கொடுத்தேன். அதன் பேரில், சம்பாரணைவிட்டுப் போய்விடவேண்டும் என்ற உத்தரவை மீறிவிட்ட குற்றத்திற்காக விசாரிப்பதற்கு, மறுநாள் கோர்ட்டுக்கு வருமாறு எனக்குச் சம்மன் வந்தது.

எனக்கு உத்தரவிடப்பட்டதும், சம்மன் வந்திருப்பதும் காட்டுத் தீப்போல் எங்கும் பரவி விட்டன. மோதிகாரி, இதற்கு முன்னால் என்றுமே கண்டறியாத காட்சியை அன்று கண்டது என்று சொன்னார்கள். கோரக்பாபுவின் வீட்டிலும் கோர்ட்டிலும் சொல்ல முடியாத அளவுக்கு ஒரே ஜனக்கூட்டம். அதிர்ஷ்டவசமாக என் வேலைகளை யெல்லாம் இரவிலேயே செய்து முடித்துவிட்டதால் அப்பெருங்கூட்டத்தைச் சமாளிக்க என்னால் முடிந்தது. என் சகாக்கள் எனக்கு அதிக உதவியாக இருந்தார்கள். நான் போன இடத்திற்கெல்லாம் கூட்டம் பின் தொடர்ந்து வந்துகொண்டிருந்ததால் அக்கூட்டத்தை ஒழுங்குபடுத்தும் வேலையில் என் சகாக்கள் ஈடுபட்டிருந்தனர்.

கலெக்டர், மாஜிஸ்டிரேட், போலீஸ் சூப்பரின்டெண்டெண்ட் ஆகிய அதிகாரிகளுக்கும் எனக்கும் இடையே ஒரு வகையான நட்பு ஏற்பட்டது. எனக்குப் பிறப்பிக்கப்பட்டிருந்த உத்தரவைச் சட்ட ரீதியில் நான் ஆட்சேபித்திருக்கலாம். ஆனால், அதற்கு மாறாக நான் அவற்றை எல்லாம் பெற்றுக் கொண்டேன். அதிகாரிகள் விஷயத்தில் நான் தவறில்லாமலும் நடந்துகொண்டேன். இதிலிருந்து தனிப்பட்ட வகையில் தங்களை அவமதிக்கும் நோக்கம் எனக்கு இல்லை என்றும், அவர்களுடைய உத்தரவைச் சாத்துவிகமாக எதிர்க்கவே

நான் விரும்புகிறேன் என்றும் அவர்கள் கண்டு கொண்ட னர். இந்த வகையில் அவர்கள் கவலையற்றவர்களாயி னர். என்னைத் தொந்தரவு செய்வதற்குப் பதிலாகக் கூட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கு என் ஒத்துழைப்பை யும், என் சகாக்களின் ஒத்துழைப்பையும் மகிழ்ச்சி யுடன் பயன்படுத்திக் கொண்டார்கள். என்றாலும், தங்களுடைய அதிகாரம் ஆட்டம் கண்டுவிட்டது என்ப தற்கு அது கண்கூடான சாட்சியாக அவர்களுக்கு இருந் தது. அந்த நேரத்தில் மக்கள், தண்டனையைப் பற்றிய பயத்தை யெல்லாம் இழந்துவிட்டார்கள். தங்கள் புதிய நண்பர்கள் காட்டிய அன்பின் சக்திக்கே பணிந்த னர்.

சம்பாரணில் யாருக்கும் என்னைத் தெரியாது என் பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். என்றா லும், ஆயுளெல்லாம் தங்களுக்கு நண்பனாக இருந்த வனைப்போல் அவர்கள் என்னை வரவேற்றார்கள். இவ் விதம் விவசாயிகளை நான் சந்தித்ததில், கடவுளையும், அகிம்சையையும், சத்தியத்தையும் நேருக்கு நேராக நான் தரித்சிதேன் என்று கூறுவது அப்படியே உண்மை யேயன்றி எவ்விதத்திலும் மிகைப்படுத்திக் கூறுவது ஆகாது.

சம்பாரணில் அந்த நாள், என் வாழ்க்கையில் மறக் கவே முடியாத நாள்; விவசாயிகளுக்கும் எனக்கும் அது மிகவும் முக்கியமான நாளாகும்.

விசாரணை ஆரம்பமாயிற்று. அரசாங்க வக்கீல், மாஜிஸ்டிரேட் முதலிய அதிகாரிகள் எல்லாம் திகைத் துக் கொண்டிருந்தார்கள். என்ன செய்வது என்பதே அவர்களுக்குப் புரியவில்லை.

தண்டனையை ஏற்றுக்கொள்ளுவதற்கு நான் கோர்ட்டில் ஆஜராவதற்கு முன்னாலேயே மாஜிஸ்டிரேட்

எழுத்து மூலம் எனக்குத் தகவலை அனுப்பிவிட்டார். என் மீதுள்ள வழக்கை வாபஸ் வாங்கிக் கொள்ளும் படி கவர்னர் உத்தரவிட்டிருக்கிறார் என்று அதில் அவர் கூறியிருந்தார். கலெக்டரும் எனக்கு ஒரு கடிதம் எழுதினார். நான் நடத்தவிருந்த விசாரணையை தாராளமாக நடத்திக் கொண்டு போகலாம் என்றும், எனக்கு வேண்டிய உதவி அதிகாரிகளிடமிருந்து கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார். இவ்வளவு விரைவில், இவ்விஷயம் இப்படி மகிழ்ச்சிகரமான வகையில் தீர்ந்து விடும் என்று எங்களில் யாரும் எதிர்பார்க்கவே இல்லை.

47

கறை நீக்கியது

எங்களிடம் வாக்குமூலம் கொடுக்க விவசாயிகள் கூட்டங்கூட்டமாக வந்தார்கள். அப்படி வந்தவர்களுடன் அவர்களுடைய தோழர்களும் ஏராளமாக வந்தனர். நாங்கள் இருந்த வீட்டைச் சுற்றியிருந்த திறந்த வெளியிலும் தோட்டத்திலும் இருக்க இடம் போதாத வகையில் பெருங் கூட்டம் இருந்து வந்தது.

வாக்குமூலம் கொடுக்க விவசாயிகள் அதிகமாக வர வர, தோட்ட முதலாளிகளுக்குக் கோபம் அதிகமாயிற்று. என்னுடைய விசாரணைக்கு விரோதமாகத் தங்களால் ஆனதை யெல்லாம் செய்ய அவர்கள் முற்பட்டனர்.

லெப்டினென்ட் கவர்னர் ஸர் எட்வர்டு கெயிட், தம்மை வந்து பார்க்குமாறு எனக்கு எழுதினர். விசாரணைக்கு ஏற்பாடு செய்ய விரும்புவதாக அவர் கூறியதோடு விசாரணைக் கமிட்டியில் ஓர் அங்கத்தினனாக இருக்கும்படியும் என்னை அழைத்தார்.

விவசாயிகளின் கட்சி நியாயமானது என்று கமிட்டியினர் கண்டனர். அவர்களிடமிருந்து தோட்ட முதலாளிகள் பணம் பறித்து வந்தது, சட்ட விரோதமானது என்று கமிட்டி கண்டு, அதில் ஒரு பகுதியைத் தோட்ட முதலாளிகள் திருப்பிக் கொடுத்து விடவேண்டும் என்றும் கமிட்டி சிபார்சு செய்தது. சட்டத்தின் மூலம் 'தீன் கதியா' முறையை ரத்துச் செய்துவிட வேண்டும் என்றும் கமிட்டி கூறியது.

ஒரு நூற்றாண்டுக் காலம் இருந்து வந்த 'தீன் கதியா' முறை இவ்விதம் ஒழிக்கப்பட்டுவிட்டது. அதோடு, தோட்ட முதலாளிகளின் ராஜ்யமும் ஒழிந்தது.

கட்டுரைகள் எழுதுக

(*46, 47*-ஆம் அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டவை)

1. சம்பாரணில் அவுரித் தோட்ட முதலாளிகளின் ஆட்சியை ரத்துச் செய்வதில் காந்திஜி எப்படி வெற்றி பெற்றார் என்பதை விவரித்துக் கூறுக.

2. சத்தியாக்கிரக நோக்கத்தை முக்கியமாகக் கைக்கொண்டு (அல்லது உண்மை, அன்பு முறைகளைக்கொண்டு) காந்திஜியின் நடவடிக்கைகளை ஆராய்ச்சி செய்து, இந்த முறை எப்படி வெற்றி பெற்றது என்பதைக் காட்டுக.

பாகம் பதினொன்று

அகமதாபாத் தொழிலாளர்

48

தொழிலாளருடன் தொடர்பு

சமயத்தில் அகமதாபாத் தொழிலாளர் நிலைமையைக் குறித்து ஸ்ரீமதி அனுசூயா பாயிடமிருந்து ஒரு கடிதமும் வந்தது. தொழிலாளர் பெற்றுவந்த கூலி மிகக் குறைவு; கூலி உயர்வு செய்ய வேண்டும் என்று தொழிலாளர் நீண்ட காலமாகக் கிளர்ச்சி செய்துகொண்டு வந்தனர். முடிந்தால், அவர்களுக்கு வழிகாட்டி நடத்த வேண்டும் என்ற விருப்பம் எனக்கு இருந்தது.

நான் மிகவும் தரும சங்கடமான நிலையிலேயே இருந்தேன். ஆலைத் தொழிலாளரின் கட்சி மிகவும் நியாயமானது. ஸ்ரீமதி அனுசூயா பாய், தமது சொந்தச் சகோதரரும், மில் சொந்தக்காரர்களின் சார்பாக அப்போராட்டத்தை நடத்தி வந்தவருமான ஸ்ரீ அம்பாலால் சாராபாயை எதிர்த்துப் போராட வேண்டியதாயிற்று. ஆலை முதலாளிகளுடன் நான் சிநேகமாகப் பழகி வந்தேன். இதனாலேயே அவர்களுடன் போராடுவது என்பது அதிகக் கஷ்டமாக இருந்தது. அவர்களுடன் கலந்தாலோசித்தேன். இத்தகராறை மத்தியஸ்தர் முடிவுக்கு விட்டு விடுமாறு அவர்களைக் கேட்டுக்கொண்டேன். ஆனால் மத்தியஸ்தர் முடிவுக்கு விடுவது என்ற கொள்கையை அங்கீகரிக்கவே அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

ஆகையால், வேலை நிறுத்தம் செய்யும்படி தொழிலாளருக்கு நான் ஆலோசனை கூற வேண்டியதாயிற்று. அப்படி அவர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கு முன்னால், அவர்களுடனும் அவர்களுடைய தலைவர்களோடும் நான் மிகவும் நெருங்கிய தொடர்பு வைத்

துக்கொண்டேன். வேலை நிறுத்தம் வெற்றிகரமாவதற்கு உள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளையும் அவர்களுக்கு விளக்கிச் சொன்னேன்:

1. எந்த நிலைமையிலும் பலாத்காரத்தில் இறங்கி விடவே கூடாது.

2. கட்டுப்பாட்டை மீறி வேலைக்குப் போகிறவர்களைத் தொந்தரவு செய்யக் கூடாது.

3. பிறர் இடும் பிச்சையை எதிர்பார்த்திருக்கக் கூடாது.

4. வேலை நிறுத்தம் எவ்வளவு காலம் நீடிப்பதாக இருந்தாலும் உறுதியுடன் இருக்க வேண்டும். யோக்கியமாக வேறு எந்த வகையிலாவது உடலை உழைத்து வேலை நிறுத்தக் காலத்தில் ஜீவனத்தை நடத்திக் கொள்ள வேண்டும்.

வேலை நிறுத்தத் தலைவர்கள், இந்த நிபந்தனைகளை நன்கு அறிந்துகொண்டு ஏற்றுக்கொண்டார்கள். தங்கள் கோரிக்கைகள் அங்கீகரிக்கப்படும் வரையில், அல்லது இத் தகராறை மத்தியஸ்தர் முடிவுக்கு விட மில்காரர்கள் சம்மதிக்கும் வரையில், தாங்கள் வேலைக்குத் திரும்புவதில்லை என்று தொழிலாளர்கள் பொதுக் கூட்டத்தில் பிரதிக்ஞை செய்துகொண்டனர்.

முதல் இரு வாரங்கள் வரையில் ஆலைத் தொழிலாளர்கள் அதிக தீரத்தோடும், தன்னடக்கத்துடனும் நடந்து கொண்டார்கள். தினந்தோறும் பெரிய பொதுக் கூட்டங்களும் நடந்தன. அச்சமயங்களில் அவர்களின் பிரதிக்ஞைகளைக் குறித்து அவர்களுக்கு ஞாபகப் படுத்தினேன். 'உயிரை விட்டாலும் விடுவோமேயன்றி அளித்த வாக்கை மாத்திரம் மீறிவிட மாட்டோம்' என்று அவர்கள் உரக்கக் கூறி எனக்கு உறுதி கூறினார்கள்.

ஆனல், கடைசியாக அவர்கள் சோர்வின் அறிகுறியைக் காட்டத் தலைப்பட்டு விட்டனர்.

இதனல், பெரும் கவலையடைந்தேன். இந்நிலைமையில் என் கடமை என்ன என்பதைக் குறித்துத் தீவிரமாகச் சிந்திக்கலானேன்.

இவ்வாறு திகைத்துத் தெளிவான வழி காண முடியாமல், நான் தத்தளித்துக்கொண்டிருந்த சமயத்தில், ஒரு நாள் காலை, ஆலைத் தொழிலாளர்களின் கூட்டத்தில் திடீரென்று எனக்கு ஓர் ஒளி தோன்றிற்று. முன் கூட்டி எண்ணிப் பாராமலேயே என் நாவில் பின்வரும் சொற்கள் பிறந்தன: "வேலை நிறுத்தம் செய்திருப்பவர்கள் திடம்கொண்டு, ஒரு சமரச முடிவு ஏற்படும் வரையில் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்தினலன்றி, அல்லது இப்போது வேலைக்குப் போகிறவர்கள் எல்லோரும் ஆலைகளிலிருந்து வெளிவந்துவிடும் வரையில், நான் உணவு கொள்ளப் போவதில்லை" என்று அக்கூட்டத்தில் கூறினேன்.

இதைக் கேட்டதும் தொழிலாளர்கள் இடி விழுந்ததைப் போல் திகைத்துப் போயினர். அனுசூயா பென்னின் கண்களிலிருந்து நீர் வழிந்து ஓடியது. "நீங்கள் உண்ணுவிரதம் இருக்க வேண்டாம்; நாங்கள் உண்ணுமல் இருக்கிறோம். நீங்கள் பட்டினி இருப்பதைப் போன்ற பெருங்கொடுமை வேறு இல்லை. நாங்கள் செய்துவிட்ட தவறுகளுக்கு எங்களை மன்னித்துவிடுங்கள். இனி இறுதிவரையில் பிரதிக்ஞையில் நிச்சயமாக உறுதியுடன் இருக்கிறோம்" என்று தொழிலாளர் எல்லோரும் ஒரே முகமாகக் கூறினர்.

நான் அப்பொழுது அவர்களுக்குக் கூறியதாவது: "நீங்கள் உண்ணுவிரதம் இருக்க வேண்டிய அவசியமில்லை. உங்களுடைய பிரதிக்ஞையிலிருந்து வழுவாமல்

நீங்கள் இருந்தாலே போதும். நம்மிடம் நிதி இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். பொது ஜனங்களிடம் பிச்சையெடுத்து, அதைக்கொண்டு வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு போக நாம் விரும்பவில்லை. ஆகையால், வேலை நிறுத்தம் எவ்வளவு காலத்துக்குத் தொடர்ந்து நடந்தாலும், அதைப்பற்றிய கவலையே இல்லாமல் நீங்கள் இருந்து வருவதற்கு ஏதாவது ஒரு வேலையைச் செய்து ஜீவனத்திற்கு வேண்டியதைத் தேடிக்கொள்ள நீங்கள் முயல வேண்டும். என்னுடைய உண்ணுவிரதத்தைப் பொறுத்த வரையில் வேலை நிறுத்தம் முடிந்த பிறகே நான் அதைக் கைவிடுவேன்.”

அனுசூயா பென்னும், நண்பர்கள் பலரும், தொழிலாளரும், முதல் நாள் என்னுடன் சேர்ந்து உண்ணுவிரதம் இருந்தார்கள். ஆனல், அவர்கள் மேற்கொண்டும் உண்ணுவிரதம் இருப்பதைக் கொஞ்சம் சிரமத்தின் பேரிலேயே நிறுத்திவிடும்படி செய்தேன்.

இதனுலெல்லாம் ஏற்பட்ட பலன், எல்லோரிடமும் நல்லெண்ணச் சூழ்நிலை ஏற்பட்டதாகும். ஆலை முதலாளிகளின் மனமும் இரங்கியது. சமரசத்திற்கான வழியைக் காண அவர்கள் முன்வந்தார்கள். அனுசூயா பென்னின் வீட்டில் அவர்களுடைய விவாதங்கள் நடந்தன. ஸ்ரீ அனந்த சங்கர துருவாவும் இதில் தலையிட்டார். முடிவில் அவரையே மத்தியஸ்தராகவும் நியமித்தனர். நான் உண்ணுவிரதத்தை ஆரம்பித்து மூன்று நாட்களுக்குப் பிறகு வேலை நிறுத்தமும் முடிவுற்றது. இந்த நல்ல முடிவைக் கொண்டாடுவதற்காக ஆலை முதலாளிகள், தொழிலாளருக்கு மிட்டாய்கள் வழங்கினர் இவ்விதம் இருபத்தொரு நாட்கள் வேலை நிறுத்தம் நடந்த பிறகு சமரச முடிவு ஏற்பட்டது.

கட்டுரைகள் எழுதுக

1. காந்திஜியின் கருத்துக்கு இணங்கத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை எப்படி நடத்த வேண்டும் என்பதை உங்கள் சொந்த வார்த்தைகளில் விவரித்துக் கூறுக.
2. ஆமதாபாத் வேலை நிறுத்தம் சம்பந்தமாக காந்திஜி ஏன் உண்ணுவிரதம் இருந்தார்?
3. அந்த வேலை நிறுத்தத் தகராறை ஒரு சமரசமான முடிவிற்குக் கொண்டு வர உண்ணுவிரதம் எந்த வழிகளில் உதவியாக இருந்தது?
4. அந்த உண்ணுவிரதம் எப்படி சத்தியாக்கிரகம் ஆகும் என்பதைக் காட்டுக.

பாகம் பன்னிரண்டு

கேடா சத்தியாக்கிரகம்

49

கேடா சத்தியாக்கிரகம்

கொஞ்சம் ஓய்ந்து மூச்சு விடுவதற்குக்கூட எனக்கு அவகாசமில்லை. அகமதாபாத் ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் முடிவுற்றவுடனேயே நான் கேடா சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபடவேண்டியதாயிற்று.

கேடா ஜில்லாவில் எங்கும் விளைவே இல்லாது போய்விட்டதனால், பஞ்சம் வரக்கூடிய நிலைமை ஏற்பட்டு விட்டது. அந்த ஆண்டு நிலவரி வசூலை நிறுத்தி வைத்துவிடும்படி செய்வது எப்படி என்பதைக் குறித்துக் கேடா பட்டாதார்கள் யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

மகசூல், சாதாரணமாகக் கிடைக்க வேண்டியதில் கால்வாசியும் அதற்குக் குறைவாகவுமே இருந்துவிடுமானால், அந்த ஆண்டுக்கு நிலத் தீர்வை வசூலை நிறுத்தி வைக்கும்படி, நிலத்தீர்வை விதிகளின்படி விவசாயிகள் கேட்கலாம். கால்வாசிக்கும் அதிகமாக மகசூல் இருக்கிறது என்பது சர்க்காரின் கணக்கு. விவசாயிகளோ, கால்வாசிக்கும் குறைவாகவே மகசூல் கிடைத்திருக்கிறது என்றார்கள். ஆனால், இவர்கள் கூறுவதைக் கேட்டுக்கொள்ளும் புத்திப்போக்கில் அரசாங்கம் இல்லை. மத்தியஸ்தர் முடிவுக்கு விட்டுவிட வேண்டும் என்ற பொதுஜனக் கோரிக்கை, தங்களுடைய கௌரவத்திற்குக் குறைவானது என்று அரசாங்கம் கருதியது. முடிவாக மனுக்களும் கோரிக்கைகளும் பயனில்லாது போய்விடவே, நான் என் சக ஊழியர்களைக் கலந்து ஆலோ

சித்துக்கொண்டு, சத்தியாக்கிரகத்தை மேற்கொள்ளு மாறு பட்டாதார்களுக்கு யோசனை கூறினேன்.

ஆரம்பக் கட்டங்களில் மக்கள் அதிகத் தைரியம் காட்டினார்களெனினும், கடுமையான நடவடிக்கை எடுத் துக்கொள்ள அரசாங்கம் விரும்பியதாகத் தோன்ற வில்லை. ஆனால், மக்களின் உறுதி தளர்ந்துவிடும் என்ப தற்கான அறிகுறி எதுவும் தோன்றாது போகவே, அர சாங்கம் அடக்குமுறையைக் கைக்கொள்ளக் கிளம்பி யது. ஜப்தி அதிகாரிகள், மக்களின் கால்நடைகளை ஏலம் போட்டனர். அகப்பட்ட ஜங்கம சொத்துக்களை யெல்லாம் ஜப்தி செய்தார்கள். அபராத அறிவிப்பு களைப் பிறப்பித்தனர்; சிலருடைய மகசூல்களையும் ஜப்தி செய்தார்கள்.

பயமடைந்துவிட்டவர்களின் உள்ளத்தில் உறுதி ஏற்படும்படி செய்வதற்காக, ஸ்ரீ மோகனலால் பாண்டி யாவின் தலைமையிலிருந்த மக்களுக்கு, நான் ஒரு யோசனை கூறினேன். ஒரு நிலத்தில் மகசூல் நியாய மின்றி ஜப்தி செய்யப்பட்டிருக்கிறது என்பது என் அபிப்பிராயம். அந்த வயலிலிருந்த வெங்காய மகசூலை அப்புறப்படுத்தி விடும்படி கூறினேன். அபராதம் விதிக் கப்படுவது அல்லது தண்டனையை அடைவது என்பதன் மூலம் புதியதொரு பாடத்தைக் கற்றுக்கொள்ளுவதற்கு மக்களுக்கு இது சிறந்த வாய்ப்பு. ஸ்ரீ மோகனலால் பாண்டியாவுக்கோ இது மனத்திற்குப் பிடித்த காரியம். சத்தியாக்கிரகக் கொள்கைக்குப் பொருத்தமான வகை யில் யாராவது ஒருவர் ஏதாவது ஒன்றைச் செய்து சிறை வாச உருவில் துன்பத்தை அனுபவிக்காமல் இப் போராட்டம் முடிந்துவிடுவதை அவர் விரும்பவில்லை. ஆகையால், அந்நிலத்திலிருந்த வெங்காய மகசூலைத் தாமே அப்புறப்படுத்திவிடுவதாக அவர் முன் வந்தார்.

இதில் மற்றும் ஏழு, எட்டு நண்பர்களும் அவருடன் சேர்ந்துகொண்டார்கள்.

இவர்களைச் சும்மா விட்டுவிடுவது என்பது அரசாங்கத்தினுல் முடியாத காரியம். ஸ்ரீ மோகனலாலும் அவருடைய சகாக்களும் கைதானதால் மக்களின் உற்சாகம் அதிகமாயிற்று. ஜெயிலுக்குப் பயப்படுவதென்பது போய்விட்ட பிறகு அடக்குமுறை மக்களுக்குத் தைரியத்தை ஊட்டிவிடுகிறது.

'கைதி'களைச் சிறைக்குக் கொண்டுபோனபோது, அவர்கள் முன்னுல் மக்கள் ஊர்வலம் ஒன்றும் சென்றது. அன்று மக்கள், ஸ்ரீ மோகனலாலுக்கு 'வெங்காயத் திருடர்' என்ற பட்டத்தை அளித்துக் கௌரவித்தனர். இன்னும் அப்பட்டப் பெயர் அவருக்கு இருந்துவருகிறது.

சத்தியாக்கிரகி ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில், கௌரவமான முறையில் போராட்டத்தை முடிப்பதற்கான வழியைத் தேடிக்கொண்டிருந்தேன். எதிர்பாராத வகையில் அத்தகைய வழி ஒன்று தென்பட்டது. நதியாத் தாசில்தார் எனக்கு ஒரு தகவல் அனுப்பினுர். பணவசதியுள்ள பட்டாதார்கள் வரியைச் செலுத்திவிட்டால் ஏழைகளிடமிருந்து வரி வசூலிப்பது நிறுத்தி வைக்கப்படும் என்ருர் அவர். அவ்விதம் செய்யப்படும் என்று எழுத்து மூலம் கொடுக்கும்படி அவரைக் கேட்டேன். அவரும் அப்படியே கொடுத்தார். தாசில்தார், தமது தாலுக்காவுக்கு மாத்திரமே பொறுப்பு வாய்ந்தவராக இருக்க முடியும். ஜில்லா முழுவதற்கும் கலெக்டரே உறுதிமொழி கொடுக்க முடியும். முழு ஜில்லாவுக்கும் தாசில்தாரின் உறுதி மொழி அமல் ஆகுமா என்று கலெக்டரிடம் விசாரித்தேன். தாசில்தாரின் கடிதத்தில் கண்ட முறையில் தீர்வை வசூலை நிறுத்தி வைக்குமாறு அறிவித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது என்று

அவர் பதில் அளித்தார். அது அப்பொழுது எனக்குத் தெரியாது. உத்தரவு பிறப்பிக்கப்பட்டு விட்டது; உண்மையானல், மக்களின் பிரதிக்ஞை நிறைவேறிவிட்டது. இந்தக் காரியத்தை நோக்கமாகக் கொண்டதே அப் பிரதிக்ஞை என்பது நினைவிருக்கலாம். ஆகவே, உத்தரவில் எங்களுக்குத் திருப்தி என்று அறிவித்தோம்.

மக்களின் கதி மோட்சம், அவர்களையும், துன்பங்களை அனுபவிப்பதற்கும் தியாகத்துக்கும் அவர்களுக்குள்ள தகுதியையும் பொறுத்தே இருக்கிறது. இந்தப் பாடம் அழிய முடியாத வகையில் பொதுமக்களின் மனத்தில் பதிந்துவிட்டது. கேடாப் போராட்டத்தின் மூலம் சத்தியாக்கிரகம் குஜராத்தின் மண்ணில் ஆழ வேர் ஊன்றி விட்டது.

கேடா சத்தியாக்கிரகம், குஜராத் விவசாயிகளிடையே விழிப்பு ஏற்படுவதற்கு ஆரம்பமாக இருந்தது. உண்மையான ராஜீயக் கல்விக்கு அதுவே ஆரம்பமாகும்.

கட்டுரை எழுதுக

1. கேடா சத்தியாக்கிரக வரலாற்றைக் கூறுக.

50

மரணத்தின் வாயிலருகில்

அந்த நாட்களில் நிலக் கடலை வெண்ணெயும் எலுமிச்சம் பழமுமே என் முக்கியமான உணவு. அந்த வெண்ணெயையே அதிகமாகச் சாப்பிட்டுவிட்டால், அதனால் உடம்புக்குத் தீமை உண்டாகும் என்பது எனக்குத் தெரியும். என்றாலும், அதை நான் அளவுக்கு மிஞ்சியே சாப்பிட்டு விட்டேன். இதனால் எனக்கு இலேசாகச் சீதபேதி ஏற்பட்டது.

அன்று ஏதோ பண்டிகை நாள். மத்தியானம் நான் எதுவும் சாப்பிடப் போவதில்லை என்று கஸ்தூரிபாயிடம் கூறியிருந்தேன். ஆனால், சாப்பிடும் ஆசையை அவள் தூண்டி விட்டாள். அதற்குப் பலியாகி விட்டேன். பாலையோ, பாலினால் ஆனவைகளையோ சாப்பிடுவதில்லை என்று நான் விரதம் கொண்டிருந்ததால், நெய்க்குப் பதிலாக எண்ணெய் விட்டு அவள் எனக்காகக் கோதுமைத் தித்திப்புப் பலகாரம் செய்திருந்தாள். ஒரு கிண்ணம் நிறையப் பயற்றங் கஞ்சியும் வைத்திருந்தாள். இவைகளை உண்பதில் எனக்கு அதிகப் பிரியம் உண்டு. அவைகளைச் சாப்பிட்டேன். கஸ்தூரிபாயைத் திருப்தி செய்து, என் நாவின் ருசிக்கும் திருப்தி அளிக்கும் அளவு சாப்பிட்டால் கஷ்டப்பட வேண்டி வராது என்றும் நம்பினேன். ஆனால், ருசிப் பிசாசோ, எப்பொழுது சந்தர்ப்பம் கிடைக்கும் என்று காத்துக்கொண்டிருந்தது. மிகக் கொஞ்சமாகச் சாப்பிடுவதற்குப் பதிலாக வயிறு நிரம்பச் சாப்பிட்டுவிட்டேன். இதுவே எமனுக்குப் போதுமான

அழைப்பாகிவிட்டது. ஒரு மணி நேரத்திற்கெல்லாம் சீதபேதி கடுமையாகத் தோன்றிவிட்டது.

நான் மருந்தும் சாப்பிடுவதில்லை. நான் செய்து விட்ட தவறுக்குத் தண்டனையை அனுபவிக்கவே விரும்பினேன்.

இருபத்து நான்கு மணி நேரத்தில் முப்பது, நாற்பது தடவை பேதியாகி விட்டது. ஆரம்பத்தில் பழரசமும் சாப்பிடாமல் பட்டினி இருந்தேன். பசியே இல்லாது போயிற்று. மரணத்திலேயே முடிந்துவிடக்கூடும் என்று எண்ணினேன்.

இவ்விதம் சதா சாவை எதிர்பார்த்துக்கொண்டு நான் படுத்திருந்தபோது, சங்கரலால் பாங்கர் என் உடல் நிலையின் காவலராக இருந்து வந்ததால், டாக்டர் தலாலைக் கலந்து ஆலோசிக்குமாறு என்னை வற்புறுத்தினார். அதன்பேரில் டாக்டர் தலாலை அழைத்து வந்தனர். உடனுக்குடனேயே முடிவுக்கு வந்துவிடுவதில் அவருக்கு இருந்த ஆற்றல் என்னைக் கவர்ந்தது.

அவர் கூறியதாவது: "நீங்கள் பால் சாப்பிட்டாலன்றி உங்கள் உடம்பு தேறும்படி செய்வது என்னால் முடியாது. அதோடு அயம், ஆர்ஸனிக் ஆகிய மருந்துகளை ஊசிமூலம் குத்திக்கொள்ளுவீர்களானால் உங்கள் உடம்பைத் தேற்றிவிடுவதாக நான் முற்றும் உத்தரவாதம் அளிக்க முடியும்."

அதற்கு நான், "ஊசி குத்தி மருந்தை நீங்கள் ஏற்றலாம். ஆனால், பால் சாப்பிடுவது என்பது வேறு விஷயம். பால் சாப்பிடுவதில்லை என்று விரதம் பூண்டிருக்கிறேன்" என்றேன். அதன் பேரில் டாக்டர், "உங்கள் விரதத்தின் தன்மைதான் என்ன?" என்று கேட்டார்.

பசுவையும் எருமையையும் பால் கறப்பதற்கு பூக்கா முறையை அனுசரிக்கிறார்கள் என்று எனக்குத் தெரிந்

ததிலிருந்து நான் இந்த விரதத்தை மேற்கொண்டதைப் பற்றிய வரலாற்றையும், அவ்விரதத்தின் காரணத்தையும் அவருக்கு எடுத்துக் கூறினேன். "பால் என்றாலே எனக்குப் பலமான வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. மேலும், பால், மனிதனுக்கு இயற்கையான ஆகாரம் அல்ல என்றே எப்பொழுதும் கருதி வந்திருக்கிறேன். ஆகையால், அதை உபயோகிப்பதை அடியோடு நிறுத்திவிட்டேன்" என்றேன். அப்பொழுது கஸ்தூரிபாய் என் படுக்கைக்கு அருகில் நின்றுகொண்டு நாங்கள் பேசிக் கொண்டிருந்ததையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்தாள். "அப்படியானால், ஆட்டுப்பால் சாப்பிடுவதற்கு உங்களுக்கு எவ்விதமான ஆட்சேபமும் இருப்பதற்கில்லை" என்று குறுக்கிட்டுச் சொன்னாள்.

டாக்டரும் அவள் கூறியதைத் தொடர்ந்து பிடித்துக் கொண்டார். "நீங்கள் ஆட்டுப்பால் சாப்பிட்டால் அதுவே எனக்குப் போதும்" என்றார் அவர்.

நானும் உடன்பட்டுவிட்டேன். சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்த வேண்டும் என்று எனக்கு இருந்துவந்த தீவிர ஆர்வம், நான் உயிரோடிருக்க வேண்டும் என்ற பலமான ஆசையை என்னுள் உண்டாக்கிவிட்டது. எனவே, விரதத்தைச் சொல்லளவில் மாத்திரம் அனுசரித்துவிட்டு, அதன் உட்கருத்தைத் தத்தம் செய்துவிட என்னையே திருப்தி செய்துகொண்டேன். நான் விரதம் எடுத்துக்கொண்டபோது பசுவின் பாலும் எருமைப் பாலுமே என் எண்ணத்தில் இருந்தனவென்றாலும், அதன் இயற்கையான பொருளின்படி, எல்லா மிருகங்களின் பாலும் அதில் அடங்கியதே. மேலும், பால், மனிதனின் இயற்கையான ஆகாரம் அல்ல என்ற கருத்து எனக்கு இருக்கும் வரை, எந்தப் பாலையும் நான் சாப்பிடுவது சரியே அல்ல. இவைகளையெல்லாம் அறிந்திருந்தும் ஆட்டுப்பால் சாப்பிடச் சம்மதித்தேன்.

இச்செய்கையின் நினைவு இன்னும் என் உள்ளத்தில் உறுத்திக்கொண்டிருப்பதோடு எனக்கு மனச் சஞ்சலத்தையும் உண்டாக்கிவருகிறது. ஆட்டுப் பால் சாப்பிடுவதை எப்படி விட்டுவிடுவது என்பதைக் குறித்துச் சதா சிந்தித்தும் வருகிறேன். ஆனால், சேவை செய்ய வேண்டும் என்ற மிகுந்த அடக்கமான ஆசை எனக்கு இன்னும் இருந்துகொண்டுதான் வருகிறது. அதிலிருந்து விடுபட இன்னும் என்னால் முடியவில்லை.

நான் ஆட்டுப் பால் சாப்பிட ஆரம்பித்ததுமே டாக்டர் தலால் எனக்கு ஆசனவாய்க் கோளாறுக்கு வெற்றிகரமான ரணசிகிச்சை செய்து முடித்தார். என் உடல் பலம் பெற்று வரவே, முக்கியமாகக் கடவுள் நான் செய்வதற்கென்று வேலையைத் தயாராக வைத்திருந்ததால், உயிர் வாழ வேண்டும் என்ற ஆசை எனக்குத் திரும்பவும் பிறந்தது.

கட்டுரைகள் எழுதுக

1. காந்திஜி ஆட்டுப்பால் சாப்பிடும் சந்தர்ப்பம் எப்படி ஏற்பட்டது என்பதைக் கூறுக.
2. நாம் பசுக்களிடம் கொடுமையாக நடந்துகொள்ளாமல் இருக்க வேண்டுமாயின், அதற்கான வழிகளில் ஒன்று அதை இறைச்சிக்காகக் கொல்லாமல் இருப்பதுதான். நாம் பசுவை மற்றும் எந்தெந்த வழிகளில் பாதுகாக்க முடியும் என்பதை நீங்கள் விவரித்துக் கூற முடியுமா?

பாகம் பதின்மூன்று

ரௌலட் மசோதாவும் அரசியல் பிரவேசமும்

51

ரௌலட் மசோதா

குணமடைந்து வருகிறேன் என்று நான் உணர ஆரம்பித்ததுமே, ரௌலட் கமிட்டியின் அறிக்கையை தற்செயலாகப் பத்திரிகையில் படித்தேன். அந்த அறிக்கை அப்பொழுதுதான் வெளியாகியிருந்தது. அக் கமிட்டியின் சிபார்சுகள் என்னைத் திடுக்குறச் செய்தன.

அநேகமாகத் தினமும் என்னைப் பார்ப்பதற்கு வல்லபபாய் வருவார். அவரிடம் எனக்கு இருந்த சந்தேகங்களைக் கூறினேன். "ஏதாவது செய்தாக வேண்டும்" என்றேன். அதற்கு அவர், "இந்த நிலைமையில் நாம் என்ன செய்ய முடியும்?" என்று என்னைக் கேட்டார். நான் சொன்னதாவது: "அம்மசோதாக்களை எதிர்ப்பது என்ற பிரதிக்ஞையில் கையெழுத்திட ஒரு சிலர் கிடைத்தாலும் போதும். அதையும் பொருட்படுத்தாமல் சட்டம் செய்யப்பட்டுவிடுமானால், நாம் உடனே சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்துவிட வேண்டியதே. நான் இதுபோல் நோயுற்றுக் கிடக்காமல் இருந்தால், மற்றவர்கள் என்னைப் பின்பற்றுவார்கள் என்று எதிர்பார்த்து நானே தன்னந்தனியாக அதை எதிர்த்துப் போராடுவேன். ஆனால், நான் இப்பொழுது இருக்கும் இத்திக்கற்ற நிலைமையில் அந்த வேலை என்னால் ஆகாது என்றே எண்ணுகிறேன்."

மசோதாக்கள் இன்னும் சட்டங்களாகக் கெஜட்டில் பிரசுரமாகவில்லை. நானோ, அதிக பலவீனமான நிலையில் இருந்தேன். என்றாலும், சென்னையிலிருந்து எனக்கு அழைப்பு வந்ததும், அந்த நீண்ட பிரயாணத்தினால்

ஏற்படக்கூடிய அபாயத்திற்கும் துணிவது என்று முடிவு செய்தேன்.

அப்பொழுது கொஞ்ச காலத்திற்கு முன்னுல்தான் ராஜகோபாலாச்சாரியார் சென்னையில் வக்கீல் தொழிலை நடத்தச் சேலத்திலிருந்து வந்திருந்தார்.

போராட்டத்தின் திட்டங்களைக் குறித்துத் தினமும் சேர்ந்து விவாதித்தோம். ஆனுல், பொதுக் கூட்டங்களை நடத்துவதைத் தவிர வேறு எந்த வேலைத் திட்டமும் எப்பொழுதும் எனக்குத் தோன்றவில்லை.

இந்த ஆலோசனைகளெல்லாம் நடந்துகொண்டிருக்கையில், ரௌலட் மசோதா சட்டமாகப் பிரசுரமாகி விட்டது என்ற செய்தி கிடைத்தது. அதைப்பற்றி யோசித்தவாறே அன்றிரவு தூங்கிவிட்டேன். மறுநாள் அதிகாலையில் வழக்கமாக எழுவதற்குக் கொஞ்சம் முன்பாகவே எழுந்துவிட்டேன். தூக்கத்திற்கும் விழிப்பிற்கும் இடையேயுள்ள நிலையில் நான் இருக்கும்போது திடீரென்று எனக்கு ஒரு யோசனை தோன்றியது. அது கனவைப் போன்றே இருந்தது. காலையில் அதன் விவரம் முழுவதையும் ராஜகோபாலாச்சாரியாரிடம் கூறினேன்:

"நேற்றிரவு கனவில் ஒரு யோசனை வந்தது. பொது ஹர்த்தாலை நடத்தவேண்டும் என்று தேச மக்களைக் கேட்டுக்கொள்ளுவது என்பதே அது. ஆன்மத் தூய்மை செய்துகொள்ளும் ஒரு முறையே சத்தியாக்கிரகம். நம்முடைய போராட்டமோ ஒரு புனிதமான போராட்டம். ஆகையால், அதை ஆன்மத் தூய்மை செய்துகொள்ளுவதோடு ஆரம்பிப்பதே சரி என்று எனக்குத் தோன்றுகிறது. எனவே, இந்திய மக்கள் எல்லோரும் அன்று தங்கள் வேலைகளையெல்லாம் நிறுத்திவிட்டு உபவாசம் இருந்து பிரார்த்தனை செய்யட்டும்."

என்னுடைய இந்த யோசனையை ராஜகோபாலாச்சாரியார் உடனே ஏற்றுக்கொண்டார். பிறகு இதை மற்ற நண்பர்களுக்கு அறிவித்தபோது அவர்களும் வரவேற்ருர்கள். சுருக்கமான வேண்டுகோள் ஒன்றை நான் தயாரித்தேன். 1919 மார்ச் 30–ஆம் தேதி ஹர்த்தால் அனுஷ்டிப்பது என்று முதலில் நிருணயிக்கப்பட்டது. ஆனால், பிறகு ஏப்ரல் 6-ஆம் தேதி என்று மாற்றினோம். இவ்விதம் மக்களுக்குச் சொற்ப கால அவகாசத்துடனேயே அறிவித்தோம். நீண்ட காலத்திற்கு முன்னால் அறிவிப்பது சாத்தியமில்லை.

இதெல்லாம் எவ்விதம் நடந்ததென்பதை யார் அறிவார்கள்? இந்தியா முழுவதிலும் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலை வரையில் பட்டணங்களும் கிராமங்களும் அன்று பூரணமான ஹர்த்தாலை அனுஷ்டித்தன. அது மிகவும் அற்புதமான காட்சியாக இருந்தது.

டில்லிக்கும் அமிர்தசரஸுக்கும் போக 7-ஆம் தேதி இரவு புறப்பட்டேன்.

ரெயில், பால்வால் ஸ்டேஷனை அடைவதற்கு முன்னாலேயே எழுத்து மூலமான உத்தரவு ஒன்றை எனக்குக் கொடுத்தார்கள். பாஞ்சாலத்திற்குள் நான் போனால் அங்கே அமைதி கெட்டுவிடுமாகையால் பாஞ்சாலத்தின் எல்லைக்குள் நான் போகக்கூடாது என்று தடுக்கப்பட்டிருப்பதாக அந்த உத்தரவு கூறியது. ரெயிலிலிருந்து இறங்கும்படியும் என்னிடம் போலீஸார் கூறினர். "வற்புறுத்தி அழைக்கப்பட்டிருப்பதன் பேரிலேயே நான் பாஞ்சாலத்திற்குப் போகிறேன். நான் அங்கே போவது அமைதியை உண்டாக்குவதற்கே; அமைதியைக் கெடுப்பதற்காக அல்ல. ஆகையால், இந்த உத்தரவுக்கு உடன்பட என்னால் முடியாமல் இருப்பதற்காக வருந்து

கிறேன்" என்று கூறி வண்டியிலிருந்து இறங்க மறுத்து விட்டேன்.

பால்வால் ரெயில்வே ஸ்டேஷனில் என்னை ரெயிலிலிருந்து இறக்கிப் போலீஸ் பாதுகாப்பில் வைத்தார்கள். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் டில்லியிலிருந்து ரெயில் வந்தது. என்னை ஒரு மூன்றும் வகுப்பு வண்டியில் ஏற்றினார்கள். போலீஸ் கோஷ்டியும் என்னுடன் வந்தது. மதுராவை அடைந்ததும் என்னைப் போலீஸ் முகாமுக்குக் கொண்டு போனார்கள். என்னை என்ன செய்யப் போகிறார்கள், என்னை அடுத்தபடி எங்கே கொண்டு போகப் போகிறார்கள் என்பதைச் சொல்ல எந்தப் போலீஸ் அதிகாரியாலும் முடியவில்லை. அடுத்த நாள் காலை 4 மணிக்கு என்னை எழுப்பினார்கள். பம்பாயை நோக்கிப் போய்க்கொண்டிருந்த சாமான்கள் ரெயில் ஒன்றில் என்னை ஏற்றினார்கள். பம்பாயில் நான் விடுதலை செய்யப்பட்டேன்.

நான் கைதானது குறித்துப் பொது மக்கள் அதிக ஆத்திரம் அடைந்திருந்தார்கள்.

நான் மோட்டாரில் ஏறினேன். பைதுனிக்கு அருகில் பெருங் கூட்டம் கூடியிருந்ததைக் கண்டேன். என்னைக் கண்டதும் மக்கள் ஆனந்தத்தால் பைத்தியங் கொண்டவர்கள்போல் ஆகிவிட்டனர். உடனே ஓர் ஊர்வலமும் உருவாகிவிட்டது. 'வந்தே மாதரம்' 'அல்லாஹோ அக்பர்' என்ற கோஷங்கள் வானை அளாவி ஒலித்தன. பைதுனியில் குதிரைப் போலீஸ் படை ஒன்றைக் கண்டோம். மேலிருந்து கற்கள் சரமாரியாகப் பொழிந்து கொண்டிருந்தன. அமைதியாக இருக்கும்படி கூட்டத்தினரைக் கேட்டுக்கொண்டேன். ஆனால், கற்கள் மாரியிலிருந்து நாங்கள் தப்ப முடியாது என்றே தோன்றியது. ஊர்வலம் அப்துர் ரஹ்மான் தெருவைத் தாண்டிக் கிராபோர்டு மார்க்கெட்டை நோக்கிப் போக இருந்த

சமயத்தில், திடீரென்று குதிரைப் போலீஸ் படை யொன்று எதிர்த்து நின்றது. ஊர்வலம் கோட்டையை நோக்கி மேலும் போகாதபடி தடுக்கவே அப்படை அங்கே இருந்தது. கூட்டமோ அதிக நெருக்கமானது. போலீஸ் அணியைப் பிளந்துகொண்டும் கூட்டம் புகுந்து விட்டது என்றே சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட பிரமாண்டமானதோர் கூட்டத்தில் என் குரல் கேட்ப தற்கு இடமே இல்லை. இப்படிப்பட்ட நிலைமையில் குதி ரைப் படைக்குத் தலைமை வகித்த அதிகாரி, கூட்டத் தைக் கலைக்கும்படி அப்படையினருக்கு உத்தரவிட்டார். உடனே குதிரை வீரர்கள் தங்களுடைய ஈட்டிகளை வீசிய வண்ணம் கூட்டத்தினரைத் தாக்கினர். நானும் காயமடைந்து விடுவேன் என்று ஒரு கணம் தோன் றியது. ஆனால், நான் பயந்தபடி ஆகிவிடவில்லை. குதிரை வீரர்கள் வேகமாகச் சென்றபோது அவர்கள் ஈட்டி எங் கள் மோட்டார்மீதுதான் உராய்ந்தது. ஊர்வலத்தில் மக்களின் வரிசையெல்லாம் சின்னபின்னமாகிவிட்டன. கூட்டத்தில் எங்கும் ஒரே குழப்ப நிலை. பிறகு மக்கள் ஓடத் தொடங்கிவிட்டனர். சிலர், குதிரை, மக்கள் இவர்களின் காலடியில் மிதிபட்டுப் போயினர். மற்ற வர்களோ, நசுக்குண்டு காயப்பட்டுவிட்டனர். எங்கும் ஒரே ஜன மயமான அக்கூட்டத்திற்கிடையே குதிரைகள் போவதற்கே இடமில்லை. மக்கள் கலைவதென்றால், அவர்கள் வெளியேறுவதற்கும் வழியில்லை. ஆகவே, ஈட்டி வீரர்கள் கண்மூடித்தனமாகக் கூட்டத்திற்குள் புகுந்து சென்றனர். தாங்கள் செய்தது இன்னது என் பது அவர்களுக்குத் தெரியுமா என்பதே எனக்குச் சந்தேகம். அங்கிருந்த நிலைமை முழுவதுமே மிகவும் பயங்கரமான காட்சியாக இருந்தது. வெறிபிடித்த குழப்பத்தில் குதிரை வீரர்களும் மக்களும் ஒன்றாகக் கலந்துபோய் விட்டனர்.

இவ்வாறு கூட்டத்தைக் கலைத்து அது மேற்கொண்டும் போக முடியாதபடி தடுத்து விட்டனர். எங்கள் மோட்டாரை மட்டும் போக அனுமதித்தார்கள். கமிஷனர் ஆபீசுக்கு எதிரில் மோட்டாரை நிறுத்தச் செய்தேன். போலீஸாரின் நடத்தையைக் குறித்துக் கமிஷனரிடம் புகார் கூற அதிலிருந்து இறங்கினேன்.

அகமதாபாத்தில் கலவரங்கள் நடந்ததாகச் செய்திகள் கிடைத்தன.

நான் அகமதாபாத்துக்குச் சென்றேன். நதியாத் ரெயில்வே ஸ்டேஷனுக்கு அருகில் தண்டவாளங்களைப் பெயர்த்துவிட முயற்சிகள் நடந்தன என்றும், வீரம்காமில் அரசாங்க அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார் என்றும், அகமதாபாத்தில் ராணுவச்சட்டம் அமலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்றும் அறிந்தேன். பொதுஜனங்கள் பயப்பிராந்தியில் இருந்தனர். பலாத்காரச் செயல்களில் அவர்கள் ஈடுபட்டுவிட்டார்கள். அவர்கள் அதற்கு வட்டியும் சேர்த்து அனுபவிக்கும்படி செய்யப்பட்டுவிட்டனர்.

கமிஷனர் ஸ்ரீ பிராட்டிடம் என்னை அழைத்துக் கொண்டு போவதற்காக ஒரு போலீஸ் அதிகாரி ஸ்டேஷனில் காத்துக்கொண்டிருந்தார். கோபத்தினால் அவர் துடிதுடித்துக்கொண்டிருந்ததைக் கண்டேன். அவரிடம் சாந்தமாகவே பேசினேன். நடந்துவிட்ட கலவரங்களுக்காக என் வருத்தத்தையும் தெரிவித்துக்கொண்டேன். ராணுவச் சட்டம் அனாவசியமானது என்று நான் சொன்னதோடு, அமைதியை நிலைநாட்டுவதற்கான முயற்சிகளிலெல்லாம் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறேன் என்றும் சொல்லி, சாபர்மதி ஆசிரம மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டத்தை நடத்த அனுமதிக்கும்படியும் கேட்டேன். இந்த யோசனை அவருக்குப் பிடித்திருந்

தது. பொதுக்கூட்டமும் நடந்தது. அது ஏப்ரல் 13-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை என்று நினைக்கிறேன். அன்றோ, அதற்கு மறு நாளோ, ராணுவச் சட்டம் ஆட்சியும் ரத்தாயிற்று. பொதுக்கூட்டத்தில் பேசுகையில், மக்கள் தாங்கள் செய்துவிட்ட தவறை உணரும்படி செய்ய முயன்றேன். அவர்களுடைய செய்கைக்குப் பிராயச்சித்தமாக மூன்று நாட்கள் உண்ணுவிரதம் இருக்கப்போகிறேன் என்றும் தெரிவித்தேன். அதே போல் ஒரு நாளைக்கு உண்ணுவிரதம் இருக்குமாறு மக்களைக் கேட்டுக்கொண்டேன். பலாத்காரச் செயல்களைச் செய்துவிட்டவர்கள், தங்களுடைய குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும் அவர்களுக்கு யோசனை கூறினேன்.

என்னுடைய கடமை என்ன என்பது பட்டப்பகல் போல் எனக்கு விளங்கியது. அகமதாபாத் தொழிலாளரிடையே நான் அதிக காலம் செலவிட்டிருக்கிறேன். அவர்களுக்குச் சேவையும் செய்திருக்கிறேன். அவர்களிடமிருந்து சிறந்த காரியங்களை நான் எதிர்பார்த்திருக்கும்போது, அத் தொழிலாளர்கள் கலகங்களில் ஈடுபட்டது என்னல் சகிக்க முடியாததாயிற்று. அவர்களுடைய குற்றத்தில் எனக்கும் பங்கு உண்டு என்பதை உணர்ந்தேன்.

அமைதியின்மையின் படிப்பினையை மக்கள் அறிந்து கொள்ளும் வரையில் சத்தியாக்கிரகத்தை நிறுத்தி வைப்பதென்று நான் தீர்மானித்தேன்.

கட்டுரைகள் எழுதுக

1. ரௌலட் சட்டத்தை எதிர்த்து காந்திஜி ஹர்த்தாலுடன் சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பித்தார்.

பிறகு அந்த இயக்கத்தை அவர் நிறுத்தி வைத்தார். உண்மையான சத்தியாக்கிரக நிபந்தனைகளுக்கு இணங்க காந்திஜியின் அந்த நடவடிக்கைகள் நியாயமானவை என்பதற்கான காரணங்களை நீங்கள் கூற முடியுமா?

2. சத்தியாக்கிரக சம்பந்தமாக இந்த நூலில் குறிப்பிட்டுள்ள உதாரணங்களிலிருந்து, உண்மையான சத்தியாக்கிரகத்திற்கு முக்கியமான தேவைகள் என்ன என்பதை நீங்கள் உங்கள் சொந்த வார்த்தைகளில் தொகுக்க முடியுமா?

பாகம் பதினான்கு

கதரின் பிறப்பு

52
கதரின் பிறப்பு

சாபர்மதியில் சத்தியாக்கிரக ஆசிரமத்தை ஆரம்பித்தபோது அங்கே சில கைத்தறிகளை வைத்தோம்.

எங்கள் கையால் நாங்களே நெய்து கொண்ட துணிகளைத்தான் நாங்கள் உடுத்தவேண்டும் என்பதே நாங்கள் கொண்ட இலட்சியம். மில் துணியைப் போட்டுக் கொள்ளுவதை உடனே விட்டுவிட்டோம். இந்தியாவில் தயாரான நூலைக் கொண்டு கையினால் நெய்த துணிகளை மாத்திரமே அணிவது என்று ஆசிரமத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் தீர்மானித்துக்கொண்டோம்.

இவ்வாறு நம் ஆலைகளில் தயாரிக்கும் நூலைக் கொண்டு நெய்த துணிகளை மாத்திரமே நாங்கள் உடுத்துவது என்று தீர்மானித்து நண்பர்களிடையே இதை நாங்கள் பிரசாரம் செய்ததன் மூலம், இந்திய நூல் ஆலைகளுக்காக வலிய வேலை செய்யும் ஏஜென்டுகளாக நாங்கள் ஆனோம். இதனால், எங்களுக்கு ஆலைகளுடன் தொடர்பு ஏற்பட்டது. அதன் காரணமாக அவர்களுடைய நிர்வாகத்தைப் பற்றிய சில விஷயங்களையும், அவர்களுக்கு இருந்த கஷ்டங்களையும் நாங்கள் அறிய முடிந்தது. தாங்கள் நூற்கும் நூலைக்கொண்டு தாங்களே நெய்து விடவும் வேண்டும் என்பதே ஆலைகளின் நோக்கம் என்பதைக் கண்டோம். கைத்தறி நெசவாளர்களிடம் அவர்களுக்கு இருந்த ஒத்துழைப்பு, விரும்பி அளிக்கும் ஒத்துழைப்பல்ல என்பதையும், தவிர்க்க முடியாத நிலையில், தாற்காலிகமாக அளிப்பதே என்பதையும் கண்டோம். இந்த நிலைமையில்

எங்களுக்கு வேண்டிய நூலை நாங்களே நூற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் அதிக ஆர்வம் கொண்டோம். இதை நாங்களே செய்து கொண்டு விட்டாலன்றி, ஆலைகளை நம்பி இருப்பது என்பது இருந்துகொண்டுதான் இருக்கும் என்பதும் தெளிவாகத் தெரிந்தது. நூல் நூற்கும் இந்திய ஆலைகளின் தரகர்களாகத் தொடர்ந்து இருந்து கொண்டு வருவதால், நாட்டிற்கு எந்தச் சேவையையும் செய்ய முடியாது என்பதையும் உணர்ந்தோம்.

எப்படி நூற்பது என்பதை நாங்கள் கற்றுக்கொள்ளுவதற்குக் கைராட்டினமோ, நூற்பவரோ கிடைக்கவே இல்லை.

கையினால் நூற்பதைக் குறித்து ஏதாவது தகவலை அறிந்திருக்கக் கூடியவர்களாக ஆசிரமத்திற்கு வருவோர் போவோர்கள் இடமெல்லாம் அதைக் குறித்து விசாரித்துக்கொண்டு வந்தேன்.

புரோச் கல்வி மகாநாட்டில் தலைமை வகிப்பதற்காக 1917-ல் என்னுடைய குஜராத்தி நண்பர்கள் என்னை அங்கே அழைத்துச் சென்றனர். அங்கேதான் கங்காபென் மஜ்முதார் என்னும் அற்புதமான பெண் மணியைக் கண்டுபிடித்தேன்.

ராட்டினம் கிடைக்காததால் எனக்கு ஏற்பட்டிருந்த துயரை அவரிடம் முறையிட்டுக்கொண்டேன். ஊக்கத்துடன் விடாமல் தேடி ராட்டினத்தைக் கண்டு பிடித்துத் தருவதாக வாக்களித்து, என் மனத்திலிருந்த பளுவை அவர் குறைத்தார்.

குஜராத் முழுவதிலும் கங்காபென் தேடியலைந்து விட்டுக் கடைசியாகப் பரோடா சமஸ்தானத்தில் வீஜாப்பூர் என்ற இடத்தில் கைராட்டையை அவர் கண்டு பிடித்தார். அங்கே அநேகம் பேர் தங்கள் வீடுகளில் கைராட்டைகளை வைத்திருந்தார்கள். ஆனால், வெகு காலத்திற்கு

முன்னுலேயே, அவையெல்லாம் ஒன்றுக்கும் ஆகாதவை என்று கருதி மரக்கட்டைகளோடு மரக்கட்டையாக அவைகளைப் பரண்களில் தூக்கிப் போட்டு விட்டார்கள். ஒழுங்காக யாராவது பட்டை போட்ட பஞ்சு கொண்டுவந்து கொடுத்து, நூற்ற நூலையும் வாங்கிக் கொள்ளுவதாக இருந்தால் தாங்கள் திரும்பவும் ராட்டையில் நூற்கத் தயாராக இருப்பதாகவும் அவர்கள் கங்கா பென்னிடம் அறிவித்தனர். இந்த மகிழ்ச்சிகரமான செய்தியை கங்கா பென் எனக்கு அனுப்பினுர். பட்டை போட்ட பஞ்சுக்கு ஏற்பாடு செய்வது கஷ்டமாக இருந்தது. இதைக் குறித்துக் காலஞ்சென்ற உமார் ஸோபானியிடம் கூறினேன். அவர் தம்முடைய மில்லிலிருந்து பட்டை போட்ட பஞ்சைப் போதுமான அளவு கொடுப்பதாக உடனே கூறி, இக்கஷ்டத்தை நிவர்த்தி செய்து விட்டார்.

பட்டை போட்ட பஞ்சைத் தொடர்ந்து அவரிடமிருந்து வாங்கிக் கொண்டிருப்பதென்பது என் மனத்திற்குக் கஷ்டமாக இருந்தது. மேலும், மில்லில் தயாரான இப் பஞ்சை உபயோகித்துக்கொள்ளுவது அடிப்படையிலேயே தவறு என்றும் எனக்குத் தோன்றிற்று. மில்லில் பட்டை போட பஞ்சை உபயோகிக்கலா மென்ருல் மில் நூலையே ஏன் உபயோகித்துக்கொள்ளக் கூடாது? முன் காலத்திலெல்லாம் கைராட்டையில் நூற்றவர்கள், வேண்டிய பஞ்சைப் பட்டை போட்டு எவ்வாறு தயாரித்துக்கொண்டு வந்தார்கள்? என் மனத்தில் எழுந்த இத்தகைய எண்ணங்களோடு கங்காபென்னுக்கு ஒரு யோசனை கூறினேன். பஞ்சு அடித்துப் பட்டை போட்டுக் கொடுக்கக் கூடியவர்களைக் கண்டுபிடிக்குமாறு அவரைக் கேட்டுக்கொண்டேன். அவரும் நம்பிக்கையோடு அவ்வேலையை ஏற்றுக்கொண்டார். பஞ்சு கொட்டிப் பட்டை போட்டுத் தரக்கூடிய ஒருவரை அவர்

அமர்த்தினர். அந்த ஆசாமியோ, தமக்கு அதிகம் கொடுக்காவிட்டாலும் மாதம் முப்பத்தைந்து ரூபாய் கொடுக்க வேண்டும் என்றார். அந்தச் சமயத்தில் அதற்கு எவ்வளவு பணம் கொடுத்தாலும் அதிகம் அல்ல என்று எண்ணினேன். கொட்டிய பஞ்சிலிருந்து பட்டை போடுவதற்குச் சில இளைஞர்களையும் கங்காபென் பழக்கினர். இவ்வாறாக ராட்டை ஆசிரமத்தில் வேகமாக இடம் பெற்றது.

கட்டுரைகள் எழுதுக்

1. தமது ஆசிரமத்தில் கையால் நூற்பதையும் பஞ்ச டிக்கும் முறையையும் ஆரம்பிப்பதில் காந்திஜிக்கு ஏற்பட்ட கஷ்டங்களை விவரித்துக் கூறுக.

2. கையால் நூற்பதையும், கையால் நெசவு செய்வதையும் காந்திஜி ஏன் வற்புறுத்தினர்? துணிகளை மில்கள் உற்பத்தி செய்வதுடன் அவர் ஏன் திருப்தி அடைந்து விடவில்லை?

3. குடிசைத் தொழில்களிலும் மில் தொழில்களிலும் உள்ள சாதக பாதகங்களை விவரித்துக் கூறுக. அவற்றில் நமது நாட்டிற்கு மிகவும் விரும்பத்தக்கது உங்களுடைய அபிப்பிராயத்தில் எது என்பதைக் கூறுக.

53

விடை பெற்றுக்கொள்கிறேன்

இந்த அத்தியாயங்களை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்துவிட வேண்டிய சமயம் இப்பொழுது வந்திருக்கிறது. இந்தக் கட்டத்திற்கு மேல் என்னுடைய வாழ்க்கை மிகவும் பகிரங்கமாக ஆகிவிட்டது. அதில் பொதுமக்களுக்குத் தெரியாதது எதுவுமே இல்லை.

உண்மையில் என் பேனாவும், இயற்கையாகவே அதற்குமேல் இதை எழுதிக்கொண்டு போகவும் மறுக்கிறது.

வாசகரிடமிருந்து இப்பொழுது நான் விடை பெற்றுக் கொள்ளுவதில் எனக்கு மன வருத்தம் இல்லாமலில்லை. என்னுடைய சத்திய சோதனைகள் அதிக மதிப்பு வாய்ந்தவை என்று நான் கருதுகிறேன். அந்த மதிப்பு நன்றாகப் புலப்படும்படி நான் செய்திருக்கிறேனா என்பதை நான் அறியேன். உள்ளதை உள்ளபடியே எடுத்துக் கூறுவதற்கு என்னால் இயன்றவரை சிரமம் எடுத்துக்கொண்டிருக்கிறேன் என்று மாத்திரமே நான் கூற முடியும். எந்தவிதமாக நான் சத்தியத்தைக் கண்டு கொண்டேனோ அதே விதமாக அதை விவரிப்பதே என் இடையறாத முயற்சியாக இருந்து வந்திருக்கிறது. இந்தப் பயிற்சி, அழித்துவிட முடியாத மனச்சாந்தியை எனக்கு அளித்திருக்கிறது. ஏனெனில், சந்தேகம் உள்ளவர்களுக்கும் சத்தியத்திலும் அகிம்சையிலும் அது நம்பிக்கையை உண்டாக்கும் என்று நான் ஆசையோடு நம்பி வந்திருக்கிறேன்.

தமிழ் நாடு காந்தி நினைவு நிதி

இதர வெளியீடுகள் :

சத்தியமும் கடவுளும்	0—25
ஆரோக்கியத் திறவுகோல்	0—50
ரகுபதி ராகவ	1—00
சத்தியாக்கிரகம்	1—25
இந்திய சுயராஜ்யம்	1—25
கிராமப் புனருத்தாரணம்	1—50
அச்சம் தவிர்த்த அண்ணல்	1—25
சத்திய சோதனை (மலிவுப் பதிப்பு)	2—00

மகாத்மா காந்தி நூல்கள் :

இதுவரை ஒன்பது தொகுதிகள்
வெளிவந்திருக்கின்றன.
தொகுதி ஒன்றின் விலை 7—50

கிடைக்குமிடங்கள் :

காந்தி நூல் வெளியீட்டுக் கழகம்,
சென்னை-2.

தமிழ் நாடு காந்தி நினைவு நிதி,
காந்தி மியூஸியம், மதுரை-2.

மாணிக்கம் பிரஸ் சென்னை-29